வெளியீடு : 13-3-2024 Issued: 13-3-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

வியாழக்கிழமை, ஏப்ரல் 20, 2023—தொகுதி 69

Thursday the 20th April 2023—Volume 69

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs.3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

20–4–2023

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
Governor and Council of Ministers	xiii-xvii
பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxx
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-34
2. விதி 110—ன்கீழ் அறிக்கை—	
முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் முழு உருவச் சிலை அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை	34-39
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	34-39
3. முன்னாள் பிரதமருக்கு முழு உருவச் சிலை வைப்பது தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி—	39-58
திரு. தி. வேல்முருகன்	39-40
*திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	40-41
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	41-43
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	43
திரு ட்டி. இராமச்சந்திரன்	44
திரு. வி.பி. நாகைமாலி	44—45
திரு. ம. சிந்தனை செல்வன்	45-46

	பக்கங்கள்
3. முன்னாள் பிரதமருக்கு முழு உருவச் சிலை வைப்பது தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி—*தொடர்ச்சி*	
திரு. ஜி.கே. மணி	46, 48-50
திருமதி வானதி சீனிவாசன்	47
திரு. கு. செல்வபெருந்தகை	50-51
திரு. ஓ. பன்னீர்செல்வம்	51
மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்	52
மாண்புமிகு திரு. துரைமுருகன்	52-57
4. கவன ஈர்ப்பு—	58-66
(அ) கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டம், தொட்டமாந்துறை கால்வாய்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்துதல்	58-63
**திரு. நா. இராமகிருஷ்ணன்*	58, 60-62
மாண்புமிகு திரு. துரைமுருகன்	58-60, 62-63
திரு. ஓ. பன்னீர்செல்வம்	62
(ஆ) சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை, முண்டியம்பாக்கம் அருகில் அமையவுள்ள மேம்பாலத்தை ஒரத்தூர் பிரிவு சாலை வரை நீட்டித்தல்	63-66
**திரு. ச. சிவகுமார்*	64-65
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	64-66
5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—	66-69
(அ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023	66
**மாண்புமிகு திரு. கே.என். நேரு*	66

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 — 67-68

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன் — 67-68

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி — 67

(இ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 — 68

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் — 68

(ஈ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 — 69

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் — 69

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22 -காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23 -தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) — 70-302

	பக்கங்கள்
6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	70, 91,110, 115-118, 127-129, 131-132, 134, 173-177, 232-234, 242-244, 251-253, 258, 260, 263, 265-266, 268-271, 274-277, 280, 283-286, 289-292
*முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்	111-117, 119-126, 132-133
*திரு. எஸ்.பி. வேலுமணி	117, 225-226
*திரு. எடப்பாடி K. பழனிசாமி	117-118, 127-128, 130-131, 215-220, 222, 229-232, 234-242, 244-251, 253-278, 280-283, 285-289, 291, 293-302

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்	120-121
திரு. ஓ. பன்னீர்செல்வம்	129-130
**திரு. ஜோசப் சாமுவேல்*	133-139
திரு. மு. அப்துல் வஹாப்	139-146
**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்*	146-155
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	149-150, 267-268
மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி	153, 161-162, 254, 258, 266
திரு. தி. வேல்முருகன்	156-166
மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	163, 192
மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	164, 277
திரு. ட்டி. இராமச்சந்திரன்	79, 99-100, 166-172
திரு. வி.பி. நாகைமாலி	83, 103, 174-175, 177-180
திரு. ம. சிந்தனை செல்வன்	180-189
திரு. நயினார் நாகேந்திரன்	189-198
திரு. ஜி.கே. மணி	198-207
திரு. கு. செல்வபெருந்தகை	207-215, 219-220, 222-225, 228-229, 278-279

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

	பக்கங்கள்
6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	
மாண்புமிகு திரு. துரைமுருகன்	216-217, 221, 227-228, 230, 257, 259, 262-263, 272-273, 279-281, 285, 287, 293, 296
மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்	246-247
**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்*	254, 256
**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி*	262
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	297
மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி	298-300
7. அரசினர் தீர்மானம்—	302-303
பேரவை விதி 32-ஐத் தளர்த்துதல்	
மாண்புமிகு திரு. துரைமுருகன்	302-303
8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	303-305
9. இணைப்புகள்	307-403

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	**முதலமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	**நீர்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	**நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	**உயர் கல்வித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

6. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

7. வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

8. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:**

வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை

9. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்

10. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

11. சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:**

சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்

12. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி

13. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:**

கூட்டுறவுத் துறை

14. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்

15. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்

16. சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

17. **மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு*
18. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்*
19. **சுற்றுலாத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
20. **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு*
21. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*
22. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்*
23. **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு*

24. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
25. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. பால்வளத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்*
32. தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்*
34. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *வனம்*
35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1.	**Chief Minister**	..	**The Hon. Thiru M.K. Stalin:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons
2.	**Minister for Water Resources**	..	**The Hon. Thiru Duraimurugan:** Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines
3.	**Minister for Municipal Administration**	..	**The Hon. Thiru K.N. Nehru:** Municipal Administration, Urban and Water Supply
4.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru I. Periyasamy:** Rural Development, Panchayats and Panchayat Union
5.	**Minister for Higher Education**	..	**The Hon. Dr. K. Ponmudi:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports

7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru Udhayanidhi Stalin** Youth Welfare Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11.	**Minister for Law**	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12.	**Minister for Housing and Urban Development**	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development, Prohibition, Excise and Molasses

13.	**Minister for Co–operation** ..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14.	**Minister for Micro, Small and Medium Enterprises** ..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15.	**Minister for Tamil Development, Information & Publicity** ..	**The Hon. Thiru M.P. Saminathan:** Tamil Official Language and Tamil Culture, Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16.	**Minister for Social Welfare & Women Empowerment** ..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17.	**Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry** ..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18.	**Minister for Backward Classes Welfare** ..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

19.	**Minister for Tourism**	..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20.	**Minister for Food and Civil Supplies**	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21.	**Minister**	..	**The Hon. Thiru V. Senthilbalaji:**
22.	**Minister for Handlooms and Textiles**	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23.	**Minister for Health and Family Welfare**	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24.	**Minister for Commercial Taxes and Registration**	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25.	**Minister for Transport**	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA
27.	**Minister for Information Technology and Digital Services**	..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Information Technology and Digital Services

28.	**Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
29.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
30.	**Minister for School Education**	..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
31.	**Minister for Environment and Climate Change**	..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control and Ex–Servicemen
32.	**Minister for Labour Welfare and Skill Development**	..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
33.	**Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Milk and Dairy Development
34.	**Minister for Forests**	..	**The Hon. Dr. M. Mathiventhan:** Forests
35.	**Minister for Adi Dravidar Welfare**	..	**The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

11-1-2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல்.	..	சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	..	கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	..	கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	..	இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	..	மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர் [துணைச் செயலாளர் (பதிப்பாளர்) நிலை]
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்

திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல். ..	துணைச் செயலாளர்
திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம். எஸ்சி., பி.ஜி.எல். ..	துணைச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். ..	மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்
	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல். ..	குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி. எல். ..	குழு அலுவலர் (பொதுக் கணக்கு குழு)
திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ. ..	தலைமை நிருபர்
திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி. ..	தலைமை நிருபர்
திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ. ..	தலைமை நிருபர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. ..	சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. ..	சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ. ..	சார்புச் செயலாளர்
திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்
திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல். ..	சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	.. சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழித்தேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18.	அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19.	அர்ஜூனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்
23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, முனைவர்	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி

28. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. ட்டி. .. தளி
30. இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R. .. அருப்புக்கோட்டை
31. இராஜா, திரு. S.R. .. தாம்பரம்
32. இராஜேந்திரன், திரு. இரா. .. சேலம் (வடக்கு)
33. இராஜேந்திரன், திரு. வி.ஜி. .. திருவள்ளூர்
34. இலட்சுமணன், டாக்டர் இரா. .. விழுப்புரம்
35. இளங்கோ, திரு. ரா. .. அரவக்குறிச்சி
36. இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச. .. ஈரோடு (கிழக்கு)
37. இனிகோ இருதயராஜ், முனைவர் த. .. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38. ஈஸ்வரப்பன், திரு. J.L. .. ஆற்காடு
39. ஈஸ்வரன், திரு. ஈ.ஆர். .. திருச்செங்கோடு
40. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. .. உடுமலைப்பேட்டை
41. உதயகுமார், திரு. ஆர்.பி. .. திருமங்கலம்
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உதயநிதி ஸ்டாலின், திரு. .. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44. ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ. .. ஸ்ரீவைகுண்டம்
45. எடப்பாடி K. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
46. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. .. காஞ்சிபுரம்
48. எழிலன், டாக்டர் நா. .. ஆயிரம் விளக்கு
49. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. .. இராயபுரம்
50. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
51. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி
52. கணபதி, திரு. க. .. மதுரவாயல்
53. கணேசன், திரு. சி.வி. .. திட்டக்குடி (தனி)
54. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்
55. கண்ணன், திரு. க.சொ.க. .. ஜெயங்கொண்டம்

56. கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்
57. கந்தசாமி, திரு. V.P.	.. சூலூர்
58. கயல்விழி செல்வராஜ், திருமதி என்.	.. தாராபுரம் (தனி)
59. கருணாநிதி, திரு. இ.	.. பல்லாவரம்
60. கருணாநிதி, திரு. ஜெ.	.. தியாகராய நகர்
61. கருப்பணன், திரு. K.C.	.. பவானி
62. கருமாணிக்கம், திரு. இராம.	.. திருவாடனை
63. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	.. இராமநாதபுரம்
64. காந்தி, திரு. ஆர்.	.. ராணிப்பேட்டை
65. காந்தி, திரு. எம்.ஆர்.	.. நாகர்கோவில்
66. காந்திராஜன், திரு. எஸ்.	.. வேடசந்தூர்
67. காமராஜ், திரு. இரா.	.. நன்னிலம்
68. கார்த்திகேயன், திரு. க.	.. ரிஷிவந்தியம்
69. கார்த்திகேயன், திரு. ப.	.. வேலூர்
70. கிரி, திரு. மு.பெ.	.. செங்கம் (தனி)
71. கிருஷ்ணசாமி, திரு. ஆ.	.. பூந்தமல்லி (தனி)
72. கிருஷ்ணமுரளி, திரு. செ.	.. கடையநல்லூர்
73. கீதா ஜீவன், திருமதி பி.	.. தூத்துக்குடி
74. கோவிந்தசாமி, திரு. ஆ.	.. பாப்பிரெட்டிப்பட்டி
75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ.	.. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர.	.. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு.	.. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி.	.. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி.	.. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	.. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S.	.. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை.	.. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை.	.. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S.	.. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே.	.. அரூர் (தனி)

86. சரவணக்குமார், திரு. கே.எஸ்.	.. பெரியகுளம் (தனி)
87. சரவணன், திரு. பெ.சு.தி.	.. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி.	.. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ.	.. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு.	.. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம.	.. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க.	.. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	.. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச.	.. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ்.	.. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா.	.. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு.	.. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	.. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ்.	.. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ.	.. சங்கரி
101. சுந்தர், திரு. க.	.. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா.	.. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ.	.. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு.	.. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி.	.. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ.	.. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா.	.. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி.	.. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V.	.. கரூர்
110. செல்லூர் கே. ராஜு திரு.	.. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு.	.. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க.	.. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K.	.. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி.	.. திருவிடைமருதூர் (தனி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

115. சேகர், திரு. R.D.	.. பெரம்பூர்
116. சேகர், திரு. S.	.. பரமத்தி-வேலூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே.	.. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு.	.. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ.	.. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ்.	.. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி.	.. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு.	.. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ.	.. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M.	.. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ.	.. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந.	.. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப.	.. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ.	.. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு.	.. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந.	.. முசிறி
131. துரைமுருகன், திரு.	.. காட்பாடி
132. தேவராஜி, திரு. க.	.. ஜோலார்பேட்டை
133. தேன்மொழி, திருமதி எஸ்.	.. நிலக்கோட்டை (தனி)
134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு.	.. நத்தம்
135. நந்தகுமார், திரு. A.P.	.. அணைக்கட்டு
136. நயினார் நாகேந்திரன், திரு.	.. திருநெல்வேலி
137. நல்லதம்பி, திரு. அ.	.. கெங்கவல்லி (தனி)
138. நல்லதம்பி, திரு. A.	.. திருப்பத்தூர்
139. நாகைமாலி, திரு. வி.பி.	.. கீழ்வேளூர் (தனி)
140. நாசர், திரு. சா.மு.	.. ஆவடி
141. நிவேதா எம். முருகன், திரு.	.. பூம்புகார்
142. நீலமேகம், திரு. டி.கே.ஜி.	.. தஞ்சாவூர்
143. நேரு, திரு. கே.என்.	.. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144. பண்ணாரி, திரு. அ.	.. பவானிசாகர் (தனி)
145. பரந்தாமன், திரு. இ.	.. எழும்பூர் (தனி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

146. பழனி நாடார், திரு. S.	.. தென்காசி
147. பழனியாண்டி, திரு. மொ.	.. ஸ்ரீரங்கம்
148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர்	.. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	.. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ.	.. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு.	.. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A.	.. சிதம்பரம்
153. பாபு, திரு. மு.	.. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ.	.. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S.	.. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு.	.. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு.	.. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஒய்.	.. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	.. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம.	.. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	.. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா.	.. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு.	.. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு.	.. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	.. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ.	.. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	.. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	.. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க.	.. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே.	.. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ.	.. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி.	.. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா.	.. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே.	.. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J.	.. உளுந்தூர்பேட்டை

176. மணியன், திரு. ஓ.எஸ்.	.. வேதாரண்யம்
177. மதியழகன், திரு. தே.	.. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா.	.. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு.	.. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த.	.. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா.	.. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா.	.. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K.	.. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V.	.. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா.	.. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ.	.. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு.	.. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை.	.. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ.	.. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு.	.. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி.	.. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி.	.. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ.	.. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K.	.. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ்.	.. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R.	.. சாத்தூர்
197. ரவி, திரு. சு.	.. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R.	.. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா.	.. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி.	.. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ.	.. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S.	.. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S.	.. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M.	.. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி.	.. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ.	.. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B.	.. மன்னார்குடி

208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்திணான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 7, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 ஏப்ரல் 20, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

191—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***30248— திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் அளவுக்கு மக்கள்தொகை இல்லாத காரணத்தாலும், பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதற்குத் தேவையான மிகுதியான நிதி மற்றும் செயல்படுத்தத் தேவைப்படும் காலம் ஆகியவற்றினைக் கருத்தில்கொண்டும், பேராவூரணி பேரூராட்சிப் பகுதியில் உருவாகும் கழிவுநீரின் அளவினைக் கருத்தில்கொண்டும், சிறிய பேரூராட்சிகளுக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் அமைக்கலாமா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தேர்வுநிலைப் பேரூராட்சி சுமார் 35,000 மக்கள் தொகையைக் கொண்ட, 18 வார்டுகளைக் கொண்ட, 18½ கிலோ மீட்டர் சுற்றளவைக் கொண்ட பெரிய பேரூராட்சியாகும். எனவே, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் மறுபரிசீலனை செய்ய தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி பேரூராட்சியில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, மக்கள்தொகை 22,084 ஆகவும், தற்போது சுமார் 24,450 ஆகவும் உள்ளது. தற்போது, கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்துடன் இணைத்து, திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தையும் செயல்படுத்திட "தூய்மை இந்தியா" 2.0 திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீடு பெற வழிவகை உள்ளது. எனவே, பேராவூரணி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்துடன் இணைத்து, திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தையும் செயல்படுத்துதல் குறித்து ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேராவூரணி தேர்வுநிலை பேரூராட்சி 10,000 வீடுகளையும், 2,000 கடைகளையும் கொண்ட பெரிய பேரூராட்சியாகும். இந்தப் பேரூராட்சியை, நகராட்சியாக மாற்றித்தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 20,000 மக்கள்தொகை கொண்ட ஊரணிபுரம் வெட்டுவாக்கோட்டையையும், திருச்சிற்றம்பலத்தையும் பேரூராட்சியாக மாற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களை தங்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 490 பேரூராட்சிகளில், இதுவரை ஒரத்தநாடு, வல்லம், வேளாங்கண்ணி, பெருந்துறை, S. கண்ணனூர், மண்ணச்சநல்லூர், பழனிச்செட்டிப்பட்டி, மேலசொக்கநாதபுரம், திருமழிசை மற்றும் மாமல்லபுரம் ஆகிய 10 பேரூராட்சிகளில் மட்டும்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருப்போரூர், திருப்பெரும்புதூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மக்கள்தொகையின் அடிப்படையில்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருகிலிருக்கின்ற ஊர்களை நகராட்சியாக, பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார். குறிப்பாக, ஓர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரமுயர்த்துவதற்கு, அங்கிருக்கிற மக்கள் விரும்புவதில்லை. காரணம், பேரூராட்சியாகிவிட்ட காரணத்தால், 100 நாள் வேலைத் திட்டம் அவர்களுக்கு வராது என்ற காரணத்தால் அவர்கள் அதனை விரும்புவது இல்லை. அப்படி இருந்தாலும்கூட, 24–10–2024–க்குப் பிறகுதான் அதைப்பற்றி யோசனை செய்ய முடியும். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவை கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***12044— திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வால்பாறை தொகுதி அமைந்திருக்கும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 6 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 20 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், வால்பாறை தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம்.*

அச்சம் என்பது மடமையடா,
அஞ்சாமை திராவிடர் உடமையடா,
ஆறிலும் சாவு நூறிலும் சாவு,
எங்கள் தாயகம் மட்டுமல்ல,

2023 ஏப்ரல் 20]

எங்கள் கழகம் காப்பதும் கடமையெனக் கூறி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றரை கோடி தொண்டர்களை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் (மணியடிக்கப்பெற்றது) எங்கள் இயக்கத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளரும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அமுல் கந்தசாமி. (குறுக்கீடு) இல்லை, இது கேள்வி நேரம். (குறுக்கீடு) இல்லை, நீங்கள்* debate*–ல் பேசுங்கள், மற்ற இடங்களில் பேசுங்கள், இது* live *ஆக சென்றுகொண்டிருக்கிறது. பார்த்துக்கொண்டிருப்பவர்கள் உங்களை என்ன சொல்வார்கள்? கேள்வி கேட்கவேண்டுமென்றால் கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா ஆகிய இருவரையும் வணங்கி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். கேள்விக்கு வாருங்கள் தம்பி. கேள்வி நேரத்தை வீணாக்காதீர்கள். இது மக்களுக்குள்ள பிரச்சினைகளையெல்லாம் பேசக்கூடிய நேரம் தம்பி. பேசுங்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *எனது வால்பாறை தொகுதி, வால்பாறை நகரம், கேரள மாநில எல்லை வரை நீண்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 28 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மலைப் பகுதிகளிலிருந்து, 100 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளன. வால்பாறையில் வசிக்கும் மக்கள், ஏழை தேயிலைத் தோட்ட தினக்கூலிகள். அவர்கள் அனைவரும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். அவர்களின் பிள்ளைகள் விடுதிகளில் தங்கிப்படிக்க வசதியில்லாதவர்கள். வால்பாறையில் இருந்து கல்லூரிக்குச் சென்றுவர சுமார் 3 மணி நேரம் பயணிக்க வேண்டியிருக்கும். ஆகவே, தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு மாற்றுத் தொழில் அமைத்துக்கொடுக்க, வால்பாறை மலைப் பகுதியில், ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அவசியமாகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைப் பகுதியில் ஒரு பலவகை*

[2023 ஏப்ரல் 20

தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கலங்குறிச்சி என்ற இடத்தில் KMG Polytechnic கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்த Polytechnic கல்லூரியில் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 420. சேர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கை 82தான். இதுபோன்றதொரு சூழ்நிலையில் அங்கே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது என்பது சாதாரணமான விஷயம் அல்ல. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதி, வால்பாறை நகர மலைப் பகுதியில் உள்ள அரசு கலை, அறிவியல் கல்லூரியில் அறிவியல் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவுகள், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல் பாடங்களை ஆய்வக வசதியுடன் அமைத்துக் கொடுக்க வேண்டும். மேலும், அங்கு படிக்கும் மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் 2006 ஆம் ஆண்டுதான், தலைவர் கலைஞர் அவர்களிடம், அப்போது இருந்த உறுப்பினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், ஓர் அரசு கலைக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அங்கேயும், இந்த மாதிரி நிறைய இடங்கள் காலியாக இருக்கின்றன. இருந்தாலும் உங்களுடைய

கோரிக்கை நியாயமானதுதான். Polytechnic*–ல் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். 2010–2011–ல் நான்தான் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்தேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 1,16,687 பேர் தமிழ்நாட்டில் மொத்தம்* Polytechnic*–ல் சேர்ந்திருந்தார்கள். ஆனால், அது பத்து ஆண்டுகளில், 2020–2021–ல் 59,350 ஆக குறைந்துள்ளது. அதை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழக முதலமைச்சர் அவர்கள், 'நான் முதல்வன்' என்ற திட்டத்தையும், 'புதுமைப் பெண்' திட்டத்தையும் அறிவித்ததன் விளைவாக இப்போது மீண்டும் அது, இந்த இரண்டு வருடங்களில் மட்டும் 12,090 உயர்ந்திருக்கிறது. ஆகவே, தமிழக முதலமைச்சர் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக, 4.0 தரத்திற்கு தொழில் துறையினுடைய தரத்திற்கேற்ப* Polytechnic *கல்லூரிகளை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, தொழிற்சாலைகளோடு அவர்கள் சேர்ந்து செயல்படவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், 44 கோடி ரூபாய் செலவாகிறது. ஆகவே, நிதிநிலையையும் பொறுத்து, அங்கே மாணவர்கள் மற்ற கல்லூரிகளில் சேருகின்ற எண்ணிக்கையையும் பொறுத்து, உங்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் மாண்புமிகு முதல்வரிடம் சொல்லி, பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.J. *மணிக்கண்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***13870—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[*2023 ஏப்ரல் 20*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 1–3–2006 அன்று கட்டப்பட்டு, தற்போது வரை நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகக் குறுகிய இடத்தில் இருக்கிறது. அங்கு போதுமான வசதிகள் இல்லை. ஆகவே, வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைக் கூடுதல் வசதிகளுடன் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, செங்குறிச்சி குறு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் இருக்கின்றது. அதிலும் போதுமான கட்டட வசதியில்லை. ஆகவே, அதற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருநாவலூர், எலவனாசூர்கோட்டை, களமருதூர், எறையூர், உளுந்தூர்பேட்டை குறு வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் பழுது நீக்கம் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிக்கண்ணன், இன்னொரு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது. முதலில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கட்டடங்களை பழைய* design*–ல் கட்டியிருக்கிறார்கள்.*

2023 ஏப்ரல் 20]

தற்போது கட்டப்படும் கட்டடங்களை சகல வசதிகளுடன் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையேற்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் நிச்சயமாக எடுக்கும். மேலும், நிதிநிலைமைக்கேற்ப புதிதாக கட்டடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.

திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டாட்சியர் அலுவலர்கள், quarters கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதனையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, அந்த அலுவலகங்களிலுள்ள Jeep மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. ஆகவே, புதிய Jeep வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையினையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் இல்லை. அது தொடர்பான கோரிக்கையினைத் தங்களிடம் கடிதமாக வழங்குகின்றேன். அவற்றையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் நிறைய இடங்களில் இல்லை என்பது உண்மை. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். எதிர்காலத்தில் எல்லா பகுதிகளிலும் கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் கட்டுவதற்கு வேண்டிய பணிகளைச் செய்யவிருக்கிறோம். எந்தெந்தப் பகுதிகளில் RDO, DRO, RI office buildings இல்லை என்பது குறித்த கணக்குகளை எடுத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சிகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

[*2023 ஏப்ரல் 20*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

194—

புதிய கட்டடம்

***3640—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *நன்னிலம் தொகுதி, வலங்கைமானில் உள்ள மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *திருவாரூர் மாவட்டம், வலங்கைமானில் தற்பொழுது ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருவாரூர் மாவட்டம், வலங்கைமானில் செயல்படுகின்ற மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நீதிமன்றங்கள் தனியார் கட்டடங்களில் இயங்குவதைவிட அரசுக் கட்டடங்களில் இயங்குவதுதான் சரியாக இருக்கும்; அதற்கான*

2023 ஏப்ரல் 20]

வசதிகளைச் செய்து கொடுக்க முடியும். எனவே, மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குடவாசலில் புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டும், இன்னும் செயல்பாட்டுக்கு வராமலிருக்கிறது. அதனையும் செயல்பாட்டுக்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமானில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய திட்ட மதிப்பீடு,* Plan and estimate *தயார் செய்து, மாண்பமை உயர் நீதிமன்றத்தின்மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்போது, அப்போதுள்ள நிதிச் சூழலைக் கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் உரிய இடம் தேர்வு செய்யப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

குடவாசலுக்கு ஏற்கெனவே நிறைய அறிவிப்புகளை முன்பே நீங்களும் அறிவித்துவிட்டு சென்றிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, ஒரு நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது என்று சொன்னாலும்கூட, அரசுக்கு ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.1,10,00,000/– ஆகிறது. எனவே, இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு, உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில், ஒவ்வொரு நீதிமன்றமாகத் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம், குடவாசல் பகுதியைச் சேர்ந்தவர்கள் திருவாரூர் சார்பு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.*

அதேபோன்று வலங்கைமான் பகுதியைச் சேர்ந்தவர்கள் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, நன்னிலம், குடவாசல், வலங்கைமான் ஆகிய மூன்று தாலுகாக்களையும் இணைத்து, நன்னிலத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தஞ்சாவூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய வன்கொடுமை தடுப்புச் சட்ட தனி நீதிமன்றம் தனியாக பிரிக்கப்பட்டு, திருவாரூருக்கு வழங்கப்பட்டுவிட்டது. இருந்தபோதிலும் இன்னும் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. அதனையும் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என தங்கள் மூலமாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு, அதைச் சுற்றி தாய் நீதிமன்றமாக இருக்கக்கூடிய சார்பு நீதிமன்றத்திலுள்ள போதிய வழக்குகளின் எண்ணிக்கை, அதேபோன்று இந்த நீதிமன்றம் உருவாக்கப்படும்போது, அங்கு வருகின்ற வழக்குகளின் எண்ணிக்கை இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு அதன்பிறகு, வழக்கறிஞர் சங்கங்களின் பரிந்துரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கான பொறுப்பு நீதிபதிகள், உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள். உயர் நீதிமன்றத்தின் அந்த பொறுப்பு நீதிபதிகள், அதனை உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்து, அதனடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் குழு நன்னிலத்தில் சார்பு நீதிமன்றம் தேவை என்கின்ற முடிவினை எடுத்து அரசுக்குக் கருத்துரு அனுப்புமேயானால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். எனவே, அந்தக் கருத்துரு வந்த பிறகுதான், அரசு எந்த முடிவையும் எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, வன்கொடுமை தடுப்புச் சட்ட தனி நீதிமன்றம் திருவாரூருக்கு வந்த பிறகு அது செயல்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும்

2023 ஏப்ரல் 20]

நிச்சயமாக இதற்கென ஏதாவது ஒரு நீதிபதிக்கு அந்த அந்தஸ்தை வழங்கியிருப்பார்கள். இதுகுறித்து விசாரிக்க அவர்களுக்கு அனுமதி வழங்கியிருப்பார்கள். அவ்வாறு செய்யப்படவில்லையென்றால், அதுகுறித்து விசாரித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

195—

திருவுருவச் சிலை

***62498—திரு. கே.பி. முனுசாமி:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகமெங்கும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் திருவுருவச் சிலைகளை நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை மாநிலக் கல்லூரியில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளதாலும், திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவில்லமாக்கி, இத்துறையால் பராமரிக்கப்பட்டு வருவதாலும், தமிழகமெங்கும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய திருவுருவச் சிலைகளை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி, அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய காலத்தில் 'தமிழ்த் தாத்தா' என்று அன்போடு அழைக்கப்பட்ட டாக்டர் 'உ.வே.சா.' ஐயா அவர்கள் இல்லையென்று சொன்னால், சங்க இலக்கியங்களான மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற*

காப்பியங்கள் நமக்குக் கிடைக்கப் பெறாமலேயே போயிருக்கும். அப்படி அவை நமக்குக் கிடைப்பதற்கு அரும்பாடுபட்டவர், அய்யா 'உ.வே.சா.' அவர்கள். அவர்களுடைய திருவுருவச் சிலையை கல்வி கற்கின்ற மாணாக்கர்கள் மத்தியில் பரப்புகின்றவகையில், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும், மற்ற அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், தனியார் பல்கலைக்கழகங்களின் வளாகத்திலும், அவருடைய திருவுருவச் சிலையை அமைப்பதோடு மட்டுமல்லாமல், அண்ணா நூலகத்திலும், மதுரையில் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் திருப்பெயரோடு இப்போது புதிதாக கட்டப்பட்டிருக்கின்ற அந்த நூலகத்திலும் தமிழுக்காக உழைத்து, தமிழ் மொழியை செம்மொழி ஆக்க வேண்டும் என்று நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அடித்தளம் அமைத்த அய்யா 'உ.வே.சா.' அவர்களின் திருவுருவச் சிலையை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களின் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசால் தமிழ்மொழி, செம்மொழி என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் இந்த வினாவிற்கான கூடுதல் பதிலை அளிக்க விரும்புகிறேன். தமிழ்த் தாத்தா அய்யா உ.வே. சாமிநாத அய்யர் அவர்களுக்கு சென்னையில் காமராஜர் சாலையில்,மாநிலக்கல்லூரி வளாகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சிலை அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, ஏற்கெனவே நான் சொன்னதுபோன்று, பாபநாசத்திற்கு அருகிலுள்ள உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம் அவருடைய நினைவு இல்லமாக மாற்றப்பட்டு, தமிழக அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனைதான். அரசின் நிதி ஆதாரத்தையும் யோசிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. தமிழ்த் தாத்தா அவர்களுடைய தமிழ்த் தொண்டை யாராலும் மறுக்க முடியாது. அவர் தமிழுக்காக அயராது பாடுபட்டவர், அதிலும், பழந்தமிழை இந்த உலகத்திற்கு அளித்தவர். எனவே, உறுப்பினருடைய யோசனையை படிப்படியாக அரசினுடைய நிதி ஆதாரத்திற்கு ஏற்ப பரிசீலிக்கலாம்.

2023 ஏப்ரல் 20]

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாத்தாவினுடைய திருவுருவச் சிலை அமைக்கின்ற அதே இடத்தில், அவர் இந்தத் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை வரலாறாக கல்வெட்டில் பதித்தால், வருங்கால இளம் மாணவர்கள் அறிந்துகொள்ள இயலும். பொதுவாக, இப்பொழுது நாம் திருவுருவச் சிலைகளை பார்க்கின்றபொழுது, பெயர்களை தெரிந்துகொள்கிறோம். அவருடைய வரலாறு என்ன? அவர் இந்த நாட்டிற்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணி என்ன? அவர் எந்த வகையிலே தொண்டாற்றியிருக்கிறார் என்பது இளைஞர்களுக்குத் தெரிவது இல்லை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், இதுபோன்ற சிலைகளை வடிக்கின்றபொழுது, அந்த திருவுருவச் சிலையில் அவர்களுடைய செயல்பாடுகளையும், அவர்களுடைய சாதனைகளையும், அவர்கள் மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளையும் கல்வெட்டுகளாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிவதோடு மட்டுமல்லாமல், ஐயா உ.வே.சா. அவர்களுடைய? அருந்தொண்டுகளை புத்தகங்களாக வடித்து அனைத்து நூலகங்களுக்கும் கொடுப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுடைய நூல்களை எல்லாம் புத்தகங்களாக வடித்து நூலகங்களிலே வழங்குவதிலே எந்த ஒரு நிதி ஆதாரமும் அரசுக்குப் பெரிதாகத் தேவைப்படாது. அது நிச்சயமாக பரிசீலிக்கக்கூடிய ஒன்று. அதே நேரத்தில், அவருடைய சிலை அமைக்கக்கூடிய இடத்திலே, கல்வெட்டு மூலமாக அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் நம்முடைய செய்தித் துறையின் சார்பிலே மானியக் கோரிக்கை அன்று காலக்கலை என்ற புத்தகத்திலே*

பக்கம் எண் 95–ல் அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் ஆற்றிய தொண்டினைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறோம். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், இதுபோன்றவர்களினுடைய புகைப்படங்களை வைத்து, அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஆங்காங்கு வைத்து, மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் மக்கள் அதிகமாக வந்து போகின்ற ஒருசில இடங்களிலே, அதையெல்லாம் ஆல்பமாக போட்டு வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, அதையும் நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னொரு யோசனையையும் சொல்லி, அதற்கான அனுமதியையும் தந்திருக்கிறார். ஒவ்வொரு சிலையிலும் QR code பொருத்துகின்ற பணி விரைவிலே இன்னும் ஒரு வாரத்திற்குள் நடக்க இருக்கிறது. முதலில், ஐயன் திருவள்ளுவர் சிலையில் அந்தப் பணிகள் துவங்கி, மற்ற எல்லா சிலைகளிலும், நம்முடைய செய்தித் துறையின் சார்பிலே பராமரிக்கப்பட்டு வருகின்ற நினைவு இல்லங்கள்–ஏன் என்று சொன்னால், நினைவு இல்லங்களாக இருந்தால் பரவலாக அந்த கல்வெட்டுகளை வைக்கலாம். சிலையில் குறைந்தபட்சம் 4 இடங்களில் மட்டும்தான் அது பொருத்தமுடியும். எனவே, QR CODE மூலமாக தமிழ்நாடு செய்தித் துறையினுடைய website–ல் இது ஏற்றப்பட்டும், தனித் தனியாகவும், அவர்களைப்பற்றி தெரிந்துகொள்கிற வகையிலே, சிலையினுடைய வண்ணமும் மாற்றப்பட்டு QR CODE பொருத்துகின்ற பணிகளும் இன்னும் ஒரு வார காலத்தில் துவங்க இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

196—

கால்நடை மருத்துவமனை

***21249—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 20]

துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இருக்கைகளில் அமருங்கள். இது* live programme. *எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து உங்கள் விருப்பத்திற்கேற்ப வேறொரு இருக்கைகளில் அமர்ந்து பேசாதீர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில் 3,025 கால்நடை அலகுகளும், உப்பிலியாபுரம் ஒன்றியம், ஒக்கரை கிராமத்தில் 3,219 கால்நடை அலகுகளும், சோபனபுரத்தில் 3,030 கால்நடை அலகுகளும் இருக்கின்றன. அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். 10 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்ற இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதால் எங்களுடைய பகுதியில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் வரைமுறைகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனைகளை துவங்க இயலாது. முதலில் அந்தப் பகுதியில் 3,000 கால்நடைகள் இருக்கும்பட்சத்தில் அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கப்படும். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள, துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், நரசிங்கபுரம் பகுதியில் 3,000 கால்நடை அலகுகள் இருப்பதால் அரசின் வரைமுறைகளின்படி கால்நடை கிளை நிலையம் புதிதாக அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கு ஏற்றாற்போல் தகுந்த முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய துறையூர் தொகுதியில், நடுவலூர் கால்நடை கிளை நிலையத்தில் 5,199 கால்நடை அலகுகளும், பச்சைபெருமாள்பட்டி கால்நடை கிளை நிலையத்தில் 5,744 கால்நடை அலகுகளும் இருப்பதால் அரசின் விதிமுறைகளின்படி, 5,000 கால்நடைகள் இருந்தால், கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதியோடு எங்களுடைய துறையூர் பகுதியை சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கிழக்கு தொடர்ச்சி மலையுடன் சேர்த்து நேற்று மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்த மலைப் பகுதியின் அடிவாரத்தில்தான் இந்த பகுதிகளெல்லாம் இருக்கின்றன. இந்தப் பகுதிகள் முழுக்க, முழுக்க விவசாயத்தைச் சார்ந்த பகுதிகளாகும். இங்கு இருக்கக்கூடிய பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் விவசாயத்தை மட்டுமே சார்ந்தவர்கள். எனவே, இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த

2023 ஏப்ரல் 20]

வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியப் பகுதிகளில் எல்லாம் அதிக கால்நடைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகள் அத்தனையும் கால்நடை கிளை நிலையம் வேண்டும், கால்நடை கிளை நிலையம் வேண்டும் என்றுதான் கோரிக்கைகளாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. நான், தொடர்ந்து கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு என்னென்ன விதிகள் இருக்கின்றன, எப்படி அதை upgrade செய்ய வேண்டும் என்ற வகையிலே பதிலும் சொல்லிக்கொண்டு வருகின்றேன். அந்த வகையில் இந்த நிலைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலே, தற்போதுள்ள சூழ்நிலையில் கால்நடை கிளை நிலையங்கள் இல்லாத பகுதிகளைக் கண்டறிந்து, அனைத்து சேவைகளையும் கால்நடைகள் வளர்க்கப்படும் இடங்களிலேயே வழங்கும்விதமாக தமிழ்நாட்டின் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு நடமாடும் கால்நடை ஊர்தியை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதையும், இந்தச் சேவையை மாண்புமிகு உறுப்பினர் தங்கள் பகுதிக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அத்தனை பகுதிகளையும் எங்களது துறையின்மூலம் ஆய்வு செய்து, வரவிருக்கின்ற காலங்களில் கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைக்கேற்றாற்போல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

பொது மருத்துவமனை

***7867—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் தொகுதியில் பொது மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அம்பத்தூரிலிருந்து 8 கி.மீ. தொலைவில் 57 படுக்கை வசதிகள் கொண்ட ஆவடி அரசு வட்ட மருத்துவமனையும், 13 கி.மீ. தொலைவில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அனைத்து சிறப்பு சிகிச்சை வசதிகளுடன் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மேலும், சென்னை மாநகரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு புறநகர் மருத்துவமனைகள், அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள், மாநகராட்சி மருந்தகங்கள் ஆகியவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் பிற மருத்துவமனைகளில் இருந்து மேற்படி அரசு மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, அம்பத்தூர் தொகுதியில் அரசு பொது மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி*

2023 ஏப்ரல் 20]

அதிக மக்கள்தொகை கொண்டதாகும். இது பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பேட்டைகள் உள்ள நகரமாக உள்ளது. மேலும், இங்கு தினந்தோறும் சுமார் 50,000–க்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர். போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்தப் பகுதியில் பெரும் விபத்துகள் ஏற்படும்போது, பாதிக்கப்பட்டவர்களை சென்னை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்குள் பெரிய அளவில் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். எனவே, கேட்காமலே கொடுக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசில், அவசியமான அரசு மருத்துவமனையை அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கடந்த ஆண்டு இதே மன்றத்தில் விதி 110–ன்கீழ் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அவற்றில் சென்னை மாநகரைப் பொறுத்தவரை 200 வட்டங்களுக்கு 200–ம், மற்ற மாநகராட்சிகள், 63 நகராட்சிகளுக்கு என்று 708 மருத்துவமனைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தவகையில், சென்னைக்கென்று 200 அனுமதிக்கப்பட்ட மருத்துவமனைகளில் இதுவரை 191 இடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி இடம் தேர்வு செய்து, 160 இடங்களில் மருத்துவமனை கட்டும் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றிருக்கின்றன. அந்தவகையில் அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரை பாடி, அத்திப்பேட்டை, கொரட்டூர், மேனாம்பேடு, முகப்பேர் மேற்கு, முகப்பேர் கிழக்கு, ஒரகடம், வரதராஜபுரம், வெங்கடாபுரம் ஆகிய 9 இடங்களில் ஏறத்தாழ தலா 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 2¼ கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவமனைகள் கட்டும் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 160 மருத்துவர்கள், 160 செவிலியர்கள், 160 சுகாதார ஆய்வாளர்கள், 160 உதவி ஆய்வாளர்களை பணி நியமனம் செய்வதற்கான பணியை தற்போது செய்துகொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் அந்தப் பணி நியமனங்கள் முடிவுற்றவுடன், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால், 160*

நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் சென்னையிலும், 450–க்கும் மேற்பட்ட நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் ஒட்டுமொத்த தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் திறந்து வைக்கப்பட இருக்கின்றன. அன்றைக்கு, அம்பத்தூர் தொகுதியிலும் 9 மருத்துவமனைகள் புதிதாக அமைய இருக்கின்றன என்பதை தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது தொகுதி 15 வார்டுகள் அமைந்த பகுதியாக இருப்பதால், கூடுதலாக நகர்ப்புற நல வாழ்வு மையங்களை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கிளை நிலையம் ஒன்று கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 9 மருத்துவமனைகள் வருகின்றன என்றாலும், நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் என்பது, சென்னை மாநகர் போன்ற இடங்களில் அமைய வேண்டியதன் அவசியம் இருக்கிறது. குறிப்பாக, அம்பத்தூரைப் பொறுத்தவரை, அவர் ஏற்கெனவே எடுத்துச்சொன்னதுபோன்று தொழிலாளர்கள் அதிகம்பேர் வசித்துக் கொண்டிருக்கிற பகுதி என்பதால், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, ஒன்றிய அரசின் அனுமதியினைப் பெற்று, நகர்ப்புற நல வாழ்வு மையம் ஒன்றை அம்பத்தூர் பகுதியில் வருகிற நிதியாண்டுகளில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 20]
198—

சுற்றுச்சுவர்

***21481—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி ஒன்றியம், பைனபள்ளி ஊராட்சிக்குட்பட்ட முஸ்லிம்கள் மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மசூதிகள், மதரசாக்கள், தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் 1999 ஆம் ஆண்டு பெருமராமத்து மானியத் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கும் திட்டத்தைத் துவக்கிவைத்தார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், பைனபள்ளி ஊராட்சி, ஒந்தலம்பள்ளியில் அமைந்துள்ள மஸ்ஜித் பிலால் பள்ளிவாசல் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்படாமல் உள்ளது. நடப்பு நிதியாண்டில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மராமத்துப் பணிகளுக்காக 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்கள். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அடக்க ஸ்தலத்தை வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்து, அந்தக் கோரிக்கையினை வைத்தால் உடனடியாக சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை 1-வது வார்டில் உள்ள சாஹி*

பள்ளிவாசல் அருகில் உள்ள அடக்கஸ்தலத்தை ஒட்டி வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான 25 சென்ட் நிலம் உள்ளது. ஏற்கெனவே உள்ள அடக்க ஸ்தலத்தில் அடக்கம் செய்ய இடம் இல்லாததால், வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தை அடக்க ஸ்தலத்திற்கு ஒதுக்கீடு செய்து, சுற்றுச்சுவர் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வினா நியாயமானது. வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடம் அதனருகில் இருந்தால், அதை நிச்சயமாக ஒதுக்கீடு செய்து, அதற்கு சுற்றுச்சுவர் அமைத்துத் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். தருகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். நன்றி சொல்லி, முடித்துவிடுங்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *இல்லை தலைவரே, இது முக்கியமானது. சிறுபான்மையினர் பிரிவு பற்றி கேட்கக்கூடியது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சி, மில்லட் நகரில் 4-வது வார்டில் அமைந்துள்ள வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் சுமார் 200 குடும்பங்களைச் சேர்ந்த சிறுபான்மையின மக்கள் வசித்து வருகின்றனர். தற்போதுள்ள வீடுகள் பழுதடைந்து, குடியிருப்புக்கு உகந்தவையாக இல்லை. மேலும், கழிவுநீர்க் கால்வாய், குடிநீர் வசதி, கழிவறை போன்ற வசதிகளும் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அந்த இடத்தில் வசிக்கின்றவர்களுக்கு வக்ஃப் வாரியத்திலிருந்து, அரசால் வழங்கப்படுகின்ற சலுகைகள் கிடைக்கப்பெறுவது இல்லை. எனவே, கழிவுநீர்க் கால்வாய், வீடுகள், கழிப்பறை போன்றவற்றைக் கட்டித்தர வக்ஃப் வாரியம் முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு இந்த முறையும் 10 கோடி ரூபாய் நிதியினை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அங்கே அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக, இந்த நிதித் தேவையினை உணர்த்தி, அதைப் பெற்றுத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

199—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

***11932— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சியில் உள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே” என்று தன்னுடைய 13–வது வயதில் போர்ப்பரணி பாடி, தன்னுடைய 86 வயதில் அந்த மொழிக்கு செம்மொழி என்கின்ற அந்தஸ்தைப் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பற்றி, அவர்

தமிழுக்கு ஆற்றிய அந்தப் பணியைக் குறிக்கும்விதமாக, இந்தக் கல்வியாண்டிலிருந்து 9 ஆம் வகுப்பு தமிழ் பாடத்திலே அவரைப் பற்றிய பாடம் வருகிறது என்கின்ற மகிழ்ச்சியோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, அன்னவாசல் பேரூராட்சிக்குட்பட்ட அன்னவாசல் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியானது, அன்னவாசல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்திற்குள் இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கு இடங்களைத் தேர்வு செய்வதில் இடர்பாடுகள் உள்ளன. இப்பள்ளிக்கென முன்னர் தேர்வு செய்யப்பட்ட இடங்களில் ஒன்றான, சர்வே எண் 223, முள்ளிப்பள்ளம் என்கிற இடம் நீர்ப்பிடிப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால், சட்டவிதிகளுக்குட்பட்டு பள்ளிக்கு இடம் வழங்க இயலவில்லை. மேலும், மற்ற இடங்களான சர்வே எண் 260, வரிசை எண் 67–ல் உரக்குழி புறம்போக்கு இடம் அன்னவாசல் பேரூராட்சியால் கழிவுபொருள் சுத்திகரிப்பு நிலையமாகப் பயன்பாட்டில் உள்ளதாலும், சர்வே எண் 190 மற்றும் 218 ஆகிய இடங்கள் பயன்பாடற்ற காவல் நிலையக் குடியிருப்பு மற்றும் பொதுப் பணித் துறை சார்ந்த இடமாகவுள்ளதாலும், பள்ளிக்கு இடம் வழங்க ஏற்றதாக இல்லை. எனவே, பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு வேறு இடம் ஊர் பொதுமக்கள் மற்றும் வருவாய்த் துறையினரால் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் நபார்டு திட்டம் அல்லது பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி இருபாலர் பள்ளியாக இருந்தது. 2019 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் பெண்கள் பள்ளியாக உருவாக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, 3 இடங்களைச் சொன்னீர்கள்.

2023 ஏப்ரல் 20]

அதில் தாங்கள் சொன்ன 2-வது இடத்தைத்தான் பொதுமக்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். அதாவது, Town Panchayat மத்தியில், ஏனென்றால் பெண்கள் பள்ளி என்பதால் பாதுகாப்பு கருதியும், easy access கருதியும் அந்த உரக்குழி இருக்கக்கூடிய அந்த இடத்தில் பள்ளிக் கட்டடம் வேண்டுமென்று ஒட்டுமொத்தப் பொதுமக்களும் விரும்புகிறார்கள். இதிலே, ஒரே கல்லிலே இரண்டு மாங்காய் என்பதுபோல, அந்த உரக்குழி, அந்தக் குடியிருப்புப் பகுதி மத்தியில் சுகாதார சீர்கேடாக இருக்கிறது. அதை ஊருக்கு வெளிப்புறமாக அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடத்தில் பள்ளியைக் கட்டுவதற்கு ஏதுவாக பேரூராட்சியில் தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதற்கும், NOC கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றோம். அந்த இடத்தில் பள்ளி அமைய வேண்டும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருடன் அமர்ந்து பேசி, அதற்கான தீர்மானம் பெறப்பட வேண்டும். வேறு துறையாக இருப்பதால் அவர்களுடைய consent-ம் நமக்குத் தேவைப்படுகிறது. அதை அவர்களிடம் பெற்று, தேவைப்படின் அந்த இடத்தில் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இது பெண் கல்வி சார்ந்த விஷயம் என்பதால், பெண் கல்வியை ஊக்கப்படுத்துவதற்கு தொடர்ந்து அரசு பல்வேறு திட்டங்களை கொடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கூட, பள்ளிக் குழந்தைகளுக்கு 14 வகையான பொருட்களை வழங்கினார்கள். Laptop உட்பட cash incentive-ம் கொடுத்தோம். இருந்தாலும்கூட, ஒருபுறம் அதிகமாக படிப்பதும் பெண்கள், அதிகமாக pass ஆவதும் பெண்கள். அதிக மதிப்பெண்களைப் பெறுவதும் பெண்கள். இந்த மதிப்பெண்கள் என்ற வார்த்தையிலேயே பெண்கள்

[2023 ஏப்ரல் 20

என இருப்பதால், மாநில அளவில் அதிக மதிப்பெண்களைப் பெற்றாலும்கூட, இன்னொருபுறம் பெண்களிடம் drop-outs-ம் இருக்கின்றது. எனவே, அந்த drop-outs இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுக்கின்ற முயற்சிகள் என்ன? இந்த அரசினுடைய புதிய கருத்துருக்கள் என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே பேசும்போது எல்லோருமே அந்த இலவச பொருட்கள் வழங்கப்படுவதைப் பற்றி சொல்கிறார்கள். உள்ளபடியே அதில் பெருமைப்படக்கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். நாங்கள் சொல்வதற்குக் காரணம், தமிழ்நாடு பாடநூல் கழகம் என்பதே 1971-ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்தான் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 1 ஆம் வகுப்பிலிருந்து 3 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் வழங்கலாம் என்று அன்றைக்கே அது தொலைநோக்குப் பார்வையோடு தொடங்கப்பட்டது. அதிலிருந்து ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொருவரும் ஆட்சிக்கு வரும்போது ஏதோ ஒரு விதத்தில், இலவசப் பொருளை மாணவர்களுடைய நலன் கருதி (மேசையைத் தட்டும் ஒலி) நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். பெண்களுக்காக உள்ளபடியே இன்றைக்கு இருக்கின்ற இந்த அரசாங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி செயல்படுகிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும். 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற பெண் குழந்தைகள் உயர் கல்வியில் சேரும்போது, இடைநிற்றல் இருக்கக்கூடாது என்பதற்காக மாதா மாதம் ஆயிரம் ரூபாயை வழங்குவேன் என்று சொன்னவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட, 29 சதவீதம் இன்றைக்கு enrolment ratio அதிகமாகி இருக்கிறது. நீங்கள் சொல்வது போல், அதுவும் குறிப்பாக பெண்களுடைய கல்வி என்பது எவ்வளவு முக்கியம் என்பதற்காகச் சொல்கிறேன். குறிப்பாக, எல்லோருக்கும் தெரிந்ததுதான் NABARD மூலமாக வருகின்ற பணம். 6.5 சதவீதம் வட்டியாக இருந்தாலும் சரி,

இல்லையென்றால் RBI சொல்கின்ற வட்டி சதவீதத்தின்படி அந்த நிதியொதுக்கீடு செய்யப்படும். அந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது, எல்லா department-க்கும் சேர்த்துத்தான் அந்த நிதி வருகிறது. ஏதோ ஒரு department-க்கு மட்டும் கேட்டு வரக்கூடியது அல்ல. எல்லா department-க்கும் சேர்த்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது கண்டிப்பாக, நீங்கள் சொல்லுகின்ற அந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

200—

இ-சேவை மையங்கள்

***66314—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, மண்டலம்-3, 30, 31 மற்றும் 33-வது வார்டுகளில் இ-சேவை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாதவரம் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியில், மண்டலம்-3, 30, 31 ஆகிய வார்டு பகுதிகளில் இ-சேவை மையம் அமைக்க முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்கள். இ-சேவை மையத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இ-சேவை மையங்கள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், இப்போது நம்முடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய வேண்டுகோளை

ஏற்று, அனைவருக்கும் இ-சேவை என்ற திட்டத்தை அறிமுகம் செய்திருக்கின்றோம். அதனடிப்படையில் 12,500-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து, தகுதியுள்ள நபர்களுக்கு இ-சேவை மையங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரத்தில் மாநகராட்சி வார்டு எண்கள் 19, 23, 25, 26, 28 மற்றும் 33 ஆகியவற்றில் இ-சேவை மையங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. அதேபோன்று, சோழவரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஒரக்காடு கிராம பஞ்சாயத்து ஊராட்சி அலுவலகம், ரெட்ஹில்ஸ் கூட்டுறவு society-யில் இ-சேவை மையங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. ஆனால், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலும், புழல் ஊராட்சி ஒன்றியத்திலும் இ-சேவை மையங்கள் இல்லை. அதேபோன்று M.L.A. அலுவலகத்தில் அதற்கான ஆட்கள் கொடுக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணி விரைவுபடுத்தப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையில், சென்னை மாநகராட்சியில் சமச்சீரான வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வடசென்னை வளர்ச்சித் திட்டம் என்ற ஒன்றை உருவாக்கி, அதற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். வடசென்னை என்ற பெயரைப் பார்த்தவுடன் வடசென்னை மக்கள் மகிழ்ச்சியோடு, நன்றியோடு பாராட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல, இந்தத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அனைத்துமே அடையாறிலிருந்து மகாபலிபுரம் வரை சென்று கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக போக்குவரத்து நெரிசல், road வசதி போன்ற நிறைய பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. வடசென்னையில் மருந்துக்குக்கூட ஒரு தொழில்நுட்ப நிறுவனம் இல்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

2023 ஏப்ரல் 20]
தமிழ்நாடு Tech city சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில் உருவாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். சென்னைக்கு ஒதுக்கப்பட்ட அந்த நிறுவனத்தை மாதவரத்திற்குக் கொண்டு வர நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, IT வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புரட்சியை அடுத்த உச்சத்திற்குக் கொண்டு செல்கின்ற அளவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறை இன்றைக்குப் பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, இந்த budget கூட்டத்தொடரில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அதாவது, High-Tech cities சென்னை, ஓசூர் மற்றும் கோயம்புத்தூரில் Tech cities அமைப்போம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவிப்பின் அடிப்படையில் 3 இடங்களிலும் குறைந்தபட்சம் 100 ஏக்கர் நிலமும், அதற்கு மேல் உள்ள பகுதியைக் கண்டறிந்து, அவற்றில் Tech cities உருவாக்க வேண்டுமென்ற ஒரு முனைப்போடு நாம் செயல்பட்டு வருகின்றோம். அதனடிப்படையில், இன்றைக்கு ஓசூரில் சுமார் 500 ஏக்கரும், கோயம்புத்தூரில் சுமார் 250 ஏக்கரும் கண்டறியப்பட்டுள்ளன. சென்னையில் பல்வேறு பகுதிகளும் இன்றைக்குப் பார்வையிடப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று, மாதவரம் பகுதியில் இருக்கக்கூடிய metro இரயிலுக்காக ஒதுக்கப்பட்ட TANUVAS-க்கு சொந்தமான இடத்தில் கொஞ்சம் இடம் காலியாக இருக்கிறது. அதையும், அதைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதியில் ஓர் இடத்தையும் நாங்கள் பரிசீலனைக்காகப் பார்த்திருக்கின்றோம். அந்த இடம் கிடைக்கின்றபட்சத்தில், நிச்சயமாக அதில் Tech city உருவாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும். இதில் முக்கிய விசேஷம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு Tech cities என்றால் என்ன என்ற ஒரு கேள்வி பலரிடமிருந்து வருகிறது. IT துறையைப் பொறுத்தவரையில், முதலில் எல்லோரும்

[2023 ஏப்ரல் 20

அலுவலகங்களுக்கு வந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அதற்கு பிறகு pandemic-கொரோனா தொற்றுநோய் வந்தபிறகு work from home என்கின்ற ஒரு சூழல் உருவாகியது. இப்போது உலக அளவில் பார்த்தோம் என்றால், work from home என்பது மாறி live, work, play, அங்கேயே வாழ்ந்து, அங்கேயே வேலை செய்து, அங்கேயே அவர்களுடைய entertainments, விளையாட்டு அமைப்புகளை எல்லாம் உருவாக்குகின்ற ஒரு கட்டமைப்பை, உருவாக்குகின்ற பணிகளைச் செய்ய பல நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அவை எதிர்காலத்தில் வளர்ந்து வருவதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கிறது. எனவே, அங்கு ஒரு Tech city என்று சொல்லக்கூடிய அளவில், வெறும் வேலை செய்வதற்கான நிறுவனங்களின் கட்டடங்கள் மட்டுமல்லாமல், அங்கு வேலை செய்பவர்கள் தங்குவதற்கான இடங்கள், அவர்களின் பொழுது போக்கிற்கான அம்சங்கள், ஆராய்ச்சி செய்வதற்கான Innovation and Research hubs இவை அனைத்தையும் ஒன்றாக ஒருங்கிணைத்து உருவாகின்ற ஒரு கட்டமைப்புதான் Tech city ஆகும். இந்த Tech city-ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு பார்க்கிறார். எனவே, மிகச் சிறந்த முறையில் Tech city அமையவிருக்கின்றது. மாதவரம் பகுதி மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வையில் இருக்கிறது என்கிற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி. மாதவரத்தில் இ-சேவை மையம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அங்கே IT Park அமைக்க வேண்டுமென்பது மிக முக்கியமான ஒன்று. ஆனால், இடமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார். அவருக்கு ஆயிரம் ஏக்கரில் மாந்தோப்பு ஒன்று இருக்கிறது. அதில் 200 ஏக்கர் நிலத்தை அவர் கொடுக்கிறேன்

2023 ஏப்ரல் 20]

என்கிறார். (சிரிப்பு) அந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரத்தில் பல்வேறு துறைகளுக்குச் சொந்தமான நிலங்கள் சுமார் 400 ஏக்கருக்கு மேல் இருக்கின்றன. வேளாண்மைத் துறை, பால்வளத் துறை, கால்நடைத் துறை, கூட்டுறவுத் துறை போன்ற துறைகளுக்குச் சொந்தமான நிலங்கள் எல்லாம் மாதவரத்தில் இருக்கின்றன. ஒசூரில் அவருக்குக் கிடைத்ததைப்போல 500 ஏக்கர் நிலம் நிச்சயமாக இங்கேயும் கிடைக்கும். அதுமட்டுமல்ல, மாதவரத்திற்கு எல்லாவித amenities-ம் உள்ளன. இப்போது metro rail திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் உள்ள பல்வேறு நகரங்களுக்கு, இடங்களுக்குச் செல்லக்கூடிய வகையில் அந்தப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. Ring road, Outer ring road போன்றவை இருக்கின்றன. எல்லாவித அடிப்படை வசதிகளையும் கொண்ட இடமாக மாதவரம் இருப்பதனால், நிச்சயமாக அதனை நீங்கள் தேர்வு செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விஷயங்கள் உண்மைதான். எங்களுடைய அலுவலர்கள் கள ஆய்விற்குச் சென்று பார்வையிட்டு வந்துள்ளார்கள். கண்டிப்பாக வட சென்னை பகுதிக்கு ஒரு வளர்ச்சித் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் அமைந்த ஒரு நல்ல திட்டம்தான் இது. அதற்கு IT Department-ன் பங்களிப்பு நிச்சயமாகத் தேவை. அதேபோல IT expansion, IT-ஐ விரிவுபடுத்துவதற்கு நாம் இன்னும் இதுபோன்ற இடங்களைத் தேர்வு செய்தாக வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடங்களை நிச்சயமாக நமது அலுவலர்கள் மூலமாகப்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 20

பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களோடு பேசி, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தப் பகுதி அதற்கான ஒரு feasible *ஆன இடமாக இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் முழு உருவச் சிலை அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர், சமூகநீதிக் காவலர், இந்தியா முழுமைக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிதாமகர், மறைந்த திரு. வி.பி. சிங் அவர்களுக்கு, எங்களது திராவிட மாடல் அரசு மரியாதை செய்ய நினைக்கும் மகத்தான அறிவிப்பை இந்த மாமன்றத்தில் தங்கள் அனுமதியோடு விதி 110—ன்கீழ் வெளியிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

உத்தரப்பிரதேச மாநிலம், அலகாபாத் மாவட்டத்தில், மிகப் பெரிய ஜமீன்தாரரான ராஜா தயா பகவதி பிரதாப் சிங் அவர்களுக்கு மகனாகப் பிறந்தவர்தான் விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள். ஆடம்பர வாழ்க்கை வாய்த்தாலும், அதில் மனம் ஒட்டாமல் கல்லூரி படிக்கும் காலத்திலேயே காந்திய இயக்கத்தில் ஈடுபட்டார்; சர்வோதய சமாஜில் இணைந்தார்; பூமிதான

இயக்கத்தில் பங்கெடுத்தார்; தனது நிலங்களையே தானமாக வழங்கினார்.

1969 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில் நின்று வென்றார். உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர்; ஒன்றிய வர்த்தக அமைச்சர்; வெளியுறவுத் துறை அமைச்சர்; நிதி அமைச்சர், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகிய உயர் பொறுப்புகளை வகித்தார்.

முற்பகல் 10–50

தேசிய முன்னணியை உருவாக்கி 1989 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகவே ஆனார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தது பதினோரு மாதங்கள்தான் என்றாலும், அவர் செய்த சாதனைகள் மகத்தானவை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவரை இந்த மன்றத்தில் இப்போதும் போற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோது, பட்டியலின, பழங்குடியினருக்கு ஒன்றிய அரசுப் பணியிடங்களில் தனி இட ஒதுக்கீடு தரப்பட்டது. ஆனால், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அவர்களது மக்கள்தொகைக்கேற்ப இட ஒதுக்கீடு தரப்படவில்லை. இதனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்தான் B.P. மண்டல் தலைமையிலான ஆணையம். சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்துக்கு, B.P. மண்டல் பரிந்துரையின்படி ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற உத்தரவை அமல்படுத்திய சமூகநீதிக் காவலர்தான் திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் பிறப்பால் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல; ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல; ஆனாலும் செய்து காட்டியவர் திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "மண்டல் ஆணையத்தின் பரிந்துரையை அமல்படுத்தப் போகிறேன்" என்று ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்தபோது, 'முற்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரால் இதனைச் செய்ய முடியாது' என்று அமைச்சர் ஒருவரே சொன்னபோது, 'இதோ, இப்போதே தேதியைச் சொல்கிறேன்' என்று கூறிய கம்பீரத்துக்குச் சொந்தக்காரர்

திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் அவரது பதவிக்கே நெருக்கடியாக அமைந்தது.

'சில நேரங்களில் வாழ்வதைக் காட்டிலும் மரணத்தைத் தேர்ந்தெடுப்பதே நல்லது' என்று சொல்லி பிரதமர் பதவியை விட்டு விலகியவர் சுயமரியாதைச் சுடரொளி திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'வி.பி. சிங்கை தூக்கில் கூடப் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நீதியைக் கொடுங்கள்' என்று கூறும் அளவிற்கு, சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கிய வகுப்பினரின் நலனில் அவர் அக்கறை கொண்டிருந்தார். பதவியிலிருந்த 11 மாத காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு; தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான தொடக்கப்புள்ளி; தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான தொடக்கப் புள்ளி; வேலை உரிமையை அரசியல் சாசன உரிமை ஆக்கியது; தேர்தல் சீர்திருத்தங்கள்; மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில்; தேசியப் பாதுகாப்புக் குழு; உழவர்கள் பிரச்சினையைத் தீர்க்க மூன்று குழுக்கள்; டெல்லி குடிசைப் பகுதி மக்களுக்கு வாழ்விடங்கள்; அதிகபட்ச சில்லறை விற்பனை விலை (MRP) அச்சிட வேண்டும்; நுகர்வோர் பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் செய்து காட்டிய மாபெரும் சாதனையாளர்தான் திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டை தனது இரத்த சொந்தங்கள் வாழும் மாநிலமாக திரு. வி.பி. சிங் அவர்கள் நினைத்தார்கள். தந்தை பெரியாரை தனது உயிரினும் மேலான தலைவராக திரு. வி.பி. சிங் அவர்கள் ஏற்றுக்கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மனிதனுக்குச் சாவைவிட மிகக் கொடுமையானது 'அவமானம்'. அந்த அவமானத்தைத் துடைக்கும் மருந்துதான் பெரியாரின் 'சுயமரியாதை' என்று சொன்னவர் திரு. வி.பி. சிங் அவர்கள்.(மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களைச் சொந்த சகோதரனைப் போல மதித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) "எனக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் என் பக்கத்தில் இருந்து கலைஞர் அவர்கள் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தார். தனது ஆட்சியைப் பற்றிக்கூட பொருட்படுத்தாமல் ஒரு கொள்கைக்காக, இலட்சியத்துக்காக என்னோடு இருந்த மாபெரும் தலைவர் கலைஞர்" என்று பாராட்டியவர் திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 20] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

அதற்கேற்றாற்போல், 21–8–1990 அன்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவையில் உரையாற்றியபோது, "இந்திய வரலாற்றிலேயே, புதியதொரு சகாப்தமாக சமூகநீதி வழங்கிடும் இந்தப் புரட்சிகரமான முடிவை எடுத்துள்ள தேசிய முன்னணி அரசுக்கும், பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கும், இந்தப் பேரவை தனது இதயமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என வாழ்த்தி, இந்தச் சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, திரு. வி.பி. சிங் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

முற்பகல் 10–55

1988 ஆம் ஆண்டு தேசிய முன்னணி தொடக்க விழா சென்னையில் நடைபெற்றபோது, மாபெரும் ஊர்வலத்தை தலைமை தாங்கி நான் நடத்தி வந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வெள்ளுடை தரித்து அணிவகுத்த வீரக் காட்சியை மேடையில் இருந்தபடி பார்த்து வணங்கினார் திரு. வி.பி. சிங் அவர்கள். அவர் பிரதமர் ஆன பின்னர், டெல்லி சென்றோம்; சட்டமன்றக் குழுவோடு நானும் சென்றேன். அப்போது என்னை அவரிடத்தில் அறிமுகப்படுத்தினார்கள். "இவரை எனக்கு அறிமுகப்படுத்துகிறீர்களா? இவரை எனக்குத் தெரியாதா? நீங்கள்தானே சென்னையில் இளைஞர் படையை அணிவகுத்து ஒரு மாபெரும் பேரணியை நடத்தினீர்கள்!" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னது, என்னைப் பாராட்டியது, என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய மிகப் பெரிய வாய்ப்பாக நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அத்தகைய சமூகநீதிக் காவலர் அளித்த ஊக்கத்தின், உற்சாகத்தின் காரணமாகத்தான் சமூகநீதிப் பார்வையில், சமூகநீதிப் பயணத்தில் கொஞ்சமும் சலனமும், சமரசமும் இல்லாமல் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மருத்துவப் படிப்பில் அகில இந்தியத் தொகுப்பு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்பதற்காக சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் தி.மு.க. போராடியதை நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

இட ஒதுக்கீடு கிடையாது என்று சொல்லி வந்த ஒன்றிய அரசை, 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு ஒப்புக்கொள்ள வைத்தது தி.மு.க. உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் நடத்திய போராட்டங்கள்தான்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 20

(மேசையைத் தட்டும் ஒலி) அதனை மனதில் வைத்துதான், அகில இந்திய அளவில் சமூக நீதிக்கான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறோம். அதற்கான முதல் கூட்டமானது காணொலி மூலமாக நடந்திருக்கிறது. அகில இந்திய அளவில் பெரும்பாலான கட்சிகள் அதில் பங்கெடுத்தன. அகில இந்தியாவுக்கே தமிழ்நாடுதான் வழிகாட்ட வேண்டும் என்று அக்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல; இந்தியா முழுமைக்குமான அனைத்து மக்களுக்காகவும் குரல் கொடுத்து வருகிறோம். சி.ஆர்.பி.எப். தேர்வானது இந்தி, ஆங்கிலத்தில் மட்டும்தான் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் நடத்த வேண்டும் என்று ஒன்றிய உள் துறை அமைச்சருக்கு நான் கடிதம் அனுப்பி வைத்தேன். தி.மு.க. மாணவரணியும், இளைஞரணியும் மிகப் பெரிய ஆர்ப்பாட்ட அறிவிப்பைச் செய்தார்கள். தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் சி.ஆர்.பி.எப். உள்ளிட்ட அனைத்து மத்திய ஆயுதக் காவல் படைத் தேர்வுகளும் நடைபெறும் என்ற வெற்றிச் செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து வகையிலும் சமூக நீதியை நிலைநாட்டும் அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இத்தகைய கொள்கை உரத்தை வழங்கியவர்களில் ஒருவர் திரு. வி.பி. சிங் அவர்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களின் உயிர்ப் பிரச்சினையான காவிரி நீருக்காக நடுவர் மன்ற ஆணையத்தை அமைத்துத் தந்தவர் திரு. வி.பி. சிங் அவர்கள். இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண தனது இல்லத்தில் அகில இந்தியத் தலைவர்கள், மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தைக்கூட்டி 'இப்போது கலைஞர் சொல்லப் போவதுதான் என் கருத்து' என்று சொன்னவர் திரு. வி.பி. சிங் அவர்கள்.

சென்னை கடற்கரையில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, சென்னையில் அமைந்துள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராசர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்திற்கு பேரறிஞர் அண்ணாவின் பெயரையும் சூட்டிய ஒப்பற்ற தலைவரான திரு. வி.பி. சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், அவருக்குத் தமிழ்ச்

2023 ஏப்ரல் 20] [திரு. மு.க. ஸ்டாலின்]

சமுதாயத்தின் நன்றியைத் தெரிவிக்கும் வகையிலும், சென்னையில் அவரது முழு உருவ கம்பீரச் சிலை அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதை மிகுந்த பெருமிதத்தோடு, இந்த மாமன்றத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

உயர் வர்க்கத்தில் பிறந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகச் சிந்தித்த, எத்தனை உயர் பதவி வகித்தாலும் கொள்கையை விட்டுத் தராத, டயாலிசிஸ் செய்யப்பட்ட உடல்நிலையிலும் ஏழை மக்களுக்காக வீதிக்கு வந்து போராட்டம் நடத்திக் கொண்டிருந்த திரு. வி.பி. சிங் அவர்களது புகழ் வாழ்க, வாழ்க, வாழ்க என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

3. முன்னாள் பிரதமருக்கு முழு உருவச் சிலை வைப்பது தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பேரவை விதி 110-ன்கீழான அறிவிப்பில் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், வரவேற்று, நன்றி சொல்லி ஒரு நிமிடத்தில் முடிக்கவேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

முற்பகல் 11-00

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சமூக நீதி வரலாற்றில் தனக்கென்று ஒரு தனி இடத்தை உருவாக்கி, இந்தியாவில் வாழ்கின்ற பெரும்பான்மை மிகப்பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியமைக்காக ஆதிக்க சாதிகளால் தன் பதவியை இழந்தவர்; பதவி எனக்குப் பெரிதல்ல, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைதான் எனக்குப் பெரிது என்று வாழ்ந்த மகத்தான மாபெரும் தலைவர். குறிப்பாக, தமிழ்நாட்டின் நலன்காக்க, தமிழ்நாட்டின் காவிரி உரிமை நிலைபெற வேண்டுமென்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, காவிரி நடுவர் நீதிமன்றம் அமைத்திட்ட மகத்தான மாபெரும் தலைவர். அதேபோன்று, ஈழத் தமிழர் பிரச்சினைகளில், ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு சுயநிர்ணயத்துடன்கூடிய தனித் தமிழ் ஈழம்

[திரு. தி. வேல்முருகன்] [2023 ஏப்ரல் 20

அமைய வேண்டும் என்கிற அந்த உன்னதப் போராட்டத்தை தன்னுடைய சக நண்பரான தேசிய முன்னணியில் இடம்பெற்ற திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் மூலமாக அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, பல்வேறு இராணுவ ரீதியான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குவதற்குக் காரணமாக இருந்தவர். சிங்கள பௌத்த பேரினவாத அரசு, ஈழ இன மக்களை அழித்தொழிக்க முற்பட்டபோது, நமது நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி, இலங்கை இனவாத அரசோடு பேசவைத்த மகத்தான தலைவர். ஆக, அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுரிமைக்காகவும், காவிரி உரிமைப் பிரச்சினைக்காகவும், தற்போது இந்தியா முழுமைக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வி, வேலைவாய்ப்புகளில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறுவதற்குக் காரணமாகவும் இருந்த அந்த மகத்தான தலைவர் அவர்களுக்கு, நம்முடைய சமூக நீதியைக் காக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாரிசு அரசாக இருக்கின்ற நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, இன்றைக்கு அவருக்காக தமிழ்நாட்டில் முழு திருவுருவச் சிலை அமைத்து, அவருடைய அந்தப் பெருமையை, வரலாற்றுக்குச் செய்த சாதனையை நாளைய இளைய தலைமுறை மக்களிடத்திலும், தமிழ் மக்களிடத்திலும் எடுத்துச் செல்வதற்கான ஒரு நல்வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாகவும், ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்திலிருந்து வேலைவாய்ப்பு, கல்வி உரிமைக்காகப் போராடி, 21 உயிர்த் தியாகங்களைச் செய்து, தலைவர் கலைஞர் ஆட்சியிலே அந்த இட ஒதுக்கீட்டைப் பெற்று பலனடைந்த பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

***திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த தலைவர் திரு. வி.பி. சிங் அவர்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே எதையும் விடாமல் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஒன்றே ஒன்றை மட்டும் யோசிக்கத் தோன்றுகிறது. திரு. வி.பி. சிங் அவர்கள் மட்டும் 11 மாத காலத்தில் ஆட்சியை

2023 ஏப்ரல் 20] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

இழக்காமல் தொடர்ந்து பாரதத்தின் பிரதமராக இருந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் உடனிருந்திருந்தால், தமிழகத்திற்குத் தேவையான அத்தனையையும் நாம் நிறைவேற்றியிருக்க முடியும் என்பதை மட்டும் உறுதியாகச் சொல்ல முடிகின்றது. அதேபோல், மண்டல் கமிஷன் என்பது ஒரு வரலாறு. 30 ஆண்டுக்கால சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், மொத்த இந்தியாவிற்கும் அந்த மண்டல் கமிஷன் பரிந்துரையைப் பெற்றுத் தந்திருக்கிறார். அதன்மூலமாக இந்தியா முழுவதும் இருப்பவர்கள், அவரை ஒரு தேசியத் தலைவராகப் பார்க்கிறார்கள். இந்தியா முழுவதுமான சமூக நீதிக்காக, சமூக நீதிக் கூட்டமைப்பை ஏற்படுத்தி, இந்தியாவிலுள்ள அத்தனை தலைவர்களையும் ஒற்றுமைப்படுத்தி, தற்போது அத்தனை மாநிலங்களிலும் இருக்கிற தலைவர்களும், தமிழகத்தை தலைமையேற்கச் சொல்கின்ற அளவிற்கு தேசியச் சிந்தனையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

இறுதியாக, உத்தரப்பிரதேசத்திலே திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சிலை வைத்தார்களோ இல்லையோ, தெரியாது. அங்கே அவரை ஞாபகம் வைத்திருக்கிறார்களோ இல்லையோ, தெரியாது. ஆனால், தமிழக மக்களுக்காக, இந்திய மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்ட, மறைந்த பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு தமிழகத்திலே சிலை வைப்பதன் மூலமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தான் ஒரு தேசியத் தலைவர் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார் என்பதை மட்டும் சொல்லி, இந்த அறிவிப்பை மனதார வரவேற்று, வெகு சீக்கிரமாக அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முற்பகல் 11–05

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 மாதங்கள் மட்டுமே இந்தியாவினுடைய பிரதமராக இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல,இந்தியாவினுடைய திசைவழிப்போக்கையே மாற்றியமைத்த ஒரு மாபெரும் மாமனிதராக விளங்கியவர்

திரு. வி.பி. சிங் என்கிற திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் அவர்கள். அவருக்கு உறுதுணையாக கலைஞர் அவர்கள் இருந்தார்கள் என்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'எப்போதெல்லாம் எனக்கு பிரச்சினைகள் இருக்கின்றதோ, அப்போதெல்லாம் கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருந்தார்' என்று கூறியதை மேற்கோள் காட்டினார்கள்.

அதுமட்டுமல்லாமல், திரு. வி.பி. சிங் அவர்கள், நீண்டகாலம் பரிந்துரை அளிக்கப்பட்ட பிறகும்கூட கிடப்பில் போடப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரையைத் தூசு தட்டி எடுத்து, 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கியது ஒரு மாபெரும் திருப்புமுனையாக இருந்தது. அவருடைய ஆட்சி ஏன் கவிழ்க்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். யாரெல்லாம் சமூக நீதிக்கு எதிராக இருக்கின்றார்களோ, யாரெல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசு அதிகாரத்திலே, கல்வி வாய்ப்பிலே வாய்ப்பு கிடைக்கக் கூடாது என்று எண்ணுகிறார்களோ அவர்களால்தான் திரு. வி.பி. சிங் அவர்களுடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அந்த நேரத்திலே தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'ஆட்சி பறி போனாலும் தமிழ்நாடு உங்களுக்கு சிவப்புக் கம்பளம் அளித்து வரவேற்கின்றது' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, அவரை தமிழ்நாட்டுக்கு வரவழைத்து, தமிழ்நாட்டினுடைய மூலைமுடுக்குகளிலெல்லாம் கலைஞர் அவர்கள் திரு. வி.பி. சிங் அவர்களை அழைத்துச் சென்ற அந்த நினைவு இப்போது வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தந்தை பெரியார் காலம் தொட்டு, சமூக நீதியிலே இந்தியாவிற்கே எடுத்துக்காட்டக்கூடிய ஓர் ஒளிவிளக்காக தமிழ்நாடு விளங்குகிறது. அந்தப் பாரம்பரியத்தில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அகில இந்திய அளவிலே, அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பை ஏற்பாடு செய்து, அந்த மாநாட்டை நடத்தினார்கள்; hybrid mode–லே நடைபெற்றது. அதனுடைய தொடக்கத்திலிருந்து கடைசி வரை அந்தக் கூட்டத்திலே பங்கு கொண்டேன். பீகாரிலிருந்து பேசியவர்கள், காஷ்மீரிலிருந்து பேசியவர்கள், மேற்கு வங்காளத்திலிருந்து பேசியவர்கள், மராட்டியத்திலிருந்து பேசியவர்கள் இப்படி ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பேசியவர்கள், இந்தியாவிற்கே சமூக நீதிக்கு வழிகாட்டுவது மட்டுமல்ல, தலைமை தாங்குவதற்கான மிகப் பெரிய அருகதை நம்முடைய மாண்புமிகு

2023 ஏப்ரல் 20] [*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா*]

தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) தளபதி அவர்களுக்குத்தான் இருக்கின்றது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். திரு. வி.பி. சிங் அவர்கள் ஆட்சியை இழந்த பிறகும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல சிறுநீரகம் பாதிக்கப்பட்டு dialysis *செய்யப்பட்ட அந்த நிலையிலும்கூட, ஒவ்வொரு போராட்டத்திற்கும் அவர் வந்ததை இன்று நன்றியுடன் நினைவுபடுத்தி, திரு. வி.பி. சிங் அவர்களை இந்திய வரலாறு மறக்கக்கூடாது, திரு. வி.பி. சிங் அவர்களை பிற்படுத்தப்பட்ட மக்கள் மறக்கக்கூடாது என்பதற்காக தமிழகத்தினுடைய தலைநகரிலே அவருக்கு ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, திரு. வி.பி. சிங் அவர்களுடைய உரைகளை தமிழிலும், ஆங்கிலத்திலும் மற்றும் பிற இந்திய மொழிகளிலும் தமிழக அரசின் சார்பாக வெளியிடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்தச் சிறப்பான அறிவிப்புக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வரிசையில் பெரிய இராஜ பரம்பரையைச் சேர்ந்தவராக திரு. வி.பி. சிங் அவர்கள் இருந்தாலும், இவர்களைப்போல் சமூக நீதி காப்பதற்காகப் போராடியவர். அதற்காக தன் பதவியையே இழந்தவர். அப்படிப்பட்ட பெருமகனாருக்கு, அதிலும் வெறி பிடித்த சிலரால் பதவியை இழந்த அப்பெருமகனாருக்கு தமிழ்நாட்டில் சிறப்பு சேர்க்கும் வகையில் இங்கே சிலை அமைக்கப்படும் என்று அறிவித்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, அவருடைய அறிவிப்புக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்பைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியின் பிதாமகனாகத் திகழ்ந்த திரு. வி.பி. சிங் அவர்கள் 1989 ஆம் ஆண்டு பிரதமராக இருந்தபோதுதான், பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டை பெற்றுக் கொடுத்தார். அதற்காக தன்னுடைய பிரதமர் பதவியையும் இழந்தார். இருந்தாலும், அவர் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடினார். அதேபோன்று, தமிழகத்திற்காக காவிரி நடுவர் மன்றத்தை அமைத்துக் கொடுத்தார்; இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தார். இத்தகைய சிறப்பு வாய்ந்த, சமூக நீதிக்காகப் போராடிய மரியாதைக்குரிய திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் முழு உருவச் சிலை அமைக்கப்படும் என்று தற்போது இந்தியாவிலேயே சமூக நீதிக்காக, மாநில உரிமைகளுக்காக, கூட்டாட்சித் தத்துவத்திற்காக குரல் கொடுத்து வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி.பி. சிங் என்கிற மகத்தான மனிதருக்கு தமிழகத்தில் முழு உருவச் சிலை எழுப்பப்படும் என்கிற மகத்தான, அற்புதமான அறிவிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதலில் நான் வரவேற்கிறேன். திரு. வி.பி. சிங், இந்திய அரசியலில் பல்வேறு திருப்புமுனைகளையும், திருப்பங்களையும் ஏற்படுத்திய மகத்தான தலைவர்; தேசிய முன்னணியை இந்தியாவில் உருவாக்கி, இந்திய அரசியலில் ஒரு மாற்று அரசியலை உருவாக்கியவர். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடா அல்லது பிரதமர் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமா என்கிற ஒரு கேள்வி எழுந்தபொழுது, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீட்டிற்காக பிரதமர் பதவியையே தூக்கி வீசிய மகத்தான தலைவர் திரு. வி.பி. சிங் அவர்கள். எப்படி திரு. வி.பி. சிங், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை நேசித்தாரோ, தமிழ் மண்ணை நேசித்தாரோ, தமிழக மக்களை நேசித்தாரோ, திராவிட இயக்கத்தை நேசித்தாரோ, பெரியாரை நேசித்தாரோ, அதேபோல திரு. வி.பி. சிங் அவர்கள்

2023 ஏப்ரல் 20] [திரு. வி.பி. நாகைமாலி]

இடதுசாரிகளையும் நேசித்தார். "இடதுசாரிகள் என்னுடைய இயற்கையான நண்பர்கள்" என்று சொன்னவர் திரு. வி.பி. சிங். ஆகவே, இடதுசாரிகளை நேசித்த, திராவிட இயக்கத்தை நேசித்த, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை நேசித்த, அந்த மகத்தான தலைவருக்கு இந்த மண்ணில் முழு உருவச் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உடன்பிறப்பு' என்கிற சொல்லின் உயிர் வடிவமாய் வாழ்ந்து கொண்டிருக்கிற சமத்துவத் தலைவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த அறிவிப்பை முதலில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்று மகிழ்கிறேன்.*

புதுடெல்லியில் நாடாளுமன்றக் கட்டடம் இருக்கிறது; குடியரசுத் தலைவர் மாளிகை இருக்கிறது; இராணுவ அமைப்புகளின் தலைமை அலுவலகம் இருக்கிறது; நில எல்லைகளைப் பாதுகாக்கிற தலைமை மையங்களாக அவை இருக்கின்றன. ஆனால், இந்தியாவை 'சமூகநீதி' என்கிற கருத்தியலால் இணைக்கிற தலைமை மையமாக தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) *மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த அறிவிப்பு அழகாகத் தெளிவுபடுத்துகிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

மறைந்த தலைவர், மகத்தான சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு என்பது ஒரு செயல் வடிவம்; அவரது அடிப்படையான கொள்கை என்பது சமூக நீதியாகும். அந்த அடிப்படையில்தான், புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் நூல்களை இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் அவரது நூற்றாண்டு விழாவையொட்டி கொண்டு சேர்க்கின்ற பணியையும் அவர் செய்தார். பௌத்தம் தழுவிய பட்டியலின வாழ் மக்களுக்கு SC *அந்தஸ்து தரப்படும் என்கிற ஆணையையும் அவர் தந்தார். சிறுபான்மை மக்களின் பாதுகாவலராகவும் இருந்தார்.*

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 ஏப்ரல் 20

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதே அவையிலே, ஒருமுறை, 'இந்தியாவின் வரலாற்றை நாம் தெற்கிலிருந்து எழுத வேண்டும்' என்று சொன்னார். உண்மையிலேயே கல்லால், மலையால் ஆன இமயமலை வேண்டுமானால் வடக்கில் இருக்கலாம்; கருத்தியலால், சமூக நீதியால் உருவான மலையாக தமிழ்நாடுதான் இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலிருந்து கிடைத்த வெளிச்சம்தான், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தாக்கம்தான், மறைந்த தலைவர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு துணையாக இருந்தது என்பதை இந்தத் தருணத்தில் நன்றியோடு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இரத யாத்திரை என்கிற பெயராலே, ஆகப் பெரும்பான்மையாக இருக்கிற இந்து சமயத்தைத் தழுவியிருக்கிற, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீட்டிற்கு எதிரான போராட்டத்தை நடத்தி, அவரது ஆட்சி களவாடப்பட்டது என்பதை நாம் அறிவோம். மண்டல் கமிஷன் அறிக்கை தொடர்பான நாடாளுமன்ற உரையிலே, அவர் ஒன்றைத் தெளிவாகச் சொன்னார். இந்த மண்டல் கமிஷன் அறிக்கை என்பது, தந்தை பெரியாரின் கனவை, புரட்சியாளர் அம்பேத்கரின் கனவை நனவாக்கக்கூடியதாக இருந்தது என்பதாகச் சொன்னவர் அவர். ஆகவே, அந்த மகத்தான சமூக நீதி காவலருக்கு ஒரு திருவுருவச் சிலையை அமைத்து, இந்தியாவிற்கு சமூக நீதிக் கொள்கையின் தலைநகரமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது சார்பிலே, விடுதலை சிறுத்தைகள் சார்பிலே, எழுச்சி தமிழர் மரியாதைக்குரிய தலைவர் முனைவர் திருமா அவர்களின் சார்பிலே நெஞ்சம் நிறைந்த நன்றியை காணிக்கையாக்கி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இட ஒதுக்கீடு வேண்டாமோ! மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் பிற்படுத்தப்பட்ட மக்களின் நெஞ்சமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிற. . . (குறுக்கீடு)

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசுகிறீர்களா?* (குறுக்கீடு) *திரு. நயினார் நாகேந்திரனா அல்லது நீங்களா? யார் பேசப் போகிறீர்கள்?* (குறுக்கீடு) *நீங்களா? விதி 110-ன்கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்பை வரவேற்று, நன்றி சொல்ல வேண்டும். அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் சொன்னாலும் போதும்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கின்றது. சமூகநீதி. . .* (குறுக்கீடு) *உடனே முடிக்கச் சொல்கிறீர்களே, ஐயா! இரண்டு வார்த்தைகள்தான், extra பேசிக்கொள்கிறேனே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, பேசுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *சமூக நீதி என்று நாம் இங்கே பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், இன்று இந்தியாவில் ஓர் உயர்ந்த பதவி, பிரதமர் பதவியில் இருப்பவரே ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர். அதுமட்டுமல்ல, தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு சட்ட ரீதியான ஓர் அங்கீகாரத்தை பாரதிய ஜனதா கட்சி கொடுத்திருக்கிறது. இதன் வாயிலாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.பி. சிங் அவர்கள் கொண்டு வந்திருக்கிற OBC, 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வரவேற்பு. அதற்கு தொடர்புடைய வார்த்தைகள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தொடர்பாகத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. திரு. வி.பி. சிங் அவர்கள் கொண்டு வந்த இட ஒதுக்கீடு பற்றி பேசுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வி.பி. சிங் அவர்கள் எந்த சமூக நீதியை இந்தியாவில் செயல்படுத்த வேண்டுமென முடிவு செய்து, அதற்கான ஆக்கப்பூர்வமான விஷயங்களைக் கொண்டு வந்தாரோ, அதனை பாரதிய ஜனதா கட்சி மத்தியில் இருக்கின்ற அரசாங்கம், வழிநடத்துகிறது. அதற்காக இந்தத் தீர்மானத்தை நாங்கள் வரவேற்கிறோம்.*

[2023 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நெஞ்சமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிற அகில இந்திய சமூக நீதிக் காவலர் என்று போற்றி வணங்குகிற, இந்திய நாட்டின் பிரதமராக வாழ்ந்து மறைந்த திரு. வி.பி. சிங் அவர்களுக்கு, சமூக நீதியின் பிறப்பிடமாகப் போற்றப்படுகிற தலைநகர் சென்னையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பை, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்கிறேன். அதேநேரத்தில், இதை சமூக நீதியின் மைல் கல் என்று நான் பார்க்கிறேன். இந்தியத் திருநாட்டில் அதிக பெரும்பான்மை கொண்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும்கூட, கல்வியிலேயும், வேலைவாய்ப்பிலேயும் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள் என்ற நிலையை மாற்றுவதற்கு, நடுவண் அரசின் சார்பில் திரு. பி.பி. மண்டல் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு பரிந்துரையை அரசுக்கு அளித்த நேரத்தில், அதைத் தூக்கி கிடப்பிலே போட்டுவிட்டார்கள். திரு. வி.பி. சிங் அவர்கள், பிரதமராக வந்தவுடன் அதனை தூசி தட்டி எடுத்து, திரு. பி.பி. மண்டல் உள்ளிட்டவர்களையெல்லாம் அழைத்துப் பேசினார்கள். அதில், அவர் திரும்பிப் பார்த்தது தமிழ்நாட்டை. அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டார்கள். அவர் திரும்பிப் பார்த்தது தமிழ்நாட்டை. குறிப்பாக ஆலோசனை கேட்டது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்திலே என்பதை நாம் மறந்துவிட முடியாது. அந்தளவிற்கு தமிழ்நாட்டை திரும்பிப் பார்த்தவர்.*

முற்பகல் 11–20

குறிப்பாக இதிலே ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. பி.பி. மண்டல் குழு அறிக்கையைத் தயாரிப்பதற்கு, திரு. மண்டல் அவர்களோடு உத்தரப்பிரதேசம், பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்குச் சென்றவர் தமிழ்நாட்டைச் சார்ந்த ஒருவர். திரு. மண்டல் அவர்களுக்கு நெருக்கமானவர்; திரு. வி.பி. சிங் அவர்களுக்கு

2023 ஏப்ரல் 20] [*திரு. ஜி.கே. மணி*]

நெருக்கமானவர்; எல்லோரும் அறிந்தவர்; அய்யா திரு. ஆனைமுத்து அவர்கள். தந்தை பெரியாரை போல வெண்தாடி வைத்தவர்; எளிமையானவர்; அவர்தான் திரு. மண்டல் அவர்களோடு உத்தரப்பிரதேசம், பீகார் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து சென்றவர். மண்டல் குழுவிற்கு உரிய அறிக்கைகளையெல்லாம் சேர்த்துக் கொடுத்தவர். மண்டல் அவர்களோடு பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களை நேரிலே சந்தித்து அதை வலியுறுத்தியவர் அய்யா ஆனைமுத்து அவர்கள். அதிலே, அவர் குறிப்பிட்டுச் சொன்னது, இங்கே முதலமைச்சராக இருக்கின்ற கலைஞர் அவர்களை நினைவுகூருங்கள், பாட்டாளி மக்கள் கட்சி சமூக நீதியிலே அக்கறை கொண்டிருக்கின்ற கட்சி, மருத்துவர் அய்யா அவர்களை நினைவுகூருங்கள் என்றெல்லாம் சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தவர் என்பதையும் இதிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிற்கு திரு. வி.பி. சிங் அவர்கள் வருகின்ற நேரத்தில் கலைஞர் அவர்களை சந்திப்பார்கள். அப்போது நானும் உடனிருந்திருக்கிறேன். இரண்டு முறை திரு. வி.பி. சிங் அவர்களை அழைத்து வந்து நாங்கள் நிகழ்ச்சிகளை நடத்தினோம். டெல்லிக்கு சென்று நிகழ்ச்சிக்கு தேதி கேட்ட நேரத்தில், 'கலைஞரும் வருகிறாரா, அழைக்கிறீர்களா' என்று மருத்துவர் அய்யா அவர்களிடம் கேட்டார். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டின்மீது அக்கறை கொண்டவர்; கலைஞர் அவர்களை நேசித்தார் என்பது ஒன்று. பாட்டாளி மக்கள் கட்சியினரும், பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களை மதித்தவர்கள் என்பது மட்டுமல்ல, இந்த இட ஒதுக்கீடு நாடாளுமன்றத்தில் நிறைவேறிய நேரத்தில், சட்டமாக்கிய நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் மாவட்டந்தோறும் ஊர்வலங்கள் சென்று, திரு. வி.பி. சிங் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியினர். சமூக நீதியிலே அக்கறை கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் நாம் எல்லோரும் ஒத்துப் போகிறோம் என்பதை நினைவிலே இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த விதி 110-ன்கீழான அறிவிப்பு மகத்தானது. மண்டல் குழு பரிந்துரைக்கு உறுதுணையாக இருந்த, திரு. வி.பி. சிங் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த அய்யா ஆனைமுத்து அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபமும், திருவுருவச் சிலையும் அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் மீண்டும் முன்வைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நெஞ்சார

[திரு. ஜி.கே. மணி] [2023 ஏப்ரல் 20

வரவேற்று, சமூக நீதிக்கு இது ஒரு மைல் கல் என்று தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாறுதான் இன்னொரு வரலாற்றை எழுத முடியும் என்பதற்கு இந்த அறிவிப்பு மிகப் பெரிய எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. வி.பி. சிங் என்ற ஒரு பெயர், தனி நபரின் பெயரல்ல; ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் ஒட்டுமொத்த அசையும் சொத்தாக அந்தப் பெயர் விளங்குகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஓர் அறிவிப்பையெல்லாம் அறிவிப்பாரா என்று யாரும் எதிர்பார்க்கவே இல்லை. எப்படி கீழடியிலே நம்முடைய வரலாறுகளெல்லாம் புதைந்து கிடக்கின்றனவோ, அப்படி தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற மாநிலமாக நம்முடைய மாநிலம் இருக்கிறது என்று சமூக நீதி வரலாற்றையும் தோண்டி எடுத்து, அவர்களுக்கு மிகப் பெரிய அங்கீகாரத்தைக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரலாற்றில் சில பெயர்கள், வெறும் பெயர்களாக மட்டும் எஞ்சி நிற்பதில்லை. அவை வரலாற்றின் பெரும் சாட்சியங்களாக, நீண்டதொரு கனவின் தொடக்கமாக உருப்பெற்று நிற்கின்றன. இந்திய வரைபடத்தின் கோடுகளைப்போல சமமற்றுக் கிடந்த மக்களின் வாழ்வைச் சமநிலைப்படுத்தியவர் திரு. வி.பி. சிங் அவர்கள். Mandal Commission பரிந்துரைகளை ஏற்று இந்த இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியது அவரது பிறப்பிற்கும், வாழ்விற்கும் நேர்மறையானது என்பதையெல்லாம் வரலாற்று ஆய்வறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். பூமிதான இயக்கத்திற்கு தன்னுடைய சொத்துகளையெல்லாம் கொடுத்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைவிட ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் வயதில் குறைவானவர், இளையவர். ஆனால், முத்தமிழறிஞர் அவர்களுடைய கோட்பாடுகளை, கொள்கைகளை, சமூக நீதிகளை அவர் ஏற்றுக்கொண்டார் என்பதுதான் மிகப் பெரிய வியப்பாக இருக்கிறது. 1931 ஆம் ஆண்டு ஜூன் மாதம், 25 ஆம் தேதி திரு. வி.பி. சிங் அவர்கள் பிறந்திருக்கிறார். ஆகவே, ஜூன் 25 ஆம்

2023 ஏப்ரல் 20] [திரு. கு. செல்வபெருந்தகை]

தேதி, இந்த ஆண்டோ, அடுத்த ஆண்டோ சிலை தயாரானால் பிறந்த நாளை நாமெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு சேர்ந்து கொண்டாடும் வாய்ப்பு கிடைக்கும் என்பதை நான் உங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன். அவர் உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சராக இருக்கின்றபோது அங்கிருக்கின்ற கொள்ளையர்களையெல்லாம் அடக்கிய பெருமையுள்ளவர். அதுமட்டுமல்ல, அவருடைய சொந்த சகோதரர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். சகோதரர் கொலை செய்யப்பட்ட பிறகு, அவர் ஆட்சியிலிருந்து விலகி, அதையெல்லாம் இன்னொருவரை அமர்த்தி சரி செய்து, அங்கே சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட கடமையாற்றிய மிகப் பெரிய மாண்புமிகு முதலமைச்சர் என்ற பெயர் எடுத்தவர். இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாக Ambani, Amitabh Bachchan *மீது வழக்குத் தொடர்ந்தவர் என்ற வரலாறும் அவருக்கு உண்டு. இந்த நாட்டில் யார் யார் பெரிய மனிதர்கள் என்ற எண்ணம் அவருக்கு இல்லை. அது* Amitabh Bachchan *ஆகட்டும்,* Ambani *ஆகட்டும், எல்லோர்மீதும் வழக்கு தொடுத்தார். ஆனால், இந்த காலத்தில் அப்படியெல்லாம் செய்ய முடியாது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பை காங்கிரஸ் பேரியக்கம் நன்றியுணர்வோடு வரவேற்கிறது. நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கின்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பில் சமூக நீதியைக் காப்பதில் மாண்புமிகு முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் ஆற்றிய பணியைப் பற்றிச் சொன்னார்கள். இந்த அறிக்கையை முழுமையாக நான் ஏற்றுக்கொண்டு, சமூக நீதிக்கு யார் குரல் கொடுத்தாலும், நாங்கள் அவர்கள் பக்கம் நின்று வாதாடுவதற்கும், அதை ஆதரிப்பதற்கும் என்றும் உறுதுணையாக இருப்போம் என்ற நல்ல கருத்தைச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பை முழு மனதோடு, நன்றியோடு ஆதரித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துறையின் சார்பாக மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக் காவலராக விளங்கிய ஒன்றிய அரசினுடைய முன்னாள் பிரதமர், மரியாதைக்குரிய நினைவில் வாழும் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் முழு உருவ கம்பீரச் சிலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம், அதைச் செயல்படுத்தக்கூடிய துறையின் அமைச்சர் என்கிற முறையில் மட்டுமல்ல, அன்றைக்கு பிரதமரான பிறகு, அவரை மரியாதை நிமித்தமாக சந்திக்க டெல்லிக்குச் சென்றிருந்தபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைப் பார்த்து, 'இவரையா எனக்கு அறிமுகம் செய்து வைக்கிறீர்கள்! சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி துவக்க விழாவில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வெள்ளுடை தரித்து அணிவகுத்துச் சென்றபோது, அதை தலைமையேற்று வழிநடத்தியவர் இவர்' என்று கூறியதை இந்த அறிக்கையிலே நினைவுகூர்ந்தார். திருமணமாகி ஒரே வாரத்தில் அந்த அணிவகுப்பு, நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்டேன் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் இந்தியப் பிரதமர், மண்டல் கமிஷனுடைய நாயகர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் முழு உருவ கம்பீரச் சிலை நிறுவப்படும் என்கிற ஓர் அரிய, பெரிய செய்தியை நம்முடைய மதிப்புக்கும், பாராட்டுக்கும், பாத்திரத்திற்கும் உரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அறிவித்ததை வரவேற்கிறேன். அதே நேரத்தில், முதலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. காரணம், ஒவ்வொரு நாளும் சட்டமன்றத்தில் ஒரு வரலாற்றுச் செய்தியை அறிவிக்கிறார்கள். நாங்களெல்லாம் கலைஞரோடு இருந்தவர்கள்.

2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

அவர்தான் அந்தக் கலையிலே மகா வல்லுநர். எந்த இடத்திலே இருந்தாலும் அந்த இடத்திலே ஒரு செய்தியை அறிவிப்பதில் ஒரு புதுமை செய்வார். அவருடைய திருமகன் இன்றைக்கு முதல்வர். கொஞ்சம்கூட அப்பனுக்கு தப்பாமல் பிறந்த பிள்ளையாக நின்று, (மேசையைத் தட்டும் ஒலி) செய்திகளை, வரலாற்று நிகழ்வுகளை இந்த மன்றத்தில் அறிவிப்பதைப் பார்த்து நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், ஆச்சரியப்படுகிறேன்.

வைக்கம் போராட்டம் நடைபெற்ற வைக்கத்திற்கு சென்று வந்தார்கள். சென்று வந்த பிறகு, இந்த மாமன்றத்தில் ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள். வைக்கத்தில் தந்தை பெரியார் போராட்டம் நடத்திய அந்த இடத்தில் ஒரு நினைவு சின்னம் ஏற்படுத்தப்படும் என்றும், தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாக சிறை வைக்கப்பட்டிருந்த 'அருவிக்குட்டி' கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று உருவாக்கப்படும் என்றும், பெரியாருடைய செய்திகளை, கட்டுரைகளை, அவருடைய அறிவுப்பூர்வமான வாதங்களை மாணவர்கள் அறிந்துகொள்கிற வகையில் ஏற்பாடு செய்யப்படும் என்றும், செப்டம்பர் 17 ஆம் நாளன்று 'வைக்கம் விருது' வழங்கப்படும் என்கிற வரலாற்றுச் செய்தியையும் ஒரு நாள் அறிவித்தார்கள்.

முற்பகல் 11–30

நேற்றைக்கு முன்தினம் பார்த்தால், யாருமே நினைத்துப் பார்க்காத அந்த மாவட்டத்து மக்களே மறந்துவிட்டிருந்த அண்ணன் இளையபெருமாள் அவர்களுக்கு கடலூர் மாவட்டத்தில் நூற்றாண்டு நினைவரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இதுகுறித்து யாருமே அவரைக் கேட்கவில்லை. யாரும் அவரிடத்தில் மனு கொடுக்கவில்லை. அவரை, அந்த ஊர்க்காரர்களே மறந்துவிட்டார்கள். ஆனால், அவர் எவ்வளவு பெரியவர் என்பதை நான் அறிவேன்; அன்றைக்குக்கூட நான் பேசும்போது சொன்னேன். அந்தத் தியாகிகளை கண்டுபிடித்து அன்றைக்கு அறிவித்தார். ஒரு வீரன்தான் இன்னொரு வீரனை புகழ்வான், பாராட்டுவான். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தியாகிதான் இன்னொரு தியாகியை கண்டுபிடித்து அவனை பாராட்டுவான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தியாகத்தைப் புரிந்தவர் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திரு. இளையபெருமாள் என்கிற தியாகியை கண்டுபிடித்து அன்றைக்கு அறிவித்தார்கள்.

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 20

இன்றையதினம் நம்முடைய திரு. வி.பி. சிங் அவர்களையும் யாரும் நினைக்கவில்லை. திரு. வி.பி. சிங், இரண்டு முறை பிரதமராக இருந்தார். மண்டல் கமிஷனைக் கொண்டு வந்தார். நம்முடைய காவிரி பிரச்சினையைத் தீர்த்தார். அதோடு அவரின் சரித்திரம் முடிந்துபோய்விட்டது. இப்படித்தான் பல வரலாற்றுச் செய்திகள் நாளடைவில் முடிந்து போய்விடுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், வரலாற்றுச் செய்திகள் இல்லாத ஒரு நாடு. உலக வரலாற்றை எழுதியவர், Arnold Joseph Toynbee என்பவர். அந்த Arnold Joseph Toynbee சொன்னார், வரலாற்றை மறந்த இனம், நினைவிழந்த மனிதனுக்குச் சமம் என்று. ஆகவே, நமக்கு சரியான வரலாறு கிடையாது. அந்த வரலாற்றை ஊக்குவிக்கின்ற அடையாளத்திற்கும் எதுவும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு நிலைமைக்குப் போய்விடக்கூடாது. இந்தியா முழுவதும் இன்றைக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் 27 சதவிகிதம் கல்வியில், வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வாங்கித் தந்த பெருமகன் நம்முடைய திரு. வி.பி. சிங் அவர்கள். அதுமட்டுமல்ல 1968-ல் இருந்து, கிட்டத்தட்ட 20 ஆண்டு காலத்திற்கும் மேலாக போராடி, போராடி பல பேச்சுவார்த்தைகள் நடத்தி, பல பிரதமர்களைச் சந்தித்தோம். ஆனால், காவிரி நடுவர் மன்றத்தை அமைக்க முடியவில்லை. தலைவர் அவர்கள் டெல்லிக்கு போகின்றபோதெல்லாம் நான், திரு. பொன்முடி, திரு. வேலு போன்ற ஒரு பட்டாளம் கூடவே போவோம். 'பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. Supreme Court-ல் இன்னொரு முறை பேசிப் பாருங்கள்' என்கிறார்கள். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகிறோம், பயனில்லை. கடைசியில், 'இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை' என்று சொன்னோம். திரு. வி.பி. சிங், 'இனிமேல் முடியாதா' என்று கேட்டார். 'முடியாது' என்றோம். கடைசியாக, 'இனிமேல் நடுவர் மன்றம்தான் உங்களுக்கு முடிவா' என்று கேட்டார். 'ஆம்', என்று கலைஞர் சொன்னார். இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே காவிரிக்கு ஒரு Tribunal-ஐ அமைத்துக்கொடுத்த பெருமகன் நம்முடைய திரு. வி.பி. சிங் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு திரு. வி.பி. சிங் மட்டும் Tribunal-ஐ அமைக்காவிட்டால்- இந்த மன்றத்தில் சத்தியம் செய்து சொல்கிறேன்-காவிரிக்கு நடுவர் மன்றமே வந்திருக்காது. வரக்கூடாது என்பதுதான் பலரின் விருப்பம்; பல அரசியல் சூழ்ச்சிகள். ஆனால், அன்றைக்கு தலைவரிடத்தில் அவருக்கு அபரிமிதமான மரியாதை. தலைவர் Phone-லேயே சொன்னார்; 'இனி முடியாது' என்று. Phone-லேயே

2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

'சரி' என்று சொல்லி, எங்களை அழைத்தார். எனக்கு முன்னால் பேசியவர் சொன்னாரே, காமராஜர் பெயரையும், அண்ணா பெயரையும் விமான நிலையத்திற்கு வைத்தார்கள் என்று– Beach*–ல்* meeting *ஒன்றில் பேசுகின்றார் தலைவர் கலைஞர். திரு. வி.பி. சிங் அவர்கள் மேடையைவிட்டு இறங்கி பின்னால் வந்துவிட்டார். அப்போது நாங்களெல்லாம் அங்கிருக்கின்றோம்.* Prime Minister*–குத்தான் தெரியுமே உடனே* lightning call *கேட்டுவிட்டு உடனே அறிவித்தார்.*

பிற்பகல் 11–35

நான் பல பிரதமர்களை இந்தக் காவிரி விஷயமாக பார்த்திருக்கின்றேன். இரண்டு பிரதமர்களோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். ஒன்று, திரு. வாஜ்பாய் அவர்கள், இன்னொருவர், நம்முடைய திரு. வி.பி. சிங் அவர்கள். திரு. வாஜ்பாய் அவர்களிடம் மிக, மிக நெருக்கமாகப் பழகியிருக்கின்றோம். ஒருமுறை தேர்தல் பணியின் காரணமாக அவர் வாரணாசியில் இருந்தார். தஞ்சை மாவட்டம், காவிரி தண்ணீர் இல்லாமல் வறண்டுபோய் இருக்கிறது. தண்ணீர் விட்டால்தான் முடியும் என்ற நிலை. தேர்தலில் வேலை செய்துகொண்டிருக்கின்றபோது, அங்கேயிருந்து கலைஞர் Phone *போட்டார். 'நான் தேர்தலில் வேலை செய்கிறேன், இப்பொழுது எப்படி என்று கேட்டார் திரு. வாஜ்பாய். எனக்குத் தெரியாது, எப்படியாவது கர்நாடகத்துடன் பேசுங்கள்' என்றார் தலைவர். திரு. வாஜ்பாய் அவர்கள்கூட கலைஞரிடம் அவ்வளவு மரியாதை வைத்திருப்பார். உடனே வாஜ்பாய், 'இன்றைக்கு* late night *நான் டெல்லிக்குச் சென்றுவிடுவேன். காலையில் துரைமுருகனை வரச்சொல்லுங்கள்' என்றார். நான் காலை 5–00 மணிக்கு அவருடைய வீட்டிற்குச் சென்றேன். பாவம் அவர்; சிவந்த கண்களுடன் என்னிடம் பேசி, என்னவேண்டுமென்று கேட்டு, வாங்கிக்கொடுத்தவர் திரு வாஜ்பாய் அவர்கள். அப்படிப்பட்ட இரண்டு பிரதமர்களை நான் பார்த்தேன்.*

ஆகவே, அப்படிப்பட்ட ஒரு பெரிய மனிதர், நம்முடைய வி.பி. சிங் அவர்கள். அவ்வளவு எளிமையானவர், முதல் முறை பிரதமர். இரண்டாவது முறை, எப்போதெல்லாம் யார், யார் பிரதமராக வருவது என்பதைப் பற்றியெல்லாம் தலைவர்தான் அவர்களுடன் உட்கார்ந்து பேசுவார். கடைசியில் தலைவர் என்ன முடிவு சொல்லுகிறாரோ அவர்தான் பிரதமர். திரு. I.K. *குஜரால் அவர்களும் அப்படித்தான் வந்தார். திரு. தேவகவுடா அவர்களும்*

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 20

அப்படித்தான் வந்தார். எல்லோரும் அப்படித்தான் வந்தார்கள். திரு. வி.பி.சிங் அவர்கள்தான் மறுபடியும் வரவேண்டும் என்று தலைவர் சொல்கிறார். திரு. வி.பி.சிங், 'கலைஞர் அவர்களிடம் நான் மாட்டினால், என்னை எப்படியாவது பதவியேற்க வைத்துவிடுவார். எனக்கு இனிமேல் இந்தப் பதவி வேண்டாம்' என்று போய்விட்டார். எங்கோ சென்று ஒளிந்துகொண்டார். கலைஞர், நான் எல்லாம் அவருடைய வீட்டிற்குச் சென்றோம். 'உங்களுக்குப் பயந்து அவர் இரண்டு நாளாக வீட்டிற்கு வரவேயில்லை, எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை' என்று அவருடைய wife சொன்னார்கள். ஆகவே, 'பதவி வேண்டாம்' என்று சொன்ன பெரிய மனிதர், இந்தியாவில், பதவி அவர் வீட்டுக் கதவை தட்டியபொழுது, 'வேண்டாம்–போ', என்று சொன்னவர்கள் இருவர். ஒருவர் திரு. வி.பி.சிங், இன்னொருவர் திருமதி சோனியா காந்தி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுகூட காங்கிரஸ்காரர்களுக்கு யார் பிரதமராக வருவது என்ற கேள்வி இருந்தது. முதல்முதலாக அடுத்த பிரதமர். . . (குறுக்கீடு) உங்களுக்கு எதுவுமே வேண்டாம் என்று நீங்கள் சொல்லிவிடுவீர்கள். (குறுக்கீடு) உங்கள் சமாச்சாரம் வேறு. ஆகையினால், அப்படிப்பட்ட ஒருவருக்கு சிலை வைத்திருக்கிறார். எனவே, நம்முடைய தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தச் சிலையை வைக்கவிருக்கிறார். அண்ணா அவர்கள் சொன்னார், சிலையை வைக்கும்போது அந்த சிலையைப் பார்க்கும்போதாவது, அவர்கள் யார்? அவர்கள் என்ன செய்தார்கள் என்று கொஞ்சம் தெரிய வேண்டாமா?' என்று. ஆகையினால், அந்தச் சிலையை வைப்பதன்மூலம், அதை பத்து பேர் பார்க்கிறபோது, யார் இவர்? இவர்தான் Mandal Commission-ஐ கொண்டு வந்தவர், அந்த Mandal Commission அடிப்படையில்தான் நான் வேலை பெற்றேன். எனவே, இந்த பெருமகனுக்கு என்னுடைய வணக்கம் என்று சொல்ல வேண்டும். திரு. உ.வே. சாமிநாத ஐயர் சிலையை வைத்தபோது, அப்படிப்பட்ட பாராட்டுக்கள் கிடைத்தன. எனவே, இந்த ஆட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்களே, முறையாக நடத்துகிறீர்கள். சொன்னதை செய்கிறீர்கள். இந்த நாடு அமைதிப்பூங்காவாக இருக்கிறது. அதேநேரத்தில் வரலாற்றைப் படைப்பதில் நீங்கள் காட்டுகின்ற ஆர்வத்திற்கு என் மனமார்ந்த பாராட்டை, வாழ்த்தை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றைப் பதிவு செய்வதற்கு தாங்கள் எடுக்கின்ற முயற்சி ஒவ்வொன்றையும் பாராட்டுகிறோம். பல பேருக்குப் பாராட்டுவதற்கு மனசு வராது. மனம் இருக்கும், மனசு வராது.

2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

இது ஒன்றும் கட்சி சார்ந்த விஷயம் கிடையாது. யார், யார் பாராட்டுவதற்கு மனம் வராமல் நிற்கிறார்களோ, அவர்களும் இந்த 27 சதவிகிதத்தில் பயன்பெற்றவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பி.ஜே.பி. சார்பாக வாழ்த்தி, வரவேற்றிருக்கிறார்கள். பி.ஜே.பி. சார்பாக வரவேற்றார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை விட்டுவிடுங்கள். தமிழ்நாடு அப்படித்தான் இருக்கும். எனவே, இந்த நல்ல காரியத்தைச் செய்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மீண்டும், மீண்டும் என் நன்றியை, எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்த திரு. வி.பி. சிங் அவர்களுக்குச் சிலை அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்த அறிவிப்பிற்கு அனைவரின் பாராட்டோடு நானும் என்னுடைய பாராட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. வி.பி. சிங் அவர்களுக்கு அகில இந்திய அளவில் துணை நின்று, மறைந்த தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் அந்த இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார்கள். அந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டின்கீழ் மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டில் மாநிலங்கள் ஒப்படைக்கின்ற இடங்களை ஒன்றிய அரசு OBC வகுப்பினருக்கு 2019 முதல் தொடர்ந்து 27 சதவிகித இடங்களை ஒதுக்காமல் இருந்தபோது, மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், வழக்கறிஞர் திரு. வில்சன் அவர்கள்மூலம் உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் தொடர்ந்து போராடி, தற்போது அகில இந்திய அளவில் under graduate, post graduate மருத்துவப் படிப்பிற்கு இந்தியா முழுமைக்கும் 4,022 இடங்களை OBC வகுப்பினருக்குப் பெற்றுக் கொடுத்தது, மாண்புமிகு இன்றைய முதல்வர் அவர்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பல் மருத்துவப் படிப்பிற்கும் BDS, MDS படிப்பிற்கும் 1,000 இடங்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக்கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, திரு. வி.பி. சிங் அவர்கள் கொண்டுவந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு ஒன்றிய அரசின்மூலம் தடை ஏற்பட்டபோது, அதனைச் சட்டப் போராட்டத்தின்மூலம் நிறைவேற்றியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் என்பதையும் இந்த நேரத்திலே இந்த அவைக்குத் தெரிவிப்பதோடு, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

(அ) கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டம், தொட்டமாந்துறை கால்வாய்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, உத்தமபாளையம் வட்டம், தொட்டமாந்துறை கால்வாய்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மீதுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தொட்டமாந்துறை அருகில் சுருளியாற்றிலிருந்து சண்முகா நதி நீர்த்தேக்கத் திட்டக்

2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

கால்வாய் மற்றும் 8 கிராமங்களில் உள்ள 34 பயன்பெறும் கண்மாய்களுக்கு குழாய் மூலமாக நீர் வழங்கும் இறைவைப் பாசன வசதி அமைத்தல் பணியானது ரூ.91.00 கோடிக்கு அரசாணை எண் 68, பொதுப் பணி (ப்பி 1) துறை, நாள் 24–2–2021–ல் வழங்கப்பட்டு, 24–2–2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மாநில தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலானதால், ஒப்பந்தப்புள்ளி நிறுத்தி வைக்கப்பட்டது.

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கோகிலாபுரம் கிராமத்திற்கு அருகே சுருளியாற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு தொட்டியில் நிரப்பப்பட்டு பம்பிங்மூலம் மேடான பகுதிகளில் உள்ள கண்மாய்கள் மற்றும் ஊருணிகளுக்கு சுருளியாற்றிலிருந்து குழாய்கள் வழியாக சுமார் 40 கி.மீ. தூரத்திற்கு தண்ணீர் எடுத்து சென்று வழங்குவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

இத்திட்டத்தின்மூலம் உத்தமபாளையம் வட்டத்தில் 8 கிராமங்களிலுள்ள 34 கண்மாய்களுக்கு தண்ணீர் வழங்குவதன்மூலம் 7 நீர்வளத் துறை கண்மாய்கள் மற்றும் 27 ஊராட்சி ஒன்றிய கண்மாய்கள், 2,300 கிணறுகள் மற்றும் 363 ஆழ்துளைக் கிணறுகளை நீர்செறிவூட்டுதலின்மூலம் 7,250.00 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும். மேலும், இப்பகுதிகளில் உள்ள குடிநீர்த் தேவை மற்றும் கால்நடைகளுக்கான தண்ணீர் தேவையும் பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்தின்படி, நாள் ஒன்றுக்கு 14 கனஅடி/வினாடி வீதம் (18 மணி நேரம் மட்டும்) வருடத்தில் 160 நாட்களுக்கு தினசரி 0.90 மி.க. அடி வீதம் மொத்தம் 144 மி.க. அடி நீர் தேவைப்படும். கண்மாய்களில் மொத்த கொள்ளளவான 50 மி.க. அடியில் மூன்றில் இரண்டு பங்கு வீதமாக 33.00 மி.க. அடி மற்றும் நீர் இழப்பு 11.00 மி.க அடியாக மொத்தம் 44.00 மி.க. அடி மற்றும் சண்முகா நதி நேரடி பாசனத்திற்கு 88.00 மி.க. அடி, கிணறுகள் நீர் ஊற்றுக்கு 12.00 மி.க. அடி, ஆக மொத்தம் 144 மி.க. அடி நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பயன்பெறும் கிராமங்கள்

எரசக்கநாயக்கனூர், சின்ன ஓவுலாபுரம், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி, சீப்பாலகோட்டை, ஜங்கால்பட்டி மற்றும் கோவிந்தநகரம்.

[திரு. துரைமுருகன்] [2023 ஏப்ரல் 20

நில எடுப்பு/நில இழப்பீடு

தோராயமாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் மொத்த நிலத்தின் பரப்பு 55.64 ஏக்கர் ஆகும். இதில் 39.01 ஏக்கர் பட்டா நிலங்களும், 16.63 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும் அடங்கும்.

மேற்படி திட்டத்திற்குத் தேவைப்படும் தண்ணீரை சுருளியாற்றிலிருந்து எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் இடையே பலத்த எதிர்ப்பு உள்ளது. எனவே, இத்திட்டத்தைச் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்வதில் தீர்வு எட்டப்படாமல் உள்ளது. பேச்சுவார்த்தைமூலம் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள் ஒரேயொரு கேள்வியைக் கேட்டு உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதி, சின்னமனூர் ஒன்றியம், தொட்டமாந்துறை கால்வாய்த் திட்டம், மிகவும் முக்கியமான திட்டம். இத்திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட சின்னமனூர் ஒன்றியத்தில், போடி தொகுதிக்குட்பட்ட ஜங்கால்பட்டி, கோவிந்தநகரம், எரசக்கநாயக்கனூர், அப்பிப்பட்டி கிராமங்களை உள்ளடக்கி பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 7 கண்மாய்களும், ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான 27 கண்மாய்களும், ஆக மொத்தம் 34 கண்மாய்களில் தண்ணீர் தேக்கப்படுவதன் மூலமாகவும், 2,300 கிணறுகள் மற்றும் 363 ஆழ்துளைக் கிணறுகளில் நீர்செறிவூட்டுவதன் மூலமாகவும் சுமார் 7,200 ஏக்கர் நிலங்கள் நேரடியாகப் பாசன வசதி பெறுகின்றன. விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் விளக்கமாக, விவரமாக, இத்திட்டம் அவசியம் தேவை என்பது குறித்து வலிமையான தரவுகளையும், தேவையான ஆதாரங்களையும் தந்திருந்தாலும்கூட, அந்தத் தண்ணீர் சுருளியாற்றிலிருந்து எடுக்கப்படுவதால், சில எதிர்ப்புகள் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.*

2023 ஏப்ரல் 20] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். சுருளியாறு என்பது மேகமலை, வெண்ணியாறு மற்றும் மகாராஜாமெட்டிலிருந்து வரும் தண்ணீர் சுருளி அருவியாக மாறி, அது சுருளியாறாகிறது. அந்தச் சுருளியாற்றிலிருந்து இதுவரைக்கும் நேரடியாக பாசனத்திற்கோ, குடிநீருக்காகவோ தண்ணீர் எடுக்கப்படவில்லை. அந்தச் சுருளியாற்றிலிருந்து முல்லைப் பெரியாறுக்கு வருடத்திற்கு 500 மில்லியன் கன அடி தண்ணீர் வருகின்றது. அந்த 500 மில்லியன் கன அடி தண்ணீரிலிருந்துதான் இத்திட்டத்திற்குத் தேவையான 144 மில்லியன் கன அடி தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகவே, இதில் எதிர்ப்பு இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள். அவர் பல கனவுத் திட்டங்களை வைத்திருந்தார்கள். அதில் முக்கியமான கனவுத்திட்டம் என்பது தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவது. மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இதுவரையில், 3 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. 1,50,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தவகையில், இத்திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலமாக 40 கிராமங்களில் நிலத்தடி நீர் மேம்படுத்தப்படுவதனால் கிட்டத்தட்ட 300 மில்லியன் கன அடி நீர் அங்கு கிடைக்கப்பெறுகின்றது. அந்த 300 மில்லியன் கன அடி நீர் மூலமாக புதிதாக 2,000 ஏக்கர் பாசன வசதி பெறாத நிலங்களும் பாசன வசதி பெறும்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வாழை ஏற்றுமதி சிறப்புத் திட்டம் என்ற ஓர் அறிவிப்பினை அறிவித்திருக்கின்றார்கள். இந்தத் திட்டம், அந்தத் திட்டத்திற்கு அவசியம் தேவைப்படுகிறது. அதேபோன்று, 2010 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நம் பகுதிக்கு வந்து திராட்சை பழத் தொழிற்சாலையைத் துவக்கி வைத்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு வார்த்தை, கூறி, இத்துடன் உரையை முடித்துவிடுகிறேன். திராட்சை புவிசார் குறியீடு பெற்றிருக்கிறது. வாழை ஏற்றுமதிக்கு உகந்ததாக அமைந்திருக்கிறது. இதற்கெல்லாம் இத்திட்டம் அவசியமாக இருக்கின்றது. மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர்,

அண்ணன் திரு. P.T.R. பழனிவேல் ராஜன் அவருடைய பெயரில் அப்பகுதியில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற 18 ஆம் கால்வாய்த் திட்டம் என்பது அப்பகுதி மக்களின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. நான் உருக்கத்தோடு உரையாற்றுகின்றேன்; உணர்வோடு உரையாற்றுகின்றேன். ஆகவே, தயவுகூர்ந்து இல்லையென்று சொல்லாமல் நம்பிக்கையோடு இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் அப்பகுதி குறித்து ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், தீர்மானத்தில் அவர் ஏதும் எழுதிக்கொடுக்கவில்லை. இருந்தாலும் ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கம்பம் ராமகிருஷ்ணன் அவர்கள் சொன்னதுபோன்று, தொட்டமாந்துறை கால்வாய் திட்டம் என்பது, கம்பம் தொகுதியில் மட்டுமல்லாது, போடிநாயக்கனூரில் சில பகுதிகள் சேர்ந்தது என்றும் சொன்னார்கள். மேலும், போடிநாயக்கனூர் தொகுதி, சின்னமனூர் ஒன்றியம், தேனி ஒன்றியம் மற்றும் ஆண்டிப்பட்டியில் சில பகுதிகளையும் உள்ளடக்கியது இக்கால்வாய் திட்டம். இதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது; இத்திட்டம் அவருடைய கைவசம் இருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தின் அவசர அவசியத்தைக் கருதி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அருமைப் பெரியவர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தினை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் அவர்களும், மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் சொன்னவை அனைத்தும்

2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

உண்மை, உண்மையைத் தவிர வேறல்ல. அதேபோன்று நான் சொல்லப்போவதும் உண்மை, உண்மையைத் தவிர வேறல்ல. இவர்கள் சொன்னவற்றை நான் மறுபடியும் சொல்ல விரும்பவில்லை. ஒன்றைச் சொல்கிறேன். இத்திட்டம் சரியான திட்டம் என்கிற அடிப்படையில்தான் சென்ற ஆட்சியிலேயே 24-2-2021 அன்று ஓர் அரசாணை வெளியிட்டார்கள். ஆனால், தேர்தல் வந்ததால், ஒப்பந்தப்புள்ளி கோராமல் சென்றுவிட்டார்கள். நாங்கள் இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரலாமா என்று முயற்சி செய்தோம். ஒரு பலத்த எதிர்ப்பு, கம்பம் பள்ளத்தாக்கிலிருந்து வந்தது. நீங்கள் கேட்கிறீர்கள் என்பதனால் செய்திட முடியாது. அவர்களை அழைத்து சமாதானம் செய்தபிறகுதான், இன்னொரு திட்டத்தை எடுக்க முடியும். அத்திட்டத்தை நான் இப்போது LBP*-ல் செய்து கொண்டிருக்கிறேன். ஆகையால், அவர்களை அழைத்து சமாதானம் செய்து,"இத்திட்டத்தினை மேற்கொள்ளலாம், நல்ல திட்டம்தான்" என்று சொல்ல வேண்டும். தற்சமயம் அவர்கள் இத்திட்டத்தினை ஒப்புக்கொண்டாலும், சென்ற ஆட்சியில் இத்திட்டத்திற்கான அரசாணை வெளியிடும்போது, இதன் மதிப்பீடு 91 கோடி ரூபாய். இன்றைக்கு என்னுடைய கணக்கின்படி* Revised Estimate *போட்டுப் பார்த்தால், ரூ.120 கோடி அல்லது ரூ.130 கோடி ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* P.T.R. *இருந்தார் என்று சொன்னார். இப்போது அவர்* son *இருக்கிறார்; அவர் ஊர்க்காரர்தான். 120 கோடி ரூபாய் அவர் ஒதுக்கீடு செய்து தருகிறார் என்றால் இத்திட்டத்தினைச் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நிதிநிலைமை எப்படி இருக்கிறதென்பதை நான் சொல்வதைவிட மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்தான் சொல்ல வேண்டும். எனவே, அவர் உண்டு, அவர் தொகுதி உண்டு என்பதைத் தெரிவித்து, அவர் கொடுத்தால் உண்டு, இல்லையென்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.*

(ஆ) சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை, முண்டியம்பாக்கம் அருகில் அமையவுள்ள மேம்பாலத்தை ஒரத்தூர் பிரிவு சாலை வரை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 20

முற்பகல் 11–50

***திரு. ச. சிவகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அருகில் அமைய உள்ள மேம்பாலத்தை ஓரத்தூர் பிரிவு சாலை வரை நீட்டிக்க வேண்டியது” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்கள் மேசையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிக்கை

சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலை (NH 45) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் கோரும் முண்டியம்பாக்கம்–ஒரத்தூர் பிரிவு சாலை கி.மீ. 154/280 (Black Spot ID No TN-02-073) மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி எதிரில் கி.மீ. 154/730–ல் (Black Spot ID No TN-91-01) இரண்டு விபத்து பகுதிகளையும் இணைத்து விபத்துத் தடுப்பு நடவடிக்கைக்காக (Black Spot Improvement) பாலங்களில் ஒரு வகையான வாகன சுரங்கப் பாதை (VUP) மற்றும் வரையறுக்கப்பட்ட இலகு இரக வாகன சுரங்கப் பாதை (LVUP) ரூ.60.00 கோடி (நில எடுப்பு உட்பட) மதிப்பீட்டில் அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பரிசீலனையில் உள்ளது. மேலும், இதில் கூடுதல் நில எடுப்புப் பணிக்காக ரூ.17.245 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயனாளர்களுக்கு இழப்பீடு தொகை வழங்கப்பட்டது என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஒரே கேள்வியாகக் கேட்டு முடித்துவிடுங்கள். ஒரே பதிலாக சொல்லிவிடுவார்கள்.

2023 ஏப்ரல் 20]

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து பரிசீலனையில் உள்ளதாகவும், மேலும், 17.245 கோடி ரூபாய் கூடுதலாக நில எடுப்பிற்காக ஒதுக்கீடு செய்து, நிலம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, முண்டியம்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மட்டுமல்ல, அருகில் 300 மீட்டரில் ஒரத்தூர் பிரிவு சாலையும் உள்ளது. அடுத்த 200 மீட்டரில் ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளது. ஆகவே, தமிழ்நாட்டில் முக்கிய தேசிய நெடுஞ்சாலையான சென்னை-திருச்சி மட்டுமல்ல, மதுரை, தூத்துக்குடி வரையிலும் தேசிய நெடுஞ்சாலையாக உள்ளதால், கிட்டத்தட்ட 4 ஆண்டுகளில் திருச்சி-சென்னை சாலையில் 2,100 பேர் விபத்தில் மரணமடைந்துள்ளார்கள். கிட்டத்தட்ட 6,300-க்கும் மேற்பட்ட விபத்துகள் நடைபெற்றுள்ளன. தேசிய நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட 7,500 பேர் விபத்துக்குள்ளாயிருக்கின்றனர். ஆகவே, மருத்துவமனைக்கு வரக்கூடிய அனைவருக்கும் போக்குவரத்து நெரிசலாலும், அதேபோல விவசாய பயிர்களை எடுத்துச் செல்லும்போது கரும்பு* tractors*மூலம் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலாலும் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த இரண்டு வழிகளையும் சேர்த்து மேம்பாலம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நெடுஞ்சாலை* NH *45, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. முண்டியம்பாக்கம்-ஒரத்தூர் பிரிவு சாலை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி எதிரிலே 2 விபத்து பகுதிகளை இணைத்து முண்டியம்பாக்கத்திலே வாகனங்கள் சுரங்கப் பகுதியும் மருத்துவக் கல்லூரி அருகிலே வரையறுக்கப்பட்ட இலகு இரக வாகனங்கள் சுரங்கப் பாதையும் ரூ.60 கோடி மதிப்பீட்டில் அமைப்பது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பரிசீலனையில் இருக்கிறது. இரு பாலங்களும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளதால், சட்டமன்ற உறுப்பினர் கோரியபடி முண்டியம்பாக்கம் பிரிவு பாலம் நீட்டிக்கப்படவும், இதை உடனே செய்து முடிப்பதற்காக*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 20

ஏற்கெனவே NHAI-லே இருக்கிற பல்வேறு துறையைச் சார்ந்த அதிகாரிகளிடத்திலே தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் எழுதியிருக்கிறோம். அதை விரைந்து முடிப்பதற்கு இந்த அரசு வேண்டிய முயற்சிகளை எடுக்கும்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2023 ஏப்ரல் 20]

(ஆ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை. . . (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துகொள்கின்றேன். மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

2023 ஏப்ரல் 20]

(ஈ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

முற்பகல் 11–55

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

—

(அ) கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.21,55,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 291, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 320, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1779, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3393, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3501, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4801, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6702, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 380, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2492, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2903, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6309, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6989, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 652, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 897, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1287, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1824, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2375, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2654, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3259, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3308, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3354, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3710, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4228, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4561, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7282, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2290, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3206, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5398, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 950, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.A. *பாண்டியன்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, வல்லம்படுகை ஊராட்சியில் கொள்ளிடம் பாலம் அருகே காவல் துணை நிலையம் மற்றும் சோதனைச் சாவடி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1068, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "CCTV *பயன்பாட்டை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1599, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி வட்டம், வடசித்தூர் கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1863, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,"மடத்துக்குளம் தொகுதி, கொமரலிங்கம் பேரூராட்சியில் உள்ள காவல் நிலையத்திற்கு மாற்றாக புதிய காவல் நிலையக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1889, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

2023 ஏப்ரல் 20]

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர்களுக்கு CUG எண் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2180, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டையில் உள்ள காவல் நிலையத்திற்கு புதிய காவல் நிலையக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3114, மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன்.

திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் வட்டம், செந்துறையில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3475, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தருமபுரி மாவட்டத்தில் காவல் துறையில் அளிக்கப்படும் மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3627, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “காவலர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

“காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3710, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.N. *விஜயகுமார்.*

திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருப்பூர் வடக்கு தொகுதியில் காவலர்கள் பற்றாக்குறையைப் போக்க புதிய காவலர்கள் நியமிக்க*

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3777, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, வேளாங்கண்ணியில் கூடுதலாக ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3901, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டையில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3999, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதி, மரவமங்கலத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தை நிரந்தர காவல் நிலையமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4079, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் சிசிடிவி கேமரா பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4158, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் ஆரணி கிராம காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து சேவூர் அல்லது அரியப்பாடி ஊராட்சிப் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4204, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, கணபதிபாளையம் ஊராட்சி மற்றும் கரைப்புதூர் ஊராட்சி, உப்பிலிபாளையத்தில் துணைக் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4926, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோ. கூட்டுரோட்டில் புதிய காவல் நிலையக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4968, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதி, மாட்லாம்பட்டியில் அறிவிக்கப்பட்ட புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5010, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியில் காவல் நிலைய அதிகாரிகள் உட்பட அனைத்து காவலர்களையும் மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5059, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாசுக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் போன்றவை குறித்த சட்ட விதிமீறல்கள் தொடர்பான புகார்கள் மீது விசாரித்து நடவடிக்கை எடுக்க காவல் நிலையங்களில் சிறப்பு உதவி ஆய்வாளர் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5466, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K. *மாரிமுத்து.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை வட்டாரம், இடும்பாவனத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5518, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து மகளிர் காவல் நிலையம் இல்லாத இடங்களில் அயல் காவல் பணிகளுக்கு பெண் காவலர்களை இரவுப் பணிக்கு நியமிப்பதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5694, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட பேருந்து நிலையங்களில் காலை, மாலை நேரங்களில் காவலர்களைப் பணியமர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5918, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து திருவாதவூரில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6020, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூடலூர் தொகுதி, பந்தலூரில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6525, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியில் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6564, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையம் மற்றும் உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையம் ஆகிய காவல் நிலையங்களுக்குப் புதியதாக ஆய்வாளர் பணியிடம் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6842, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை ஒன்றியம், வெள்ளியங்காட்டில் போலீஸ் Outpost அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7439, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதி, மணல்மேட்டில் காவலர்களுக்கு வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7465, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி—வேலூர் தொகுதியில் பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட மெயின் ரோடு மற்றும் பொது இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7503, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விராலிமலை தொகுதி, விராலிமலையில் மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,661,42,97,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.122,97,92,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,55,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 292, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 321, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1780, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3394, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3502, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4802, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6707, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 378, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2501, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2901, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6323, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6990, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 651, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 896, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1286, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1829, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2376, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3260, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3309, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3355, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3657, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4229, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4562, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2291, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3207, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5401, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 949, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், புதுச்சத்திரம் பகுதியில் புதிதாக தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1069, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, கம்மாபுரம் மற்றும் புவனகிரி ஆகிய இடங்களில் புதிதாக தீயணைப்பு நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1616, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு பகுதியில் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1867, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.*

திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொமரலிங்கம் பேரூராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2105, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜூனன்.*

திரு. பொ. அர்ஜூனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி, ஆவணிப்பூர் ஊராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2137, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்கலம் ஊராட்சியில் புதியதாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3712, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு தொகுதியில் பேரிடர் மற்றும் தீ விபத்து காலங்களில் மீட்புப் பணிக்குப் போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3779, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3904, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4000, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதிக்குட்பட்ட காளையார்கோவில் தாலுகாவில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4081, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி தீயணைப்பு நிலையத்தில் பணிபுரிவோருக்கு குடியிருப்பு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4927, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோட்டப்பட்டியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4969, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

2023 ஏப்ரல் 20]

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரிமங்கலத்தை மையமாகக் கொண்டு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5011, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தீயணைப்பு நிலையத்திற்கு தேசிய நெடுஞ்சாலையில் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5467, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5519, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் தீயணைப்பு வாகனங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5699, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீயணைப்பு வீரர்களுக்கு வெளிநாடுகளில் பயன்படுத்தும் நவீன மீட்பு உபகரணங்கள் போன்று தமிழகத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6526, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6569, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, ஏழுமலை பேரூராட்சியில் புதியதாக தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6843, மாண்புமிகு உறுப்பினர் திரு.* A.K. *செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தீயணைப்பு வாகனங்கள் செல்ல முடியாத இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் தீயை அணைக்க நவீன கருவிகள் வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7114, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூர் தொகுதிக்குட்பட்ட கருத்தம்பட்டியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7288, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதி, பெரிய கொழப்பலூரில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7442, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7466, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர்.

திரு. S. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமத்தி-வேலூர் தொகுதி, கபிலர்மலை அல்லது ஜேடர்பாளையத்தில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7483, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொண்டாமுத்தூர் தொகுதி தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7505, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விராலிமலை தொகுதி, விராலிமலைக்கு புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,28,81,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.80,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

நண்பகல் 12–00

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளில் உள்ள சிறு கணினிகளிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு

@ 307 முதல் 403 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 20] [பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கைகளின்மீது சேர்த்தே பேசலாம். இன்று 12 மாமன்ற உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். முதலில் பேச வருகின்ற மாமன்ற உறுப்பினருக்கு 15 நிமிடங்களும், அதன் பின் வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தலா 7 நிமிடங்களுக்குள் உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிறைவாக பேசவிருக்கின்றார்கள். ஆகவே, காலத்தின் அருமை கருதி பேச வருகின்ற உறுப்பினர்கள் தயவுசெய்து குறித்த நேரத்தில் உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், 12 சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருசிலர் 5 நிமிடங்களாவது தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவ்வாறு அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, காலத்தின் அருமையை எல்லோரும் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

***முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சம் ஆனந்த பூந்தோப்பு; வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு.' பிரபஞ்சத்தில் வாழ்கின்ற தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்ற, காலத்தாலும், காவியத்தாலும் போற்றப்படுகின்ற மனித இனங்களால் நேசிக்கப்படுகின்ற மறைந்தும், மறையாமல், மக்கள் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாட்சிமை மிகுந்த திராவிட இயக்கத்தினுடைய பிதாமகன்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் ஆண்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு மூச்சுக் காற்றிலும் கலந்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு பெரும் தெய்வங்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கருணை உள்ளம் கொண்ட காருண்யம், எதிரிகளையும், துரோகிகளையும் வீழ்த்திய வீர மங்கை, திராவிட சக்தி, தமிழ் கூறும் நல் உலகின் ஒப்பற்ற தலைவி, இதய தெய்வம் அம்மா என்ற தெய்வத்தை மீண்டும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களின் வழியில் சவால்களைச் சந்தித்து, எதிர்ப்புகளை துணிவுடன் எதிர்கொண்டு, தான்*

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 20

தலைமை தாங்கும் இயக்கத்தையும், தொண்டர்களையும் வெற்றிப் பாதைக்கு என்றும் அழைத்துச் செல்லும் ஆற்றல் படைத்தத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழகத்தின் எதிர்காலம் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாமன்றத்தில் பேசுவதற்கான நல்வாய்ப்பினை வழங்கிய எதிர்க்கட்சிக் கொறடா, சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும், பேரவையினுடைய மாண்புகளை சரியாகக் காத்து, எங்களைப் போன்றவர்களுக்கு போதுமான நேரம் கொடுத்து நடத்துகின்ற Socrates அய்யா அவர்களையும் வணங்குகிறேன்.

ஏனென்றால் "ஏன், ஏன், ஏன்" என்ற கேள்விகளைக் கேட்பதற்குத்தான் காவல் துறை மானியம். இதில் அரசவை கவிஞர்கள் அல்லது நிலைய வித்வான்கள்போல் உங்களை அனுசரித்துப் பேசி, மக்களுக்கான செய்திகள் போய் சேராமல் இருக்கக் கூடாது என்பதற்காக, மக்களிடத்தில் சேர வேண்டியவற்றை சேர்ப்பிக்கின்ற பணியை எதிர்க்கட்சினுடைய தலைவர் எங்களிடத்தில் கொடுத்திருக்கின்றார் என்கின்ற வகையில், முதலில் என்னுடைய தொகுதிக்குரிய, காவல் துறைக்கான கோரிக்கைகளைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி காவலர்களுடைய குடியிருப்புகள் கட்டும் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. காவலர்கள் குடியிருப்புகள் அங்கு இடிக்கப்பட்டுவிட்டன. பொள்ளாச்சியில் குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் தயார் நிலையில் இருக்கின்றது. அங்கே புதர் மண்டியுள்ளது. எனவே, உடனடியாக நல்ல முறையில், 750 சதுர அடியில், நல்ல காற்றோட்ட வசதியுடன், பின்புறம் balcony உடன் காவலர்களுக்கு காவலர் குடியிருப்பைக் கட்டித்தர வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைக்கிறேன்.

காவலர்கள் எல்லாம் இப்போது பிரிந்து கிராமங்களில் குடியிருந்து வருகிறார்கள். அவசரக் காலத்தில் 20, 50 காவலர்களை ஒன்று சேர்க்க வேண்டுமென்றால், தேடிச் சென்று அவர்களை அழைக்க வேண்டியிருக்கிறது. ஒரு குடியிருப்பு என்று இருந்தால்,

உடனடியாக காவலர்களை ஒன்று சேர்த்து, அவர்களை அழைத்துச் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

அதேபோல், பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையம் கட்டப்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அந்தக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடத்தை இந்த ஆண்டு அறிவிப்பில் வெளியிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு புறக் காவல் நிலையம் அமைத்துத்தர வேண்டும். அது 24 மணி நேரமும் செயல்படக்கூடியதாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி நகரினுள் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய காவல் கட்டுப்பாட்டு அறை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி நகரில் ஓடிக்கொண்டிருக்கின்ற patrol வாகனம் மிகவும் பழமையானதாக உள்ளதால் அதை மாற்றி, புதிய வாகனம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் சட்டம்-ஒழுங்கு பிரிவிற்கென்று ஓர் ஆய்வாளரும், குற்றப் பிரிவிற்கென்று ஓர் ஆய்வாளரும் என தனித்தனியாக இரண்டு ஆய்வாளர்களை நியமிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு உட்கோட்டத் தலைமையிடத்திலும் வெளியூரிலிருந்து வருகின்ற பாதுகாப்புப் பணி காவலர்களுக்கு கழிப்பறை வசதி மற்றும் குளியலறை வசதிகளுடன்கூடிய தங்கும் barracks-களை அரசு கட்டித்தர வேண்டுமென்பதை மிக முக்கியமான ஒரு கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பொள்ளாச்சி, மகாலிங்கபுரம் காவல் நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம், உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் (DSP office) இவை மூன்றும் கடந்த காலத்தில், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில் கட்டிக்கொடுக்கப்பட்டன. அவற்றுக்கு இன்னும் compound wall கட்டப்படாமல் உள்ளது. ஆகவே, அவற்றுக்கு compound wall அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெகமம் காவல் எல்லையில் உள்ள வடசித்தூர் கிராமம் மற்றும் பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தின்கீழ் உள்ள ஜோதி நகரின் மத்தியப் பகுதியிலும், பொள்ளாச்சி மேற்கு காவல்

நிலையத்தின்கீழ் உள்ள கோபாலபுரத்திலும் out police station அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனைமலையில் ஒரு புதிய தீயணைப்பு நிலையமும், அதற்கான தீயணைப்பு நிலையக் கட்டடமும், தீயணைப்பு வீரர்கள் தங்குவதற்கான இடத்தைத் தேர்வு செய்தும் தர வேண்டும். மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கடந்த ஆட்சியில் கிணத்துக்கடவில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கு அனுமதி கொடுத்தார்கள். நாங்கள் முயற்சி செய்து, தேசிய நெடுஞ்சாலையில் அதற்கான இடத்தைத் தேர்வு செய்து, இடம் ஒதுக்கிக் கொடுத்து 2 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசும்போதும் நான் இதை வலியுறுத்தினேன். எனவே, அதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தீயணைப்பு நிலையத்தை உடனடியாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சியில் காவலர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் 20 ஆண்டுகள் பணிபுரிந்த காவலர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் (SSI) பதவி உயர்வு வழங்குவதாக தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தீர்கள். ஆனால், 25 ஆண்டுகள் கடந்து பணிபுரியும் காவலர்கள் பதவி உயர்வு கிடைக்காமல் மிகுந்த மன அழுத்தத்தில் உள்ளார்கள். ஆகவே, 20 ஆண்டுகள் பணிபுரிந்த அனைவருக்கும் உடனடியாக SSI ஆக பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள், காவல் துறை அதிகாரிகள் என அனைவரும் தமிழ்நாடு முழுவதும் இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு ஏறுக்கு மாறாக மாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும். காவலர்கள் என்பவர்கள் வெறும் அம்புதான்; அவர்கள் எந்தக் கட்சிக்கும் நிரந்தரமான உறுப்பினர்கள் கிடையாது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் bouquet வாங்கிக் கொண்டு வந்து, இரண்டு முறை, மூன்று முறை வந்தால் யாரானாலும் அவர்களோடு அனுசரித்து, நட்பு பாராட்டிக்கொண்டிருப்பார்கள். ஆகவே, Sub Inspector, Inspector, DSP level-ல் ** குடும்பத்தினர் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தேவையில்லாத பதிவு. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களெல்லாம் ** என்ற அர்த்தத்திலே மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். யார் அப்படி ** என்பதை அவர்கள் ஆதாரத்தோடு சொல்வார்கள் என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். எந்தக் காரணத்தைக் கொண்டும், அவர் சொல்கிற அந்த அடிப்படையில் எதுவுமில்லை. ** வேலையெல்லாம் இந்த ஆட்சியில் நிச்சயமாக இல்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் (குறுக்கீடு) நீங்கள் பொத்தாம் பொதுவாகச் சொன்னதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாயிற்று. (குறுக்கீடு)

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: இரு ஒரு natural ஆன விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதற்காக பொத்தாம் பொதுவாக ** என்பதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆதாரத்தோடு சொல்லட்டும்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லையே! குறைகள் சொல்வதைக் கேட்பதற்காகத்தான் நாங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து இங்கு கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், தாராளமாகக் குறைகளைச் சொல்லலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆனால், சொல்கின்ற குறைகள், குற்றங்கள் எதுவாக இருந்தாலும் ஆதாரத்தோடு சொல்லுங்கள். அடுத்த நிமிடம் நடவடிக்கை எடுக்க இந்த ஆட்சி தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொத்தாம் பொதுவாக ** என்ற வார்த்தைகளெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையைத் தொடருங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு region-லிருந்தும் காவல் துறை அதிகாரிகள் முதல் Head Constable வரை ** கோயம்புத்தூரில் இருப்பவர்களை, அவர்களுடைய செயல்பாட்டில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தயவுசெய்து அந்த சப்ஜெக்ட்டை விட்டு வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) இதேபோன்று நூறு உதாரணங்களை எல்லா மாமன்ற உறுப்பினர்களும் சொல்ல முடியும். இதை விட்டு அடுத்த சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: இதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் உங்கள் விருப்பம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. உங்கள் வீட்டில் எத்தனை காவல் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அப்படி ஒவ்வொருவர் வீட்டிற்கும் எத்தனை காவல் அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள் என்றும் தெரியாது. தயவுசெய்து வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: நான் சொல்வது பொத்தாம் பொதுவானது அல்ல. உண்மையாக, தெளிவாக, திட்டமாகச் சொல்கிறேன். நீங்களேகூட கேட்டுப் பாருங்கள். **உத்தரவிடும்போது அவர்கள் குடும்பத்தை மறந்து. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் வராது. வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.* (குறுக்கீடு) *யாரையோ* transfer *செய்திருக்கிறார்கள் என்றால் அதற்கு அந்த* department*-ல் உள்ள அதிகாரிகள்தான் பொறுப்பு. அதில் நீங்கள் சொல்வதையும், நான் சொல்வதையும் கேட்பதற்காக அந்த* department *இல்லை.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீதுதான் நான் குற்றச்சாட்டு சொல்கிறேன். சம்பந்தப்பட்ட. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

பிற்பகல் 12–10

***திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பல்வேறு கோரிக்கைகள் கொடுத்ததைப் பற்றி பேசுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்று சொல்லி, அது முடிந்துவிட்டது. நீங்கள், எதையும் பேசவிடாமல், நீக்கிவிடுகிறேன், நீக்கிவிடுகிறேன் என்றால், அப்புறம் எதிர்க்கட்சி எதைப் பேச முடியும்?* (குறுக்கீடு) *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தெளிவாக அதற்குப் பதில் சொல்லட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சிக் கொறடா, அந்த விவாதம் முடிந்து போய்விட்டது என்று சொல்கிறார். மறுபடியும் அதையேதானே அவர் சொல்கிறார். அதனால்தான் அவர் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறார். மறுபடியும் எதைச் சொல்வதாக இருந்தாலும் ஆதாரத்துடன் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. எடப்பாடி K. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்*

2021 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதிலிருந்து 3 முறை அந்த காவலருடைய குடும்பத்திலிருந்து மனு பெற்றிருக்கின்றார்; 3 முறை மனுக்களைப் பெற்றிருக்கின்றார். அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் சொல்கிறார். 3 முறை மனுக்கள் பெறப்பட்டும், இன்னும் அவர்களுக்கு தீர்வு காணப்படவில்லை. அவர்களுடைய குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, கிட்டத்தட்ட 200, 300 கிலோ மீட்டருக்கு அப்பால் மாறியிருக்கின்ற காரணத்தால் அவருடைய குழந்தைகளுக்கெல்லாம் கல்வி கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. 3 முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மனு கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் அவருடைய கருத்துகளைச் சொல்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரும் முதலமைச்சராக இருந்தவர்தான். காவல் துறையை கையில் வைத்திருந்தவர்தான். அவருக்குத் தெரியாதது எதுவும் இருக்க வாய்ப்பில்லை. ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் மாற்றப்படுவார்களே தவிர, உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் சொன்னதுபோல ** இந்த ஆட்சியில் நிச்சயமாக ஒருபோதும் அதுபோன்று நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏதாவது குறைகள் இருந்தால், ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் சொல்லுங்கள். மனு வாங்கியிருக்கலாம், படிப்படியாக அவற்றில் எல்லாம் நாங்கள் மாற்றங்கள் செய்துகொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் முகாம்கள் அமைத்து, குறைகளைக் கேட்டு விருப்பங்களின் அடிப்படையில்தான் எல்லாமே செய்கிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாரா வாரம், 15 நாட்களுக்கு ஒருமுறை முகாம் போட்டு, குறைகளைக் கேட்டு எங்கெங்கு மாற்றம் வேண்டுமென்பதையெல்லாம் தெரிந்துகொண்டு, அந்த அடிப்படையில்தான் மாற்றிக் கொண்டிருக்கிறோமே தவிர, ஏதோ வேண்டுமென்று திட்டமிட்டு எந்த நிலையிலும் மாற்றவில்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாக மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியின் பொதுவான சில கோரிக்கைகள். பொள்ளாச்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டி 90 சதவிகிதப் பணிகள் முடிந்து ஓராண்டு காலமாக நிலுவையில் இருக்கின்றன.* Compound wall *அமைத்துக்கொடுத்து அதை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

பொள்ளாச்சியில் சாக்கடை ஓரம் வசிக்கிற 450 மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று, பணிக்கம்பட்டியில் 16 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு, நானே முன்நின்று செய்து, 450 குடியிருப்புகள் கட்டி, கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிந்த நிலையில் ஓராண்டாக பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. எளிய மக்கள், சாக்கடை ஓரம் வசிக்கின்ற மக்களுக்கு பணிக்கம்பட்டி குடியிருப்பை உடனடியாகக் கட்டி முடித்து அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் முயற்சியில் பொள்ளாச்சி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு OP ward *மற்றும் 8 மாடிகள் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டு, 5 மாடிகள் கட்டி முடிக்கப்பட்டதோடு நிற்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.* Maternal and Child Health *பிரிவிக்காக 6 மாடிகள் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டு அஸ்திவாரம் போடப்பட்டு, 3 மாடிகள் கட்டி முடிக்கப்பட்டதோடு நிற்கிறது. இரண்டு கட்டடங்களுக்கும் திறப்பு விழா செய்யப்பட்டுவிட்டது. அவற்றிற்குத் தேவையான மருத்துவர்களை தயவுசெய்து நியமிக்க வேண்டும். அன்னப்பிளவு, மாறுகண், இதயத் துடிப்பு குறைவாக பிறக்கின்ற குழந்தைகளுக்கான வைத்திய சிகிச்சை போன்றவற்றிற்கு நாங்கள் மதுரைக்கோ அல்லது சென்னைக்கோ அந்த ஏழைக் குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, பொள்ளாச்சி அரசு மாவட்ட மருத்துவமனைக்கு தேவையான மருத்துவர்களை ஒதுக்கித்தர வேண்டும். கட்டப்படாமல் இருக்கின்ற 8 மாடி, 6 மாடி கட்டடங்களை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 20

மிகப் பிரதானமான ஒரு கோரிக்கை. நம்முடைய கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் 40 சட்டமன்றத் தொகுதிகளில், பிரதான விவசாயம் என்பது தென்னை. தேங்காய் விலை குறைந்துபோய் தென்னை விவசாயிகள் மிகவும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, டெல்லிக்கு போகும்போதெல்லாம் கடிதம் கொடுத்து, 77 ரூபாய் இருந்த கொப்பரைத் தேங்காய் விலையை ரூ.105.90 ஆக பெற்றுக்கொடுத்தார். இப்போது நாங்கள் டெல்லிக்குச் சென்று கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்ற ஒரே விஷயம், 'எந்த மாநில அரசாங்கத்திடமிருந்தும் கோரிக்கை வரவில்லை' என்பதாகும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குக் கடிதம் எழுதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தெரிவிக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். நாங்கள் ஒன்றிய அரசிற்கு விலையைப் பரிந்துரை செய்திருக்கின்றோம். இப்போது 50 ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்வதற்கு அனுமதி கொடுத்து, 40 ஆயிரம் டன் அளவிற்குத்தான் எங்களால் கொள்முதல் செய்ய முடிந்திருக்கிறது. ஆக, ஒன்றிய அமைச்சர் அவர்களிடம் நாங்கள் நேரடியாக மீண்டும் மனு கொடுத்திருக்கிறோம். அதேபோல், விலையை உயர்த்த வேண்டுமென்று கடந்த மாதத்தில் பரிந்துரை செய்திருக்கிறோம். நீங்களும் முயற்சி எடுத்திருக்கிறீர்கள். ஆனால், ஒன்றிய அரசு இன்னும் முடிவெடுக்கவில்லை. இதுதான் நிலைமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

2023 ஏப்ரல் 20]

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசியலுக்காக இதைப் பேசவில்லை. விவசாயிகளின் அடிவயிற்றிலிருந்து வருகின்ற சத்தம். அதாவது, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில், கொள்முதல் விலையை ரூ.77/–லிருந்து ரூ.105.90 என உயர்த்தினோம்.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரை கொள்முதலைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சியில் சரியாகக் கொள்முதல் செய்யப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த இரண்டாண்டுகளாக கொப்பரையை அதிகமாகக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம்.* (மேசையைத் தட்டும் ஒலி) *வெளியில் நல்ல விலை கிடைக்கும்போது, விவசாயிகள் அங்கே சென்று விற்றுவிடுகிறார்கள். தற்போது, வெளி மார்க்கெட்டில் நல்ல விலை இல்லாததால், அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில் நாங்கள் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *விவசாயிகளுக்காக நீங்கள் தனி நிதிநிலை அறிக்கையை அளித்தீர்கள். நான் சொல்வது, கடந்த 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளி மார்க்கெட்டில் கொப்பரை ஒரு கிலோ விலை ரூ.140/–. இப்போது வெளி மார்க்கெட்டில் கொப்பரை விலை ரூ.80/–. அப்போது அரசாங்கம் தந்த* minimum support price *ரூ.105.90 என்ற விலைக்கு விவசாயிகள்* supply *செய்ய முன்வரவில்லை. அதற்குக் காரணம், வெளி மார்க்கெட் விலை ரூ.140/– ஆக இருந்தது. தற்போது வெளி மார்க்கெட் விலை ரூ.80/– தான். இதில், நான் உங்களை மட்டும் குற்றஞ்சாட்டி சொல்லவில்லை. விவசாயிகளின் நலன் கருதி, ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய் கொடுக்க வேண்டும்.*

Palm oil-ஐ ** தேங்காய் எண்ணெய் தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கேரள மாநிலத்திலும், கர்நாடக மாநிலம், மங்களூர் மாவட்டத்திலும் தேங்காய் எண்ணெய்யைத்தான் பயன்படுத்துகிறார்கள். எனவே, ரேஷன் கடைகளில் தயவுசெய்து தேங்காய் எண்ணெய்யை விநியோகம் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொன்னதை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: ஐயா, நீங்கள் நீக்கிக்கொள்ளுங்கள். நான் விவசாயிகளின் அடி நெஞ்சில் இருக்கும் வலியைச் சொல்கிறேன். அடுத்து மிக முக்கியமானது ஒன்று என்னவென்றால், China முதற்கொண்டு உலகம் முழுவதுமுள்ள நாடுகள் தென்னை நார், coir pith-ஐ இறக்குமதி செய்கின்றன. சீனாவிற்கு ரூ.3,000 கோடிக்குமேல் தென்னை நாரையும், coir pith-ஐயும் ஏற்றுமதி செய்கிற ஒரே பகுதி, தமிழ்நாடு; அதிலும் குறிப்பாக பொள்ளாச்சி. ஆனால், அந்தத் தொழில் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நசிந்து போயுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து சொன்னேன். ஊருக்கு வந்தபோதும் சொன்னேன். ஏன் சொல்கிறேன் என்றால், அந்தத் தொழிலுக்கு வெளிநாடுகளில் தற்போது பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக உக்ரைன் போர் ஒரு காரணம், அதேபோன்று container கட்டணத்திலுள்ள உயர்வு-தாழ்வு போன்ற காரணங்கள். இந்தத் தொழிலைத் தொடங்கியவர்கள் எல்லாம் படித்த பட்டதாரி இளைஞர்கள். அதுவும் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த முதன்முறை பட்டதாரிகள். Agro based industries என்று வேளாண்மை சார்ந்த தொழிலைத் தொடங்க வேண்டுமென்ற ஆர்வத்திலே வங்கியிடமிருந்து கடன் பெற்று, சொத்துப் பத்திரத்தை அடமானம் வைத்து தொழில் தொடங்கியவர்கள். எனக்குத் தெரிந்த இரண்டொரு இளைஞர்கள் தங்களுடைய உயிரையே மாய்த்துக்கொண்டார்கள். இது வேதனையான ஒரு விஷயம். எனவே, இந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு உயர் மட்ட அளவில் நிபுணர் குழு ஒன்றை அமைத்து சீர்படுத்த வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இதை நான் இந்த அவையின்மூலம் உங்கள் நேரடி பார்வைக்குக் கொண்டு வருகின்றேன். இது பொள்ளாச்சிக்கு மட்டுமான கோரிக்கையல்ல; தமிழகத்திலுள்ள அனைவருக்காகவும், மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்காகவும் சேர்த்தே இந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்களே கேள்வியையும் கேட்டு பதிலையும் சொல்லிவிட்டீர்கள். Container கட்டணம் 1 ரூபாய் என்றிருந்தது தற்போது 10 ரூபாய் என்றளவில் உயர்ந்துவிட்டது. (குறுக்கீடு) அதனால், வெளிநாடுகளுக்கு அனுப்பவில்லை, அவ்வளவுதான். நீங்கள் அடுத்த பொருள் குறித்து பேசுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: Power looms-க்கு மின்சாரக் கட்டணம் செலுத்துவதில் concession கொடுத்திருப்பதைப்போல, தென்னை நார் தொழிலுக்கும் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மில்லிலும் சுமார் 80 பேர் வேலை செய்கிறார்கள். அங்கு சுமார் 3,000 mills இருக்கின்றன. முழுவதும் கிராமப் பொருளாதாரம்; வேளாண்மை சார்ந்த தொழில் செய்பவர்கள்; கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு 250 ரூபாய், 300 ரூபாய் கூலி கிடைக்கிறது. தற்போது மின் கட்டணம் உயர்ந்துவிட்டது. 30,000/– ரூபாய் மின் கட்டணம் செலுத்திக் கொண்டிருந்தவர்கள் தற்போது 70 ஆயிரம் ரூபாய், 1 இலட்சம் ரூபாய் மின் கட்டணம் கட்ட வேண்டுமென்றால், அவர்களால் அதைச் செலுத்த முடியவில்லை. Factories-ஐ பூட்டி, இயந்திரங்களை வீட்டிற்குக் கொண்டு போய் வைத்துவிட்டார்கள். Machines-ஐ கழற்றி விற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மின்சாரக் கட்டணத்திலே இந்தத் தொழிலுக்கு மட்டும் பழைய நிலையைக் கொண்டு வாருங்கள். Power looms-க்கு கொடுப்பதைப்போல concession விலையில் அவர்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

அடுத்ததாக, காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வருகிறேன். கடந்த ஆண்டில், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு அறிவிப்பின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குற்றவாளிகள் வெகுவிரைவில் கைது செய்யப்படுவார்கள்

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 20

என்று பதில் சொன்னார்கள். இரண்டு வழக்குகள், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், தருமரெட்டிபாளையம் ஊராட்சி, இரங்கம்பாளையம் கிராம காவல் நிலையம், காங்கேயம் எல்லைக்குட்பட்டது. வயதான பெரியவர்கள் தோட்டச் சாலையில் இருந்திருக்கிறார்கள். கணவர் பெயர் பழனிசாமி, வயது 65; வள்ளியம்மாள், வயது 61; இறப்பிற்கான காரணம்—கொள்ளையர்களால் தலையில் தாக்கப்பட்டு கயிற்றால் கழுத்தறுக்கப்பட்ட நிலையில் இருவர் இறந்தனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருள் வெறும் ஏழரை பவுன் நகை. கொள்ளையர்கள் இன்று வரை பிடிபடவில்லை. இன்றையதினம் வரை துப்பு துலக்கப்படவில்லை. வீட்டில் தனியாக இருக்கும் வயது முதிர்ந்தவர்களையே கொள்ளையர்கள் குறிவைத்து தாக்கி வருகிறார்கள். இதுவொரு சம்பவம்.

இன்னொரு சம்பவம்; ஈரோடு மாவட்டம், குற்றம் நிகழ்ந்த நாள் 1–5–2022. இதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். FIR No. 130/2022. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழுவு கிராமம், உப்பிலிபாளையம் அருகில் குட்டைக்காட்டுப்புதூர் காவல் எல்லை சென்னிமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்டது. கொலையானவர் கே.சி. துரைசாமி, வயது 68; இறப்பிற்கான காரணம் கொள்ளையர்களால் தலையில் தாக்கப்பட்டு, கழுத்தறுக்கப்பட்ட நிலையில் அவர் இறந்தார். அவரது மனைவி தலையில் தாக்கப்பட்டு நீண்டகால தீவிர சிகிச்சையிலிருந்து இப்போது அவர் உயிர் பிழைத்து வந்திருக்கிறார். கொள்ளையடிக்கப்பட்ட பொருள் இருபத்து ஏழரை பவுன் தங்க நகை. இந்த வழக்கிலும், ஓராண்டு ஆகியும், இதுவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய நல்லாட்சியிலே இந்தியப் பிரதமரும், சீன நாட்டு அதிபரும் சந்திப்பதற்கு, அமைதியான, பாதுகாப்பான இடம் எதுவென்று தேர்வுசெய்யப்பட்ட நேரத்திலே, இந்தியாவிலே சிறந்த மாநிலம், சட்டம்-ஒழுங்கிலே தமிழகம்; அதிலும் சிறந்த பகுதி தமிழகத்திலே, மாமல்லபுரத்தைத் தேர்வு செய்து, அங்கே நமது பிரதமரும், சீன நாட்டு அதிபரும் கலந்துரையாடுகிற அளவிற்கு காவல் துறையானது அப்போது மிகக் கண்ணியத்தோடு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அம்மா மற்றும் எடப்பாடியார் ஆகியோரின் நல்லாட்சியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *நன்றி சொல்லி முடிப்பதா!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இங்கே உங்கள் பக்கத்தில் இருக்கிற* display screen*-ல் வருகின்ற உங்கள் படத்தைப் பாருங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *அம்மா மற்றும் எடப்பாடியார் ஆகியோரின் நல்லாட்சியில். . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைத்தான் எல்லோருக்கும் சொல்கிறேன். நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 14 நிமிடங்கள் முடிந்துவிட்டன. நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் 15 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கொடுங்கள்; அவர் எல்லாவற்றையும் பேசிவிடுவார்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *காவல் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கையிலேயே 7, 8 நிமிடங்கள் ஆகிவிட்டன. இதிலே எப்படி நான் பேசுவது? அம்மா மற்றும் எடப்பாடியார் ஆகியோரின் நல்லாட்சியில்* Scotland Yard police*-க்கு இணையாக செயல்பட்ட காவல் துறை, உங்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியதைப்போல், ** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது வேண்டாம். உங்களுக்குத் தெரியும் கோவையில் நடந்தது தொடர்பான வழக்கு, இப்போது* NIA*-ல் இருக்கிறது. நீங்கள் விஷயத்திற்கு வாருங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா மற்றும் அண்ணன் எடப்பாடியார் ஆகியோரின் நல்லாட்சியில் சட்டம்-ஒழுங்கு காத்தல், குற்றத் தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு, போக்குவரத்து பராமரிப்பு ஆகியவற்றில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டது முக்கியப் பங்கு வகித்து வருகின்றன. கண்காணிப்பு கேமரா பதிவுகள் குற்றவாளிகளை இனம் காண்பதிலும், பிறழ்வற்ற சாட்சியாகவும்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2023 ஏப்ரல் 20

இருக்கின்றன. எனவே, கண்காணிப்பு கேமராக்கள் காவல் துறையின் மூன்றாவது கண்ணாகக் கருதப்பட்டு, சென்னை பெருநகர் முழுவதும் 50 மீட்டர் இடைவெளியில் அவற்றை நிர்மாணிக்க அம்மா மற்றும் எடப்பாடியார் அரசால் பெருமுயற்சி எடுக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள். (குறுக்கீடு) அதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கொடுக்கலாம். (குறுக்கீடு) நீங்கள் பாருங்கள், உங்களுக்கு உரையாற்ற 15 நிமிடங்கள்தான்; நான் ஒன்றும் நேரத்தை குறைத்துக் கொடுக்கவில்லை, பார்த்துக்கொள்ளுங்கள். 16 நிமிடங்கள் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) அவர் மட்டும் தனியாகப் பேசியது; குறுக்கீடுகளையெல்லாம் நான் கணக்கில் சேர்க்கவில்லை. நான் சொல்கிறேன் ஏதாவது கருத்துகள் என்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கொடுங்கள்; அவர் நிறைவாகப் பேசுவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஜோசப் சாமுவேல் ஒரு நிமிடம் உட்காருங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: ஓர் எதிர்க்கட்சி உறுப்பினருக்கு ஜனநாயக ரீதியாக காவல் துறை மானியக் கோரிக்கையில். . (குறுக்கீடு) ஒரேயொரு subject மட்டும் நான் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அதைச் சொல்லி, உரையை முடியுங்கள்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: அதாவது, தமிழ்நாட்டினுடைய பிரதான எதிர்க்கட்சி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. 32 ஆண்டு காலம் ஆண்ட இந்த இயக்கத்தினுடைய தலைமை அலுவலகத்தில் ஒரு கும்பல் சூறையாடியது. இதில் என்ன விசேஷம் என்றால் ** இத்தனைக்கும் தங்களது தலைமைக் கழகத்திற்கு பாதுகாப்பு வேண்டுமென்று முன்தினமே இராயப்பேட்டை காவல் நிலையத்தில் பாதுகாப்பு கோரி மனுவும் அளிக்கப்பட்டிருந்தது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால், வன்முறையாளர்கள். . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த கலவரத்திலே, ** என்ற ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். எந்த அடிப்படையில் அதைச் சொல்கிறார்? அதற்கு ஆதாரம் இருக்கிறதா? இல்லையென்று சொன்னால், தயவுகூர்ந்து அவர் கூறிய அந்த வார்த்தையை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. (குறுக்கீடு) என்னங்க, இப்படிப் பேசினால், நாங்கள் எப்படிப் பேசுவது? (குறுக்கீடு) என்ன இது? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்கார்ந்து கொண்டு சப்தம் போடாதீர்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் பேசும்போது நீங்கள் எதற்காக* chorus *ஆக சப்தம் போடுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒழுங்காக இருக்கிறீர்களா என்ற* un-parliamentary word-*ஐ உபயோகப்படுத்தக் கூடாது; நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) இல்லை, எல்லோருக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொன்னது காதில் கேட்டதால் நான் சொல்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 32 ஆண்டு காலம் அனைத்திந்திய*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

*அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த கட்சியாகும். அதன் தலைமைக் கழகத்தை வேண்டுமென்றே, திட்டமிட்டு சில பேர் தாக்க முயற்சி செய்தபோது—இப்படி நடைபெறும் என்று எண்ணி, ஏற்கெனவே காவல் நிலையத்தில் நாங்கள் புகார் அளித்தோம். எங்கள் கட்சியின் சார்பாக, தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று புகார் அளிக்கப்பட்டது. ஆனால், ** என்ற விவரத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உள்கட்சி விவகாரம். இருந்தாலும், பாதுகாப்பு கேட்ட நேரத்தில், தகுந்த பாதுகாப்புகளைக் கொடுத்தோம். உள்ளே நடந்த சம்பவங்களுக்கு நாங்கள் பொறுப்பாக முடியாது; வெளியே பொறுத்தவரை, தகுந்த பாதுகாப்புகளை செவ்வனே செய்து கொடுத்தோம்; அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்ற சம்பவம் திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாகப் பிரிந்த நேரத்தில் நிகழ்ந்தபோது, அறிவாலயத்திற்கு தகுந்த பாதுகாப்பு கொடுத்த அரசாங்கமாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தில்,*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இதுபோன்று நாங்கள் உள்ளே அடித்துக்கொள்ளவில்லை. ஆனால், நீங்கள் உள்ளே அடித்துக்கொண்டு, ரகளை செய்து கொண்டீர்கள்; அதனால் ஏற்பட்ட சம்பவம் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்கார்ந்து கொண்டு பேசும் பழக்கத்தை தயவுசெய்து மாற்றிக்கொள்ளுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இன்று சட்டமன்றத்தில் வேறு திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அன்று நடைபெற்ற சம்பவம் உள்ளபடியே வேதனையளிக்கக்கூடியது. நாங்கள் தலைமைக் கழகம் சென்று அமைதியாக அமர வேண்டும் என்றுதான் நிராயுதபாணியாகச் சென்று கொண்டிருந்தோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசலாம்; நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள். அவர் பேசுவதை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு பிறகு பதில் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: தலைமைக் கழகத்திற்கும், இந்தியன் வங்கிக்கும் இடையே 1 கி.மீ. தூரம் இருக்கிறது. நாங்கள் வந்து கொண்டிருந்தபோது, தலைமைக் கழகத்தை பூட்டுப்போட்டு பூட்டிவிட்டு, 300 பேர் அங்கே chair–ஐ போட்டு வீதியில் உட்கார்ந்திருந்தார்கள். இது காவல் துறையின் video clipping–ல் இருக்கிறது. நாங்கள், 1 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற இந்தியன் வங்கிக்கு அருகில் வருகின்றபோது, ஒரு மிகப்பெரிய கும்பல் கல் வீசி, எங்கள் காரைத் தாக்கியது. அதுவும் காவல் துறையின் video clipping–ல் இருக்கிறது. ஆக, அன்றைக்கு நடந்த சம்பவத்தை, வன்முறை வெறியாட்டத்தை யார் நடத்தியது என்பதை அரசு, காவல் துறை விசாரித்துக் கொண்டிருக்கிறது.

அன்றைக்கு நடந்த உண்மை நிலையை விசாரித்து, தமிழக மக்களுக்குத் தெரியப்படுத்தினால்தான், யார் வன்முறையாளர்கள், அத்துமீறிய கும்பல் எது என்பது தெரியவரும். அதை நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தப் பிரச்சினையை நான் தனியாக மேடை போட்டு பேசக்கூட தயாராக இருக்கிறேன்; யார் வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டனர் என்பதனைப் பேசத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதுமே! சட்டமன்றத்தில் பதிவு செய்துவிட்டீர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நாங்கள் நிராயுதபாணியாக இருந்தோம். நடைபெற்ற பொதுக் குழுவிற்குச் செல்லாமல் 8 மாவட்டச் செயலாளர்கள் தலைமைக் கழகத்தின் வாசலில் நிற்க வேண்டிய அவசியம் என்ன? (குறுக்கீடுகள்) அவசியம் என்ன? (குறுக்கீடுகள்) அவசியம் என்ன? (குறுக்கீடு) புனிதமான தலைமைக் கழகத்தின் உள்ளே உட்கார்ந்து கொண்டு, ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் கூறிய, ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 12–30

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே காவல் நிலையத்தில், நாங்கள் புகார் அளித்திருந்தோம். வேண்டுமென்றே திட்டமிட்டு சில பேர் இப்படிப்பட்ட நிகழ்வுகளை அரங்கேற்றுவார்கள் என்று கருதிதான், எங்களுடைய பொறுப்பாளர்கள், முறையாக காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள். அந்தப் புகாரின் அடிப்படையில் தக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தால், இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்பட்டிருக்காது. அதுமட்டுமல்ல, யார்மீது வழக்கு பதிவு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்வது என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கேயிருக்கிற ஆளுங்கட்சி திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் வழக்கு பதிவு செய்தது. என்னென்ன நடந்தது என்பது நீதிமன்றத்தின்மூலம் தெரிவிக்கப்பட்டது. அரசும், காவல் துறையும் விசாரித்து, அந்தப் புகாரின் அடிப்படையில் யார், யார் உள்ளே வந்தார்கள்? யார், யார் தலைமைக் கழகத்தில் தாக்கப்பட்டார்கள் என்ற வீடியோ காட்சியைப் பதிவு செய்து, நீதிமன்றத்தின் மூலமாக தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட சம்பவங்களையெல்லாம் யார் அரங்கேற்றினார்கள் என்பது நாட்டு மக்களுக்கும் தெரியும்; இந்த அரசுக்கும் தெரியும். அதனால் அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, அங்கேயிருக்கின்ற பல பொருட்களை திருடிச் சென்றிருக்கிறார்கள். அதுவும் வழக்கில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எல்லாம் நீதிமன்றத்தில் இருக்கின்றன. ஆகவே, நாங்கள் கேட்டதுபோல் முறையாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தால், இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருக்காது என்பதைத்தான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து சொல்லிவிட்டார்கள். ஒரு கட்சி அலுவலகத்திற்குள் காவல் துறை செல்லுமா என்பது எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் தமிழக காவல் துறை சட்டப்படி நடவடிக்கை எடுத்து, வழக்கும் பதிவு செய்திருக்கிறது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, குறிப்பிட்டுச் சொன்னார். நீதிமன்றத்திற்கும் வழக்கு சென்றிருக்கிறது. எனவே, நீதிமன்றம் இதுகுறித்து விசாரித்திருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், இங்கே பிரச்சினை வந்த காரணத்தினால், நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். மேற்படி சம்பவம் தொடர்பாக, 14 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் 11-7-2022 அன்று, E2-இராயப்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 190/2022, ச/பி 147, 148, 341, 324, 326, 356, IPC 3 of Act குற்ற எண் 191/2022, 147, 148, 341, 324, 506, IPC குற்ற எண் 192/2022 மற்றும்

குற்ற எண் 213/2022 இதர ஆகிய 4 வழக்குகளும் தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்பேரில் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மேல் விசாரணைக்காக 29–8–2022 அன்று மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, காவல் துறையைப் பொறுத்தவரையில் முறைப்படி வழக்கும் பதிவு செய்திருக்கிறது; உரிய நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. எனவே, இதில் காவல் துறை எதிலும் தலையிடவில்லை; வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்ற செய்திகளெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக இந்த அவையில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *நன்றி சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடம் பேசுவதற்கு வாய்ப்பு தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *தோட்டக்கலைத் துறையில் உதகமண்டலம் தாவரவியல் பூங்கா மற்றும் பல பகுதிகளில் பணியாற்றும் 970 தொழிலாளர்கள் கடந்த 23–3–2023 முதல் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். அதில் அங்கம்மாள் என்ற பெண்மணி மயங்கி விழுந்து, 4 தினங்களுக்கு முன்பு கோவை மருத்துவமனையில் இறந்துவிட்டார். அவருக்கு அரசு, இழப்பீடாக ரூ.25 இலட்சம் வழங்க வேண்டும். வாரிசுக்கு வேலை வழங்க வேண்டும். பணிபுரியும் 530 தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்வதோடு, 970 தொழிலாளர்களுக்கும் காலமுறை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும். மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள். (குறுக்கீடு) போதும். நீங்கள் நன்றி சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, ஒரு விஷயத்தைத்தானே சொன்னீர்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் போதும். மீதம் இருப்பதை எதிர்க்கட்சித் தலைவரிடம் கொடுங்கள். அவர் பேசுவார். மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள். (குறுக்கீடு)*

***திரு. ஜோசப் சாமுவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கிறிஸ்துவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு என்கின்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டு வந்த. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V.ஜெயராமன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். 12–33, 12–34–க்குள் உரையை முடித்துவிடுங்கள்.*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 970 தொழிலாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் குறிப்பிட்ட தென்னை விவசாயிகளுடைய பிரச்சினை, தென்னை நார் தொழில் செய்வோர்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

கடந்த ஆட்சியில், சுல்தான்பேட்டை காவல் நிலையத்திற்கு எடப்பாடியார் அவர்கள் புதிய காவல் நிலையம் அமைக்க அனுமதி கொடுத்தார்கள். அதற்குக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை சம்பந்தமாக நான் பேசிய கோரிக்கைகள் அனைத்தையும், முழுமனதோடு, எதிர்க்கட்சி உறுப்பினர் என்று எண்ணிப் பார்க்காமல் வரும் காவல் துறை மானிய அறிவிப்பிலே சேர்த்து அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கிறிஸ்துவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு என்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டு வந்து, இப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ** இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதே அவையில், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இங்கே பேசக்கூடிய உறுப்பினர்கள், குறிப்பாக ஆளுங்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் subject-ஐ மட்டும் பேசுங்கள், கேள்வியை மட்டும் கேளுங்கள், கோரிக்கையை மட்டும் எடுத்துச் சொல்லுங்கள் என்றும், புகழ் பாடுவது, வணக்கம் சொல்வதெல்லாம் வேண்டாம். முதன்முதலாக சட்டமன்றத்திற்கு வந்து கன்னிப் பேச்சு பேசுவதாக இருந்தால் சொல்லுங்கள். மற்றபடி வேண்டாம் என்று தெளிவாக பல முறை சொல்லிவிட்டார், நேற்றையதினம் உருக்கமாகவே சொன்னார். எனவே, திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள் காலையில் என்னிடம் வந்து வாழ்த்து வாங்கும்போது சொல்லி அனுப்பினேன். நீங்கள் பேசினீர்களென்றால், நானே எழுந்து குறுக்கிட்டு அதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு சிபாரிசு செய்வேன் என்று சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புகழ் பாடிய அந்த வார்த்தைகளையெல்லாம் நீக்கிவிட்டு, அவரை subject-ல் பேச பணிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அவ்வாறே நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. ஜோசப் சாமுவேல்:

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு."

படை, செல்வம், குடிமக்கள், அமைச்சகம், நட்பு, அரண்மனை என்ற ஆறு சிறப்புகளையுடைய மன்னர் அரசர்களில்ஆண் சிங்கம் போன்றவர் என்ற குறளுக்கேற்ப திரைப்படங்களும், கதைகளும்கூட சொல்லித் தீராத சிறைத் தொட்டிகளை சந்தித்து, MISA நாயகராக ஒளிர்ந்து, தனது பொது வாழ்வில் பேரறிஞர் அண்ணா, கலைஞர் அவர்களின் வழிநின்று உள் துறையை ஏற்று, சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டி, தமிழ்நாட்டை இந்தியாவில் சட்டம்–ஒழுங்கில் அமைதிப் பூங்காவாகவும், முதன்மை மாநிலமாகவும் மாற்றியமைத்திருக்கிறார் நம் முதல்வர் அவர்கள்.

முன்னாள் I.G. ஆக இருந்த திரு. அருள் அவர்கள் போலீஸ்காரர்களுடைய டைரி என்ற ஒரு புத்தகத்தில் எழுதியுள்ள வாசகம் ஒன்றை நான் இங்கே வாசிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். Police Commission அமைத்து, தமிழக போலீஸ் எவ்வாறு பணிபுரிகிறது என்பதைக் கண்டறிந்து அறிக்கை அளிக்க வழி கண்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள். 133 பரிந்துரைகளில், 115 பரிந்துரைகளை உடனே ஏற்று, அதனை நிறைவேற்ற 4 கோடியே 60 இலட்சம் ரூபாயை ஒதுக்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனால்தான் இந்தியாவிலேயே தமிழக காவல் துறையை நவீன முறையில் மாற்றியமைக்க முடிந்தது. காவல் துறையின் சீருடையைப் பொறுத்தவரையில் அரைக்கால் சட்டையானது முழுக்கால் சட்டையானது.

இரண்டாவதாக, 1973–ல் 22 காவலர்களுடன் மகளிர் காவல் படை உருவானது. தற்போது 50 ஆண்டுகளுக்குப் பிறகு, 35 ஆயிரத்து 329 மகளிர் என பலமாக உள்ளது. மகளிர் காவல் படை பெண் காவலர்கள் இப்போது ஆண்களுக்கு இணையாக சேவை செய்து தியாகம் செய்கிறார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் நடைபோடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெண் காவலர்களுக்கென அறிவித்த சில

முக்கியமானவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பெண் காவலர்களுக்கான அழைப்பு–roll call காலை 7 மணி என்பது 8 மணி என மாற்றப்பட்டது. பெண் காவலர்களுக்கான தங்கும் வசதி; பெண் காவலர்களுக்கு தனி ஓய்வறைகள்; பெண் காவலர்களுக்கு குழந்தை பராமரிப்பு சீரமைப்பு; பெண் காவலர்களுக்கு இட மாற்றம் மற்றும் விடுமுறைகள்; 8.5 கோடி ரூபாய் செலவில் பெண்கள், குழந்தைகள் விழிப்புணர்விற்கான ‘அவள்’ திட்டம்; பெண் காவலர்கள் கடும் வெயிலில் நின்று CM route duty–ல் பணியாற்ற வேண்டாம் என ஆணையிட்டது; மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதுகாப்புப் படையில் உள்ள பெண்களை மகளிர் தினத்தன்று போற்றும்விதமாக அவர்களை இல்லத்திற்கே அழைத்து மரியாதை செய்த, ஓர் அண்ணனாக பெண் காவலர்கள்மீது அவருக்கு உள்ள பாசத்தையும், அக்கறையையும் காட்டுகிறது.

பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்களுக்கு எதிராக வன்முறைகளை ஒழிக்கவும் மாநில அரசின் பெண்கள் உதவித் திட்டம் ‘181’. பணிக் காலத்தில் வீர தீரச் செயல்புரிந்து அகால மரணமடைந்த காவல் துறையைச் சார்ந்தவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கென மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை ஆகிய படிப்புகளில் சேர தலா 3 இடங்களும், சட்டப் படிப்புக்கான இரண்டு இடங்களும் நமது கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்டுள்ளன. உளவுத் துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்து, சட்டம் ஒழுங்கை இந்த அரசு திறம்பட நிலைநாட்டியுள்ளது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகவும், சமுதாய நல்லிணக்கக் கோட்டையாகவும் திகழ்ந்து வருவதே இதற்கான எடுத்துக்காட்டாகும். தமிழ்நாடு காவல் துறை academy, 2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து மாநில அரசு அதிகாரிகள், Sub–Inspector பயிற்சிக்கான துணை ஆய்வாளர்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள CRPF பிரிவில் சிறந்த பயிற்சி மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலைத் தடுப்பதற்கு நமது அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருவதைக் காண்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2023 ஏப்ரல் 20] [திரு. ஜோசப் சாமுவேல்]

13 ஆயிரத்து 491 போதைப் பொருள் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுடைய வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. சமூக ஊடகம் வாயிலாக தவறான காணொளியைப் பரப்பி, புலம் பெயர்ந்த வட நாட்டுத் தொழிலாளர்களிடையே அச்சத்தை உருவாக்க அண்மையில் சமூக விரோதிகள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் விரைவான, கடுமையான நடவடிக்கைகளால் ஒடுக்கப்பட்டுள்ளன. அதில் ஈடுபட்ட சமூகவிரோதிகள்மீது வழக்கு பதியப்பட்டு, கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புலம்பெயர் தொழிலாளர்களை மாவட்ட நிர்வாகமும், காவல் துறை அலுவலர்களும் நேரில் சந்தித்து, உண்மையை விளக்கி, வெளி மாநிலத் தொழிலாளர்கள் பணிபுரிவதற்கான பாதுகாப்பான பணிச்சூழலை எடுத்துரைத்து, அவர்களுக்கு நம்பிக்கையூட்டியது தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, பீகார், ஜார்கண்ட் மாநில மக்களுக்கும் முதல்வர் அவர்களே பாதுகாவலனாக திகழ்கிறார் என்பதைக் காட்டுகிறது.

பிற்பகல் 12–40

வரலாற்றில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று, ஆய்வு செய்து, அங்கு பணிபுரியும் காவலர்களின் நிலையைக் கேட்டறிந்ததன்மூலம் காவல் துறை 'மக்களின் நண்பன்' என்ற கூற்று உண்மையானது என்பதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையின் நண்பன் எனும் அளவுக்கு காவலர்களின் மேம்பாட்டுக்காக எண்ணற்ற பணிகளை ஆற்றியுள்ளார்கள். அன்பும், கருணையும் காட்டுவதோடு, சமூகவிரோதிகளிடம் கடுமைகாட்டி, சமூக நல்லிணக்கத்தைக் கெடுப்பவர்களை ஒழித்துக்கட்டி, துணிச்சலான முதலமைச்சராகவும் திகழ்கிறார்.

மாநிலம் முழுவதும் கண்காணிப்பை பலப்படுத்தியுள்ளார். காவல் நிலையங்களுக்கு கட்டடங்கள், உபகரணங்கள், ரோந்து வாகனங்கள் என புத்தொளி பெற்றுள்ளது காவல் துறை. மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் 38.25 கோடி ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமராக்கள் அமைத்து மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பு முக்கியமாக சென்னையில் வளர்ந்துவரும் நகரமாகத் திகழுகின்ற எனது தொகுதியிலும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதால் இந்த வாய்ப்பின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பத்தூர் தொகுதியில் அமைந்துள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், அம்பத்தூர் எஸ்டேட், கொரட்டூர் ஆகிய காவல் நிலையங்களின் எல்லைக்குட்பட்ட வழக்குகளை மிகச் சிறப்பாக விசாரித்து, விரைவாகப் பணியினைச் செய்துகொண்டிருக்கிற நிலையில், மேலும், மீஞ்சூர், சோழவரம், காட்டுப்பள்ளி, செங்குன்றம் காவல் நிலையங்களின் வழக்குகளையும் இணைப்பதால் மக்களும், காவலர்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மீஞ்சூர் அல்லது செங்குன்றம் பகுதியில் மேலும் ஒரு மகளிர் காவல் நிலையத்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா) தலைமை]

அம்பத்தூர், கொரட்டூர் காவல் நிலையங்களை அம்பத்தூர், புதூர், கொரட்டூர் மற்றும் மாதனாங்குப்பம் ஆகிய பகுதிகளில் மக்களின் தேவைக்கேற்ப பிரித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முகப்பேர் கிழக்குப் பகுதியில் இடிக்கப்பட்டுள்ள காவல் நிலையத்தை புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் அதை கட்டி முடிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆவடி மற்றும் தாம்பரம் ஆகியவற்றை காவல் ஆணையரகங்களாகப் பிரித்ததிலிருந்து ஏற்கெனவே காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப் படி மற்றும் ETR தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக கோரிக்கையில் தெரிவித்துள்ளார்கள். அது விரைவில் கிடைப்பதற்கு ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கின்ற நிலையில், அம்பத்தூர் தொகுதியின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற சென்னை-திருமங்கலம் வரை இயங்குகின்ற மெட்ரோ இரயில் போக்குவரத்தை அம்பத்தூர் O.T. வரை நீட்டிப்பு செய்து தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை-பாடி முதல் அம்பத்தூர் O.T. வரை உள்ள சென்னை-திருப்பதி நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் பணியினை வேகமாகச் செய்து தருமாறும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு பொது மருத்துவமனை அமைத்துத் தருமாறும், இளைஞர்களின் பயன்பாட்டுக்காக உள் விளையாட்டரங்கம் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சிறப்பான ஒரு வாய்ப்பினை எனக்களித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த, 11-4-2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சின்னவர் அவர்கள் இந்த அரங்கம் அதிரும் வகையில் sixer *அடித்து,* Man of the Match-*ஐ தட்டிச் சென்றார். இன்று, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அன்புத் தளபதி அவர்கள் இந்திய ஒன்றியம் அதிரும் வகையில், ஒட்டுமொத்தத் துறைகளிலும் சிறப்பான அறிவிப்புகளை அறிவித்து,* Man of the Series *ஆகத் திகழ்கிறார் எனக் கூறி, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்துல் வஹாப் அவர்கள்.*

பிற்பகல் 12-45

திரு. மு. அப்துல் வஹாப்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்கும், சமத்துவத்துக்கும் வித்திட்ட தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணா வழியில், வங்கக் கடலோரம் துயில்கொண்டு நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில்,*

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு'

என்ற வள்ளுவரின் குறள் வரிகளுக்கேற்ப தமிழகத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் எங்கள் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர், கண்முன் உலவும் கலைஞர் வடிவமாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கலை உணர்வும் நம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கடமை உணர்வும் பெற்று, இன்றைய உலகில் நவீன யுக்திகளும், ஆற்றலும், அறிவும் ஒருங்கேபெற்ற நாளைய தமிழகத்தின்

வழிகாட்டி, இளம் சமூகத்தின் வளர்ந்துவரும் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே அனைவருக்கும் வணக்கம். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது கனிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தை அமைதியான, சமத்துவமான மண்ணாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியதால், உலகம் முழுவதிலுமிருந்து சர்வதேச தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் பெரிய தொழில்கள் தொடங்க முன்வந்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பிற்காக காவல் உதவி செயலியைத் தொடங்கியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். காவல் துறை தனது பணியினை சிறப்பாக செய்வதன் மூலமாகவே மாநிலத்தில் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது, போற்றப்படுகிறது. குற்றங்கள் செய்பவர்களை கைது செய்து தண்டிப்பதைவிடவும், குற்றச்செயல்கள் நடைபெறாமல் தடுப்பது சிறந்ததாக அமையும் என்ற திராவிட மாடல் ஆட்சியின்மூலம், அரசாங்கத்தின்மீதும், சட்டத்தைக் காப்பாற்றும் நீதித் துறையின்மீதும் மக்களுக்கு அளவுகடந்த நம்பிக்கையும், மரியாதையும் உருவாகியுள்ளதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாது சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்று கடமையாற்றும் காவல் துறைக்கு இந்த நேரத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடும் மழையிலும், கடுமையான வெயிலிலும், நள்ளிரவிலும் தங்கள் உயிரைப் பற்றிய கவலையில்லாமல் மரணத்தைத் துச்சமாக மதித்து கடமையுணர்வோடு பணியாற்றும் காவல் துறையினரைப் பாராட்டுகின்றேன். காவல் துறையினரின் நலனைப் பாதுகாப்பதற்கு முதன்முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திரு. கோபால்சாமி அவர்களின் தலைமையில் போலீஸ் கமிஷன் அமைத்து, அந்த கமிஷன் தந்த அத்தனைக் கோரிக்கைகளையும் நிறைவேற்றினார். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலுடன் காவல் துறை இன்று மக்களின் நண்பனாக இருந்து சேவை செய்து வருகின்றது. காவல்

துறை நண்பர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் முதல் சித்த மருத்துவக் கல்லூரி என்ற பெருமை பெற்ற பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிக்கு ரூபாய் 40 கோடி நிதியை தாயுள்ளத்தோடு ஒதுக்கித் தந்தமைக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து பயன்பெறும்வகையில் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட உத்தரவிட்டமைக்கும், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பேட்டையில் 1,500 பணியாளர்களுக்கு ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் தொழிலாளர் குடியிருப்புகள் புதியதாக கட்ட அறிவித்தமைக்கும், மேலப்பாளையத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைய உத்தரவிட்டமைக்கும், திருநெல்வேலி மாநகராட்சிமூலம் மக்களுக்கு 24 மணி நேரமும் குடிநீர் கிடைக்கும்வகையில் புதிய திட்டம் அறிவித்தமைக்கும், திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மாள் திருக்கோயில் தேரோடும் வீதிகளில் மின்கம்பிகளை மாற்றி புதைவடக் கம்பிகள்—cable பதிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்திட புதிய திட்டம் அறிவித்தமைக்கும், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்து, வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்திட மேற்கிலிருந்து வரும் வெள்ளநீரை சத்திரம்புதுக்குளம் கண்மாய்க்கு திருப்பிவிடும் பணிக்கு ரூபாய் 3 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டம் அறிவித்தமைக்கும், அனைத்துத் துறைகளிலும் நெல்லை மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்கும், பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வளர்ச்சிக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்ட மக்களின் மருத்துவத் தேவைகளை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பூர்த்தி செய்து வருகிறது. பல்வேறு புதிய திட்டங்களைத் தீட்டி, கழக அரசு இந்த மருத்துவமனையை வளர்ச்சி பெறச் செய்துள்ளது. தொற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு 500 படுக்கை வசதிகளுடன்கூடிய புதிய

கட்டடமும், சமூக மனநல சிகிச்சை பிரிவுக்கு 300 படுக்கைகள் வசதிகளுடன்கூடிய புதிய கட்டடமும், இயன்முறை சிகிச்சை பிரிவுக்கு புதிய கட்டடமும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கழக ஆட்சியில் மேம்பட்ட சுகாதார வசதிகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் பெற்று விளங்குகிறது. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டுப்பாட்டில் மருத்துவக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம் சென்னையில் இருப்பதால், தென்மாவட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் சேவைகளால் பயன்பெற இயலாமல் தவிக்கின்றனர்; மிகுந்த சிரமப்படுகின்றனர். எனவே, தென்மாவட்ட மருத்துவ மாணவர்கள் நலன் கருதி, திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு இரண்டாவது மருத்துவப் பல்கலைக்கழகம் அமைத்து, கலைஞர் நூற்றாண்டு விழா நெருங்குகின்ற இந்த நேரத்தில் புதிய பல்கலைக்கழகம் அமைத்து முத்தமிழறிஞர் கலைஞர் மருத்துவப் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

மேலநத்தத்தில் நீண்ட காலமாகச் செயல்பட்டு வந்த கால்நடை மருந்தகம் சில ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டுவிட்டது. இப்பகுதியைச் சுற்றியுள்ள மக்கள் கால்நடை மருத்துவச் சிகிச்சைக்கு மிகுந்த கஷ்டப்படுகின்றனர். எனவே, மீண்டும் மேலநத்தத்தில் கால்நடை மருந்தகம் செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தாமிரபரணி ஆற்றை கருப்பந்துறையில் கடப்பதற்கு குறுக்குத்துறைக்கும், மேலநத்தத்திற்கும் இடையே ஆங்கிலேயர் காலத்தில் தாம்போதி பாலம் கட்டப்பட்டது. மிகவும் தாழ்வான பாலம் என்பதால், பாலம் மிகவும் பலவீனமாக ஆபத்தான நிலையில் உள்ளது. மழைக் காலங்களில் ஆற்றில் அதிக அளவில் தண்ணீர் வரும்போது பாலம் மூழ்கிவிடுகிறது. இதனால் அடிக்கடி போக்குவரத்து துண்டிக்கப்படும் நிலை ஏற்படுகிறது. நெல்லை சந்திப்பு town, மேலப்பாளையம் பகுதி மக்களுக்கு இப்பாலம் மிகுந்த பயனுள்ளதாக உள்ளது. நெல்லை town-லிருந்து நகருக்குள்

செல்லாமல் புதிய பேருந்து நிலையத்திற்கு ஒரு குறுக்குப் பாதையாக பயன்படுகிறது. எனவே, இப்பாலத்தை அகலப்படுத்தி, உயர்மட்டப் பாலமாக விரிவாக்கம் செய்து, உயர்த்திக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தாமிரபரணி ஆற்றின் மேற்கில் சிந்துபூந்துறையும், கிழக்கில் வண்ணாரப்பேட்டையும் அமைந்துள்ளன. இரு ஊர்களின் மக்களும் இரண்டு கரைகளுக்கும் நடந்து செல்வதற்கு வசதியில்லாமல் தவிக்கின்றனர். எனவே, இரு கரைகளையும் இணைத்து சிந்துபூந்துறை, வண்ணாரப்பேட்டை இரண்டு ஊர்களையும் இணைக்கும் வகையில் சிறிய பாலம் ஒன்று அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருநெல்வேலி, நெல்லையப்பர் நெடுஞ்சாலையில் திருவள்ளுவர் ஈரடுக்கு மேம்பாலத்தின்கீழ், TAHDCO-விற்குச் சொந்தமான ஒரு பெரிய திருமண மண்டபம் நீண்ட காலமாக இயங்கிக்கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இம்மண்டபம் கடந்த ஆட்சியில் இழுத்து மூடப்பட்டுவிட்டது. இம்மண்டபத்தைப் புதுப்பித்து, பராமரித்து, புனரமைத்து மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருநெல்வேலி, வண்ணாரப்பேட்டை வழியாக தெற்குபுற வழிச் சாலையில் குறிச்சியிலிருந்து குலவணிகபுரம் வழியாக பாளையம் கால்வாயைக் கடக்கும் பாலம் மிகவும் குறுகியதாக உள்ளது. இப்பாலம் வழியாக 24 மணி நேரமும் வாகனங்கள் தொடர்ந்து சென்றுகொண்டிருப்பதால், போக்குவரத்து மிகவும் நெருக்கடியாக உள்ளது. இதனால் இப்பாலத்தில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, இப்பாலத்தை அகலப்படுத்தி, விரிவாக்கம் செய்திட வேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறைக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

திருநெல்வேலி மாவட்ட விளையாட்டரங்கம், பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் 165 மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர். இந்த மிகப் பெரிய விளையாட்டு மைதானத்தைக் கட்டமைப்பு செய்து, புதியதாகப் புனரமைப்பு செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதுபோல, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், பொதுப் பணித்

துறை கட்டுப்பாட்டில் ராஜா குடியிருப்பு, மூளிக்குளம், நத்தம், முறிக்குளம் ஆகிய பாசன குளங்கள் இருக்கின்றன. இது தவிர நகரில் வேய்ந்தாங்குளம், வெட்டுவாங்குளம் மற்றும் பல குளங்கள் அமைந்துள்ளன. இவற்றில் பொதுமக்கள் பல ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *மாண்புமிகு உறுப்பினர் மற்ற தொகுதிக் கோரிக்கைகளை அப்படியே பதிவு செய்து கொள்கிறேன். முக்கியமானது ஏதாவது இருந்தால், சொல்லி முடித்துவிடுங்கள்.*

திரு. மு. அப்துல் வஹாப்: *ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மக்கள் குடியிருப்புப் பகுதிகளைவிட்டு, மீதியுள்ள பகுதிகளை தூர்வாரி, மராமத்து பணி செய்தால் இக்குளங்களைச் சுற்றியுள்ள நகர்ப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். எனவே, மாநகர எல்லையில் அனைத்து குளங்களையும் தூர்வாரி மராமத்துப் பணி செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதுபோல, திருநெல்வேலி மாநகராட்சி, பெருமாள்புரத்தில், உள்ள மாநகராட்சி தொடக்க பள்ளியை, நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும். பாளையங்கோட்டை நகரில். . .*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *மாண்புமிகு உறுப்பினர் முக்கியமான* point–*களை மட்டும்* highlight *செய்து படித்துவிடுங்கள்.*

திரு. மு. அப்துல் வஹாப்: *முக்கியமானதை மட்டும் சொல்கிறேன். மகாராஜ நகர், தியாகராஜ நகர், அன்பு நகர் இணைப்பு இரயில் பாதை உள்ளது. இந்த இரயில் பாதை வழியாக தினந்தோறும் திருச்செந்தூருக்கு இரயில் சென்று வருகிறது. இந்த இடத்தில் மேம்பாலம் கட்டும் இரயில் பாதை மட்டும் இணைக்கப்படாமல் பல ஆண்டுகளாக முழுமையாக நிறைவுபெறாமல், அரைகுறையாக, பணிகள் முடிவடையாமல் உள்ளன.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *மீதமுள்ளவற்றை அவையில் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளலாம். உங்களுக்கு இரண்டு நிமிடங்கள்* extra *கொடுத்துவிட்டேன்.*

திரு. மு. அப்துல் வஹாப்: *நெடுஞ்சாலைத் துறை திட்டங்கள்– கோட்டம், இப்பகுதியில் சுரங்கப் பாதை (*subway*) அமைத்திட பணிகள் தொடங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.* Subway *பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக இருக்கும். இந்த இரயில்வே பாலம் அமைப்பதால், பொதுமக்கள் இரயில் பாதையை எளிதாக கடந்துசெல்ல இயலும். எனவே, இந்த இடத்தில்* subway *தேவையில்லை என்று பொதுமக்கள் கருதுகிறார்கள்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *மீதமுள்ளவற்றை அவையில் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. மு. அப்துல் வஹாப்: *என்னுடைய கோரிக்கைகளை இந்த அவையில் படித்ததாக ஏற்று, நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொண்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

திருநெல்வேலி மாவட்ட விளையாட்டரங்கில் செயற்கை இழை மைதானத்தை புனரமைத்து, புதுப்பிக்க வேண்டும்.

மாணவர் விளையாட்டு விடுதியில் கூடுதலாக புதிதாக மேல்தளத்தில் நீண்ட அரங்கம் அமைத்திட வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் Modern Gym *அமைக்க வேண்டும்.*

பாளையங்கோட்டை தொகுதி, ராஜா குடியிருப்பு–மூளிக்குளம் நத்தம்–முறிக்குளம் திருவண்ணாதபுரத்திலுள்ள அம்மன் கோயில்குளம், கந்தன் கட்டளைகுளம், குதிரை கட்டளைகுளம், பொட்டல்குளம் ஆகிய குளங்கள் பாசன குளங்களாக உள்ளன. எஞ்சியுள்ள குளப் பகுதிகளை தூர்வாரி மராமத்து செய்ய வேண்டும்.

பாளையங்கோட்டை நகரின் மையப்பகுதியில் உள்ள வைணவத்தலமான அருள்மிகு அழகிய மன்னார் ராஜகோபாலசாமி திருக்கோயில், சிவத்தலமான அருள்மிகு ஸ்ரீ திரிபுராந்தீஸ்வரர் திருக்கோயில் என இரு திருக்கோயில்களுக்கும் திருப்பணி செய்து, குடமுழுக்கு விழாவினையும் சிறப்பாக நடத்த வேண்டும்.

பாளையங்கோட்டையில் குடிமைப்பணி, அரசுப் பணி பயிற்சி மையம் புதிதாக அரசு சார்பில் அமைக்க வேண்டும்.

திருநெல்வேலி, மகாராஜ நகர், தியாகராஜ நகர், அன்பு நகர் இணைப்பு பகுதியில் உள்ள கீழ்சுரங்கப் பாதை (subway) அமைக்கும் பணியை இரத்து செய்ய வேண்டும்.

பாளையங்கோட்டை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு உட்கட்டமைப்பு வசதி செய்திட தேவையான நிதி ஒதுக்க வேண்டும். இங்கு அமைக்கப்படும் அரங்கத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயர் சூட்ட வேண்டும். மேலும், பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவியர்களுக்கான விடுதி கட்டுவதற்கு தேவையான நிதி ஒதுக்கி, நிர்வாக அனுமதி வழங்க வேண்டும்.

திருநெல்வேலி, ஸ்ரீகாந்திமதி அம்பாள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திட வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

***திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு, தீரன் சின்னமலையினுடைய பிறந்தநாள் வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் நேரடியாக வந்து Guindy-யில் இருக்கின்ற சிலைக்கு மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிக்கட்சித் தலைவராக இருந்தபோதும், இப்போது முதலமைச்சராக இருக்கும்போதும் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் தவறாமல், தீரன் சின்னமலைக்கு மரியாதை செலுத்திக்கொண்டிருக்கிறார். இதற்காக கொங்கு மண்டலத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொரோனா காலத்தில்கூட, அறிவாலயத்திலே படம் வைத்து, மரியாதை செலுத்தினார் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12–55

தமிழக காவல் துறையின் புகழை நாம் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் துறையை மெருகேற்றிக் கொண்டிருக்கிறார்கள். சட்டம்-ஒழுங்கு என்று சொல்வது, தவறுகளே நடக்காதது அல்ல. உலகத்திலுள்ள எந்த நாடும் குற்றங்களே நடக்காத நாடு கிடையாது; அப்படி ஒரு பட்டியலே கிடையாது. குற்றங்கள் நடந்தால், உடனடியாக நடவடிக்கை எடுத்தோமா என்பதைப் பார்க்க வேண்டும். அதுதான் சட்டம்-ஒழுங்கு. நான் இந்த அவையிலே இரண்டு ஆண்டுகளாகப் பார்க்கின்றேன். எந்தவொரு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த அவையில் எதிர்க்கட்சியினர் கேள்வி கேட்கும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சொல்கிறாரேயொழிய, நடவடிக்கைகள் எடுப்போம் என்று சொன்னதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் சட்டம்–ஒழுங்கைக் காப்பாற்றும் நடவடிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) குற்றங்களே நடக்காமல் செய்ய முடியாது.

அதேபோல, இந்த அவையிலேயே, 'காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பேசுகிறோம். காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுக்கும்பொழுது, காவல் துறை அதிகாரி, சற்று emotional ஆகி, ஏதும் நடந்துவிட்டால், அது மனித உரிமை மீறல் எனக் குறிப்பிடப்பட்டு, அவர்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள். பிறகு, இந்த அவையில் நாம் என்ன பேசுகிறோம்? 'அந்தக் காவல் துறை அதிகாரிமீது கடுமையான நடவடிக்கை எடுங்கள்' என்று பேசுகிறோம். இப்படிப்பட்ட பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாவது காவல் துறை. அந்தவகையில், காவல் துறையின் சிறப்பைச் சொல்லிக் கொண்டிருந்தாலும், ஒரு சில தவறுகளும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தத் தவறுகளைத் தடுக்கும்விதமாக, உதவி ஆய்வாளர் நிலையிலிருந்து உயர் அதிகாரிகள் வரை, அவர்களுடைய சொத்து, அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் சொத்து ஆகியவற்றை ஒவ்வோர் ஆண்டும் காண்பிக்க வேண்டும், பதிவு செய்ய வேண்டும். அப்படி ஒரு விஷயம் நடைமுறைப்படுத்தப்பட்டால், தவறுகளை குறைப்பதற்கான, நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

அதேபோல, FIR போடும்போது, பல இடங்களில் பிரச்சினைகள் இருக்கின்றன; இல்லையென்று சொல்ல முடியாது. ஒருசில இடங்களிலே ஒரு வழக்கைப் பற்றி கேட்கும்பொழுது, 'FIR போட்டுவிட்டோம், ஒன்றும் செய்ய முடியாது' என்று சொல்கிறார்கள். ஒருசில வழக்குகளில் FIR போடப்படுவது சற்று தாமதமாகிறது. அதற்கென ஏதாவது ஒரு system கொண்டுவரப்பட வேண்டும். FIR என்பது அடிப்படை உரிமை. யார் புகார் கொடுத்தாலும், FIR போடுவதற்காக அடிப்படை விஷயங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

அதேபோல, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பறை இருக்க வேண்டும். அனைத்துக் காவல் நிலையங்களிலும் வரவேற்பறை அமைக்க முடியாது என்றாலும், ஒரு மாவட்டத்திற்கு சுமார் 10 காவல் நிலையங்களிலாவது வரவேற்பறை அமைத்து, வருகிறவர்களுக்கு ஒரு பயமில்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும். காவல் துறையின்மீது மரியாதை இருக்க வேண்டும்; பயமிருக்கக் கூடாது. அந்தப் பயத்தைப் போக்க வேண்டுமென்று சொன்னால், காவல் துறையைச் சாராத பெண் அலுவலர்களை, வரவேற்பாளர்களாகப் பணியமர்த்த வேண்டும். மற்ற அலுவலகங்கள்போல ஒரு வரவேற்பை அளித்தோம் என்று சொன்னால், குற்றங்களைப் பதிவு செய்ய வருகிறவர்களுக்கு வசதியாக இருக்கும்.

குறிப்பாக விவசாயிகளுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும். விவசாயிகள் யதார்த்தமாக இருக்கிறார்கள். சுமார் 15 நாட்களுக்கு முன்பு, ஓமலூர் இலட்சுவாயனூர் என்ற இடத்தில் ஒரு விவசாயிடம் 'கடைசி விவசாயி' என்ற திரைப்படத்தில் வந்ததைப்போல, அதிகாரிகள் கேட்கிறார்கள்; 'மருந்து வைத்தேன்' என்று சொல்கிறார். மயில் இறந்துவிட்டது. 'மருந்து வைத்தேன்' என்று அவர் சொன்னது, தன்னுடைய தோட்டத்திற்கு 'உரம், fertilizer வைத்தேன்' என்று சொல்கிறார். அதைத்தான் அவர் சொல்கிறார். மயில் அதனைச் சாப்பிட்டு இறந்துவிட்டது. அவரைக் கைது செய்கிறார்கள். ஆகவே, விவசாயிகளைப் பொறுத்தவரையில் தயவுசெய்து, மரியாதை குறைவில்லாமல் நடத்துகிற பணியைச் செய்தால் நன்றாக இருக்கும்.

அதேபோல, தவறான வார்த்தைகள் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இது யதார்த்தம். நாம் மறைக்கலாம். ஆனால், காவல் துறையில் சில அதிகாரிகள் தவறான

வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். அதன் காரணமாகவே காவல் துறை அலுவலகத்திற்கு வருகிறவர்கள் பயந்துபோகிறார்கள். அதனால், காவல் நிலையங்களில் CCTV வைப்பதன்மூலம் இதுமாதிரியான தவறுகளைச் சரி செய்ய வாய்ப்பிருக்கிறது. இவையெல்லாம் மன அழுத்தத்தின் வெளிப்பாடுகள்.

குற்றப் பிரிவு காவலர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நாமக்கல் நகரத்தை எடுத்துக்கொண்டால், அது வளர்ந்து கொண்டிருக்கும் நகரம். ஆகவே, நாமக்கல்லுக்கு இன்னொரு காவல் நிலையம் வேண்டும். அதேபோன்று நாமக்கல் மாவட்டத்தில் கொக்கராயன்பேட்டை என்கிற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு அனைத்து மதத்தினரும் வாழ்கிறார்கள். அங்கு எல்லா சாதியினரும் வாழ்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் ஒரு காவல் துறை அலுவலகம் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் அரசுக்கு நல்ல கருத்துகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், விவசாயிகள் எல்லாம் அச்சுறுத்தப்படுகிறார்கள்; அவர்கள்மீது வழக்கு போடப்படுகின்றது என்பது போன்று எல்லா விவசாயிகளுக்கும் செய்யப்படுகின்றது என்று அவருடைய உரையிலே இருக்கிறது, அது தவறு. இதுபோன்று, குறிப்பிட்ட விவசாயிகள் எங்கேயாவது அப்படி பாதிக்கப்பட்டிருப்பார்களேயானால், நீங்கள், சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு உங்களுக்கு வாய்ப்புகள் உண்டு. அங்கு இருக்கிற மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரைச் சந்திக்க உங்களுக்கு வாய்ப்பு உண்டு. அப்படி குறிப்பிட்ட நபர்கள்மீது புகார் கொடுத்தால் அவர்கள்மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

இன்னொன்று, FIR போடுவதைப் பற்றி சொன்னீர்கள். இந்த அரசைப் பொறுத்தளவில், இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, காவல் துறை அதிகாரிகள், அங்கு வருகிற புகார்தாரர்களை

நண்பர்களாகத்தான் treat பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக FIR எல்லாம் போடப்படுகிறது. அப்படி எங்கேயாவது FIR பதிவாகாமல் இருக்குமென்று சொன்னால், அதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனே FIR போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: புதிதாக காவல் நிலையங்களை நாங்கள் கேட்கின்றோம். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் நாமக்கல் மாவட்டத்தில், சேந்தமங்கலம், கொல்லிமலை இரண்டுக்கும் ஒரே ஆய்வாளர்தான் இருக்கிறார். அதேபோன்று, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள எருமைப்பட்டி, நல்லிபாளையம் ஆகிய இரண்டு காவல் நிலையங்களுக்கும் ஒரே ஆய்வாளர்தான் இருக்கிறார். புதிய காவல் நிலையங்களைக் கேட்கிற அதேநேரத்தில், இருக்கிற காவல் நிலையத்திற்கே காவல் அலுவலர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பதைத்தான் இங்கே நான் பதிவு செய்கிறேன்.

அதேபோல, திருப்பூர், கரூர், ஈரோடு, பல்லடம் பகுதிகளில் வட இந்தியத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதுபோன்ற இடங்களில் காவலர்களை கொஞ்சம் strengthen செய்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால், நிறைய பிரச்சினைகள் வருகின்றன.

ஏனென்றால், பல்லடத்தில் மட்டும் மொத்த மக்கள்தொகை 4 இலட்சமாக உள்ளது. அதற்குத் தகுந்த மாதிரி காவல் நிலையம் வலுவாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றோம். அதே மாதிரி இணையவழிக் குற்றங்கள் தற்போது அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இணையவழிக் குற்றங்கள் அதிகமாகும்போது, தாலுகாதோறும் ஒரு cyber crime காவல் நிலையம் வேண்டும். நானே அந்த இணையவழிக் குற்றத்தில் ரூ.7 இலட்சத்தை இழந்துவிட்டேன். ரூ.7 இலட்சம் எங்கே போனதென்றே தெரியவில்லை. கண்டுபிடிக்கவே முடியவில்லை. 3 வருடங்களுக்குமுன் cyber crime-ல் வழக்குப் பதிவு செய்தேன். இன்றுவரை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. Cyber Crime-இணையவழிக் குற்றம் என்பது ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த TASMAC bottle-ஐ திருப்பிக் கொடுக்கும் திட்டம் மலைப் பகுதிகளிலே மிகப் பெரிய வெற்றியடைந்திருக்கிறது. கோவை மாவட்டத்தில் முதன்முறையாக மாவட்டம் முழுவதும் இதைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அந்த bottle-ல் QR code போடுகிறார்கள். வாங்கிய கடையிலேயே திருப்பிக் கொடுத்தால்தான் 10 ரூபாயைத் திருப்பித் தருவோம் என்கிறார்கள். அப்படியென்றால், குடித்தவர்களே கொடுத்தால்தான் உண்டு. யாராவது பாட்டிலை கண்டெடுத்தால் அவர்கள் சென்று கொடுக்க மாட்டார்கள். எந்த ஒரு TASMAC கடையிலே bottle-ஐ கொடுத்தாலும், கண்டிப்பாக அந்த 10 ரூபாயை திருப்பித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களிடையே மன அழுத்தம் இருப்பது குறித்து சொன்னேன். சில நேரங்களிலே, இரு சக்கர வாகனங்களிலும், பேருந்துகளிலும்கூட கைதிகளை அழைத்துச் செல்கிறார்கள். அதையெல்லாம் தவிர்த்து, கைதிகளை நீதிமன்றத்திற்கோ, விசாரணைக்கோ அழைத்துச் சென்றால் அவர்களை நான்கு சக்கர வாகனத்தில்தான் அழைத்துச் செல்ல வேண்டுமென்ற ஒரு நிலை வந்தால் நன்றாக இருக்கும்.

அதேபோல, ஆவடியில் ஒரு திருமண மண்டபம் இருக்கிறது. சிறப்பாக இயங்குகிறது. சில மாவட்டங்களில் கல்யாண மண்டபங்கள் இருக்கின்றன. கல்யாண மண்டபங்கள் இல்லாத மாவட்டங்களில் காவல் துறை நண்பர்களுக்காக திருமண மண்டபங்களை அமைக்க வேண்டும்.

அதேபோல, 50 வயதுக்கு மேலான காவலர்களை கடுமையான பணிகளுக்கு அனுப்பாமல் அவர்களது பணிச்சுமையைக் குறைத்தால் நன்றாக இருக்கும். 8 மணி நேரப் பணி என்பதும், வார விடுப்பு என்பதும் கண்டிப்பாகத் தேவை என்பதையும் நான் இங்கே பதிவு செய்கிறேன். அதேமாதிரி, bus-ல் அடையாள அட்டையைக் கொடுத்தால் அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று நாம் பேசியிருக்கிறோம். ஆனால், warrant-அனுமதி சீட்டு கொண்டு வந்தால்தான் அனுமதிக்கிறார்கள். மொத்தம் 1,20,000 காவல் துறை அலுவலர்கள் இருக்கிறார்கள். அந்த 1,20,000 பேரில் 50,000 பேர் மட்டுமே bus-ஐ பயன்படுத்துவார்கள். எவ்வளவோ பேருக்கு இலவசமாகக் கொடுக்கிறோம். காவல் துறை அதிகாரிகள்

அவர்களின் ID card-களைக் காண்பித்தால் அனுமதிக்கலாம். 50,000 பேர் இருக்காது, குறைவாகத்தான் இருக்கும். எல்லாருமே two wheeler வைத்திருக்கிறார்கள். அடையாள அட்டையைக் காண்பித்தாலே bus பயணத்தை இலவசமாகக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-05

அதேமாதிரி, பெண் காவலர்களைப் பொறுத்தவரை, காவல் நிலையத்தில் ஒரு தனி கழிப்பறை வேண்டும். எல்லா இடங்களிலும் பெண்களுக்கு தனி கழிப்பறை இருக்கிறது. அதுபோல பாதுகாப்புப் பணிகளுக்கு அல்லது வேறு பணிகளுக்கு அவர்கள் செல்லும்போது toilet இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பெண் காவலர்களது சீருடையைப் பொறுத்தவரையில் அதைப் போடுவதற்கு அவர்களுக்கு சிரமமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் போட விரும்பாதவர்களுக்கு வேறு ஏதாவது ஒரு option வழங்க இயலுமா என்று யோசிக்க வேண்டும்.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இன்றைக்கு அனைத்து நோய்களும் cover ஆகவில்லையென்று கூறுகிறார்கள். எனவே, அனைத்துவிதமான நோய்களும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

அமைச்சகப் பணிகளில் காவலர்களுக்கு இளநிலை உதவியாளர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கினால் சிறப்பாக இருக்கும். இறுதி அறிக்கையைப் பொறுத்தவரையில், அவர்கள் அரசு வழக்கறிஞர்களை நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உயர் நீதிமன்றத்தின் உள்ளே செல்வதற்கு வழக்கறிஞர்களுக்கு வழங்குவதுபோன்று pass வழங்கினால் சுலபமாக இருக்கும். அதற்கும் அவர்கள் சிரமப்படுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு நிமிடம். சிறையில் உள்ள கைதிகளைப் பார்ப்பதற்கு உறவினர்கள் வருகிறார்கள், வழக்கறிஞர்கள் வருகிறார்கள். என்ன பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரே சத்தமாக இருக்கிறது. Safety இருக்க வேண்டியதுதான். ஆனால், ஒரே சத்தமாக இருக்கிறது. வழக்கறிஞர்களுக்குக்கூட கைதிகள் என்ன சொல்கிறார்கள் என்பது புரிவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைக் கைதிகளுக்கு* Video Conference *மூலமாகவோ, அவர்களிடம் தொலைபேசி வழங்கி* intercom *மூலமாகவோ அவர்கள் எந்த வழியில் பேசுவதற்கு விருப்பப்படுகிறார்களோ, அந்தவகையில் உறவினர்கள் சிறையிலுள்ள கைதிகளை சந்திப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இரைச்சல் சத்தம் எதுவும் தற்போது இல்லை. அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் பேசலாம். அதோடுமட்டுமல்லாமல், கைதிகள் காணொளிக் காட்சி வாயிலாக தங்கள் வீட்டிலிருப்பவர்களுடன் பேசுவதற்கான வாய்ப்பினையும் அரசு உருவாக்கித் தந்துள்ளது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன், நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், நேற்றையதினம் சென்னை,* Parrys corner*-ல் 4 அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்துவிட்டது என்றறிந்து உடனடியாக மீட்புப் பணிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களும், மேயர் அவர்களும், ஆணையர் அவர்களும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அனைவரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் அந்தப் பகுதியானது எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும். நான் 1988 ஆம் ஆண்டில் கோவிந்தப்ப நாயக்கன்* Street, Bakers Street, *தேவராஜ முதலி* Street *ஆகிய பகுதிகளில் கட்டடங்களை இடித்துக் கட்டியிருக்கிறேன். அப்பகுதியில் இடையில்* space *கிடையாது.* Buildings *ஒட்டி ஒட்டித்தான் இருக்கும். எனவே, இனிவருங்காலங்களில் இவ்வாறு நிகழ்வு ஏற்படும்போது, கட்டடங்களை இடித்துக் கட்டுகிறார்கள் என்னும் நேர்வில், தீயணைப்புத் துறையினருக்குப் போதுமான அளவில்* instructions *அளிக்கப்பட்டு, மிக முக்கியமான நேரங்களில் யாராவது ஒரு நபரை அவ்விடத்தில் நிறுத்த முடியுமா என்றும் கருதிப் பார்க்கலாம்.* (மணியடிக்கப்பெற்றது) *ஏனென்றால், எப்போதுமே அந்த பிரச்சினை இருக்கிறது. அவ்வளவுதான்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களுடைய திருமண வயதைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். நான் பேசிய பின்னர் சிலர் என்னிடத்தில் சொன்னார்கள், 18 வயதில் பெண்கள் ஓட்டு போடும் தகுதியைப் பெற்றுவிடுகிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்களாகிய உங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள், M.P-ஐத் தேர்ந்தெடுக்கிறார்கள், மாண்புமிகு முதல்வரைத் தேர்ந்தெடுக்கிறார்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், ஏன் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கக்கூடாது என்று கேட்டார்கள். நான் கேட்பதெல்லாம், எங்களையும், மாண்புமிகு பிரதமர் அவர்களையும் தேர்ந்தெடுக்கிறார்கள், சரியில்லையென்றால் 5 வருடங்கள் கழித்து மாற்றிவிடலாம். ஆனால், கணவரை தேர்ந்தெடுத்துவிட்டால் பிறகு மாற்ற முடியுமா? எனவே 18 வயது என்றிருக்கும் பெண்களுக்கான திருமண வயது வரம்பை 21 வயதாக மாற்ற வேண்டும். (குறுக்கீடு) ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். எங்கள் சொந்தப் பிரச்சினை. இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதும், மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவதும், முன்னணிக் கட்சித் தலைவர்கள் பேசுவதும், ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டே இருக்கிறார், குறிப்பிட்ட கட்சி உறுப்பினர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். திடீரென்று நாங்கள் பேசுவது வருவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அந்தத் தொலைக்காட்சியின் பெயரைச் சொல்கிறேன். அந்தத் தொலைக்காட்சியில் நாங்கள் பேசுவது ஒளிபரப்பப்படுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக, பழைய ஓய்வூதியத் திட்டம் என்பது அதிகாரிகளுக்கு தீர்க்கப்படாத பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு ஏதாவது ஒரு தீர்வைக் காண வேண்டும். 2003 ஆம் ஆண்டில் ஒரே நாளில் appoint செய்யப்பட்ட 12 மகளிர்

காவலர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 25 ஆண் காவலர்களுக்கு வழங்கப்படவில்லை. பெண்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு, ஆண்களுக்கு வழங்காதது குறித்து அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–10

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Quick Response Vehicle ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) ஒன்றே ஒன்று, தொகுதி குறித்து மட்டும்.

திருச்செங்கோடு தீயணைப்பு நிலையத்தை எடுத்துக் கொண்டால், சுற்றி பரமத்தி-வேலூர், கபிலர்மலை வரை இல்லை. எல்லாவற்றிற்கும் சேர்த்து திருச்செங்கோடு தீயணைப்பு நிலையத்தினர்தான் பணிகளைப் பார்க்கிறார்கள்.

QRV கண்டிப்பாக வேண்டும். திருச்செங்கோடு தீயணைப்பு நிலையத்தில் பணிபுரிபவர்கள் வேறு எங்கெங்கேயோ இருக்கிறார்கள். Area அதிகமாக இருப்பதனால், உடனடியாக வரமுடிவதில்லை. Quarters கட்டுவதற்கு அங்கு இடம் இருக்கிறது. பல்வேறு கட்டங்களை கடந்து, கோப்பு இப்போது Finance Department-க்கு வந்துள்ளது. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Finance Department approval வாங்கி, திருச்செங்கோடு தீயணைப்பு நிலையத்தில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு quarters கட்டித் தருவதற்கு முன்வர வேண்டுமென்று அன்போடு உங்களை கேட்டுக்கொண்டு, இந்த நேரத்திலே வாய்ப்பளித்த அத்தனை பேருக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், இந்தத் துறையில் பேசுவதற்கான வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை என்பது மிக, மிக இன்றியமையாத, மிக முக்கியமான ஒரு துறை. இயற்கை இடர்பாடுகள் ஏற்பட்டாலும், சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டாலும், விபத்துகள் ஏற்பட்டாலும், பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு சாலைக்கு வந்து மறியல் செய்தாலும், எல்லா பிரச்சினைகளிலும் மக்களோடு இரண்டற ஒன்றி இருக்கக்கூடிய மிக முக்கியமான ஒரு துறை. இந்தத் துறையில் இருக்கக்கூடிய கடைநிலை காவலர்கள் தொடங்கி, காவல் துறை DGP வரையில் மன உளைச்சலுக்கோ, மனச் சிதைவிற்கோ, மன அழுத்தத்திற்கோ ஆளாகாமல் அவர்கள் பணி செய்தால்தான் நம் நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கை மிகச் சிறப்பாகப் பாதுகாத்து, மக்களுடைய தேவைகளுக்கு உடனடியாக பதிலளித்து, மிகச் சிறப்பான ஒரு நிர்வாகத்தை நடத்த முடியும்.

அந்தவகையில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மிகச் சிறப்பாக சட்டம்-ஒழுங்கைப் பராமரித்து வருகின்ற மாண்புமிகு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், காவல் துறையில் பணியாற்றுகின்ற 1,20,000-க்கும் மேற்பட்ட காவல் துறை பணியாளர்களுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மனச் சிதைவு, மன அழுத்தங்கள் இல்லாமல் வேலை செய்ய வேண்டுமென்பதற்காக சில வேண்டுகோள்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் 2011 ஆம் ஆண்டில் 1,000 நேரடி உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

2023 ஏப்ரல் 20] [திரு. தி. வேல்முருகன்]

ஆனால், 12 ஆண்டு காலமாகியும் அவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு வழங்கப்படாத காரணத்தினால், தங்களுக்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லையே என்கிற ஒரு மன அழுத்தத்தோடும், மன உளைச்சலோடும் இருக்கிறார்கள். அதுபோன்ற தருணங்களில் பொதுமக்கள் அணுகுகின்றபோதுதான் கோபப்பட்டு வார்த்தைகளை விடுவதும், திட்டுவதும், கையை ஓங்குவதுமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். ஆதலால், அவர்களுக்கான தேவைகளை நாம் உடனுக்குடன் சரி செய்து, அவர்கள் நிம்மதியாக அந்தப் பணியில் தொடர்ந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்கிற வேண்டுகோளை உதவி ஆய்வாளர்கள் விஷயத்திலே நான் முன்வைக்கிறேன்.

12 ஆண்டு காலத்திற்கும் மேலாக, அவர்கள் பதவி உயர்வு இல்லாமல் இருந்து வருகிறார்கள். அதேபோன்று, 1997 ஆம் ஆண்டு நேரடி உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பிறகு அவர்கள் ஆய்வாளர்களாகப் பணியமர்த்தப்பட்டு, அதற்குப் பிறகு 750 பேரிலே கிட்டத்தட்ட, பெரும்பான்மையானவர்கள் காவல் துறை உதவி கண்காணிப்பாளர்களாகப் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால், 180 ஆய்வாளர்கள் சக Inspector ஆக இருந்தவர்களிடத்திலேயே சென்று பணி செய்யக்கூடிய ஓர் அவலம் இருக்கிறது. அதாவது, ஒரே batch 1997 ஆம் ஆண்டைச் சேர்ந்தவர்கள். ஒரு batch-ல் குறிப்பிட்ட நபர்கள் ASP ஆகிவிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட, 180 பேர் இன்னும் Inspector ஆகவே இருக்கிறார்கள். தன்னுடைய சக batchmate உடன் சென்று, இவர்கள் அவர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டிய ஒரு கடமைக்கு தள்ளப்படுகிறார்கள். ஆனால், இந்த உணர்வு, egoism என்பது தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்விலே தேர்வானவர்களுக்கு இருக்கிறது. நம்முடன் பணியில் சேர்ந்த ஓர் ஆய்வாளர் இன்றைக்கு ASP ஆன காரணத்தினால் அவருக்கு நாம் சென்று வணக்கம் செலுத்த வேண்டும். ஆனால், நமக்கு அந்தப் பதவி உயர்வு கிடைக்கவில்லையே என்கிற ஒரு நிலை அவர்களுக்கு இருக்கிறது. அதனால், இந்த நேரடி பதவி உயர்வின் மூலமாக அந்தந்த காலகட்டங்களில் உதவி ஆய்வாளர்களுக்கான பதவி உயர்வு, ஆய்வாளர்களுக்கான பதவி உயர்வு, உதவி காவல் கண்காணிப்பாளர் பதவியிலிருந்து ADSP பதவி உயர்வு, அதுபோன்று ADSP-யிலிருந்து SP பதவி உயர்வு ஆகியன வழங்கப்பட வேண்டும்.

இப்போதுகூட, 15-க்கும் மேற்பட்ட ADSP-க்கள் SP-க்களாக பதவி உயர்வு கிடைக்காமல் இருந்தது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், உள் துறைச் செயலாளர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்த பிறகு, தற்போது அதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருப்பதாக செய்தி வந்திருக்கிறது.

அதேபோன்று, இந்தப் பதவி உயர்வுகள் வழங்குகின்றபோது, 180 Inspector-களை ஒரே நேரத்தில் DSP-க்களாக ஆக்குகின்றபோது, இவர்களுக்குப் பணியிடங்கள் காலியாக இல்லை. ஆதலால், Detachment-னுடைய Inspectors தான் இப்போது கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தலைவர் கலைஞர் அவர்களின் காலத்தில் மாவட்ட அளவிலே DSP rank-ல் உளவுத் துறை அதிகாரிகள் இருந்தார்கள். அப்படி ஒரு பிரிவை மீண்டும் கொண்டுவந்தால் Inspector-க்கு பதவி உயர்வு கிடைக்கின்றபோது, அவர்களுக்கான பணியிடத்தை வழங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

பிற்பகல் 1-15

அதேபோன்று, ஒரு மாவட்டம் முழுவதும் SP-க்கு அடுத்த நிலையில் SB (Inspector) இருக்கிறார். கடந்த காலத்தில் DSP இருந்தார்கள். ஒரு DSP தான் காவல் துறையில் இருக்கிற ஏனைய ஆய்வாளர்களுக்கு உத்தரவிடுவதற்கும், SP அவர்கள் சொல்கின்ற கட்டளையை நிறைவேற்றுவதற்கு பணிப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். சக ஆய்வாளரிடத்திலே சொல்கின்றபோது, அதனுடைய importance, அதனுடைய முக்கியத்துவம் குறைவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆதலால், இந்த உளவுத் துறை பிரிவிலே DSP-யும், 'Q' branch போன்ற அதிகாரிகள் DSP ஆகவும், SB (Inspector) பதவியை DSP ஆகவும் பணி உயர்வளிப்பதற்கான அரசாணை வெளியிட்டால், இந்த 180 Inspector-களுக்கும் பதவி உயர்வு தந்து தமிழ்நாடு முழுவதும் இவர்களுக்கான அந்தப் பணி வாய்ப்புகள் வழங்கப்படும். 25 ஆண்டுகாலமாக பதவி உயர்வு இல்லாமல் இருக்கிற காவலர்கள் அவர்கள் மன உளைச்சல் இல்லாமல் தங்களது பணியைச் சிறப்பாகச் செய்வதற்கான வாய்ப்பு அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்துகொள்கிறேன்.

அதுபோன்று, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி தலைவர் கலைஞர் அவர்கள்தான் தலைமைக் காவலர்களாக இருந்து ஓய்வு பெறுகின்றவர்களுக்கு SSI என்கிற ஒரு பதவியைத்

தந்து, அவர்களையும் Sub-inspector என்ற நிலைக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால், இன்றைக்கு நம்முடைய தளபதி அவர்கள், 25 ஆண்டுகள் அல்ல, "புலி எட்டு அடி பாய்ந்தால், புலிக்குட்டி பதினாறு அடி பாயும்" என்பதுபோல, 20 ஆண்டு காலம் காவலர்களாகப் பணி செய்தால், அவர்களுக்கு SSI ஆக பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று தேர்தல் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். நிச்சயமாக, அதையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்கிற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, எழும்பூரிலுள்ள காவல் மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, காவலர்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சையாக இருந்தாலும், இலவச சிகிச்சை, தரமான சிகிச்சை தர வேண்டும். அதேபோன்று, மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடைக் கல்வி, கலை, அறிவியல் கல்வி என்கிற எல்லா கல்வி நிலையங்களிலும் காவலர்களுடைய குடும்பங்களுக்கு அரசே கட்டணம் செலுத்தி, அவர்களுடைய குழந்தைச் செல்வங்கள் இலவசமாக நிம்மதியாகக் கல்வி பெறுவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்கிற வேண்டுகோளையும் இந்த நேரத்தில் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, காவல் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு காவல் துறை குடியிருப்புகளில் 'சொந்த இல்லம்' திட்டத்திலும் உரிய இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணைய ஆள்தேர்வு பணியில் ஈடுபடுத்தப்படும் அமைச்சுப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு TNPSC மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் வழங்கும் அடிப்படை ஈட்டுப்படி வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை அமைச்சுப் பணியாளர்களுக்கு இருக்கிறது. அதையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன்.

தொடர்ந்து இரண்டு ஆண்டுகாலமாக மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்த்து வருகிறேன். சிறு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு, உயர் நீதிமன்றத்தால், மாவட்ட நீதிமன்றத்தால், குற்றவியல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர்கள் தமிழ்நாடு முழுவதும் 500 நபர்கள்தான் இருக்கிறார்கள். எல்லாத் தேர்வுகளிலும்

தேர்ச்சியடைந்துவிட்டார்கள். அவர்களுக்கு பணியாணை வழங்கப்படவில்லை. அண்ணன்-தம்பி சண்டை இருக்கிறது, மாமன்-மச்சான் சண்டை இருக்கிறது, வரப்பு தகராறு, சண்டை இருக்கிறது எனக்கூறி, வழக்குகள் இருக்கிற காரணத்தால் அவர்களைப் பணியில் எடுத்துக்கொள்ள முடியாது என்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களை, நீதிமன்றமே பரிசீலிக்க வேண்டுமென்று உள் துறைக்கு உத்தரவிட்டவர்களை கருணையோடு தயவுசெய்து ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி இரண்டாம் நிலைக் காவலர்களாக பணி வழங்க வேண்டும். (குறுக்கீடு) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் அண்ணன் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களுக்கு 15 நிமிடங்கள் கொடுத்தீர்கள். தயவுசெய்து அதே நேரத்தை எனக்கும் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லையென்றால் நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 8 நபர்கள் பேச வேண்டும். நீங்கள் சீக்கிரம் 2 நிமிடங்களில் முடியுங்கள் (குறுக்கீடு)

திரு. தி. வேல்முருகன்: 5 நிமிடத்தில் மணியடித்து, பயம் காட்டினால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 7 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

திரு. தி. வேல்முருகன்: அவர்களுக்கு இரண்டாம் நிலை காவலர்களாக பணி வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, 10 ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்களை சாதி, மதம், கட்சி எல்லைகளைக் கடந்து, அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். குறிப்பாக, நீண்டநாள் இஸ்லாமிய சிறைவாசிகளையும் விடுதலை செய்ய வேண்டும். ஒட்டுமொத்த இஸ்லாமிய பெருமக்கள், பெரும்பான்மையானவர்களின் குடும்பங்கள், குடும்பம் குடும்பமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆண்டாண்டு காலமாக வாக்களிக்கக்கூடிய மக்களாக இருக்கிறார்கள். அந்த ஒட்டுமொத்த மக்களின் கோரிக்கை இந்த நீண்ட நாள் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதுதான். அதுபோன்று உழைக்கும் மக்களான

வேளாளக்குடியிலே பிறந்த நம்முடைய தேவேந்திர குல வேளாளர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிற தேவேந்திர குல வேளாளர் மக்கள் தங்களை பட்டியலின பட்டியலில் இருந்து வெளியேற்றம் செய்ய வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். ஒன்றிய அரசு, அவர்களுக்கு தேவேந்திர குல வேளாளர் என்கிற அந்த பட்டியல் பெயர் தந்திருக்கிறது. ஆனால், பட்டியலிலிருந்து இன்றும் வெளியேற்றம் செய்யப்படவில்லை என்கிறார்கள். அதை தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1–20

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் நீண்டகாலமாக சிறையிலே இருக்கக்கூடிய இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா பேசும்போது அதற்கான தெளிவான விளக்கத்தை நான் இங்கே தந்திருக்கின்றேன். இருந்தாலும் மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். மாண்புமிகு தலைவர் தளபதி அவர்கள் எல்லோரையும் ஒன்றாக நினைக்கக்கூடியவர். இவர்கள் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள், இவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் பார்ப்பது கிடையாது. ஆனால், அவரைப் பொறுத்தவரைக்கும் முடிந்த அளவு விதிகளை எல்லாம் தளர்த்தி, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னார். அதற்காக முதலிலே பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு விடுதலை செய்வதற்காக ஓர் ஆணையினைப் பிறப்பித்தார்கள். அதிலே அதிகம் பேர் வராத காரணத்தினால், ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஆதிநாதன் தலைமையில் மீண்டும் ஒரு* Commission *அமைத்து, அங்கே கைதிகளாக இருக்கக்கூடியவர்களை, நீண்டகாலமாக சிறைவாசிகளாக இருக்கக்கூடியவர்களை விடுதலை செய்வதற்காக என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றனவோ, விதிமுறைகளுக்குட்பட்டு அவற்றை அவர்களும் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். ஆனால், மத்திய அரசு வழக்குகளில்*

சம்பந்தப்பட்டவர்களை அல்லது மத்திய அரசு சட்டம் சம்பந்தப்பட்டவர்களை நாங்கள் விடுதலை செய்ய முடியாது. மாநில அரசு சம்பந்தப்பட்ட வழக்குகளில்தான் அவர்களை விடுதலை செய்ய முடியும். அதைத்தான் அந்த Commission–ம் பரிந்துரை செய்திருக்கிறது என்பதை மீண்டும் இங்கே விளக்கமாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏழைகளின் வாகனங்கள் என்று அழைக்கப்படுகின்ற இரு சக்கர வாகனங்கள் பழுது பார்ப்பவர்கள், நீண்ட நெடிய நாட்களாக தங்களை நல வாரிய உறுப்பினர்களாக அங்கீகரித்து, மற்ற தொழிலாளர் வர்க்கத்திற்கு வழங்குவதுபோல் நல வாரிய வழியாக உதவிகள் கிடைத்திட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்தி, இரு சக்கர வாகனம் பழுதுபார்ப்பவர்களுக்கு நல வாரியம் ஒன்றை உருவாக்கி, அவர்களுக்கும் நம்முடைய அரசின் சலுகைகள் கிடைப்பதற்கு உறுதி செய்ய வேண்டும்.

அதுபோன்று, தமிழ் வளர்ச்சித் துறையில் நம்முடைய மகாபலிபுரம் சிற்பக் கல்லூரி மிகவும் பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு சிற்பக் கல்லூரி. அங்கு படித்தவர்கள், அங்கு பயின்றவர்கள்தான் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் சிலை வடிப்பில் முன்னோடியாக இருக்கிறார்கள். கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை செய்த சிற்பியைக்கூட நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அழைத்துப் பாராட்டி அந்த சிற்பியை கௌரவித்த வரலாற்றுப் பெருமை கொண்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். இப்போது அந்தக் கல்லூரியில் நான்கு ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். குழுவின் சார்பாக அக்கல்லூரியை ஆய்வு செய்தபோது, மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது, ஆசிரியர்களும் இல்லை, போதுமான அடிப்படை வசதிகளும் இல்லாமல், அக்கல்லூரி மூடப்படும் அபாயத்தில் இருப்பதாக அங்குள்ள மாணவர்கள் கதறிக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் வேண்டுகோளை வைக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சிற்பக் கல்லூரியை முழுமையான

ஆசிரியர்கள், பணியாளர்கள் கொண்ட கல்லூரியாக மாற்ற வேண்டும். அனைத்து மாணவர்களும் பயில்கின்ற, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நம்முடைய கலையை, பண்பாட்டை கடத்துகிற ஒரு நிகழ்வைத் தொடர வேண்மென்ற ஒரு வேண்டுகோளையும் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த சிற்பக் கல்லூரிக்கு இப்போது 22 பேராசிரியர்களை TRB–Teachers Recruitment Board மூலமாக நியமிக்க ஏற்கெனவே TRB–க்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அங்கு ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அங்கு எந்தவித அபாயகரமான சூழ்நிலையும் இல்லை. அஞ்சேல், அஞ்சேல், அஞ்சேல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி. அதேபோன்று 2021 ஆம் ஆண்டு 9–வது மாதம் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொண்டு வந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்தேன். எனது பண்ருட்டி தொகுதியில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான இடத்தை அறக்கட்டளை நபரிடத்திலே வாடகையாக பெற்ற ஒரு நபர், அங்கு சட்டத்திற்குப் புறம்பாக அரசு ஆவணங்களைத் திருத்தி, தன் பெயரில் பட்டா வைத்து, போட்டியாக ஒரு Bus Stand–பேருந்து நிலையம், மிதிவண்டி நிலையம், இருசக்கர வாகன நிறுத்துமிடம் போன்றவற்றை நடத்துகிறார். அதை அப்புறப்படுத்த வேண்டுமென்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும், அரசின் கோயில் நிலங்கள் மீட்கப்படும். அது மீண்டும் அரசுடைமை ஆக்கப்படும்' என்று அறிவித்தார். ஆனால், அந்தப் பணியை கீழ்மட்ட அதிகாரிகள் இன்னும் முறையாகச் செய்யவில்லை. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்

துறை அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் அந்தச் சொத்தை மீட்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடமானது வீர பத்திரப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான இடமாகும். அது பண்ருட்டி பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்திருக்கிறது. 1.80 ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கின்ற அந்த இடத்தை பூங்காவனம் என்ற பெயர் கொண்ட ஒருவர் ஆக்கிரமித்திருக்கிறார். முறையாக இந்து சமய அறநிலையத் துறை கொடைகள் சட்டம் பிரிவு 78-ஐ பயன்படுத்தி அவருக்கு* notice *அனுப்பப்பட்டு, இணை ஆணையர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது. இதுவரை அவர் 12 முறை நீதிமன்றத்தில் வாய்தா பெற்றிருக்கிறார். நாளையதினம், 21-4-2023 அன்று அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருகின்றது. வெகு விரைவில் அந்த இடத்தை இந்து சமய அறநிலையத் துறை, சட்டத்தின் துணைகொண்டு மீட்கும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இந்தக் கருத்தை தெரிவித்த பிறகு, அந்த மாவட்டத்தில் இருக்கின்ற சுமார் 6 திருக்கோயில்களில் 118 ஆக்கிரமிப்பாளர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு, பிரிவு 78-ன்கீழ்* notice *பயன்படுத்தப்பட்டு, அதுவும் விசாரணையில் உள்ளது. இந்த ஆட்சி அமைந்த பிறகு, 4,262 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை மீட்ட முதல்வர், நம்முடைய முதல்வர் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், நீங்கள் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்துவிடுகிறேன்.* (குறுக்கீடு) *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத் தொடரிலும், இரண்டு ஆண்டுக்காலமாகவும் வலியுறுத்தி பேசினேன். ஒரு*

பல்லை பிடுங்கினார் என்பதற்காக IPS அதிகாரி suspend செய்யப்பட்டிருக்கிறார். வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் கடந்த கால ஆட்சியில் ஒருவர் காவல் நிலைய மரணத்திற்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். அதுபோன்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்ந்து அதே காவல் நிலையங்களிலும், அதே மாவட்டத்தினுடைய காவல் நிலையங்களிலும் பணி செய்கிறார்கள். Lockup death, Custodial death மற்றும் நீதிமன்றக் காவல் போன்ற சம்பவங்களிலே குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்ற காவல் அதிகாரிகள் யாராக இருந்தாலும் உடனடியாக வேறு மாவட்டத்திற்குப் பணி மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன இந்த ஆய்வாளர்கள்மீது மாநில மனித உரிமை ஆணையமே criminal நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. உள் துறைச் செயலாளர் அவர்களிடம் நேரடியாகச் சென்று நான் மனு கொடுத்தும்கூட, அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். ஆகவே, தயவுசெய்து இதுபோன்று மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்ற காவல் அதிகாரிகள் யாராக இருந்தாலும் பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையில் இருக்கின்ற கடைக்கோடி காவலர் முதல் DGP வரை அவர்கள் கேட்கின்ற அனைத்துவிதமான சலுகைகளையும் வழங்குங்கள்; அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து கொடுங்கள். எல்லாவற்றையும் செய்துவிட்டு, மீண்டும், மீண்டும் குற்றச் சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்களை மிகக் கடுமையான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்கிற வேண்டுகோளையும் நான் இந்த நேரத்தில் முன்வைக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக காவல் துறையைக் கையாண்டு வருகிறார்கள். காவல் துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தக் கட்சிக்கும்,

எந்தச் சமூகத்திற்கும் ஆதரவாகச் செயல்படுபவர்கள் அல்ல. ஆனால், அங்கொன்றும், இங்கொன்றுமாக சில சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன. குறிப்பாக, எனது கட்சியின் சார்பாகக் கொடியேற்றுகின்ற நிகழ்ச்சி மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்துகின்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அனுமதி கேட்கிறபோது அனுமதி மறுக்கப்படுகிறது. நான்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரடியாகச் சந்தித்து, முறையிட்டேன். அதற்குப் பிறகும்கூட, அந்தக் காவல் கண்காணிப்பாளர்கள் அதற்கான அனுமதியைத் தர மறுக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், பெரிய கட்சிகள் பெரிய கம்பம் நடுகிறார்கள், கால் காணி, அரைக் காணி நிலத்தில் கட்டடம் கட்டி கொடியேற்றுகிறார்கள். நாங்கள் வளர்ந்து வருகின்ற கட்சி. எல்லாக் கட்சி கொடிக் கம்பங்களும் இருக்கின்ற இடத்தில் நாங்கள் கொடியேற்றப் போகின்றபோது, வேண்டுமென்றே என்னை மட்டும் அந்த இடத்தில் அனுமதிக்க மறுக்கின்ற காவல் அதிகாரிகள்மீது நான் சொல்கின்ற குற்றச்சாட்டுகளை விசாரித்து, உண்மை இருந்தால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து, மூன்றாம் ஆண்டில் இன்று காவல் துறை மானியக் கோரிக்கைக்கான பதிலறிக்கையைத் தாக்கல் செய்யவிருக்கிறார்கள். நிச்சயமாக நான் சொன்ன காவலர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளையும், பதவி உயர்வுகளையும் கருத்தில்கொண்டு, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்கு முன்வருவார்கள் என்கிற நம்பிக்கையோடு, எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளின் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைமீது நான் பேசுவதற்கு முன்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிப்காட் அமைப்பதற்கு நிலம் எடுப்பதற்கு*

எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் 100 நாட்களுக்கும் மேலாக காத்திருப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒசூரை அடுத்த நாகமங்கலம், உத்தனப்பள்ளி, அயர்னப்பள்ளி ஆகிய மூன்று ஊராட்சிகளில் சுமார் 3,666 ஏக்கர் விவசாய நிலங்களை சிப்காட் அமைப்பதற்காக கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, 105 நாட்களாக விவசாயிகள் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கண்ணை இமை காப்பதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளைப் பாதுகாத்து வருகிறார்கள். ஏற்கெனவே, ஒன்றிய அரசு பாதுகாக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களில் நிலக்கரி வெட்டி எடுக்க அனுமதி வழங்கியபோது, இதே மன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்து, டெல்டா மாவட்ட விவசாயிகளைப் பாதுகாத்ததைப்போல, ஓசூர் பகுதியில் போராடி வருகின்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் வளமும் வளர்ச்சியும் சட்டம்-ஒழுங்கு நிலைநாட்டப்படுவதைப் பொறுத்தே அமைகிறது. இன்றைக்கு தெற்காசியாவிலேயே தொழில் தொடங்க சிறந்த மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது என்றால், உலகளாவிய முதலீட்டாளர்கள் இன்றைக்கு தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள் என்றால், தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை சிறப்பான முறையில் வழிநடத்தி வருகிறார்கள் என்பதுதான் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஒருசில உதாரணங்களைக்கூட இந்த அவையில் நான் சொல்ல விரும்புகிறேன்.

அம்மா உணவகத்தில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையை சேதப்படுத்தியவரை தன்னுடைய கட்சிக்காரர் என்றுகூட பார்க்காமல், அவர்மீது வழக்குத் தொடர்ந்தது; அதேபோன்று சமீபத்தில் விருத்தாசலத்தில் ஒரு நகர்மன்ற உறுப்பினர், பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியவுடனே அவரை POCSO சட்டத்தின்கீழ் கைது செய்து, கட்சியின் அடிப்படை உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கியது; இவ்வாறு செய்பவர்கள் எதிர்க்கட்சியா, ஆளுங்கட்சியா என்று பார்க்காமல்

நடவடிக்கை எடுப்பது போன்ற செயல்களால் சட்டத்தின் ஆட்சி இன்று தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையில் இன்று அத்துமீறல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதை உறுதியாகத் தடுக்கும் வகையில் மாநில அளவில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையிலும், மாவட்ட அளவில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி அவர்கள் தலைமையிலும் Police Complaints Authority என்ற ஓர் அமைப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் சட்டத் துறை, CrPC–குற்றவியல் நடைமுறைச் சட்டத்தைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக, Sec. 439–பிணையில்லா பிரிவைத் திருத்தி, ஒன்றிய அரசின் UAPA Act–ல் ஒடுக்கும் முறை பிரிவுகளைச் சேர்க்கும் முயற்சியில் சட்டத் துறைமூலம் ஈடுபட்டு வருகிறது. இதனை எச்சரிக்கையோடு நாம் தடுக்க வேண்டும். எதிர்க்கட்சிகளை பழிவாங்க இந்தச் சட்டம் சாதகமாக அமைந்துவிடும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

அதேபோல, வேங்கைவயல் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகளைக் கலந்தவர்களை காவல் துறை இதுவரை கைது செய்யவில்லை. ஆகவே, இந்த வழக்கை CBCID–க்கு மாற்றி, அதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். அதேபோல, விசாரணைக் கைதிகளை காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்து விசாரிக்கும்போது, உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற அனைத்து காவல் நிலையங்களுக்கும் அறிவுறுத்த வேண்டும். குற்றவாளிகளைக் கையாளும்போது காவல் துறையினருக்கு sensitivity training– உணர்திறன் பயிற்சி வழங்க வேண்டும். அப்பொழுதுதான் காவல் நிலைய லாக்கப் மரணங்களைத் தடுக்க முடியும். வருங்காலத்தில் தமிழகம், lockup மரணங்கள் நடைபெறாத மாநிலமாக மாற்றப்பட வேண்டும். குற்ற தடயங்களைக் கண்டறிய CCTV camera–க்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அனைத்து காவல் நிலையங்களிலும் CCTV camera–க்கள் பொருத்தப்பட வேண்டும். அதேபோல காவல்

துறையின் சார்பில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி காவல் நிலையங்களில் ஏற்கெனவே பொருத்தப்பட்டுள்ள CCTV camera-க்கள் சரியாக பழுதுபார்க்கப்படவில்லை. அவை பழுதுபார்க்கப்படுவதற்கான நிதியை ஆண்டுதோறும் ஒதுக்க வேண்டும். அதைப்போல அந்த CCTV camera-க்கள் சரியாக பயன்பாட்டில் உள்ளனவா என்பது உயர் காவல் அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும்.

அதேபோல, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில், தற்போது தமிழகத்தில் 12 POCSO நீதிமன்றங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விரைந்து முடிக்கவும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிக்கும் வகையிலும் அனைத்து மாவட்டங்களிலும் POCSO நீதிமன்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதி மறுப்பு திருமணம் செய்துகொள்பவர்கள் தனது தந்தையாலோ அல்லது உறவினர்களாலோ படுகொலை செய்யப்படுகின்றனர். பகுத்தறிவு கருத்துகளுக்கு எதிரான ஜாதி, மத வெறுப்பு அரசியல் பரப்புரைதான் இதற்குக் காரணம். ஆகவே, ஆணவப் படுகொலைகளை இரும்புக்கரம் கொண்டு நமது அரசு தடுக்க வேண்டும். நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனி சட்டம் இயற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 20 நாட்களில் 2 ஆணவப் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் online rummy தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து, பொருட்களையும், பணத்தையும் இழந்து தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்து, பல உயிர்களைப் பாதுகாத்து இருப்பது வரவேற்கக்கூடிய நல்ல அம்சம்.

தமிழகத்தில் லாட்டரி முழுமையாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு அண்டை மாநில எல்லையோர மாவட்டங்களில் single-digit lottery புழக்கத்தில்

இருக்கிறது. இதனால் உழைக்கும் மக்கள் பெரும் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, அதைத் தடுக்கும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிறுவன மோசடிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நிதி நிறுவனங்கள் புற்றீசல்போல தோன்றி சாமானிய மக்களிடத்தில் மோசடி செய்து வருகின்றன. குறிப்பாக ஆருத்ரா நிதி நிறுவனம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சாமானிய மக்களிடமிருந்து deposit பெற்று, சுமார் 15,000 கோடி ரூபாய் அளவிற்கு மோசடி செய்திருக்கிறது. இதில் அரசியல் பின்புலம் வாய்ந்த பல நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இதுவரை இந்த வழக்கு துரிதமாக நடைபெறவில்லை. ஆகவே, அந்த ஆருத்ரா நிறுவன வழக்கில் சம்பந்தப்பட்ட அரசியல் பிரமுகர்கள் யாராக இருந்தாலும் உடனடியாகக் கைது நடவடிக்கை மேற்கொண்டு, நிறுவனத்தின் சொத்துகளைப் பறிமுதல் செய்து அந்த டெபாசிட்தாரர்களுக்கு வழங்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாடு முழுவதும் சிறை தண்டனை பெற்றவர்கள் கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். 37 முஸ்லிம் சிறைவாசிகள் உட்பட அனைவரையும் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவினையொட்டி விடுதலை செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கல்பாக்கம் அணு உலைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்துல் சமது மற்றும் ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் திரு. மல்லை சத்யா போன்றவர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்குகளை இன்னும் வாபஸ் பெறவில்லை; அவற்றையும் வாபஸ் பெறவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, ஒன்றிய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்ட திருத்தங்களைக் கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பல்வேறு டிராக்டர் போராட்டங்களை நடத்தியது. பல்வேறு மாவட்டங்களில் அந்த வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. அந்த வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டும்.

அதுபோல, FIR *இருந்தால்* passport *வழங்க மறுக்கப்படுகிறது. அது எளிமையாக்கப்பட வேண்டும். இதனால் பல்வேறு இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் வெளிநாடு செல்ல முடியாமல், தங்களது படிப்பைத் தொடர முடியாமல், வெளிநாட்டில் வேலை செய்ய முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே, அதை எளிமைப்படுத்த வேண்டும். அதேபோல பெண்கள், குழந்தைகள்* passport enquiry*-க்காக காவல் நிலையம் அழைக்கப்படுகிறார்கள். அவ்வாறில்லாமல் வீட்டிற்கே சென்று, காவலர்கள் அதற்கான விவரங்களைப் பெறும்வகையில் அதை எளிமைப்படுத்த வேண்டும்.*

பிற்பகல் 1–35

அதேபோல, கிராமப்புறங்களில் திருவிழாக்களில் நையாண்டி, கரகாட்டம், orchestra *போன்ற மெல்லிசைப் பாடல்கள் காலங்காலமாக நடந்து வந்தன. ஆனால், இன்றைக்கு காவல் துறையினர் அதற்கு அனுமதி வழங்க மறுக்கிறார்கள். ஆகவே, காவல் துறையின் கட்டுப்பாட்டோடு, நிபந்தனைகளுடன் அந்த நிகழ்ச்சி நடக்க அரசு. . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *அதேபோன்று, காவலர்களுக்கு எரிபொருள் மானியத்தை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். கடந்த 2011-ல் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தேர்வு செய்யப்பட்ட உதவி காவல் ஆய்வாளர்களுக்கு, ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க வேண்டும். 2008-ல்* Inspector*-கள் ஆக நியமிக்கப்பட்டவர்களுக்கு* DSP *பதவி உயர்வு வழங்க வேண்டும்.* ADSP *ஆக பணியாற்றிவரும் 15 பேருக்கு* SP*-யாக பதவி உயர்வு வழங்க வேண்டும். மேலும், காவலர்களுக்கு 8 மணி நேர வேலை, வாரம் ஒரு நாள் விடுமுறை, கேரளாவில் உள்ளதுபோல் காவலர்கள் சங்கம் அமைக்க அனுமதி, ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி உயர்வு வழங்க வேண்டும். காவல் துறையில் உள்ள ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும். தற்போது காவலர்களுக்கு வழங்கப்படும் இடர் படியை 5,000/– ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.*

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தாங்கள் பதிவு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

தளி தொகுதி, மதகொண்டபள்ளியை மையமாகக் கொண்டு புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட அஞ்செட்டி வட்டத்தில் அஞ்செட்டியை மையமாகக் கொண்டு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி, பேல்பட்டி முதல் பிலிக்கல் வரை தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

அஞ்செட்டி அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டார மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும்.

தளி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலூர் முதல் தொளுவுபெட்டா வரை மலை கிராமத்திற்கு தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

பெட்டமுகிலாளம் ஊராட்சி, மேலூர் முதல் குல்லட்டி வரை மலை கிராமத்திற்கு தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

அனுமந்தபுரம் ஊராட்சி, கூச்சுவாடி முதல் குடியூர் வரை தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

தேன்கனிக்கோட்டையில் இருந்து கொடக்கரை மலை கிராமத்திற்கு சிற்றுந்து இயக்க வேண்டும்.

தளி ஊராட்சி ஒன்றியம், ஆச்சுபாலம் ஊராட்சி முதல் குருசாத்தப்பன்தொட்டி வரை தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும்.

தென்பெண்ணை ஆற்றின் உபரி நீரை தொரப்பள்ளியில் இருந்து lift irrigation மூலமாக கார்காண்டப்பள்ளி ஏரி, பைரமங்கலம் ஏரி, கெலமங்கலம் ஏரி, லட்சுமிபுரம் நாகமங்கலம் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட ஏரிகளில் நிரப்புவதன்மூலம் சுமார் 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆகவே, நீர்வளத் துறை மூலமாக இந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டும்.

தளி தொகுதியில், வன விலங்குகளிடமிருந்து விளை நிலங்களைப் பாதுகாக்கும் வகையில் வனப் பகுதியை ஒட்டி சோலார் மின்வேலி அமைக்க வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள் இங்கே உரையாற்றுகிறபோது நிதி நிறுவனங்கள் செய்து கொண்டிருக்கக்கூடிய முறைகேடுகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, Aarudhra Gold Trading Private Limited என்ற நிதி நிறுவனம், கடந்த அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வைப்பீடுகளுக்கு 25 முதல் 30 விழுக்காடு மாத வட்டி என கவர்ச்சிகரமான ஓர் அறிவிப்பை வெளியிட்டு, செப்டம்பர் 2020 முதல் சுமார் 1 இலட்சம் முதலீட்டாளர்களுக்கு சுமார் 2,348 கோடி ரூபாய் முதலீடு மற்றும் வட்டியைத் திருப்பித் தராமல் ஏமாற்றியுள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

நமது கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், அந்தப் புகார்களின்மீது பொருளாதாரக் குற்றப் பிரிவு வழக்குப் பதிவு செய்து, 22 பேர் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டு, அவர்களில் இயக்குநர்கள், Agent உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளிநாட்டிற்கு தப்பிச் சென்ற Managing Director ராஜசேகர் மற்றும் உஷா ராஜசேகர் ஆகியோரைக் கைது செய்ய "Red Corner Notice" வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட எதிரிகள்மீது Look out circular வழங்கப்பட்டுள்ளது. ரொக்கம், வங்கிக் கணக்குகளில் இருந்த பணம் சுமார் 96 கோடி ரூபாய், 93 அசையாச் சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இதேபோல் Hijau, Lns IFS, Elfin E-com, CVRS Chits, Rahat Travels உள்ளிட்ட நிதி நிறுவனங்களும் மோசடியில் ஈடுபட்டுள்ளதால், அந்த நிறுவனங்கள் மீதும் கடும் நடவடிக்கையை இந்த ஆட்சி எடுத்திருக்கிறது. குற்றவாளிகளைக் கைது செய்து, அவர்களுடைய சொத்துகள் முடக்கம், வங்கிக் கணக்குகள் முடக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முதலீட்டாளர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

இவற்றில் Hijau, Lns IFS, Elfin E-com, Rahat Travels *ஆகிய நிதி நிறுவனங்கள் எப்போது தொடங்கப்பட்டன என்றால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நிதி மோசடிகளில் ஈடுபட்ட நிறுவனங்களானாலும், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக,* Lns IFS *நிதி நிறுவன மோசடி விவகாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. இதுபோன்ற நிறுவனங்களில் முதலீடு செய்யக்கூடிய பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மக்களிடம் ஆசையைத் தூண்டி, இதுபோன்ற நிறுவனங்கள் தற்போது பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இத்தகைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் கண்காணிக்குமாறு காவல் துறைக்கு நான் கடுமையாக உத்தரவிட்டிருக்கிறேன்.*

இத்தகைய நிறுவனங்களின் மோசடியைத் தடுக்க முதன்முதலில் சட்டம் கொண்டு வரப்பட்டது எப்போது என்றால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, இந்த விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் வாயிலாக மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தகைய கருத்துகளை முன்வைக்கிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கவனிப்பதற்கு வருகை தந்திருக்கிற மரியாதைக்குரிய* DGP *அவர்களே உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேங்கைவயல் பிரச்சினை இன்றைக்கு தமிழ்நாட்டில் பேசப்படக்கூடிய பிரச்சினையாக இருக்கிறது. அந்தச் சம்பவம் நடந்த உடனேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் எடுத்த வேகமான நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) *உடனடியாக* CBCID *குழுவை அமைத்து அந்த விசாரணையை நடத்திய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், குற்றவாளிகள் இதுவரை அடையாளம் காணப்படாமல் இருப்பது ஒரு பேசப்படக்கூடிய பொருளாக தமிழகத்தில் மாறியிருக்கிறது. ஆகவே, உடனடியாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.* Lockup *மரணங்களைத் தடுப்பதற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.வி.பி.நாகைமாலி அவர்கள் வேங்கைவயல் பிரச்சினையைப்பற்றி குறிப்பிட்டுச் சொன்னார். ஏற்கெனவே இந்த அவையிலே கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து, அதற்கு நான் விளக்கம் தந்திருக்கிறேன். ஆனால், அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள், அதில் இருக்கக்கூடிய முன்னேற்றங்களைப்பற்றி அவர் இங்கே கேட்ட காரணத்தால், இந்த அவையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.*

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் காவல் நிலைய சரகம், இறையூர் வேங்கைவயல் கிராமத்தில் கடந்த 24–12–2022 மற்றும் 25–12–2022 ஆகிய தினங்களில் 4 குழந்தைகள் உள்பட 5 நபர்களுக்கு வாந்தி மற்றும் காய்ச்சல் ஏற்பட்டு புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். 4 பேர் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்ற நிலையில், கோபிகா ஸ்ரீ என்ற குழந்தை மட்டும் தொடர்ந்து சிகிச்சை பெற்றது. மருத்துவர் பரிசோதனையில் மாசடைந்த குடிநீரை பருகியதால் உடல்நலக் குறைவு என்று தெரிய வந்தது. அதற்குப் பிறகு, அந்தக் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை வருவாய்த் துறையினர் ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்போது அந்தத் தண்ணீர் துர்நாற்றம் வீசியதுடன், தொட்டியில் மனிதக் கழிவு கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அந்தத் தொட்டியிலிருந்த நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு மூன்று முறை சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட கோபிகாஸ்ரீயின் தந்தை கனகராஜ் 26-12-2022 அன்று கொடுத்த புகாரின் அடிப்படையில் வெள்ளனூர் காவல் நிலையத்தில் அடையாளம் தெரியாத நபர்கள்மீது வன்கொடுமை சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரிக்க கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு “சிறப்பு விசாரணைக் குழு” அமைக்கப்பட்டது. இக்குழுவினர் குடிநீர் மாதிரிகளை சேகரித்து, சென்னை தடய அறிவியல் சோதனை மையத்திற்கு நீதிமன்றம் வாயிலாக அனுப்பி வைத்தார்கள்.

27-12-2022 அன்று மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் அந்தக் கிராமத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். அப்போது, “கிராமத்தில் உள்ள அய்யனார் கோயிலில் தங்களை வழிபட அனுமதிக்கவில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட தேநீர்க் கடையில் இரட்டைக் குவளை முறை கடைப்பிடிக்கப்படுவதாகவும்” மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் உடனே குளத்தூர் வட்டாட்சியர் அளித்த புகாரின் பேரில், அக்கிராமத்தில் தேநீர் கடை நடத்தி வரக்கூடிய மூக்கையா மற்றும் அவரது மனைவி மீனாட்சிமீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, மூக்கையா அன்றையதினமே கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அன்றையதினமே ஆதி திராவிடர்கள் அய்யனார் கோயிலில் வழிபட அனுமதிக்கப்பட்டனர். அப்போது சிங்கம்மாள் என்பவர், ஆதி திராவிடர்கள் சாதிப் பெயரைச் சொல்லி அவதூறாகப் பேசியதால், வட்டாட்சியர் அளித்த புகாரின் அடிப்படையில், சிங்கம்மாள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

28-12-2022 அன்று இலுப்பூர் கோட்டாட்சியர் தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தை மூலமாக “மேல்நிலை நீர்த் தொட்டியை அசுத்தம் செய்தவர்கள்மீது விரைவில் நடவடிக்கை; இரட்டைக் குவளை முறையை ஒழிப்பது; அடுத்து, அய்யனார் கோயிலில் அனைத்து சமூக மக்களுக்கு சாதி வேறுபாடின்றி வழிபடுவது” ஆகிய முடிவுகள் அந்தக் கூட்டத்தில் முடிவாக எடுக்கப்பட்டன.

அந்தக் கிராமத்தில் சட்டம்-ஒழுங்கு நிலையைப் பராமரிக்க சுழற்சி முறையில் தொடர்ந்து காவல் துறையினர் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர். மருத்துவத் துறையினரும் மருத்துவ முகாம் நடத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–45

சமூக நல்லிணக்கத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் 29–12–2022 அன்று அனைத்து சமூகத்தினரும் பங்கேற்ற அமைதி ஊர்வலம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. இவ்வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்த, இந்த வழக்கு மாநில குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு (சிபிசிஐடி) 14–1–2023 அன்று மாற்றப்பட்டது. இந்நிலையில்தான், இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரி நெடுவாசல் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த திருமுருகன் என்பவர் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில், ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் சத்திய நாராயணன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்து, விசாரணை அறிக்கையை 2 மாதங்களுக்குள் அளிக்க மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

வேங்கைவயல் விவகாரத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, அந்தக் கிராமத்தில் தீண்டாமையை ஒழிக்க, அனைத்துத் தரப்பு மக்களிடையே அமைதியை நிலைநாட்ட, இந்த அரசு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த வகையில், இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு ஓய்வுபெற்ற நீதியரசர் அவர்களின் ஒரு நபர் விசாரணை ஆணையத்திற்கு இந்த அரசு அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு ஓர் அரசாணையையும் வெளியிட்டிருக்கிறது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விரிவான, தெளிவான விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.* Lockup *மரணங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.* Lockup *மரணங்களே இல்லாத தமிழகத்தை உருவாக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.*

காவல் துறையினர் பணிச் சுமையின் காரணமாக சில நேரங்களில் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு மனப் பயிற்சி அளித்தல், பணி நேரத்தை முறைப்படுத்துதல், பணி

மாறுதல், விடுமுறை அளித்தல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்திட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். காவலர்கள் சங்கம் வைக்க வேண்டும் என்கின்ற உரிமை கோரி, நீண்ட காலமாக அந்தக் கோரிக்கை காவலர்கள் மத்தியில் இருக்கிறது. ஆகவே, நம்முடைய தமிழக அரசு முன்னுதாரணமாக இருந்து காவலர்களுக்கு சங்கம் அமைக்கிற உரிமையை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் கட்சிகள், ஜனநாயக இயக்கங்கள் மக்களின் நியாயமான, ஜனநாயகரீதியான போராட்டங்களை நடத்துகிறபோது, சில நேரங்களில், சில காவல் நிலையங்கள், அனுமதி மறுப்பதும் அல்லது மக்களே கூடாத இடத்தைக் கைகாட்டி அங்கே போய் கூட்டத்தை நடத்துங்கள் என்று சொல்வதும் சில இடங்களில், சில நேரங்களில் நடைபெறுகிறது. எல்லா இடங்களிலும் நடக்கிறது என்று நான் சொல்லவில்லை; பல இடங்களில் நடக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டும் என்று அன்போடு நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றங்கள், சமூக விரோத செயல்களைத் தடுப்பதற்கு, வளர்ந்து வரும் முக்கியமான நகரங்களில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. இதனை மேலும் கூடுதலாக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கு கறாரான சட்டங்களை அமல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையில் ஏராளமான காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்பிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 2012 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் பள்ளிக் கல்வித் துறைக்கும், காவல் துறைக்கும் தூய்மைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். பள்ளிக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்தவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், காவல் துறையில் பணியில் சேர்ந்த 558 தூய்மைப் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை; குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. எனவே, அந்த 558 தூய்மைப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்கிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் பணியாணை வழங்கப்பட்டு, சிலர்மீது கிரிமினல் குற்றம் இருக்கிறது என்று சொல்லி, அவர்கள் பணியில் சேர முடியாமல் இருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றம் அவர்களை விடுவித்துவிட்டது. அதற்கான அத்தாட்சியையெல்லாம் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பணி வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

என்னுடைய தொகுதியான வேளாங்கண்ணியில் ஏற்கெனவே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. வேளாங்கண்ணி தற்போது வளர்ந்து வரக்கூடிய பெருநகரமாக மாறியிருக்கிறது. ஏனென்று சொன்னால், நாடு முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து செல்கிறார்கள். இன்னொரு காவல் நிலையம் வேண்டுமென்று எங்கள் மாவட்டத்தினுடைய SP அவர்கள் கருத்துரு ஒன்றை அனுப்பியிருக்கிறார். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதனைப் பரிசீலித்து இன்னொரு காவல் நிலையத்தை அங்கே அமைப்பதற்கு ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி என்னுடைய கீழ்வேளூரிலே ஒரு தீயணைப்பு நிலையம் கட்டுவதற்கான கருத்துருவும் வந்திருக்கிறது. அதையும் விரைந்து கட்டித் தர ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்களுடைய தொகுதியான கந்தர்வக்கோட்டைக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்கள் மக்களின் நண்பன் என்பதை உறுதி செய்யும்படி, காவலர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் காவல் துறையில் ஒரு பெரிய முன்னேற்றத்தை, ஒரு திருப்புமுனையை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி செய்வதை நாங்கள் அறிவோம். அது தொடர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, இந்தக் காவல் துறை மானியத்தில் பேசுவதற்கான வாய்ப்பினைத் தந்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய

சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவரோடு சேர்த்து இன்னும் 5 பேர் பேச வேண்டும். ஆகவே, பேசுபவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் தங்களுடைய பேச்சினை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசுகிற இந்த வாய்ப்பை அளித்த தங்களுக்கும் மாண்பமை முதல்வர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியை பதிவு செய்கிறேன். தமிழகத்தை கண்டிப்புடனும், கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும், கம்பீரமாகவும் வழி நடத்திக் கொண்டிருக்கிற, இந்தக் காவல் துறை உட்பட்ட துறைகளை கவனமாக வழி நடத்திக் கொண்டிருக்கிற மாண்பமை முதல்வர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகளின் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மானியக் கோரிக்கையின் மைய அம்சங்களுக்குள் நான் செல்வதற்கு முன்பாக, பல்வேறு காவலர்கள் எங்களிடத்தில் தந்த சில கோரிக்கைகளை ஏற்கெனவே தோழர்களும் பதிவு செய்திருக்கிறார்கள். அதில் சில கோரிக்கைகளை நானும் மறு பதிவு செய்ய விரும்புகிறேன்.

காவல் துறையில் Grade II என்கிற அளவிலே காவலர்கள் உள்ளே வருகிறார்கள். அதே அளவில் OA ஆக clerical posting-ல் உள்ளே வருகிறார்கள். இந்த இரண்டு பேரும் 20 ஆண்டுகளுக்குப் பிறகு, OA ஆக இருப்பவர் Office Superintendent என்கிற அளவிற்கு அவரால் செல்ல முடிகிறது. ஆனால் Grade II Police ஆக இருக்கிற காவலர் ஒரு SSI என்கிற பதவி உயர்வைப் பெற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருப்பதை பார்த்து வியப்பாக இருக்கிறது. அவற்றை கருணையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

TRUTH ALONE TRIUMPHS

அதேமாதிரி SSI முடித்தவர்கள் 10 ஆண்டுகளுக்குப் பிறகாவது தங்களுக்கு ஒரு Inspector பதவி உயர்வு வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையையும் கருணையோடு பரிசீலிக்க வேண்டும். காவலர்களுக்கு மாதாந்திர மருத்துவப் படி 300 ரூபாய் என்றிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அதனை 1,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். இரண்டாவதாக, பெட்ரோல் படி என்று ஒன்றிருக்கிறது. அதற்கு 370 ரூபாய் தருகிறார்கள். அவ்வாறு ரூபாயை இலக்காக வைக்காமல் பெட்ரோலை ஓர் இலக்காக, உதாரணத்திற்கு 10 லிட்டர் பெட்ரோலுக்கான அளவை இலக்காக வைக்க வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு முறையும் பெட்ரோலினுடைய cost vary ஆகிக்கொண்டேயிருக்கிறது. அதன் அடிப்படையில் 10 லிட்டர், 15 லிட்டர் பெட்ரோல் என்று நம்முடைய நிதிநிலைக்கேற்ப 15 லிட்டர் பெட்ரோலுக்கான தொகையை பெட்ரோல் படியாக வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மகளிர் காவலருக்கான மாதவிடாய் காலத்தில், அவர்களுக்கு சம்பளத்துடன்கூடிய விடுமுறையை கருணையோடு, இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பல தோழர்களும் இங்கே சொன்னார்கள். குடும்பத்தோடு 6 மாதத்திற்கு ஒரு முறையேனும் சுற்றுலா செல்வது என்பது காவல் துறை அதிகாரிகளுக்கு ஓர் அவசியமான தேவையாக இருக்கிறது. அது அவர்களுடைய மன அழுத்தத்தை தணிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, அதற்கான வாய்ப்பை வழங்குவதோடு, பணிச்சுமை காரணமாக அவர்களை விடுவிக்க முடியாத நிலை இருக்கிறது. அதற்கான system இருக்கலாம். ஆனால், பணிச்சுமை காரணமாக அவர்களை விடுவிக்க முடியாத நிலை இருக்கிறது. அந்தப் பணிச்சுமையை சரி செய்யக்கூடிய வகையில் எவ்வளவு காலியிடங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு காலியிடங்களுக்கும் நாம் உரிய பணி நியமனங்களைச் செய்திட வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் எங்கள் பகுதியில் சில ரேஷன் கடைகளில் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு அவர்களுக்கான ஒதுக்கீடு என்பது வழங்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் என்று நான்

சொல்லவில்லை. என்னுடைய கவனத்திற்கு வந்த எங்கள் மாவட்டத்திலுள்ள ஒரு சில இடங்களில், அவர்களுக்கான ஒதுக்கீட்டில் palm oil, *கோதுமை, உளுந்து போன்ற பொருட்கள் தட்டுப்பாடாக இருக்கின்றன என்கிற ஒரு கோரிக்கையைச் சொன்னார்கள். அதைக் கருணையோடு சரி செய்துவிடுவீர்கள் என்று நான் நம்புகிறேன். அதோடு, அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்தபோது எனக்கும் ஒன்று தோன்றியது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சிறு தானியங்கள் தொடர்பாக ஏராளமான கருத்துகளை சொல்லி வருகிறார்கள். நீரிழிவு நோயிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காக* special quota *ஆக சிறு தானிய உணவையும், பனை வெல்லத்தையும் கூடுதலாக அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–55

அதைப்போலவே, நுண்ணறிவுப் பிரிவில் வேலை செய்பவர்களுக்கு 10 விழுக்காடு கூடுதலான சம்பளம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அது நியாயமாகப்படுகிறது. நிதிநிலைமைக்கேற்ப அவர்களது கோரிக்கையை பரிசீலிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ற வகையில் அமைச்சுப் பணிகளுக்கான காலிப் பணியிடங்களை உருவாக்கி, பணி நியமனமும் செய்யப்பட வேண்டும். காவலர் குடியிருப்புகளில் அமைச்சுப் பணியாளர்களுக்கும் உரிய ஒதுக்கீடு வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் அவர்கள் முன் வைத்திருக்கிறார்கள்.

அதைப்போலவே, நான் இந்த மானியக் கோரிக்கையில் பேசுகிறேன் என்பதால், ஓய்வு பெற்ற காவலர்கள் குறித்து நான் பலரிடமும் விசாரித்தேன். அவர்கள், தங்களுக்கான கோரிக்கையை அடையாளம் காணவே முடியவில்லை. அண்மையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, மரியாதைக்குரிய முனைவர் திரு. சைலேந்திர பாபு அவர்கள் காவல் துறையில் தலைமைப் பொறுப்பேற்ற பிறகு, ஓய்வு பெற்ற காவலர்கள் எந்த இடத்தில் மரணமடைந்தாலுங்கூட அந்த காவல் நிலைய எல்லைக்குள் சென்று அவர்களை மதித்து, அங்கீகரித்து உரிய சிறப்பை, உரிய மரியாதையை உடல் அடக்கத்தின்போதே செய்ய

வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல IAS அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த IAS அதிகாரிகளிடம் இருக்கின்ற அனுபவ அறிவை என் போன்றவர்கள் ஒரு படிப்பின் மூலமாகத்தான் பெற முடியும். ஆனால், காவல் துறை அதிகாரிகளிடம் இருக்கின்ற அந்த அனுபவ அறிவை வேறு யாரும் பெறவே முடியாது. போட்டி போடக்கூட முடியாது. அவர்களுக்கான சிறப்பான அனுபவ அறிவு இருக்கிறது. ஆகவே, ஓய்வுபெற்ற பிறகு, அந்த அனுபவ அறிவைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். கீழ்நிலையில் பார்த்தீர்களென்றால், ATM-ல் அவர்களை காவலர்களாக பணியமர்த்தலாம். Temple protection force-ல் அவர்களை பயன்படுத்தலாம் என்பதையெல்லாம் தாண்டி, மரியாதைக்குரிய திரு. சைலேந்திர பாபு போன்றவர்கள், ஓய்வு பெற்ற பிறகு அவர்களுக்கெல்லாம் பெரிய கல்லூரியினுடைய சிறப்பு Guest lecturers போன்ற பொறுப்புகளை தந்து, அவர்களது அனுபவ அறிவை இளைய தலைமுறைக்குக் கடத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் காவலர்கள் தங்களுடைய குறைகளையெல்லாம் சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு ஒரு மகளிர் காவல் அதிகாரி இருந்தால்-நம்முடைய கட்சிகளெல்லாம் District level-ல் ஒன்று, இரண்டு women-க்கு posting கொடுப்பார்கள். அந்த மாதிரி இருந்தால், ஒருவேளை அவர்களுடைய பிரச்சினையை குறிப்பான முறையிலே சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்கின்ற இவர்களின் கோரிக்கையை முன் வைக்கிறேன்.

அதைப்போலவே, சிறு குற்றங்களில் ஈடுபட்ட, தேர்வு நிலையிலே தேர்ச்சியடைந்த இரண்டாம்நிலை காவலர் பொறுப்பிலே இருப்பவர்கள் காத்துக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு கருணையோடு அரசு பணி வழங்க வேண்டும்.

போக்குவரத்துக் காவலர்களைப் பொறுத்தவரையில், கொரோனா பேரிடர் காலமாக இருக்கின்ற காரணத்தினால், பேரிடர் கால சூழலைக் கருத்தில்கொண்டு, அவர்களது உடல் நலனில் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்கின்ற

கோரிக்கைகளை முன் வைத்து, காவல் துறையினுடைய கோரிக்கைகள், கொள்கை சார்ந்த மையப் புள்ளிக்கு நான் வர விரும்புகிறேன்.

நீங்கள் பாராட்ட வேண்டாம் என்று சொல்கிறீர்கள், நேரமும் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறீர்கள். நேற்று, சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்ப ஓய்வூதியத்தை ரூ.30,000/– என்று கூடுதலாக்கியதற்கு, அதை எல்லோரும் பாராட்டினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு அல்ல, ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கான குடும்ப ஓய்வூதியத்தைத்தான் கூடுதலாக்கினீர்கள். அப்போது அவை முன்னவர் எழுந்து அவரளவில் அதைப் பாராட்டுகின்றபோது நான் அதைக் கவனித்தேன். பக்கத்தில் முதல்வர் அவர்கள், 'ஓரளவிற்குத்தான்' என்று அவரே சொன்னார். இன்னும் நாம் செய்ய வேண்டுமென்கின்ற தாகம் உள்ளதென்பது ஒரு பெரிய விஷயம். இருந்தாலும், நான் சில விஷயங்களை உங்களுடைய அனுமதியோடு இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, வட இந்தியத் தொழிலாளர்கள்மீது நடைபெற்ற அந்தத் தாக்குதல், அது தொடர்பான விஷயங்களெல்லாம் ஏதோ நடந்துவிட்டது என்பதல்ல. ஒரு திட்டமிடப்பட்ட அரசியல் உள்நோக்கத்தோடு அவை நடைபெற்றன என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மிக வலுவாக, ஆகச் சிறந்த ஆளுமையுடன் நம்முடைய தமிழக காவல் துறை எதிர்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே யாரெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், பா.ஜ.க.–வைச் சார்ந்த அந்த மாநிலத்தைச் சார்ந்த ஊடக YouTubers உட்பட சிலர் அதில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, எதிர்வரும் காலம் என்பது ஒரு virtual war–க்கான காலமாக இருக்குமோ என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அடிப்படையிலே Artificial Intelligence–ஐப் பயன்படுத்தி, நீங்கள் பேசுவதுபோலவே வேறு ஒருவருடைய குரலை வைத்து, உங்களுடைய முகத்தை வைத்து பேச வைக்க முடியும் என்கின்ற

அபாயம் இருக்கிறது. இப்படிப்பட்ட Artificial Intelligence-ஐ பயன்படுத்திக் கொண்டு எதிர்வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நமக்கு எதிரான வேலைகளைச் செய்வதற்கு சனாதன சங்பரிவார் கும்பல் ஒருவேளை ஆயத்தமாக இருக்குமோ என்கின்ற அச்சம் இருக்கிறது.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ம. சிந்தனை செல்வன்: ஆகவே, அதிலே உரிய கவனத்தைச் செலுத்த வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொடர்பாக தமிழ்நாடு ஓர் உரிய கொள்கையை உருவாக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். கணினி எவ்வாறு வளர்ச்சியடைந்து எளிய மக்களுக்கு அது பாதுகாப்பாக இருக்கிறதோ. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு உங்களுடைய நேரமும் அவ்வளவுதான். முடிந்துவிட்டது. (குறுக்கீடு)

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நன்றி. கணினி வளர்ச்சி எவ்வாறு வளர்ந்திருக்கிறதோ அதைப்போல கணினி தொடர்பான குற்றங்களும் பெருகியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே சொன்னார்கள். நானும் அதை வழிமொழிகிறேன். ஆகவே, கணினி தொடர்பாக இப்போது மாவட்ட அளவில் ஒரு cyber crime unit இருக்கிறது. அதை குறைந்தபட்சம் division என்கிற அளவில் விரிவுபடுத்துவது அவசியமானது. கணினிக் குற்றங்களைக் கண்டறிவதற்காக ஒரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த வேண்டும். அதற்காகத் தனியாக ஒரு school-ஐ உருவாக்க வேண்டும். ஏனென்றால், அந்தளவிற்கு கணினி தொடர்பான குற்றங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்தத் தருணத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Police Academy-ஐப் பொறுத்தவரையில், ஒரு colonial period-ல் இருக்கக்கூடிய அந்த syllabus-ஐத்தான் நாம் இன்னும் follow செய்கிறோம். அதிலே சின்ன, சின்ன மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில்,

கணினிக் குற்றங்கள் பெருகியிருக்கின்ற நிலையில், வெறுப்புப் பேச்சு தொடர்பான சில விஷயங்கள், ஓர் அரசியல் ஆக மாறியிருக்கிற இந்தத் தருணத்தில் இந்த syllabus மிகவும் குறைவு. அதை முழுமையாக review செய்ய வேண்டும், மறுசீரமைக்கப்பட வேண்டுமென்கிற ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்கிறேன். Behaviour தொடர்பான, communication skill தொடர்பான பல்வேறு கருத்துகள் இந்த Police Academy-யில் தமிழ்நாடு, இந்தியாவுக்கு வழிகாட்டக்கூடிய சமூக நீதிக் கருத்துகள் இதிலே இடம் பெறக்கூடிய வகையிலான Police பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதிலே குறிப்பாக, அண்மைக் காலமாக சாதி ரீதியான, மத ரீதியான வன்முறைகள் திட்டமிட்டு, ஓர் அரசியல் நோக்கத்திற்காக உருவாக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. ம. சிந்தனை செல்வன்: இரண்டு, மூன்று point-களை மட்டும் சொல்லி நான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு, மூன்று point-கள் அல்ல, உங்களுக்கு 7 நிமிடங்களுக்குப் பதிலாக கூடுதலாக 3 நிமிடங்கள் அதிகமாகத் தந்துவிட்டேன். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ம. சிந்தனை செல்வன்: இதோ முடித்துவிடுகிறேன். அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய வகையிலே அதற்கான ஒரு தனிப் பிரிவு உருவாக்கப்பட வேண்டும். காவல் நிலையங்களில் ஏற்படும் சித்ரவதை மரணங்களைப் பொறுத்தவரையில், கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. திரு. பல்வீர் சிங்மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவரைக் கைது செய்து விசாரிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அதிகாரிகளையெல்லாம் நீங்கள் நினைத்த நேரத்தில் சந்திக்கலாம். அப்போது ஆலோசனை சொல்லுங்கள். இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் 3 பேர் பேச வேண்டியிருக்கிறது. இன்று, பிரதான எதிர்க்கட்சித் தலைவரும் பேசவிருக்கிறார்.

திரு. ம. சிந்தனை செல்வன்: இதோ முடித்துவிட்டேன். ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்காக ஒரு சிறப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும். அண்மையில் கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் நடந்த அந்த ஆணவத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட தங்கை அனுசுயா சேலம் மருத்துவமனையில் உயர் சிகிச்சை பெற்று வருகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே கூடுதல் கவனம் எடுத்து, அந்தத் தங்கையின் உயிரைக் காப்பாற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கையில் பேப்பர் இல்லாமலே இன்னும் 6 மணி நேரம் பேச முடியும். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும். நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. ம. சிந்தனை செல்வன்: *முடிந்துவிட்டது. என்னுடைய இந்தக் கோரிக்கையை வைக்கவில்லை. உங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பல முக்கிய விஷயங்களை நான் எடுத்துவிடுகிறேன்.*

தூத்துக்குடி ஸ்டெர்லைட் வழக்கைப் பொறுத்தவரையில், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில், மேலும் கூடுதல் தகவல்கள் கிடைத்திருப்பதால், அந்த வழக்கில் கூடுதலான விசாரணை தேவை என்பது எங்களுடைய கருத்து. அதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்த வழக்கு court-ல் இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். சரியாக இரண்டே இரண்டு நிமிடங்கள் மட்டும் கொடுங்கள்.*

குறிப்பாக, பால் புதுமையர் தொடர்பானது. பால் புதுமையர் தொடர்பான ஒரு விவாதம் இன்றைக்கு சர்வதேச அளவில் உருவாகியிருக்கிறது. திருமணம் என்பது ஏதோ ஓர் உடல் சார்ந்தது என்கிற ஒரு பழைய கருத்து, இன்றைக்கு மறு விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு, அது வாழ்க்கையில் இணைவதற்கானது என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற நிலையில், அவர்களுடைய பிரச்சினைகளையும் கருணையோடு பார்க்க வேண்டும்.

இறுதியாக, என்னுடைய தொகுதி சார்ந்த இரண்டு கோரிக்கைகள் மட்டும். அது முக்கியமான கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தொகுதி குறித்த கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். அவற்றையெல்லாம் நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *அது எழுதித் தரக்கூடிய கோரிக்கை அல்ல. அவையில் பதிவு செய்ய வேண்டிய கோரிக்கை. 85 கிராமங்களுக்கு மேலான எல்லை இருக்கிறது. அந்த எல்லையை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்துத் தர வேண்டும்.*

1997–ல் ஐயா எல். இளையபெருமாள் அவர்கள் ஓர் அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தபோது, அவர் காணாமல் சென்றுவிட்டார் என்று ஒரு வதந்தி கிளப்பி, 150 பேருக்கு மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதில் 101 பேர் இறந்துவிட்டார்கள். இப்போது வெறும் 54 பேர்தான் அந்த வழக்கிலே இருக்கிறார்கள். அதாவது, PRC *2/2006 என்கிற அடிப்படையிலே அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்தத் தருணத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். மீதமுள்ளவற்றை என்னிடம் கொடுத்துவிடுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *இறுதியாக ஒரேயொரு கருத்து. கேட்காமலே கொடுக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமங்களில் பணியாற்றுகின்ற தூய்மைக் காவலர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.3,600/– சம்பளத் தொகையை, பெரிய போராட்டங்களெல்லாம் தமிழ்நாட்டில் நடைபெறவில்லை என்றாலும், அவராகவே கருணையோடு அதை ரூ.5,000/– ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அடிப்படையில், ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் வெறும் ரூ.1,000/–லிருந்து ரூ.2,000/–, அதிகபட்சம் ரூ.6,000/– வரை சம்பளம் பெறுகிற அந்தத் துப்புரவுப் பணியாளர்களுடைய ஊதியத்தையும் உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, ஒரேயொரு கோரிக்கை. சமத்துவ தலைவரிடத்திலே வைக்கிற கோரிக்கை. கடைசியாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கடைசியாக ஒன்று, இறுதியாக ஒன்று என்று நீங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள்.*

பிற்பகல் 2–05

திரு. ம. சிந்தனை செல்வன்: *கடைசியாக ஒரேயொரு கோரிக்கை. புரட்சியாளர் அம்பேத்கர் பெயரிலான விருதை நம்முடைய அரசு வழங்கி வருகிறது. அந்த விருது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பாக வழங்கப்படுகிறது. பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் சார்பிலே ஒரு விருது வழங்கப்படுகிறது. அது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பிலே வழங்கப்படுகிறது. ஆகச் சிறந்த சீர்திருத்தங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த இரண்டு விருதுகளையும் தன்னுடைய தலைமையின்கீழான ஒரு துறையின்கீழ் வழங்கி சிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

நீண்டகாலமாக கிடப்பில் கிடக்கின்ற குறிஞ்சான்குளம் பிரச்சினையில் ஒரு நல்ல தீர்வைத் தர வேண்டும். சேஷசமுத்திரம், சங்கராபுரம் அருகே ஒரு தேர் எரியூட்டப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) அதிலே, அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி.* (குறுக்கீடு)

திரு. ம. சிந்தனை செல்வன்: *ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மனம் நிறைந்து, நெஞ்சம் நிறைந்து தமிழகத்தை காவல் துறை என்கின்ற களத்திலும் கம்பீரமாக வழிநடத்திக்கொண்டிருக்கின்ற மாண்பமை முதல்வர் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றியை, பாராட்டுகளைப் பதிவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். முதலில் உங்கள் பெயர் பேசுவோர் பட்டியலில் சேர்க்காமல் இருந்தது. பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிந்துரையின்பேரில் பெயர் சேர்க்கப்பட்டது. சீக்கிரம் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிந்துரை செய்து, பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு நன்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி.*

கடும் குளிர், காற்று, மழை, புயல், வெள்ளம் எல்லாக் காலங்களிலும் இரவு, பகல் என்று பாராமல் 24 மணி நேரமும் பணியாற்றுகின்ற காவல் துறையினருக்கு எனது வணக்கங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்பாகப் பேசிய அனைத்து உறுப்பினர்களும் காவல் துறையினரைப் பற்றி, அவர்களின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பேசினார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற மன அழுத்தங்களைப் பற்றியெல்லாம் பேசினார்கள். உண்மைதான். பலபேருக்கு பல பிரச்சினைகள் இருக்கும். குடும்பப் பிரச்சினை, ஸ்டேஷனில் உள்ள பிரச்சினைகள், குற்றவாளிகளோடு பிரச்சினை, இப்படி எல்லாப் பிரச்சினைகளாலும் மன உளைச்சல் ஏற்படுவது உண்மைதான். காவல் துறையினருக்கு யோகா பயிற்சி அளிப்பதற்கான முயற்சியை காவல் துறை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், அவர்களுக்கு யோகா பயிற்சி மட்டுமல்லாமல், ஊதிய உயர்வும் கொடுக்க வேண்டும். உதவி ஆய்வாளர்கள் வரை அவர்களின் பிள்ளைகளுக்கு பள்ளிப் படிப்பு, பட்டப் படிப்பு செலவை அரசே ஏற்று, அவர்களின் நிதிச் சுமையையும் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், 1994 ஆம் ஆண்டு உதவி ஆய்வாளர்களாக 1,100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப்பெற்று, 239 பேர் இன்னும் ஆய்வாளர்களாகத் தொடர்ந்து சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு D.S.P.,—காவல் துணைக் கண்காணிப்பாளர் பயிற்சியும் கொடுக்கப்பட்டு, பதவி உயர்வு வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. ஏற்கெனவே, 2021 ஆம் ஆண்டு நான் இந்த அவையில் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து அதற்கான பதவி உயர்வு ஆணை வழங்கப்படுமென்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து, அந்த D.S.P. பதவி உயர்வில் உள்ளவர்களுக்கு, அதற்கான பயிற்சியை முடித்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று, புதியதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற காவல் துறையினர், இளம் ஐ.பி.எஸ். அதிகாரிகள். நம்முடைய அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற பல்வேறு பிரச்சினைகள் போன்று, அவர்கள் நேரடியாக பதவிக்கு வருகின்ற காரணத்தால்

செய்வது என்னவென்று தெரியாமல், குற்றத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். பிறகு அது பிரச்சினையாகி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். திரு. பல்வீர் சிங், I.P.S. மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அவர் பணிமாற்றம் செய்யப்பட்டார். அவர் பெயரே பல்வீர் சிங் என்பதால் பல்லில் கை வைத்திருக்கிறார் என்று நினைக்கின்றேன். ஆக, இதுபோன்ற அந்த இளம் I.P.S. அதிகாரிகளுக்கு நிச்சயமாக அறிவுரை வழங்க வேண்டும். எவ்வாறெல்லாம் நாம் நடந்துகொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

அதேநேரத்தில், எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள், பெரிய பணக்காரர்கள் phone செய்து அவர்கள் நடவடிக்கை எடுப்பதைக் காட்டிலும், ஏழையெளிய மக்கள் அவர்களை அணுகுகின்றபோது அந்தக் காவல் துறை அதிகாரிகள் நிச்சயமாக ஏழை மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு நல்ல முறையில் மரியாதை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு அந்தப் பிரச்சினை இல்லை. இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர் பொதுமக்கள் பிரச்சினைக்காக அதிகாரிகளிடத்தில் தொலைபேசியில் பேசும்போது, 'வணக்கம் சார் நான் எம்.எல்.ஏ. பேசுகிறேன்' என்று சொன்னாலும், அங்கிருந்து 'சொல்லுங்க' என்பதுபோன்று பதில் இருக்கிறது. 'வணக்கம் சார், சொல்லுங்கள்' என்று அங்கிருந்து பதில் வந்தால் நன்றாக இருக்கும். நிச்சயமாக இது என்னுடைய குரலாக இல்லை. இது பல பேருடைய குரல். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாதிரி வந்தால் நன்றாக இருக்குமென்று இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு அந்த மாதிரி எந்த அனுபவமும் இல்லைதானே!

திரு. நயினார் நாகேந்திரன்: நான் எந்த அலுவலகத்திற்கும் போவதில்லை. அதேமாதிரி அரசாங்கம் ** நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆக நிறைய வியாபாரம் நடைபெறுகிறது. (குறுக்கீடு) ** இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *** நடத்துவதாக குறிப்பிட்டார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அரசாங்கம் எங்கே ** நடத்துகிறது?*

திரு. நயினார் நாகேந்திரன்: *மன்னிக்கவும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

பிற்பகல் 2–10

திரு. நயினார் நாகேந்திரன்: *அரசாங்கம்* TASMAC *கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)* OK. *அதாவது என்னைப் பார்க்க ஒருவர் வந்தார். அவர் வரும்போது, கூட வந்தவர் சொன்னார், 'இவர் மர வியாபாரி, உங்கள் ஊரில்தான் இருக்கிறார்' என்று சொன்னார். அவர் சொன்னார், 'ஐயா, மர வியாபாரி என்று சொல்லாதீர்கள்;* firewood business' *என்று சொல்லுங்கள் என்று சொன்னார். அதுமாதிரி எல்லாம் ஒன்றுதான்.* TASMAC *கடையை அரசாங்கம் நடத்துகிறது என்று சொன்னாலும், அதில் ஒன்றும் தவறு இல்லை.*

கடையில் இருந்து வெளியே வந்தவுடன் குழல் மாதிரி ஒன்று கொடுக்கிறார்கள். அதனை வாயில் வைத்து ஊதச் சொல்லி, உடனடியாக spot fine *போட்டுவிடுகிறார்கள். அது பகல் முழுக்க நடந்துகொண்டிருக்கிறது. கேட்டால், என்ன சொல்கிறார்கள் என்றால் ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அப்படி காவல் துறைக்கு எந்த அறிவுரையும் இருக்காது.*

திரு. நயினார் நாகேந்திரன்: *அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** அப்படி யாரும் கொடுத்திருக்கமாட்டார்கள். (குறுக்கீடுகள்)*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. நயினார் நாகேந்திரன்: *அதாவது. . .* (குறுக்கீடுகள்) *இல்லை, இல்லை. நான் தவறாகச் சொல்லவில்லை. நிச்சயமாகப் பிடிக்க வேண்டும். கண்டிப்பாக* drunken driving*-ஐ பிடிக்க வேண்டும், இல்லையென்று சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விபத்துகள் நடந்ததில் பெரும் பகுதி,* drunken driving *ஆல்தான் வந்தது. அதனால் அந்த வார்த்தையும் எடுத்துவிடுவோம். அடுத்து பேசுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *இல்லை, இல்லை.* drunken driving*-ஐ கண்டிப்பாகப் பிடிக்க வேண்டும். அதற்காகச் சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆமாம், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *2018 ஆம் ஆண்டு காவலர்களுடைய வாரிசுதாரர்களுக்கு, 10 சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்திருந்தார்கள். அந்த 10 சதவிகித இட ஒதுக்கீடு குறித்து அவர்களுக்கு ஆணையும் வழங்கப்பட்டு நடைமுறையில் இருந்தது. அதன் பிறகு தனி நபர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டதனால், அது தடை செய்யப்பட்டது. அதன் பிறகு மீண்டும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, பிறகு அரசு உச்ச நீதிமன்றத்திற்கு சென்று, மீண்டும் அவர்களுக்கு பணி வழங்கலாம் என்ற ஓர் உத்தரவு வந்தது. அதில், ஐந்தாயிரம் பேருக்கு பணிக்கான* entrance exam *எழுத நுழைவுச் சீட்டு கொடுக்கப்பட்டது. பிறகு பணியும் வழங்கலாம் என்று உத்தரவு வந்தது. அதன்பிறகு அது அப்படியே கிடப்பில் இருக்கிறது. அது, 2018 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குப் பணி வழங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே நிதி நிறுவனங்களைப் பற்றி பேசும்போது, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அழகாகச் சொன்னார். நிச்சயமாக வரவேற்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், சட்டங்களை அறிமுகப்படுத்தும்போது, 'அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்' என்று சொல்கிறமாதிரி, என்ன செய்யலாம் என்றால் அந்த

நிதி நிறுவனம் ஆரம்பிக்கும்போது licence *வாங்குவார்கள். வாங்கும்போது எத்தனை சதவிகிதம் வட்டி என்பதை காவல் துறை உடனடியாகக் கண்டறிய வேண்டும். அது எத்தனை சதவிகிதம் வட்டி என்று கண்டறிந்தால், ஆரம்ப காலத்திலேயே அதை நாம் கிள்ளி எறிந்து விடலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாமே* Reserve Bank of India*-ன் கட்டுப்பாடு, கொஞ்சம் ஒன்றியத்தில் பேசி, முடிவு செய்து சட்டத்தை மாற்றுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மத்திய அரசில் பேசி முடிவு செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அதெல்லாம்* Reserve Bank of India*-ன்* control *தானே.*

திரு. நயினார் நாகேந்திரன்: *சரி, இப்போது திருவிழாக் காலங்களில் காவல் துறை கடுமையான சில* system*-களை வைத்திருக்கிறார்கள். அதாவது, நமது தமிழகத்தைப் பொறுத்தமட்டில், நிறைய நாட்டுப்புறக் கலைஞர்கள் இருக்கிறார்கள். மேடை மெல்லிசை கலைஞர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு பிழைப்பு என்னவென்றால், திருவிழாக் காலங்களில், கோயில் கச்சேரிகளில், அதுவும் நம் ஊரில் கச்சேரி வைத்து, 10, 12 மணி நேரம் அடித்துக்கொண்டிருப்பார்கள். சில பேர் கச்சேரி வைப்பார்கள். நாட்டுப்புறக் கலைகள் எல்லாம் இருக்கும். இதனால் திருவிழாக் காலங்களில் 9 மணி, 10 மணி வரையில் நாட்டுப்புற கலைஞர்களுக்கு* licence *கொடுப்பது இல்லை. அதனால், நமது நாட்டுப்புறக் கலைஞர்களுடைய அந்த உழைப்பும் போய்விடுகிறது. கலைகளும் அவர்களுக்கு மறந்து போய்விடும். அதனால், தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தனி கவனம் செலுத்தி, திருவிழாக் காலங்களில் வேறு எதற்கும் இல்லாமல் நாட்டுப்புறக் கலைகள், கொம்பாட்டம், கரகாட்டம், மேடை மெல்லிசைக் கச்சேரி செய்யும் இவர்களுக்கு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்குத் தெரியுமே, இப்போது அப்படி ஒன்றும் தடையில்லை அல்லவா!* (குறுக்கீடு) *இப்போது தடையில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தடையில்லை.* (குறுக்கீடு) *எந்தக் கோயிலிலும் இல்லை.*

(குறுக்கீடுகள்) எங்கள் ஊரில் அப்படி எந்தப் பிரச்சினையும் இல்லை. நீங்கள் நடத்துகிற இராமலிங்க சுவாமி கோயிலிலும் அது இல்லை.

திரு. நயினார் நாகேந்திரன்: சரி, அதற்குப் பிறகு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் 9 மணிக்கு நிறுத்தியதை இப்போது 12 மணி, 2 மணி வரை இராமலிங்க சுவாமி கோயிலில் நடத்துகிறார்கள். இந்த ஆட்சி வந்தபிறகு அந்தப் பிரச்சினை இல்லை என்று சொல்கிறேன்.

திரு. நயினார் நாகேந்திரன்: சில நேரம் court-க்குச் சென்று Court order வாங்க வேண்டியிருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை.

அடுத்து, கோவை PRS campus-ல் உள்ள ஆயுதப்படை மைதானத்தில் சாலை கொஞ்சம் குண்டும், குழியுமாக இருக்கிறது. அதைத் தரம் வாய்ந்த சாலையாக போட்டுத்தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று காவல் துறையில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் பதவி உயர்வு கேட்கிறார்கள். அதையும் வழங்குமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுமாதிரி பெண் காவலர்களுக்கான இரவுப் பணி; பெண் காவலர்கள் இரவு ரோந்துப் பணிக்குச் செல்கிறார்கள். எல்லோரும் போய் கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்க்கலாமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு நான் விட்டுவிடுகிறேன்.

பிற்பகல் 2–15

திருநெல்வேலி மாநகராட்சியைப் பொறுத்தவரையிலும் 2 தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று பாளையங்கோட்டையிலும், மற்றொன்று பேட்டையிலும் இருக்கின்றது. பேட்டையிலிருந்து Junction-க்கு 7 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. Junction-லிருந்து மீண்டும் பாளையங்கோட்டைக்கு வருவதற்கு 5 கிலோ மீட்டர் போக வேண்டியிருக்கிறது. திருநெல்வேலி நகரம் மிகவும் நெருக்கடியான நகரம். 2 தீயணைப்பு நிலையங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, இப்பொழுதுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் பேட்டையிலிருந்து வரவேண்டுமென்றால் அரை மணி நேரம் ஆகிறது. திருநெல்வேலி

மாநகராட்சி அலுவலகத்திற்கு எதிரிலுள்ள Trade Centre-ல், அதாவது மாநகராட்சி வணிக வளாகத்தில் இடமிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துக் கொடுத்தால், மிகவும் உதவியாக இருக்கும். ஏனென்றால், திருநெல்வேலி மாநகராட்சியில் கிட்டத்தட்ட 7,00,000 மக்கள் வசித்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, பல அடுக்குமாடிக் கட்டடங்கள் இருக்கின்றன. அந்த அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு இப்போதுள்ள விதிகளின்படி, Fire Service-லிருந்து NOC வாங்க வேண்டுமென்றால் 20 அடி விட்டால்தான் plan approval கிடைக்கும்; NOC-யும் கிடைக்கும். இந்த விதி வருவதற்கு முன்பு, பழைய காலங்களில் 6 மாடி, 7 மாடிக் கட்டடங்களைக் கொண்ட பெரிய கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அந்தக் கட்டடங்களுக்கு தற்போது NOC வாங்க முடியாமல் இருக்கிறது; அந்தக் கட்டடங்களுக்கு அனுமதியும் இல்லாமலிருக்கிறது. Right to Information Act என்ற ஒரு Act இருக்கிறது. அது ஓர் அருமையான Act. படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கிறவர்கள் என்ன செய்கிறார்களென்றால், யார் யாருடைய கட்டடங்களெல்லாம் அனுமதியில்லாமல் இருக்கின்றன என்று அச்சட்டத்தின்கீழ் கேட்டு வாங்கிவிட்டு, அவர்களைப் பயமுறுத்தி, 'எனக்கு இவ்வளவு பணம் கொடுங்கள்' என்றும் இல்லாவிட்டால், 'அதிகாரிகள்மூலம் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்' என்று சொல்கிறார்கள். திருநெல்வேலியில் மிகப் பெரிய இரண்டு மருத்துவமனைகள் பூட்டிக் கிடக்கின்றன. அதனால், Fire services-ஐப் பொறுத்தளவில் 20 அடி விட வேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, தற்போதைய காலத்திற்கேற்ற விதியை அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, திருநெல்வேலியில் பல மாடிக் கட்டடங்கள், பெரிய வணிக வளாகங்கள் இருக்கின்றன. Emergency Rescue Tender என்ற special ஊர்தி, மிகப் பெரிய, நீளமான தீயணைப்பு ஊர்தி, மதுரையில் மட்டும்தான் இருக்கிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அதுபோன்ற தீயணைப்பு வாகனங்கள் ஏதும் இல்லை. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தீயணைப்பு ஊர்தியை, Emergency Rescue Tender ஊர்தியை, திருநெல்வேலிக்கும் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லங்கோடு, தூத்துக்குடியில் உள்ளவர்கள் மண்டல அலுவலகம் வர வேண்டுமென்றால் மதுரைக்குத்தான் போக வேண்டியுள்ளது. இங்குள்ள 4 மாவட்ட மக்கள் மதுரைக்குச் செல்ல வேண்டுமென்றால், நிறைய சிரமங்கள் இருக்கின்றன. அந்த அலுவலகத்தை திருநெல்வேலியில் அமைக்க, பாளையங்கோட்டை மைதானத்தில் இரண்டரை ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இரண்டரை ஏக்கர் நிலத்தில் ஒரு மண்டல அலுவலகத்தையும் உருவாக்கலாம்; தீயணைப்பு வீரர்களுக்குப் பயிற்சியும் வழங்கலாம். தற்போது மாதத்திற்கு ரூ.75,000/- வாடகை கொடுக்கப்படுகிறது. ஆகவே, அதற்காக இந்த இரண்டரை ஏக்கர் இடத்திலேயே கட்டடங்களைக் கட்டி, பயிற்சியும் கொடுத்தால், இந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேச ஆரம்பித்து, 6 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11 நிமிடங்கள் 34 வினாடி ஆகியிருக்கிறது. கண்ணாடி போட்டுக்கொண்டு பாருங்கள். (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: ஒரேயொரு விஷயத்தைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் ஓர் அருமையான கருத்தைச் சொன்னார்கள். தேங்காய் விலை அதிக வீழ்ச்சியடைந்திருக்கிறது. உங்களுக்கும் தெரியும். நம் எல்லோருக்கும் தென்னை மரங்கள் இருக்கின்றன. அதனால், நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய்யை விநியோகம் செய்தால், தேங்காய் உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்புகள் ஏற்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம், நெல்லையப்பர் கோயிலுக்கு ரூ.4 கோடி மதிப்பில் வெள்ளித் தேரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜவெள்ளிபுரத்திற்கும், கங்கைகொண்டானுக்கும் புதிய தேர் அமைத்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நாகர்கோயில் அழகம்மன் கோயில் தெப்பக் குளத்தைத் தூர்வாரி, சுற்றுச் சுவர் அமைத்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலிக்கு bypass road வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக உத்தரவிடப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதிக நிதியை ஒதுக்கி, அந்தப் புறவழிச் சாலையை ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை, காவல் மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக சில கருத்துகளைக் கூற விழைகிறேன்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை என்பது மிகவும் முக்கியமானது. தனி மனித உயிருக்கும், உடைமைக்கும், பொதுமக்களின் பாதுகாப்புக்கும், அரசுக்கும் பாதுகாப்பு அரணாக இருப்பது காவல் துறை. காவல் துறையின் செயல்பாட்டைப் பொறுத்துதான் ஒரு மாநிலத்திற்கு, நாட்டுக்கு பெயரும், புகழும் ஏற்படும் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அதனடிப்படையில்தான் காவல் துறைக்கு, உத்தமராக இருந்த கக்கன் அவர்கள் பொறுப்பேற்று செயல்பட்டார்கள். அதற்குப் பிறகு காவல் துறைக்கு ஒவ்வோர் அரசும் பொறுப்பேற்கிற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர்களே பொறுப்பேற்றிருக்கிறார்கள். இதிலிருந்து காவல் துறை மிக முக்கியமானது என்று தெரிகிறது. காவல் துறையைப் பற்றி சொல்கிற நேரத்தில், மக்கள் நிம்மதியாக தூங்க வேண்டுமென்று சொன்னால், காவல் துறை விழிப்போடு இருக்க வேண்டும். காவல் துறை விழிப்பாக இருந்தால், மக்கள் நிம்மதியாகத் தூங்குவார்கள் என்பதுதான் காவல் துறையின் செயல்பாடு. காவல் துறையின் பணிகளை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில், அது மிக மிகக் கடினமானது. மற்ற துறைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், காவல் துறையின் பணித் தன்மை என்பது சாதாரணமானதல்ல, மிக மிகக் கடினமானது. இரவு பகலென்று பாராமல், வெயில், கொட்டும் மழை என்று பாராமல்,

2023 ஏப்ரல் 20] [திரு. ஜி.கே. மணி]

உழைக்கிற அவர்களுக்கு உரிமைகள் வேண்டுமென்று கேட்பதற்கு நான் முன்வருகிற அதேவேளையில், காவல் துறையில் நிகழ்கிற சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாகவே கருதுகிறேன். நான் மட்டுமல்ல, இங்கிருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் சொல்கிற கருத்தாகவே நானும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறையைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு, என் தொகுதி சார்ந்த 2, 3 கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கனிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு சட்டங்கள், திட்டங்கள் நிதியொதுக்கீடுகள் நிறைவேற்றப்படுகின்றன. அதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சி. தமிழ்நாட்டு வளர்ச்சியில் அடங்கியிருப்பது–அனைத்துத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவார்கள், நேற்று அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் எதிர்பார்த்தார்கள். என்னிடத்தில் இரவில் சில உறுப்பினர்கள் தொடர்புகொண்டு பேசியதன் அடிப்படையில், ஒட்டுமொத்தமாக மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக நான் வைப்பது, பல்வேறு துறைகளின் வளர்ச்சிகளுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றன. அந்தத் துறையின் சார்பில் ஒதுக்கப்படுகின்ற நிதியினை, தொகுதி மேம்பாட்டு நிதி என்று ஒதுக்கினால், மாண்புமிகு உறுப்பினர்கள் பரிந்துரைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த பேரவை உறுப்பினர்களின் சார்பில் மாண்புமிகு அமைச்சர்களின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோளாக வைப்பது, கனிவாக வைப்பது, நீங்கள் இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அனைவரும் நிறைய கேட்டார்கள். எனவே, தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.3 கோடியிலிருந்து ரூ.5 கோடியாகவாவது உயர்த்த வேண்டும் என்பதை வேண்டுகோளாக கனிவோடு, அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதிக அளவில் கேட்டார்கள். அதேபோன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, சட்டமன்றப் பேரவை சிறப்பாக நடைபெறுவதற்கு காரணமாக இருப்பது அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள். பேரவை கூடும் நாட்களில் உயர் அதிகாரிகளிலிருந்து கீழ்நிலைப்

பணியாளர் வரையில், அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய படி என்பது, வெறும் ரூ.152/–, ரூ.162/– ஆகும். இது போதாது. காலையில் 6.00 மணி அல்லது 7–00 மணிக்கு அலுவலகத்திற்கு வருகிறார்கள். இரவு 10–00 மணி அல்லது 11–00 மணிக்குச் செல்கிறார்கள். ஆகவே, பேரவையில் பணியாற்றக்கூடிய அனைவருக்கும் பேரவை கூடும் காலங்களில் வழங்கப்படும் படித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இங்கு ஊடக நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு நாட்டிற்கு அல்லது அரசிற்கு உடனுக்குடன் செய்தியை எடுத்துச் சொல்பவர்கள், காற்று நுழையாத இடத்தில்கூட சென்று செய்திகளைச் சேகரித்து, அரசுக்கும் மக்களுக்கும் எடுத்துச் செல்லக் கூடியவர்கள் ஊடகத் துறையினர். அவர்களுக்கு பத்திரிகையாளர், நல வாரியம் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, அவற்றில் இருக்கின்ற பல்வேறு நிபந்தனைகளால் பத்திரிகையாளர்கள் ஊடகவியலாளர்கள் உரிமை பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நிபந்தனைகளைத் தளர்த்தி அனைவருக்கும் ஓய்வூதியத்தை கூடுதலாக வழங்க வேண்டும். அதேநேரத்தில், சென்னை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அவர்களுக்கு மனைகள் வழங்குவதாக ஒப்பளிக்கப்பட்டு, இன்னும் நிலுவையில் இருக்கிறது. அவற்றையெல்லாம் விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–25

பொதுவாக காவல் துறை என்பது, காவல் துறை தலைமை இயக்குநர், அதற்கு கீழே 4 மண்டலங்கள், 11 சரகங்கள், 1,305 காவல் நிலையங்கள், 222 மகளிர் காவல் நிலையங்கள், 47 தொடர் வண்டி காவல் நிலையங்கள், 280 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் என்று 1,854 காவல் நிலையங்கள் உள்ளன. இதிலே, மேலே காவல் துறை தலைமை இயக்குநரிலிருந்து கீழே இருக்கின்ற இரண்டாம் நிலை காவலர் வரையில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் 1,32,000–க்கும் மேற்பட்டவை. நடுவண் அரசின் சார்பில் நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்த நேரத்தில் குறைந்தபட்சம் இந்தியாவில் சராசரியாக 1 இலட்சம் மக்களுக்கு 195 காவலர்கள் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சற்று குறைவாக இருக்கின்ற காரணத்தால், இன்னும் காவலர்கள் எண்ணிக்கையை கூடுதலாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காவலர்கள், 13 ஆயிரம், 14 ஆயிரம், அதிகபட்சம்

2023 ஏப்ரல் 20] [திரு. ஜி.கே. மணி]

15 ஆயிரம் பேர் வரை இருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் காவலர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் 15,000 காவலர்களை கூடுதலாக நியமித்தால், மக்கள்தொகைக்கேற்ப அது சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அதைப்போல, காவல் துறையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். அதைப் பேசுகிற நேரத்தில், காவல் துறைமீது மக்கள் மிகவும் எதிர்பார்ப்பது, நம்பிக்கை வைத்திருப்பது வீணாகி விடக் கூடாது. ஆகவே, காவல் துறையில் நேர்மையாக, திறமையாக மக்களுக்கு சிறப்பாக பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு இந்த மாமன்றத்திலிருந்து தலை வணங்கி நான் அவர்களை வாழ்த்துகிறேன், நன்றி தெரிவிக்கிறேன், பாராட்டுகிறேன். நல்ல அதிகாரிகளுக்கு நாம் நன்றி சொல்லியாக வேண்டும், பாராட்ட வேண்டும்.

அதேநேரத்தில், காவல் துறையில், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்லை பிடுங்கிய ஒரு காவல் துறை அதிகாரி குறித்து பேசினார். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். அவரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. ஆனால், இதுவரையில் அவர் கைது செய்யப்படவில்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர்மீது ஒரு தனி நபர் வழக்கு போட்டால் உடனடியாகக் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால், காவல் துறையில் இருக்கிற ஒருவர் பல்லை பிடுங்கியிருக்கிறார். விசாரணையில் சொல்லப்படுகிறது. இதுவரையில் கைது செய்யப்படவில்லை. இதை வெளியில் மக்கள் பேசுகிறார்கள். காவல் துறை அதிகாரிகளாக இருந்தாலும்கூட, குற்றம் செய்தவர்கள் சரியாக தண்டிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான், மற்றவர்கள் எல்லாம் குற்றம் செய்யாமல், இது என் நாடு, என் நாட்டு மக்கள் என்ற உணர்வில் வருவார்கள். நான் ஒட்டுமொத்தமாக சொல்கிறேன். காவல் துறையில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் ஏதோ ** ஊதியத்திற்கு பணியாற்றுகிறேன் என்ற நிலையில் இல்லாமல், இது என் நாடு, என் நாட்டு மக்கள், என் நாட்டுக்காகவும், என் நாட்டு மக்களுக்காகவும் . . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** பணியாற்றுகிறேன் என்பது நீக்கம் செய்யப்படுகிறது.

திரு. ஜி.கே. மணி: இல்லை, ஊதியத்திற்காகப் பணியாற்றும் நிலை வேண்டாம் என்று சொல்கிறேன். அதைச் சொல்கிறேன். குறை சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. ஜி.கே. மணி: ஊதியத்திற்காகப் பணியாற்றுகிறேன் என்ற நிலையில் இல்லாமல், இது என் நாடு, என் நாட்டு மக்கள், என் நாட்டுக்காகவும், என் நாட்டு மக்களுக்காகவும் பணியாற்றுகிறேன் என்ற அந்த அர்ப்பணிப்பும், சேவை நோக்கமும் வர வேண்டும். அதற்குண்டான பயிற்சியை அரசு வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல் துறை தலைமை இயக்குநர் நிலை பதவி உயர்வு என்பது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தில் வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலேகூட ஜனவரி மாதத்தில் வழங்கப்படுகிறது. ஆனால், இப்போது ஏப்ரல் மாதம் ஆகிவிட்டது. இன்னும் வழங்கவில்லை. இப்படி வழங்கப்பட்டால் ஏறக்குறைய 10 காவல் துறை தலைமை இயக்குநர்கள் வருவார்கள். அப்படி காவல் துறை தலைமை இயக்குநர்கள் வருகிற நேரத்தில், மீதியிருக்கிற கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர்கள், அதற்கும் கீழே காவல் துறை தலைவர்கள்—IG, அதற்கும்கீழ் அடுத்து இருக்கக்கூடிய காவல் துறை துணைத் தலைவர்கள் இப்படி கீழே வரையிலும் பதவி உயர்வு வரும். ஆகவே, பதவி உயர்வில் நிறைய காலதாமதம் ஏற்படுகிறது என்று எல்லோரும் சொல்லக்கூடிய நிலையில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் பதவி உயர்வை உரிய காலத்தில் விரைவாக வழங்குவதை நிறைவேற்றுங்கள். அப்படி பதவி உயர்வு வழங்குவதால், நிதிச் சுமை ஏதும் ஏற்பட்டுவிடாது. கொஞ்சம்தான் வித்தியாசம் வரும். ஏற்கெனவே, அவர்களுக்கு பணிமூப்பு இருப்பதனால், கூடுதலாக ஊதியம் பெறுகிறார்கள். இது ஒரு மரியாதை. அதையெல்லாம் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்னொன்று சொல்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒருமுறை வெளியில் இருந்த நேரத்தில் கலைஞர் சொன்னார். 'ஏட்டு ஐயா வெளியில் நிற்கிறார், கூப்பிடுங்கள்' என்று சொன்னார். சட்டமன்றத்திலும், வெளியிலும் கூட பேசினேன். அண்ணே, என்ன அண்ணே இது. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக இருங்கள். திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது ஏன் அமைதியில்லாமல் இருக்கிறார்கள்? தயவுசெய்து அமைதியாக இருங்கள். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: தெரியவில்லை. நீங்கள்தான் பேரவைத் தலைவர். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் அமைதிப்படுத்தி கொடுக்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: ஒருவேளை பிடிக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை. பிடிக்காமல்கூட இருக்கலாம் அவையில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியில்லை.

திரு. ஜி.கே. மணி: உங்களுக்குப் பிடிக்கிறதா? சரி, நம்முடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைவு செய்வதற்கு signal கொடுக்கிறார்களோ! 'நிறைவு செய்யச் சொல்லி signal கொடுக்கிறார்களோ' என்றேன்.

பிற்பகல் 2-30

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணி அடித்து, 'மணி உட்காருங்கள்' என்று சொன்னால் உட்கார்ந்து விடப்போகிறேன். ஒன்றும் பெரியதாக இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. சீக்கிரம் முடியுங்கள். 10 நிமிடங்கள் தாண்டிவிட்டன. (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: ஜி.கே. மணி வீட்டுக்காக ஒன்றும் பேசப்போவதில்லை. நாட்டுக்காக, மக்களுக்காகப் பேசுகிறோம். பேசுங்கள் என்று சொன்னால், பேசுகிறேன். வேண்டாம் என்று சொன்னால், உட்கார்ந்து விடப்போகிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேண்டாமென்று சொல்ல மாட்டோம். (குறுக்கீடு) போங்கள் என்றும் சொல்ல மாட்டோம். குறித்த நேரம் தாண்டிவிட்டது. நிறைவாக, சீக்கிரமாக பேசி முடித்துவிடுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *பொதுவாக, காவல் துறையில் பதவி உயர்வு என்பது 7 ஆண்டுகளுக்கொருமுறை, இரண்டாம் நிலை காவலரிலிருந்து, முதல்நிலைக் காவலராக வழங்கப்படுகிறது. அதேபோல், முதல் நிலைக் காவலரிலிருந்து சார்பு ஆய்வாளர், அதற்குப் பிறகு ஆய்வாளர் என்று வழங்கப்படுகிறது. இப்போது நாம் பார்த்தோமென்றால், 25 வருடங்கள், 30 வருடங்கள் கடந்தாலும்கூட சார்பு ஆய்வாளர்களாக பதவி உயர்வு கிடைப்பதில்லை. இது ரொம்ப நெருக்கடியாக இருக்கிறது. ஆகவே, 7 ஆண்டுகளுக்கு ஒருபடி பணிநிலை உயர்வு கட்டாயம் வழங்க வேண்டுமென்று நான் அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், இன்றைக்கு அவர்கள் கேட்பது எல்லாமே ஊதிய உயர்வு. பக்கத்தில் இருக்கக்கூடிய கர்நாடகா, ஆந்திரா, கேரளா, தெலங்கானா போன்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஊதியம் குறைவு. ஆகவே, ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) சீக்கிரம் முடித்துவிடுகிறேன். அத்துடன் அவர்களுக்கு வேண்டியது என்னவென்றால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி.கே. மணி, நீங்கள் பேச ஆரம்பித்து 12 நிமிடங்கள் தாண்டிவிட்டன. விரைவில் நிறைவு செய்து தாருங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன். அதிகமான நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. காவல் துறையில்* Risk allowance *வழங்குகிறார்கள். கீழிருந்து இரண்டாம் நிலைக் காவலர்களிலிருந்து, அனைத்து நிலை காவலர்களுக்கும் தலா 300 ரூபாய் மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. அதை இன்னும் கூடுதலாக்க வேண்டும். அதேமாதிரி, சலவைப்படியையும் இன்றைக்கு இருக்கிற விலைவாசிக்கு ஏற்றாற்போல் அதிகரித்துத் தர வேண்டும்.*

இன்னொன்று மிக முக்கியமானது, எல்லா அதிகாரிகளும் சொல்கிறார்கள். நீங்கள் சீருடையை துணியாகக் கொடுத்து விடுகிறீர்கள். அந்தத் துணி தரமாக இல்லை. துணிக்குப் பதிலாக,

TRUTH ALONE TRIUMPHS

துணிக்கான பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டால், நல்ல தரமான துணியை அவர்களே வாங்கிக் கொள்வார்கள். ஓர் ஆண்டுக்கு 2 ஜோடி சீருடைகள்தான் வழங்கப்படுகின்றன. 2 ஜோடி சீருடைகள் போதாது. ஆக, சீருடைக்கான துணிக்குப் பதிலாக பணமாக வழங்குவதற்கும், அதேபோல், சீருடைக்கான தையல் கூலியை கூடுதலாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, காவலர்களுக்கான தொப்பியும், காலணியும் நீங்களே கொடுத்து விடுகிறீர்கள். பெரிய தலைக்கு சிறிய தொப்பியாக இருக்கிறது. சிறிய தலைக்கு பெரிய தொப்பியாக இருக்கிறது. அதன் அளவுகள் சரியாக இருப்பதில்லை. எனவே, அவர்களிடம் பணமாக கொடுத்துவிட்டால், அவர்களே அவர்களுக்குத் தேவையான அளவில் வாங்கிக்கொள்வார்கள். நீங்கள் தனியார் ஒப்பந்ததாரர்களிடம்தான் வாங்கப் போகிறீர்கள். தனியாரிடம் வாங்குவதற்கு பதிலாக, அவர்களிடம் பணமாக கொடுத்துவிட்டால் அவர்களுக்குத் தேவையானதை பெற்றுக்கொள்வார்கள் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தது, போதைப்பொருள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கஞ்சா விற்பனைக்கு எதிராகக் கடுமையாக நடவடிக்கை எடுத்தார்கள். நான் மறுக்கவில்லை. கஞ்சா விற்பனையை ஒழிப்பதற்காக, கஞ்சா வேட்டையை 3 முறை நடத்தினார்கள். அதனை நான் வரவேற்கிறேன். பல ஆயிரம் டன் அளவிலான கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. அதோடு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஆனாலும், இன்னும் எங்கே பார்த்தாலும் கஞ்சா புழக்கத்தில் உள்ளது. தற்போது, மிட்டாய் வடிவிலும், திரவ வடிவிலும்கூட வந்துவிட்டது. இதனால், பள்ளிக்கூட மாணவர்கள் வீணாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கஞ்சாவை ஒழிப்பதற்கு ஒரு தனிப் படையை அமைக்க வேண்டும். மாவட்ட அளவில், தலைமையிலிருந்து கீழ்நிலை வரை போதைப் பொருள் பல வகைகளில் இருக்கின்றது. அதை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். அதன்பிறகு, குட்கா. குட்காவை தடை செய்ய நடவடிக்கை எடுத்தீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், உயர் நீதிமன்றம் தடை விதித்து விட்டது. மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மேல்முறையீட்டு வழக்கை விரைந்து

முடிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். (குறுக்கீடு) 14 நிமிடங்கள் தாண்டிவிட்டன.

திரு. ஜி.கே. மணி: இதோ முடித்துவிடுகிறேன். அடுத்து, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை. உயிரை பணயம் வைத்துப் பணியாற்றக்கூடியவர்கள். அவர்களுக்குக் கூடுதல் ஊதியம் வழங்க வேண்டும். தேவையான உபகரணங்களை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சி, சமூக நீதிக்காகப் போராடுகின்ற கட்சி. ஆகவே, ஏற்கெனவே இட ஒதுக்கீட்டுக்காகப் போராடிய 44,000 நபர்கள்மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன. கிராம நிர்வாக அலுவலரிடம் மனு கொடுத்தோம். மாவட்ட ஆட்சியர் வரை மனு கொடுத்தோம். கடந்த காலங்களில் மனு கொடுத்து போராட்டம் நடத்தப்பட்டது. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் வேண்டுகோள் வைத்தேன். அந்த வழக்குகளைத் திரும்பப் பெறுவதாகச் சொன்னார்கள். அந்த வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. ஜி.கே. மணி: அதேபோல, சமூக நீதியில் வன்னியர்களுக்கான 10.5 சதவீத இட ஒதுக்கீட்டை விரைந்து நிறைவேற்ற வேண்டும். இன்றைக்கு திரு. வி.பி. சிங் அவர்களுக்கும், திரு. இளையபெருமாள் அவர்களுக்கும், தலித் கிறித்துவர்களுக்கும் என பல்வேறு சமூக நீதிக்கான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதுபோலத்தான், வன்னியர்களுக்கான 10.5 விழுக்காடு இட ஒதுக்கீடு. அதனை விரைந்து நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் புளிக்கரை என்பது ஒரு முக்கியமான பகுதி. அங்கே, ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். நம்முடைய தருமபுரி தொகுதி, வெள்ளக்கல் பகுதியில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், சேலம், பள்ளப்பட்டி காவல் நிலையத்திற்குக்

கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பணி வரம்பு. காவலர்கள் எப்போது போகிறார்கள், எப்போது வருகிறார்கள் என்பது தெரியவில்லை. எல்லோருக்கும் 8 மணி நேரம் என்ற பணி வரம்பு வழங்க வேண்டும். 8 மணி நேரம் என்பது . . .

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நேரமாகிவிட்டது. நீங்கள் ஆசிரியர், 40 நிமிடங்கள் பாடங்களை நடத்துவீர்கள்.

திரு. ஜி.கே. மணி: காவல் துறைக்கு jeep கொடுக்கிறீர்கள். வண்டி கொடுத்து 20 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அது பழுதடைந்துவிட்டது. எனவே, எல்லோருக்கும் வண்டிகள் கொடுக்க வேண்டும். காவல் ஆய்வாளருக்கு ஒரு வண்டிதான் இருக்கிறது. அதுவும் பழுதடைந்துவிட்டது. ஒரு காவல் நிலையத்திற்கு ஒரு இரு சக்கர வாகனம்தான் இருக்கிறது. அந்த வாகனம் கொடுத்து 20 வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது எல்லோருக்கும் வண்டி தேவைப்படுகிறது.

அதேபோன்று, தொலை தொடர்புக் கருவி, Walkie-Talkie கொடுத்து 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதையெல்லாம் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்தத் துறை மிகச் சிறப்பாக வெற்றிநடை போடும் என்கிற நம்பிக்கையோடு இந்தத் துறையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மனதார வரவேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பணி சிறக்க வேண்டுமென்று தெரிவித்து நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கையில் பேசுவதில் நான் ஒரு தமிழனாக பெருமிதம் அடைகிறேன்.

உலகத்திலேயே Scotland Yard காவல் துறைக்கு இணையாக தமிழ்நாட்டு காவல் துறை பேசப்படுகின்றது. யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதில்தான் அந்தப் பெருமையும், ஆளுமையும் இருக்கிறது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் மிகப் பெரிய தியாகத்தைச் செய்தவர்கள்தான் நம்முடைய காவல் துறையைச் சார்ந்த நண்பர்கள்.

ஓர் ஆட்சி எப்படி இருக்க வேண்டுமென்று அய்யன் திருவள்ளுவர் சொல்கிறார்.

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

குடிமக்களை அரவணைத்து ஆட்சி செய்யும், நல்லாட்சியின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் என்ற வான்புகழ் வள்ளுவரின் சொல்லுரைக்கேற்ப தமிழ்நாட்டை வளர்ச்சியின் பாதைக்குக் கொண்டு சென்றிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கீழடி நாகரிகத்தை மீட்டெடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வல்லினம், இடையினம், மெல்லினம் என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்கிறார். ஆனால், இது பலவீனமானவர்களுக்குத் தெரியாது. வல்லினத்தையும், மெல்லினத்தையும், இடையினத்தையும், பலவீனமானவர்கள் எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஆகவே, 3,200 ஆண்டுகள் நம்முடைய பழந்தமிழ் பெருமையை தமிழகத்திற்கு இன்று கொடையாக கொடுத்திருக்கிறது நம்முடைய அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் மோசடி கும்பல்கள் எல்லாம் மக்களை எப்படி ஏமாற்றுகின்றன என்று Aarudhra பற்றியும், Hijau பற்றியும், IFS பற்றியும், Elfin பற்றியும், Amro Kings பற்றியும் பேசினார்கள். இது எப்போது நடந்தது என்று அனைவருக்கும் தெரியும். பொதுமக்களுடைய, அரசு ஊழியர்களுடைய, தன்னுடைய ஒரு தலைமுறையின் வருமானத்தை சேகரித்த பணத்தை எப்படியெல்லாம் ஒரு கூட்டம் கொள்ளையடிக்கிறது. இது புதிது அல்ல. 1995, 1996 ஆம் ஆண்டுகளில்கூட சினேகம், அனுபவ், சுதர்சன், பாலு ஜுவல்லரி என்று பல பட்டியல்கள் இருக்கின்றன. 1995–1996–ல் இப்படிப்பட்ட ஊழல். இப்போது 2000, 2009 இந்த

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஊழல். இப்படி தினந்தோறும் ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று இதற்கு தெளிவான பதிலைச் சொன்னார். ஆனால், இதில் அரசியல் பின்புலம் உள்ளதாக பல செய்திகளைப் பார்க்கிறோம். குறிப்பாக Aarudhra. Aarudhra-வில் அரசியல் கட்சிகள் பின்புலமாக இருந்து செயல்படுகின்றன, அவர்களை வளர்த்துவிட்டு, இவர்கள்தான் அழகு பார்த்தார்கள் என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கையில் இல்லை. இருந்தபோதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் எந்த அரசியல் கட்சிகள் இந்த Aarudhra நிறுவனத்திற்கு உறுதுணையாக இருந்தன, யார் அவர்களை ஆதரித்து, ஊக்கப்படுத்தி வந்தனர் என்பதை அவருடைய பதிலுரையில் தெரிவிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எப்போதெல்லாம் ஒரு நல்லாட்சி நடக்கிறதோ, அப்போதெல்லாம் வட மாநிலத்திலிருந்து ஒரு தாக்குதல் வரும். அதுபோன்றுதான் வட மாநில புலம்பெயர்ந்த தொழிலாளர்களை தாக்கிவிட்டதாக ஒரு குறுஞ்செய்தி வந்தது. நம்முடைய காவல் துறை, திருப்பூரிலும் சரி, ஸ்ரீபெரும்புதூரிலும் சரி, பீகாருக்கும் சென்று, அதையெல்லாம் உண்மைக்கு புறம்பான செய்தி என்று அடக்கினார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத்தகுந்தது.

பிற்பகல் 2–40

காவல் துறை அதிகாரி Thiru. Balveer Singh என்பவரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசினார்கள். காவல் துறை அதிகாரிகளுக்கெல்லாம் Mussoorie–ல் உள்ள Lal Bahadur Shastri National Academy of Administration–ல் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மானுட வாழ்வியலைப் பற்றியும், மனித உரிமைகளை மீறக் கூடாது என்பதைப் பற்றியெல்லாம் வகுப்பெடுக்கிறார்கள். ஆனால், ஒருவர் செய்யும் தவறு, ஒட்டுமொத்த காவல் துறைக்குமே களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகிறது. உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரணை நடத்த உத்தரவிட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டு, இப்போது அந்த வழக்கை CBCID–க்கு மாற்றியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

போதைப் பொருட்கள் நடமாட்டம் பற்றியும் இங்கே உறுப்பினர்கள் பேசினார்கள். போதைப் பொருள் நடமாட்டம், குறிப்பாக, கஞ்சா; இதுகுறித்து நான் ஏற்கெனவே ஆதி திராவிடர் வன்கொடுமை காவல் கண்காணிப்புக் குழுவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியிருந்தேன். இப்போது அவர்கள் பிடிக்கப்படுகிறார்கள். குற்றவாளிகளை இனம் காண்கிறார்கள், கண்டுபிடிக்கிறார்கள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்கிறார்கள். அதுசம்பந்தமாக இத்தனை வழக்குகள் சேர்ந்துவிட்டதே என்று பார்க்காமல், அவர்கள் தொடர்ந்து அந்தப் பணியிலே ஈடுபட்டு, அவர்களை ஒடுக்க வேண்டும்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நேற்றையதினம் பேசும்போது, பாராட்டுவதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். புகழ் பாடுவதைத்தான் நாம் தவிர்க்க வேண்டுமே தவிர, பாராட்டுவதைத் தவிர்க்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. குறிப்பாக, பல திட்டங்கள், 47 அறிவிப்புகள்; தமிழர்களுக்கு, தமிழ்நாட்டிற்கு என்ன தேவையோ அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த 47 அறிவிப்புகளில் என்னைக் கவர்ந்தது 17. மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும் 48, ஒலிம்பிக் போட்டியில் தங்கம் தேடல், அறிவுசார் நகரம், சமத்துவ நாள் உறுதிமொழி, வள்ளலார் பிறந்த நாள் தனிப்பெரும் கருணை நாள் என அறிவிப்பு, அன்னைத் தமிழில் அர்ச்சனை போன்ற திட்டங்களையெல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

குறிஞ்சான்குளம் காந்தாரியம்மன் கோயிலைப் பற்றி நான் கடந்த ஆண்டு பேசியிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலுரையில் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் தமிழ்நாட்டிற்கு தாக்குதல் வருகின்றதோ, ஆபத்து வருகின்றதோ அப்பொழுதெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மிகவும் அக்கறையோடு அதை அணுகுவார்கள். அதேபோன்று டெல்டா மாவட்டத்தில் நிலக்கரி எடுக்க வேண்டுமென்று ஒன்றிய அரசின் அறிவிப்பு வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கான தீர்மானங்களை இயற்றி, ஒன்றிய அரசை அணுகி அதைத் தவிர்த்திருக்கிறார்கள் என்பது வரவேற்கத்தக்கது. அதேபோன்று,

ஒன்றிய அரசின் மத்திய ஆயுத காவல் படைக்கு தமிழ் மொழி உட்பட 15 மொழிகளில் தேர்வு எழுத வேண்டும் என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதும் மிகவும் வரவேற்கத்தகுந்தது.

குறிப்பாக, புரட்சிகரமான திட்டங்கள் என்று சொல்வார்கள். சாதாரணமாக ஆட்சியாளர்களெல்லாம், இவரை பகைத்துக்கொள்ளக் கூடாது, அந்தச் சாதியினரை பகைத்துக்கொள்ளக் கூடாது என்று ஆட்சி செய்பவர்களும் உண்டு. ஆனால், எல்லா மக்களுக்குமான ஆட்சி என்ற புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்ததுதான் பள்ளிக் கல்வித் துறையுடன் ஆதி திராவிடர் பள்ளிகள் இணைப்பு என்பது.

தமிழ்நாடு காவல் துறையில் 20 ஆண்டுகளுக்குமேல் பணிபுரியும் காவலர்களுக்கு automatic promotion-ன்கீழ் SSI ஆக promotion கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள். 50 வயதைக் கடந்தவர்கள், 20 வயதிற்கான பயிற்சியை எடுக்கும்போது அவர்களுக்கு மனச்சோர்வு, உடல் உபாதைகள் ஏற்படுகின்றதே! ஏனென்றால், அவர்கள் 25 ஆண்டுகள் காவலர்களாகப் பணிபுரிந்து எல்லாவித பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பயிற்சியை ஒன்று எளிமையாக்க வேண்டும் அல்லது இரத்து செய்ய வேண்டும்.

சட்டமன்றப் பேரவைக்குள் உள்ள காவலர்களுக்கு Food allowance 100 ரூபாய் வழங்கப்படுகிறது. அதேபோன்று, சட்டமன்றப் பேரவைக்கு வெளியில் பணியாற்றக்கூடிய இந்த campus-ல் உள்ள காவலர்களுக்கும் Food allowance ஆக 100 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் feeding allowance என்று காவல் துறை ஆணையரகத்திற்குக் கொடுக்கிறார்கள். அதேபோன்று, தாம்பரம் காவல் துறை ஆணையரகத்திற்கும், ஆவடி காவல் துறை ஆணையரகத்திற்கும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து சட்டம்-ஒழுங்கு. சட்டம்-ஒழுங்கைப் பற்றி இங்கே அனைவரும் பேசினார்கள். நானும்கூட சட்டம்-ஒழுங்கைப் பற்றிப் பேசலாம் என்று எண்ணி இன்று காலை நூலகத்திற்குச் சென்று ஒரு

புத்தகத்தை எடுத்துப் படித்தேன். அப்போது, 2012 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதியன்று அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, "மாநிலத்தில் ஒருவருக்கு ஒருவர் உறவுகளுக்குள் ஏற்படும் தகராறு, தனிப்பட்ட விரோதம், கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றின் காரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகிற கொலைகளை வைத்து மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு பராமரிப்பைக் குறைகூறுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், நான் அதைப் பற்றிப் பேசவில்லை. பல விஷயங்களில் அவர் முன்னுதாரணமாக இருப்பவர். நான் இதை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு, சொந்தப் பிரச்சினை, கோயில்களில் தகராறு, கஞ்சா பிரச்சினை, அந்தத் தகராறில் படுகொலை செய்வதையெல்லாம் சட்டம்-ஒழுங்கு தமிழ்நாட்டில் கெட்டுவிட்டது என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கூறியதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஒரு மிகப் பெரிய தொகுதி. அங்கே ஸ்ரீபெரும்புதூர் காவல் நிலையம் இருக்கின்றது. அங்கே ஒரு காவல் நிலையம் போதாது. புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் 2 இலட்சத்திற்கும் மேல் இருக்கிறார்கள். இருங்காட்டுக்கோட்டையில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறோம்.

ஸ்ரீபெரும்புதூர் மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். ஏனென்றால், அங்கு 118 விழுக்காடு மக்கள்—சாதாரணமாக 100 சதவிகித மக்கள் மத்தியில் vaccine போட்டால், 100 சதவிகிதம் போட்டோம் என்று பெருமிதம் அடைகின்றோம். ஆனால், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் 118 சதவிகிதம் vaccine போடப்பட்டிருக்கிறது. மக்கள்தொகை பெருக்கம் அதிகமாக இருக்கின்றது. வேலூரிலிருந்து பார்த்தால், அந்த நெடுஞ்சாலையில் ஒரு மருத்துவமனையும் கிடையாது, அடுத்து, ஸ்ரீபெரும்புதூர்தான். Fatalities நிறைய நடக்கிறது. நிறைய இறப்புகள் நிகழ்கின்றன. விபத்துகளும் நிறைய நடக்கின்றன. ஒரு trauma centre உடன் அந்த மருத்துவமனையை நீங்கள் தரமுயர்த்தித்தர வேண்டும்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், மாங்காட்டிற்கு ஒரு பேருந்து நிலையத்தைக் கொடுத்தார். அவருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோன்று ஒரகடம், படப்பை, சுங்குவார்சத்திரத்திற்கும் ஒரு பேருந்து நிலையம் அமைத்துத்தர வேண்டும்.

குன்றத்தூர், மேத்தா நகர் பகுதியில் widening என்று சொல்கிறார்கள். அங்கேயிருக்கின்ற வீடுகள் எல்லாவற்றிற்கும் ஏற்கெனவே CMDA approval பெற்று, வீடுகள் கட்டியிருக்கிறார்கள். யாரோ ஒரு தனிநபர் அங்கு 40, 50 வீடுகளைக் கட்டுகிறார். அதற்காக அந்த ஏழையெளிய மக்கள் வசிக்கும் இடத்தை widening செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஸ்ரீபெரும்புதூர் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. பெரும்பாலும் இங்கிருந்து தொழிலாளர்களும், அதிகாரிகளும் சென்னைக்கு வந்து போகிறார்கள். அதனால் பொருள் விரயம், பெட்ரோல் விரயம் எல்லா விரயமும் ஏற்படுகின்றது. அங்கேயே வெளிநாடுகளில் உள்ளதுபோல் township, அங்கிருந்தே அவர்கள் பணியாற்ற வேண்டும். Supermarket, விடுதிகள், housing facilities இவை அனைத்தையும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரகடம் அல்லது வல்லம் சிப்காட் பகுதியில், நந்தம்பாக்கம் பகுதியில் உள்ளதுபோல் வர்த்தக மையம் ஒன்று அமைத்தால் நலமாக இருக்கும். தொழிற்சாலையில் உள்ள கழிவுகளை அந்தந்த கிராம மக்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், அந்த பகுதியிலுள்ளவர்கள் அதை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் நீர்நிலை விஷயத்தில் என்னிடம் நிதி ஆதாரம் இல்லை என்று கையை விரித்துவிட்டார். அவர் உடனே இதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஓர் ஆட்சி எப்படி இருக்கிறது என்று இளைஞர்கள், பெரியவர்கள் எல்லோரும் சொல்வதைவிட குழந்தைகள் சொல்கிறார்கள். குறிப்பாக, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொல்வது வேறு. ஆனால், 'குழந்தையும், தெய்வமும் ஒன்று' என்று சிந்து, ஜனனி, இசக்கி அம்மாள், தென்காசி சூரியகுமார், கிருஷ்ணகிரி அஸ்வினி போன்ற குழந்தைகளெல்லாம் இந்த

ஆட்சியைப் பற்றி மிகப் பெரிய அளவில் நம்பிக்கையோடு பேசுகிறார்கள். இதுதான் ஒரு நல்லாட்சி, இப்படிப்பட்ட ஆட்சிதான் இந்தத் தேசத்திற்கு வேண்டுமென்று பேசுகிறார்கள்.

நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யாமலே மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நிதிநிலையை indirect *ஆக தாக்கல் செய்திருக்கிறார். அது என்னவென்றால், 4 கோடி மகளிருக்கு உள்ள வாய்ப்புகள், 2 கோடி இளைஞர்களின் எதிர்காலத்தை அந்த அறிவிப்பில் பார்க்க முடிந்தது. அதேபோன்று, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் பயனாளிகள் 1 கோடியே 47 இலட்சம் என்பது ஒரு மிகப் பெரிய வரலாற்றை இயற்றியிருக்கிறது.*

'இன்னுயிர் காப்போம் 48'. இந்த 'இன்னுயிர் காப்போம் 48' மகாராஷ்டிராவில் இல்லை. மகாராஷ்டிராவில் 'இன்னுயிர் காப்போம் 48' இருந்திருந்தால், நேற்று நான் கர்நாடகாவிற்கு போகும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப்பற்றி எங்களுடைய தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, இந்தத் திட்டங்களை எல்லாம் சொல்லிக்கொண்டே வந்தேன். கர்நாடகா manifesto-*வில் இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்.* Guarantee scheme *என்று ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.* Credit guarantee scheme *என்று சொல்லும்போது, 'தமிழ்நாட்டில் என்னென்ன* scheme *இருக்கின்றது என்ற* list *கொடுங்கள்' என்று சொன்னார். எல்லாவற்றையும் எடுத்துக்கொடுத்தேன். அப்போது சொன்னார், இந்த 'இன்னுயிர் காப்போம் 48' என்பது மகாராஷ்டிராவில் இருந்திருந்தால்* Tata *குழுமத்தின் தலைவர்* Thiru Mistry *உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். விபத்தில் சிக்கி காயமுற்றிருக்கிறார். மருத்துவமனைக்கு கொண்டு போவதற்கு ஆள் இல்லை. பக்கத்தில் மருத்துவமனை இல்லை. எங்கே எடுத்துக்கொண்டுபோய் சேர்ப்பது என்று பயப்படுகிறார்கள். இதனால் அகால மரணமடைந்துவிட்டார்.*

அதேபோல, காவல் துறை குடியிருப்புகளில் அமைச்சுப் பணியாளர்களுக்கும் 10 சதவிகிதம் ஒதுக்கீடு வேண்டும். தலித் கிறித்துவர்களைப் பொறுத்தவரையல், இது ஒரு நீண்ட நெடுங்காலப் பிரச்சினை. தலித்திலிருந்து கிறித்துவர்களாக மாறினாலும் வன்கொடுமையிலிருந்து தப்பிக்க முடியவில்லை. ஆகையால் நான், அண்ணன் திரு. ஜி.கே. மணி மற்றும் இங்கிருக்கின்ற

தலைவர்களெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் முறையிட்டு, ஒரு கடிதத்தைக் கொடுத்தோம். உடனே, அதைத் தீர்மானமாகக் கொண்டு வந்து, நாங்கள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று சொன்னார். தீர்மானிப்பது ஒன்றிய அரசாக இருந்தாலும், அதற்கான தீர்மானத்தை இங்கே நிறைவேற்றியது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. கிறித்துவ மக்களின் சார்பாக, தலித் கிறித்துவ மக்களின் சார்பாக நாளை மறுநாள் அனைத்து Bishop-களும் நன்றி சொல்ல வரவிருக்கிறார்கள். ஆனால், இதை எதிர்த்து ஒரு தேசிய கட்சி வெளிநடப்பு செய்கிறது. அப்படியானல், கிறித்துவர்களின் வாக்கு அவர்களுக்கு வேண்டாமா? அவர்கள் இந்த தேசத்தின் மக்கள் இல்லையா? இது ஒரு பக்கம்.

பிற்பகல் 2–50

25 விழுக்காட்டில் 4–ல் ஒருவராக இருப்பவர்கள் ஆதி திராவிட பழங்குடியின மக்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மக்களுக்கான அறிவிப்புகளை செய்கிறார். இன்னொரு கட்சி புறக்கணிக்கிறது. என்ன தேசம் இது? என்ன தேசம் இது? (குறுக்கீடுகள்) கிறித்துவர்களை தேசிய கட்சி புறக்கணிக்கிறது. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒருவர் மட்டும் எழுந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அனைவரையும் நீங்கள் உட்காரச் சொல்லுங்கள். பிறகு, நீங்கள் பேசுங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் எப்போது பேசினாலும், வேண்டுமென்றே திட்டமிட்டு,

பிரதான எதிர்க்கட்சியான எங்களைக் குறை சொல்லிப் பேசுவதே வாடிக்கையாகிவிட்டது. தொடர்ந்து இதைத்தான் கடைபிடித்து வருகிறார். அவையிலிருந்து வெளிநடப்பு செய்வது என்பது அந்தந்தக் கட்சியினுடைய உரிமை. அதில் மற்ற கட்சிகள் தலையிடுவதற்கு எந்தவித உரிமையும் கிடையாது. இங்கே மரியாதை இல்லையென்றால், எங்களுடைய கருத்துகளுக்கு ஜனநாயக முறைப்படி நாங்கள் வெளிநடப்பு செய்வோம். அதைப்பற்றிப் பேசுவதற்கு அவருக்கு உரிமை கிடையாது. எங்களுக்கு பாடம் சொல்லித் தர வேண்டிய அவசியம் அவருக்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் மற்றொரு கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் நீக்கச் சொல்கிறீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வதைப்போல, அவர் *** (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நீங்கள் சொன்னதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.* (குறுக்கீடு) *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினையைப் பொறுத்தவரை இல்லாத ஒன்றைச் சொல்லியிருந்தால், கோபப்படலாம். என்ன நடந்ததோ, அதைச் சொல்லியிருக்கிறார்.* (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) *இல்லை. நான் உங்களைக் குறை சொல்லவில்லை. அதாவது, ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின்போது, அதை அவர்கள் புறக்கணித்தார்கள் என்று சொன்னார். ஆமாம். நீங்கள் இல்லை. அது உண்மைதானே!* (குறுக்கீடுகள்) *அவர் அதைப் பற்றி பேசுகிறார். எனக்கு வாய்ப்புத் தந்திருந்தால்* Backward Classes Welfare Department demand*-ன்போதும் சென்றுவிட்டீர்கள் என்று சொல்லியிருப்பேன். அப்படிப் பேசுவதில் என்ன இருக்கிறது?* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையை நாங்கள் புறக்கணிக்கவில்லை. அன்றையதினம் பேசிய எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை அரசினுடைய கவனத்திற்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். பதிலுரையைத்தான் நாங்கள் புறக்கணித்தோம். நாங்கள் பேசுவதை நீங்கள் நேரடி ஒளிபரப்பு செய்வதில்லை. அப்படியிருக்கும்போது, நீங்கள் பேசுவதை மட்டும் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமா? நாங்கள் புறக்கணித்ததாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். நாங்கள் புறக்கணிக்கவில்லை. மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு, எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த மக்களுடைய பிரதான தேவைகளை, கோரிக்கைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவையெல்லாம் பதிவாகியிருக்கின்றன. எனவே, நாங்கள் ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தோம் என்று சொல்வது சரியல்ல. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் புறக்கணித்தார்களா, இல்லையா என்பது வேறு. என்ன நடந்ததோ, அதை மட்டும்தானே அவர் சொன்னார். அப்போது, நீங்கள் இல்லை. அதுதானே உண்மை! (குறுக்கீடுகள்) அதைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் கேளுங்கள். புறக்கணித்தார்கள் என்று சொல்வது தவறு என்று நீங்கள் கருதுவீர்களேயானால், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவதை, அவருடைய பதிலுரையைக் கேட்காமல், நீங்கள் வெறுத்து வெளியே சென்றீர்கள் என்று சொல்லிக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையைப் புறக்கணித்தார்கள் என்று சொன்னதற்குத்தான் நாங்கள் பதில் சொல்கிறோம். எங்களைக் கேட்பதற்கு அவர் யார்? அவருக்கும் எங்களுடைய கட்சிக்கும் என்ன சம்பந்தம்? அவருடைய பிரச்சினையைப் பேசட்டும். அதைவிட்டுவிட்டு தொடர்ந்து இவ்வாறுதான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஒரு நாள், இரண்டு நாட்கள் அல்ல. எப்போது பார்த்தாலும் காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள், வேண்டுமென்றே திட்டமிட்டு ஏதாவது ஒரு குழப்பத்தை அவையிலே ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் பேசுகிறார். வேறு எந்தக் கட்சித் தலைவரும் அவ்வாறு பேசுவதில்லை. முன் வரிசையில் அமர்ந்திருக்கிற பல கட்சிகளின் தலைவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் யாருமே எதிர்க்கட்சியைப் பற்றி குறிப்பிடுவதில்லை. அவர்கள் என்ன கருத்தைப் பதிவு செய்ய வேண்டுமோ, அரசுக்கு என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். ஆனால், மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் மட்டும்தான் ஒவ்வொரு முறை பேசுகின்றபோதும், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைக் குறை சொல்லிப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். தயவுசெய்து இதைத் தவிர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 2–55

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைப்போன்று நான் வேண்டுமென்று சொல்லவில்லை. ஒரு அவையில் வாதம் என்பது. . .* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை விட்டுவிடுங்கள்.* (குறுக்கீடு) *வேறு* subject*-க்குச் செல்லுங்கள், நேரமாகிவிட்டது.* (குறுக்கீடுகள்) *போதும். அடுத்த* subject*-க்குச் செல்லுங்கள்.* (குறுக்கீடுகள்)

திரு. கு. செல்வபெருந்தகை: *கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்றவற்றைப்பற்றி விவாதம் செய்வதற்குத்தான் இந்தப் பேரவை. 'நீ கடந்த காலத்தைப் பற்றியே பேசக்கூடாது' என்று சொன்னால், நான் எப்படிப் பேச வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கள். நான் சொன்னதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ஆருத்ரா நிறுவனம் எல்லாம் எப்போது ஆரம்பிக்கப்பட்டன, எப்போது அந்த நிறுவனங்களெல்லாம் ஆரம்பிக்கப்பட்டன என்றுதான் நான் கூறினேன். நான் அ.இ.அ.தி.மு.க. என்று சொல்லவில்லை, கடந்தகால ஆட்சி என்று சொல்லவில்லை. மிகவும் பெருந்தன்மையாகப் பேசியிருக்கிறேன். இந்தக் கம்பெனிகளெல்லாம் எப்போது ஆரம்பிக்கப்பட்டன?* (குறுக்கீடுகள்) *சொல்லுங்கள், இந்த கம்பெனிகளெல்லாம் எப்போது ஆரம்பிக்கப்பட்டன? எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கேட்கிறேன். இந்த மோசடி நிறுவனங்களெல்லாம் எப்போது ஏற்பட்டன? நான் சொன்னேனா? அ.இ.அ.தி.மு.க. என்றும் சொல்லவில்லை; இவர்கள் ஆட்சி என்றும் சொல்லவில்லை.* (குறுக்கீடுகள்) *நான் பெருந்தன்மையாகப் பேசியிருக்கிறேன்.* (குறுக்கீடுகள்) *பெருந்தன்மையாகப் பேசியிருக்கிறேன்.* (குறுக்கீடு) *எப்போது இந்த நிறுவனங்களெல்லாம் ஆரம்பிக்கப்பட்டன?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே திட்டமிட்டு, அவையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே திட்டமிட்டு வந்திருப்பதாகத்தான் நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால்,*

எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பேசாமல், ஒவ்வொரு முறையும் எங்களை சாடித்தான் பேசுகிறார். இது தவறான நடைமுறை. அவருடைய கருத்தைச் சொன்னால் தவறில்லை. மற்றவர்களைப் புண்படுத்திப் பேசினார் என்றால், நாங்களும் பேச வேண்டிவரும். அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். அப்படியென்றால், நீங்கள் அதையும் பதிவு செய்ய வேண்டும். இதைச் சொன்னால், ** என்பதையும் பதிவு செய்ய வேண்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. **அவருடைய உரிமை. அதில் நாங்கள் தலையிடவில்லை. ஆனால், எங்களைத் தவறாகப் பேசினால், நாங்கள் பேசுவதையும் அவைக் குறிப்பிலே பதிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். இப்போதும், தனிப்பட்ட முறையில் ** என்று கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பணியாற்றுவது பரவாயில்லை. ஆனால், எந்தக் கட்சிக்கும், எந்தத் தலைவருக்கும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதை விடுங்கள். (குறுக்கீடு) அதை விடுத்து, தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அதை விடுங்கள். அந்த subject–ஐ அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. அதற்குப் பதில் சொல்ல வேண்டாம்; 15 நிமிடங்கள் ஆகிவிட்டன, please, உரையை முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: ஒரு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவராய் ** பேச வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அந்த subject–ஐ பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) திரு. செல்வபெருந்தகை, நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அவர்களை உட்காரச் சொல்லுங்கள், நான் மைக் தரச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் நில்லுங்கள், மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அனைவரும் தயவுசெய்து அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *எதிர்க்கட்சித் தலைவர், அனைவரையும் தயவுசெய்து அமைதியாக உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பேசலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். எதை வேண்டுமானாலும் விவாதம் செய்யலாம். கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள். என்ன விவகாரம் என்பதைப் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) திரு. கோவிந்தசாமி, உட்காருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கோவிந்தசாமி, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார். என்ன விவகாரம் என்பதைப் பேசி முடியுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, பேசி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரியாததா, விடுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னதை நீக்கியாகிவிட்டது. திரு. செல்வபெருந்தகை, உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று மைக்கில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு, நீங்கள் எழுந்துநின்று சொல்லுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இறுதியாகப் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, அதைத்தான் நான் திரும்பவும் சொல்கிறேன், ** என்கிற வார்த்தையைத்தான் பயன்படுத்தினார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. திரும்ப என்ன சொல்ல வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: இல்லை, நான் ஒன்றும் சொல்ல முடியாது. இன்னும் சொல்லப்போனால், முதன்முதலில் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து 15 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டன; 7 நிமிடங்கள்தான். நீங்கள் நல்ல ஒரு பெரிய கட்சியினுடைய தலைவர். நிறைவாக உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: யார் மனதும் புண்படும்படியாகப் பேசுவது என்பது எங்களுடைய விருப்பமே கிடையாது. (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொன்னதுதான். ஒரு ஜனநாயக... (குறுக்கீடுகள்) என்னங்க, ** இது தமிழ்நாடு; (குறுக்கீடுகள்) இங்கே இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் எப்படிப்பட்டவர்! இவர் முன்பு, எதையும் பேச முடியாது என்றால், அப்போது என்னதான் பேசுவது? (குறுக்கீடுகள்) வேண்டுமானால், நான் என்ன பேச வேண்டுமென்று, எழுதிக் கொடுக்க சொல்லுங்கள். அதை நான் பேசிவிட்டுப் போகிறேன். என்ன பேச வேண்டும்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 3-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் அதையெல்லாம் பதிவு செய்ய வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். ** அந்த விவகாரத்திற்குள் போக வேண்டாம். இப்போது நீங்கள் ஆரோக்கியமாகப் பேசி, உரையை முடியுங்கள்.* (குறுக்கீடு) *இல்லை, மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் கேட்பது என்னவெனில், மானியக் கோரிக்கைக்கு எதிராக நான் என்ன பேசிவிட்டேன்?* (குறுக்கீடு) *இன்னும் நிறைய கருத்துகள் இருக்கின்றன. பேசவே இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. மாண்புமிகு உறுப்பினர், பேசி உரையை முடியுங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் உரையை முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு காலகட்டத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏறக்குறைய 62,000 பட்டாக்களை வழங்கினார்கள்; அதனுடைய மதிப்பு ரூ.2,250 கோடியாகும். இப்போது 25,000 பட்டாக்கள் அடங்கலில் ஏற்றப்படவில்லை. அப்போது கிராம நத்தம், களம் புறம்போக்கு, மேய்க்கால் ஆகியவற்றை மாற்று வகை செய்தும் பட்டா கொடுத்திருக்கிறார்கள். தற்போது, அந்த மக்களெல்லாம் எதிர்பார்ப்பது என்னவென்றால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பட்டா வழங்கியதை, அவருடைய ஒட்டுமொத்த உருவமாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர வேண்டும் என்பதாகும். ஏனென்றால், இந்திய அரசமைப்புச் சட்டம், ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் இருக்க வேண்டும் என்று சொல்கிறது. இதில், இருப்பிடம் இல்லாமல் இருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே செய்ய வேண்டும்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

குறிப்பாக, குழந்தைகளெல்லாம் படிக்கிறார்கள். படிக்கின்ற குழந்தைகளுக்கு விளக்கு இல்லை. ஏற்கெனவே நாம் விளக்கு கொடுத்திருந்தோம்; அதையும் நிறுத்திவிட்டார்கள். கேட்டால், உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். தலைமைச் செயலாளர் அவர்களிடம் சொல்லி, அந்த வழக்கை உடனே நடத்தி, அதற்கு முன்பாக, உடனே, ஏதாவது indemnity bond வாங்கிக் கொண்டு, பல குடும்பங்களுக்கு விளக்கிற்கான மின்சாரத்தை, தமிழ்நாட்டிற்கு ஒளியேற்றுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றே ஒன்றுதான், இந்திய அரசியலிலே, கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி பேசாதவர்களே இல்லை. எங்கள் கட்சியினுடைய தேசியத் தலைவர் மாண்புமிகு மல்லிகார்ஜுன கார்கே அவர்கள், அதைப்பற்றிக் கூறியபோது, 'இந்திய ஜனநாயகத்தில் அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதற்கு தமிழ்நாட்டிலிருந்து ஓர் அதிர்வு ஏற்பட்டது. அந்த அதிர்வுதான் உங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு, முடிவு' என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களெல்லாம் ஜனநாயகம் செத்துவிடவில்லை என்பதால்தான் இங்கே உரையாற்றிக் கொண்டிருக்கிறோம். ஜனநாயகத்தை யார் மூழ்கடிக்க விரும்பினாலும், ஜனநாயகத்திற்கு எதிராக யார் குரல் கொடுத்தாலும் அதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கு பேச்சுரிமை இருக்கிறது. நான் ஏதாவது இல்லாததை, பொல்லாததை, அவைக் குறிப்பில் இல்லாததைப் பேசினால், நீங்கள் முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தயவுசெய்து காவல் துறை மானியக் கோரிக்கையில் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. கு. செல்வபெருந்தகை: இல்லை, இல்லை, நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

2023 ஏப்ரல் 20]

திரு. கு. செல்வபெருந்தகை: *இல்லை, இல்லை, நான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சொல்லி முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *அது நாகரிகமான வார்த்தையா? இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று சொல்லுங்கள் பார்க்கலாம்? (குறுக்கீடு) நான் இப்போது பேச ஆரம்பித்தால் ** என்பதுதான் செய்யக்கூடாது. நாங்கள் பல இயக்கங்களில் வேலை பார்த்திருக்கிறோம். நாங்கள் யாருக்கும் ** செய்யவில்லை. (குறுக்கீடுகள்) நாங்கள் யாருக்கும் ** செய்யவில்லை. (குறுக்கீடுகள்) யாருக்கு ** செய்தோம், சொல்லுங்கள் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) இதோ உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே, நாங்களெல்லாம் ஒன்றாக இருந்த தோழர்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள்; பேச்சுரிமை உங்களுக்குத்தான். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் மொத்தமாக எழுந்து நிற்காதீர்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில், என்ன விஷயம் என்று ஒருவர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அத்தனை பேரும் எழுந்து நின்று,* chorus *ஆக சப்தம் போடுவதால், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எப்படி கேட்கும்? (குறுக்கீடுகள்) அவையில் யார் என்ன பேசுகிறார்கள், என்ன பிரச்சினை என்பது தெரியாமல், எல்லோரும் 'ஓ' என்று சப்தம் போட்டுக்கொண்டு எழுந்து நிற்பதால், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எப்படி கேட்கும்?*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இவர் காவல் துறை மானியத்தில் பேசவே மாட்டேன் என்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *காவல் துறை மானியக் கோரிக்கையில்தான் அவரைப் பேசச் சொன்னேன்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *இவர் தொடர்ந்து இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக அங்கே இருந்திருக்கிறார்; அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்திருக்கிறார்கள்; இந்தமாதிரியான சூழ்நிலை இல்லை. ஆனால், இவர் ஒவ்வொருமுறையும் ** அடுத்ததாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆரோக்கியமாகப் பேசுவார்கள். அதுமட்டுமல்லாமல், யார் ** செய்தது? இவர் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறியது ** கிடையாதா? அது ** இவர் எதற்காக ** பற்றி பேசுகிறார். இதெல்லாம் நியாயமே கிடையாது. ஆரோக்கியமாக சபை நடக்க வேண்டும்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடு)

திரு. எஸ்.பி. வேலுமணி: அப்படியெல்லாம் கிடையாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதாவது, எல்லா மானியக் கோரிக்கைகளிலும் ஒரு கோரிக்கை வைத்து, 'live செய்வதில்லை; நேரடி ஒளிபரப்பு செய்யவில்லை' என்று தொடர்ந்து நாங்கள் வெளிநடப்பு செய்து கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் பதிவு செய்துவிட்டுப் போகிறோம். கோரிக்கைகளைப் பதிவு செய்துவிட்டு போகிறோம். Subject குறித்து தெளிவாகப் பேசிவிட்டுப் போகிறோம். தற்போது, பழைய record-ஐ எடுத்து வந்து மீண்டும், மீண்டும் எங்களுடைய ஆட்சியைப் பற்றி பேசுகிறார். இந்த ஆட்சியில் எதுவும் நடக்கவில்லையா! இந்த ஆட்சியில் இருப்பதைப் பேசுவதற்கு நீங்கள் எல்லோருக்கும் வாய்ப்பு கொடுங்கள். ஏதாவது ஒன்றைப் பேசினால், ** இல்லை, இல்லை. அப்படியெல்லாம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் தெரியாமல்தான் கேட்கிறேன்; (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கோரிக்கை வைக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) நேரம் கொடுத்ததை பற்றி நீங்கள் யாரும் பேச முடியாது. (குறுக்கீடுகள்) நான் அப்படி நேரம். . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நேரம் கொடுத்தது. . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதைத்தான் நீக்கிவிட்டேனே! (குறுக்கீடுகள்) அதைத்தான் நீக்கிவிட்டேனே! பிறகு ஏன் அதைப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பற்றியே மீண்டும், மீண்டும் பேசுகிறீர்கள்? அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய விஷயத்தை எடுத்து பிரச்சினை செய்தால், அப்போது யார் ** என்று சொல்லுங்கள். நாங்கள் யாரும் திட்டம் போட்டுச் செய்யவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் வார்த்தைக்கு, ஒவ்வொருவரும் ஒரு கருத்தை எடுத்துக்கொள்ளலாம். என்னைச் சொன்னீர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். எனவே, இதுபோன்ற விஷயங்கள் வேண்டாம். சில நேரங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், தன்னுடைய உரையை நிறைவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம். அவை அமைதியாக நடப்பதை உறுதி செய்ய வேண்டும். Please.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் வார்த்தைகளை குத்தி பேசும்போது, அதனை நாங்கள் நீக்கத்தான் செய்கிறோம். தயவுசெய்து அப்படிப்பட்ட வார்த்தைகளை யாரும் இனிமேல் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர், அமைதியாக இருக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கூற வந்ததைக் கூறுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் இரண்டு வருடங்களாக இந்த அவையைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். நாகரிகமான வார்த்தை அல்லாமல், யாரையும் குத்திப் பேசினாலோ, மனம் நோகும்படி பேசினாலோ, நீக்கத்தான் செய்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படிப்பட்ட கருத்துகள் தேவையில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னபடி அந்த அடிப்படையில் நீங்கள் பேசி, உரையை நிறைவு செய்து தாருங்கள். Please.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்திற்கென்று ஒரு கொள்கை இருக்கிறது; கோட்பாடு இருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், நீங்கள் அப்படி உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் என்ன பேச வேண்டும் என்பதை. . . (குறுக்கீடுகள்) நாங்கள் என்ன பேச வேண்டும் என்பதை நாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்களுக்குச் சொல்கிறேன்; பேசுவதில் பல வகை உண்டு. நேரடியாக பானம் போடுவதும் உண்டு. இங்கே பற்ற வைத்த வெடி அங்கே வெடிப்பதும் உண்டு. அதெல்லாம் நமக்குத் தெரியாத கலை அல்ல. நடந்தவை நடந்தவையாக முடிந்துவிட்டது. தயவுசெய்து அமைதியாக இருங்கள். நீங்களும் பேசி முடித்துவிடுங்கள். நான் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அடுத்ததாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டும். அதில் எந்தவிதச் சிக்கல்களும் வந்துவிடக்கூடாது. அதற்காகத்தான் சொல்ல வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாகச் சொல்லுங்கள், தம்பி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகளையெல்லாம் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்வதற்காக தங்களிடம் கொடுக்கிறேன். கடைசியாக, ஐயா கவிக்கோ அப்துல் ரகுமான் சொன்ன ஒரு கவிதையைப் படித்து, நான் முடிக்கிறேன். இவையெல்லாம் அரசு குறிப்பில் இருப்பதுதான்.*

'எங்கள் வீட்டில் திருடிக்கொண்டு ஒருவன் ஓடினான். திருடன், திருடன் என்று கத்தினேன். அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாக

என்னைக் கைது செய்துவிட்டார்கள்'–கவிக்கோ அப்துல் ரகுமான். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அவர்களையும், எங்களையெல்லாம் ஆளாக்கி இந்த நிலைக்கு. . .* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் ஆளாக்கி இந்த நிலைக்கு உயர்த்திய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *இருபெரும் தலைவர்களினுடைய இலட்சியங்களை நிறைவேற்றும்விதமாக ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்ற துடிப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அதேபோல். . .* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் பின்னால் இருந்து பேசுகிறார்கள்.* (குறுக்கீடுகள்) *இன்றைக்கு முழுவதும் அவர்கள் எப்பொழுதெல்லாம் எழுந்து நின்று பேசினார்களோ, அவ்வளவு நேரமும்* count *ஆகும். தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். எல்லாவற்றிலும் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே இருக்கிறார்கள். இந்த அவையில் எந்தத் தவறும் நடக்காது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுங்கள்.* (குறுக்கீடுகள்) *இன்றைக்கு முழுவதும் 15 நிமிடங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவ்வளவு நேரமும்* count *ஆகும்.* (குறுக்கீடு) Speaker*–ஐ பாருங்கள், 15 நிமிடங்கள் பேசியிருக்கிறேன்.* (குறுக்கீடு) *காலையிலிருந்து எல்லாமே* count *ஆகிக்கொண்டேதான் இருக்கும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நேரம் 3–08 ஆகிறது. நாங்கள் ஆளுகின்ற கட்சியாக இருக்கும்போது, எதிர்க்கட்சித் தலைவருக்கு 1–30 மணியிலிருந்து 2–00 மணிக்குள் பேச வாய்ப்பு கொடுத்துவிடுவோம். நீங்கள் 3–00 மணிக்குத்தான் வாய்ப்பு தருகிறீர்கள். எத்தனை மணிக்கு முடிப்பது? தெரியவில்லை. எல்லோருமே பசி மயக்கத்தில் இருக்கிறார்கள். சோர்வான நேரத்தில் எங்களுக்கு இந்த வாய்ப்பைக் கொடுக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நாங்கள் கேட்டோம். நீங்கள் ஏதோ ஒரு பெரிய வெற்றி விழாவிற்குச் சென்றதாகச் சொன்னார்கள்.* Late *ஆக வரட்டுமே என்று விட்டுவிட்டோம்.* (*சிரிப்பு*)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏதோ வெற்றி விழா என்று சொன்னதாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த அவையில் முன் வரிசை* leaders *கொஞ்சம் அதிகமாக இருக்கிறார்கள். நீங்கள் இருக்கக்கூடிய காலத்தில் குறைவாக இருந்த காரணத்தினால், முன்கூட்டியே முடிக்க முடிந்திருக்கும். திட்டம் போட்டுச் செய்யவில்லை. முன் வரிசையில் இருப்பவர்களுக்கு 5 நிமிடங்கள், 7 நிமிடங்கள் என்று கொடுக்கப்பட்டன.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் போடுவது அல்ல; காலையில் 10–00 மணிக்கு வந்து தற்போது 3–00 மணி ஆகிவிட்டது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள்* fresh *ஆக இருக்கிறீர்கள்; அழகாகப் பேசுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 3–10

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கழக உறுப்பினர்கள், பொதுச் செயலாளராக என்னைத் தேர்தல் மூலமாக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த அனைத்து கழக உறுப்பினர்களுக்கும் எனது*

நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குத் துணை நின்ற கழக நிர்வாகிகளுக்கும், தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், மாண்புமிகு நாடாளுமன்றக் குழு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவையில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம். இன்றையதினம் காவல் மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*எங்களது ஆட்சிக் காலத்தில் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி, வேளாண்மை, தொழில், மருத்துவம், பள்ளி மற்றும் உயர் கல்வி, பொதுப் பணி, நெடுஞ்சாலை, உள்ளாட்சி, கால்நடை, ஆதி திராவிடர், பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், உணவு மற்றும் கூட்டுறவு என்று அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக திகழ்ந்தது தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) இவை அனைத்திற்கும் முக்கியமான அடித்தளம் இந்தியாவிலேயே அமைதியான, பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு. அதற்கு முழுக் காரணம், எங்களது ஆட்சிக் காலத்தில் சீரிய முறையில் ஆலோசனை வழங்கியதால் தமிழக காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட்டது. யாருடைய ஆட்சியாக இருந்தாலும் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒருசில அசம்பாவித சம்பவங்கள் நடைபெறுவது இயல்புதான். ஆனால், ** (குறுக்கீடுகள்) தற்போதை தமிழக அரசு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உள்நோக்கத்தோடு அப்படிப் பேச வேண்டாம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இருக்கின்ற விஷயத்தைத்தான் சொல்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருக்கின்றது நீங்கள் தயார் செய்ததுதானே! அது வேண்டாம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *வேறு என்ன? தவறாக ஒன்றும் சொல்லவில்லையே!*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள். அந்த வார்த்தையை மட்டும் சொல்லுங்கள். நாங்கள் அதற்கு தகுந்த மாதிரி வேறு வார்த்தையை போட்டுக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

திரு. எடப்பாடி K. பழனிசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடங்குகின்றபோதே 3 மணிக்கு மேல் ஆகிவிட்டது, நாங்களெல்லாம் இவ்வளவு நேரமாக இருந்து பேச வேண்டியிருக்கிறது என்று வருத்தப்பட்டார்கள். குறுக்கிட வேண்டாம் என்றுதான் நானும் கருதி இருந்தேன். நாளை பதில் சொல்கின்றபோது விளக்கமாக பதில் சொல்லலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது ** இருக்கிறது என்பதை அவர் இங்கே பதிவு செய்திருக்கிறார். நான், அவருக்குத் தெரிவிக்க விரும்புவது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இன்றைக்கு தமிழ்நாடு காவல் துறை மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.* (மேசையைத் தட்டும் ஒலி) *உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஜல்லிக்கட்டு, மதுரை சித்திரைத் திருவிழா, விநாயகர் சதுர்த்தி, தேவர் குருபூஜை, இமானுவேல் சேகரன் நினைவு நாள், திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா, தைப் பூசத் திருவிழா, திருவாரூர் தேர்த் திருவிழா என அனைத்து விழாக்களும் எவ்வளவு அமைதியாக, சுமுகமாக நடைபெற்றன என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்த திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரையிலே சாதி மோதல்கள், மத கலவரங்கள், போலீஸ்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

துப்பாக்கிச் சூடு, கள்ளச் சாராய சாவு, இரயில் கொள்ளையர்கள், வட மாநில கொள்ளையர் அட்டகாசம், தொழிற்சாலை போராட்டங்கள் என வழக்கமான சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் எல்லாம் முறையாகத் தடுக்கப்பட்டு, தமிழ்நாடு இன்றைக்கு அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் சமீபத்தில் 8–4–2023 அன்று சென்னை வந்தபோதும், குடியரசுத் தலைவர் அவர்கள் 18–2–2023 அன்று கோவை வந்தபோதும், 18–3–2023 அன்று கன்னியாகுமரி வந்தபோதும், ஜனவரி மாதம் முதல் சென்னை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஜி–20 மாநாடு நிகழ்ச்சி நடைபெற்றிடவும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, மிகப் பெரிய பாராட்டுதல்களை இந்தக் காவல் துறை பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமென்றால், முதன்முதலில் “ஆப்பரேஷன் ரவுடி வேட்டை” நடத்தப்பட்டு 6,112 பேர் கைது செய்யப்பட்டு, 3,047 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதில் இந்த அரசு எவ்வளவு முன்னுதாரணமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இவையெல்லாம் ஓர் அடையாளம். இன்னும் தெளிவாக உங்களுக்கு புள்ளிவிவரத்தோடு சொல்கிறேன். இதனால் 2020–ல் ஐ.பி.சி. குற்றங்கள் 8 இலட்சத்து 91 ஆயிரத்து 696 ஆக இருந்து, 2022–ல் வெறும் 1 இலட்சத்து 94 ஆயிரத்து 97 வழக்குகளாக குறைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–15

2020–ல் 1 இலட்சத்து 68 ஆயிரத்து 629 ஆக இருந்த மதுவிலக்குச் சட்டத்தின் கீழான வழக்குகள் 2022–ல் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 489 ஆக குறைந்திருக்கின்றன.

2019–ல் 1,678 ஆக இருந்த கொலைச் சம்பவங்கள் 2022–ல் 1,597 ஆக குறைந்திருக்கின்றன.

2018–ல் பெண், சிறுமி கடத்தல் 907 வழக்குகள். ஆனால், 2022–ல் அது 535 ஆக குறைந்திருக்கின்றன.

2018–ல் பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை 55 வழக்குகள். ஆனால், 2022–ல் அது 29 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2018–ல் லாட்டரி சீட்டு விற்பனை வழக்குகள் 4,694. ஆனால், 2022–ல் இது 3,966 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

கொலைக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன. கொள்ளை, கன்னக்களவு எல்லா குற்றங்களுமே குறைக்கப்பட்டுள்ளன. ஆகவே, அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட சட்டம்-ஒழுங்கு, தி.மு.க. ஆட்சியில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே அனைவரும் விரும்பி வந்து வாழும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இன்றையதினம் அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் தி.மு.க. ஆட்சி; அதற்குக் காரணம் இந்த திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்தக் காவல் துறைதான் சிறப்பான பணியை நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது தேவையில்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எங்களது ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே நல்லுணர்வோடு செயல்பாடுகள் இருந்ததால் சட்டம்-ஒழுங்கு சிறப்பாகப் பேணிக்காக்கப்பட்டு, இந்தியாவிலேயே சட்டம்–ஒழுங்கைச் சிறப்பாகப் பராமரிக்கும் முதன்மை மாநிலமாகவும், பெண்கள் பாதுகாப்பாக வாழத் தகுந்த முதல் மெட்ரோ நகரமாக சென்னையும், முதல் நகரமாக கோவையும் திகழ்ந்தன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எங்களுடைய ஆட்சிக் காலத்தில் காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட்டது. குற்ற வழக்குகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டன.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 20] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, குற்றவாளிகளுக்கு சட்டத்தின்மூலம் தண்டனை பெற்றுத் தரப்பட்டது.

கொரோனா நோய்த் தொற்று போன்ற கொடிய நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்காத காலத்திலும், மருத்துவத் துறை மற்றும் காவல் துறையினரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன், உள்ளாட்சி அமைப்பின் சுகாதாரப் பணியாளர்களின் உதவியுடன், முன்களப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் கொரோனா நோய்த் தொற்று கட்டுப்படுத்தப்பட்டது.

அதுபோலவே மழை, வெள்ளம், புயல் போன்ற காலங்களில் சம்பந்தப்பட்ட துறைகளுடன் காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர், வருவாய் மற்றும் பேரிடர் மீட்புத் துறையினர் ஆகியோர் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளில் சிறப்பாகச் செயல்பட்டனர் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கழக ஆட்சியில் காவலர்களுக்கு வழங்கப்பட்ட நலத் திட்டங்கள் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் நலனைப் பேணிக்காத்திட பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகியோர் பல்வேறு திட்டங்களை காவல் துறையில் வித்திட்டார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலங்களில் காவல் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களில் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறையினருக்கு ஏற்கெனவே இருந்த பல்வேறு பணப் பலன்கள், படிகள் உயர்த்தப்பட்டன. பணியின்போது உயிரிழந்தால் ரூ.5 இலட்சம் என்பது ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டது. ஊனமுற்றோருக்கு ரூ.2 இலட்சம் என்பது ரூ.4 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டால் ரூ.1 இலட்சம் என்பது ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. சிறு காயத்திற்கு ரூ.1 இலட்சம் வரையிலும் உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டது.

காவல் துறையினரின் பணிகளிலுள்ள சிரமங்கள், ஆபத்துகளை உணர்ந்து அவர்களுக்கு வழங்கப்படும் இடர்படிகள், அதாவது

சிறப்புப் பிரிவுகள், வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவில் பணியாற்றுபவர்கள், அனைத்து காவலர்களுக்குமான இடர் படிகள், மாதாந்திரப் படிகள், ஊர்க் காவல் படையினருக்கான படிகள் ஆகியவை உயர்த்தி வழங்கப்பட்டன.

சென்ற உள் துறை மானிய கோரிக்கையின்போது இவற்றைப் பற்றி நான் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். மேலும், நான் முதல்வராக இருந்தபொழுது மாதாந்திர எரிபொருள் உதவித்தொகை ரூ.370/– ஆக வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 2 வருடங்களாகியும் இன்னும் அந்த எரிபொருள் உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படவில்லை. அடிக்கடி எரிபொருளின் விலை உயர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு எரிபொருள் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1980 ஆம் ஆண்டு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் காவலர் வீட்டு வசதிக் கழகம் துவங்கப்பட்டது. 1989–ல் இதன் செயல்பாடுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் நிறுத்தப்பட்டன. 1991–ல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, காவலர் வீட்டு வசதிக் கழகம் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டது.

'உங்கள் சொந்த இல்லம்' முதற்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் திட்டங்கள்மூலம் சீருடைப் பணியாளர்களுக்கு பல்வேறு மாவட்டங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. காவலர்கள் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்க, வருடம் ஒருமுறை இலவசமாக முழு உடல் மருத்துவப் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆயுதப்படை காவல் மையங்களில் புறநோயாளி மருத்துவ சேவை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

பிற்பகல் 3–20

சென்ற முறை, உள் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பேசியபோது காவலர் அங்காடிக்கு அம்மாவின் அரசு ஜி.எஸ்.டி. வரி விலக்கு பெற முயற்சித்தது என்றும், இதனை நீங்கள் மத்திய

அரசிடம் வலியுறுத்திப் பெற வேண்டும் என்றும் கோரியிருந்தேன். அதன் தற்போதைய நிலை என்ன என அறிய விரும்புகின்றேன்.

காவல் துறையினர் இரவு பகல் பாராமல் பணியாற்றக்கூடியவர்கள். மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாவதால், அவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க அம்மாவின் அரசால், பெங்களூருவில் உள்ள NIMHANS மருத்துவமனையுடன் இணைந்து காவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சித் திட்டம் ஒன்று 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டு, சுமார் 1 இலட்சத்து 85 ஆயிரம் காவலர்கள் இதில் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தினை இந்த அரசும் தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சியில் துவக்கப்பட்ட சிறப்புப் பிரிவுகள். காவல் துறையின் பணி சிறக்க பல முக்கியப் பிரிவுகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே துவக்கப்பட்டன. தமிழகத்தில் முதன் முதலாக 13-4-1992 அன்று "அனைத்து மகளிர் காவல் நிலையம்" தொடங்கப்பட்டது. பின்பு, பெண்கள் கமாண்டோ படை துவக்கப்பட்டது.

அதிமுக்கிய நபர்களின் பாதுகாப்புப் பணிக்காக "சிறப்புப் பாதுகாப்புப் படை" (SSG) துவக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு "சிறப்பு இலக்குப் படை" (Special Task Force) ஏற்படுத்தப்பட்டது. 1994 ஆம் ஆண்டு "கடலோர பாதுகாப்புக் குழுமம்" (Coastal Security Force) ஏற்படுத்தப்பட்டது. மாநில நெடுஞ்சாலைகளில் ரோந்துப் பணிக்காக "நெடுஞ்சாலை ரோந்து முறை" மற்றும் மாநகரில் சுற்றுக் காவல் முறை கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை துவக்கப்பட்டது. கணினிவழிக் குற்றங்கள் பெருகி வருவதைச் சமாளிக்க காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்புப் பிரிவு துவக்கப்பட்டது. பெண்கள் மற்றும் முதியோர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள 'காவலன் செயலி' எங்கள் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது உங்கள் ஆட்சியில் அதற்கு 'காவல் செயலி' என்று பெயர் மாற்றம் செய்துள்ளீர்கள்;

திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். இத்திட்டம் மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அதேபோல், மக்கள் காவல் நிலையங்களுக்குச் சென்று புகார் அளித்து வந்த நிலையில், காவல் துறை இணையதளம்மூலம் (online) *புகார் அளிக்கும் முறையை தமிழக காவல் துறையில் கடந்த 2013 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இதனால் பொதுமக்கள் கணினிமூலம் புகார் கொடுக்கக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டது. மேலும், தாங்கள் அளித்த புகாரின் நிலை குறித்து இணையதளம் மூலமாகவே பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம். காவல் துறையினரின் நடவடிக்கையில் திருப்தியில்லை எனில் புகார்தாரர் அதே இணையதளம்மூலம் தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம். இந்த இணையதளத்தை* user friendly *ஆக மேலும் எளிமைப்படுத்த வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு–சொந்தக் கட்டடங்கள்: காவல் துறையினருக்கு பல்வேறு வசதிகளை அளிக்கவும், நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் நிதி ஒதுக்கீடு அவசியம் என்பதை அறிந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 2010 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2,962 கோடி ரூபாய் காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதைப் படிப்படியாக உயர்த்தி 2020–2021–ல் ரூ.8,826.57 கோடியாக நிதி ஒதுக்கப்பட்டது. காவல் துறையின் தேவைக்கேற்ப அதிகமான நிதியினை ஒதுக்கிட வேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் துறையினருக்குத் தேவைப்படும் காவல் நிலையக் கட்டடங்கள், காவலர் குடியிருப்புகளுக்காக கடந்த 2011 முதல் 2021 வரை சுமார் ரூ.3,044.36 கோடி அளவிற்கு அம்மா அவர்களின் அரசால் செலவு செய்யப்பட்டது. அதேபோல், 562 காவல் நிலையங்கள், 19,203 காவலர் குடியிருப்புகள், 346 அலுவலக மற்றும் இதர கட்டடங்கள் கழக அரசில் கட்டி முடிக்கப்பட்டன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டும் என்றும், துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும் என்றும் இந்த அரசை வலியுறுத்துகின்றேன்.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்கள் நிரப்புதல், பதவி உயர்வு. 1991 ஆம் ஆண்டு காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறைகளுக்கென தனியாக சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. காவலர்களுக்கு முறையாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. கழக அரசில் சுமார் 61,308 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. அதேபோல, தமிழ்நாடு காவல் துறையில் காவல் பணியாளர்கள் எண்ணிக்கை 2021–2022 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் எண் 5–ன்படி, 30–6–2021 அன்று ஏற்பளிக்கப்பட்ட காவல் பணியாளர்களின் எண்ணிக்கை–sanctioned post 1,33,198. 2022–2023 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு, பக்க எண் 7–ன்படி, 1–1–2022 அன்று ஏற்பளிக்கப்பட்ட காவல் பணியாளர்களின் எண்ணிக்கை–sanctioned post 1,31,491. ஆக, 30–6–2021–ஐவிட, 1,707 பணியிடங்கள் குறைந்திருக்கின்றன. அதேபோல, 2023–2024 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு, பக்க எண் 3–ன்படி, 1–1–2023 அன்று ஏற்பளிக்கப்பட்ட காவல் பணியாளர்களின் எண்ணிக்கை–sanctioned post 1,32,451. இது 1–1–2022–ஐவிட 960 அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த வேறுபாடு எப்படி ஏற்பட்டது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல் துறையில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 31–12–2019 வரை மொத்தம் 38,222 நபர்கள் இரண்டாம் நிலைக் காவலர்களாகவும், 1,528 நபர்கள் உதவி ஆய்வாளர்களாகவும், 133 நபர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டு, பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், எங்கள் ஆட்சியில் அறிவித்தபடி சுமார் 10 ஆயிரம் காவலர் பணியிடங்களையும், 1000 உதவி ஆய்வாளர் பணியிடங்களையும் நிரப்புவதற்கு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் அறிவிப்பாணை வெளியிடப்பட்டு, தேர்வுப் பணிகள் நடைபெற்று வந்தன. எங்கள் ஆட்சியின் இறுதியில், சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நாங்கள் ஏற்கெனவே அறிவித்த பணியிடங்கள் நிரப்பப்படும் சூழ்நிலையில், மீதமுள்ள காலிப் பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 2 சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டது. இதுகுறித்து, நான் 2021 ஆம் ஆண்டு உள் துறை மானியக் கோரிக்கைக்கான

பதிலுரையில் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றேன். 2023–2024, தங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் காலிப் பணியிடங்கள் பற்றிய விவரங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு நிலைகளில் காவலர்கள் பணி ஓய்வு பெறுகிறார்கள். அப்பொழுது ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு ஏற்கெனவே, முன்கூட்டியே தேர்வு செய்து, பயிற்சி அளித்து காவலர்களைத் தயார் நிலையில் வைத்திருந்தால், பணி ஓய்வு பெறும் நாட்களில் அவர்களை உடனடியாகப் பணி நியமனம் செய்யலாம். இதனால் காவல் பணி தொய்வில்லாமல் செவ்வனே நடைபெறும். இதை நான் சென்றமுறை காவல் துறை மானியத்தில் பேசும்போதே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அவ்வாறு காலிப் பணியிடங்களை நிரப்பாவிடில், ஏற்கெனவே பணிச்சுமையால் பாதிக்கப்பட்டுள்ள காவலர்களுக்கு மேலும் பணிச்சுமை ஏற்படும். இதனால் காவலர்களின் மன நலன், உடல் நலன் பாதிக்கப்படும். எனவே, உடனடியாக அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்பிட முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் மக்கள்தொகை அதிகரித்து வருகிறது. இதனால் குற்றங்களும் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. பெருகிவரும் குற்றங்களைக் கட்டுப்படுத்த மக்கள்தொகைக்கேற்ப காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

எங்கள் ஆட்சிக்காலத்தில் கண்காணிப்புக் கேமராக்கள். தமிழகத்தில் குற்றங்களைக் குறைக்கும் வகையில், குற்றச்செயலில் ஈடுபட்டவரை உடனடியாகக் கண்டுபிடிக்கும் வகையில், 3-வது கண் எனப்படும், CCTV cameras தமிழகம் முழுவதும் முக்கியமான பல இடங்களில் பொருத்தப்பட்டன. அதுபோன்று எங்கள் ஆட்சிக் காலத்தில் சென்னை பெருநகரில் குறுகிய காலத்தில் சுமார் 2,50,000 CCTV camera-க்கள் பொருத்தப்பட்டன. அதேபோல, 7 மாநகராட்சிப் பகுதிகளிலும், 36 நகரங்களிலும், 2,14,000 CCTV camera-க்கள் பொருத்தப்பட்டன. மொத்தம் 4,64,000 CCTV camera-க்கள் கழக ஆட்சியில் பொருத்தப்பட்டன. இந்த CCTV camera-க்கள் அனைத்தும் 24 மணி நேரமும் இயங்கும் வகையில் பராமரிக்கப்பட்டன. அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் சரி செய்யப்பட்டன. ஆனால், தற்போது பல இடங்களில் CCTV camera-க்கள் செயல்படாமல் உள்ளன. மேலும், சில இடங்களில் சமூக விரோதிகளால் செயலிழக்கப்படுவதாக செய்திகள்

வந்துள்ளன. இதனால் குற்றவாளிகள் தப்பிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதை சரி செய்யவேண்டும். இதுதவிர வங்கிகள், ATM மையங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள், திருக்கோயில் போன்ற பல்வேறு தனியார் இடங்களில், கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்படுவதை எங்கள் அரசு வரவேற்றது. இதுபோன்ற அம்மா அரசின் நடவடிக்கைகளால் குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டதோடு, பெரும்பாலான குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பிற்பகல் 3–30

காவல் நிலையங்களுக்கு இணையவழி கேமராக்களுடன்கூடிய உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் ரூ.23.4 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன என்றும், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி 20 முதல் 30 நாட்களுக்கான காணொளிகளைப் பதிவு செய்யக்கூடிய சேமிப்புத் திறன் உள்ளிட்ட அம்சங்களைக் கொண்ட 6 இணையவழிக் கேமராக்களுடன்கூடிய உட்சுற்று தொலைக்காட்சிக் கேமராக்கள் வழங்கப்படுமென்றும் 2022–2023 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 150–ல் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 2023–2024 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் எண் 6–ல் சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்கள் எண்ணிக்கை 1,305 ஆகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 2022–2023 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 158–ன்படி, இணையவழிக் கேமராக்களுடன்கூடிய உட்சுற்று தொலைக்காட்சிக் கேமராக்கள் உள்ள காவல் நிலையங்களின் எண்ணிக்கை 820 ஆக இருக்கின்றது. மீதமுள்ள 485 காவல் நிலையங்களுக்கு நீங்கள் CCTV கேமராக்கள் பொருத்த வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அண்மையில் நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரத்தில், விசாரணைக்கு அழைத்து வரப்பட்டவர்களின் பற்களைப் பிடுங்கிய மனிதத்தன்மையற்ற, அராஜகமாக நடந்துகொண்ட சம்பவத்தில் காவல் நிலையத்தில் வீடியோ கேமரா பழுதடைந்ததால், இந்நிகழ்வு குறித்த பதிவுகள் இல்லையென்று விசாரணை அதிகாரியிடம் கூறியுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. முக்கியமான நேரத்தில் இதுபோன்ற வீடியோ கேமராக்கள் பழுதடைவதைத் தவிர்க்க தமிழகம் முழுவதும் காவல் நிலையங்களிலுள்ள இணையவழிக் கேமராக்கள் சரியானபடி

இயங்குகின்றனவா என்பதை அந்தந்த காவல் துறை ஆய்வாளர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். இதனை அரசு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

அதேபோல, சாலைச் சந்திப்புகளிலுள்ள கேமராக்கள், வங்கி ATM இயந்திரங்கள் உள்ள இடங்கள், தனியார் வணிக வளாகங்கள் மற்றும் முக்கிய சுற்றுலாத் தலங்கள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள், திருக்கோயில்கள் போன்ற இடங்களிலுள்ள CCTV கேமராக்கள் சரியானபடி இயங்குவதை அரசு உறுதிபடுத்த வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.

சாலை விபத்துகள். 2023-2024 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில், சாலை விபத்துகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை, black spots அதாவது, அதிக விபத்துகள் நடக்கும் இடங்கள் போன்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சென்ற ஆண்டு, 2022-2023 ஆம் ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில், பக்க எண் 25-ல் மாநிலத்தில் 3.19 கோடி வாகனங்கள் இயக்கப்படுவதாகவும், அவற்றில் 2021 ஆம் ஆண்டு மட்டும், வாகனங்களின் எண்ணிக்கை 14.60 இலட்சம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. 2023-2024 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாட்டில் இயக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படவில்லை. அதேபோல, சாலை விபத்துகளின் எண்ணிக்கையும் அதில் தெரிவிக்கப்படவில்லை. சாலை விபத்துகளில் உயிரிழந்தோருடைய எண்ணிக்கையும் குறிப்பிடப்படவில்லை. சாலை விபத்துகளில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடப்படவில்லை. அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். தமிழ்நாட்டில் அம்மா அவர்களுடைய ஆட்சி நடைபெறும்போது, நாடாளுமன்றத்திலேயே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள்; பல்வேறு குற்றச்சாட்டுகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அவற்றிற்கெல்லாம் நான் நாளை காலையில் பதிலுரையாற்றவிருக்கிறேன். ஒருவேளை அவர்கள் வெளிநடப்புச் செய்யாமல் இந்த அவையில் இருந்தால், அப்பொழுது கேட்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், திருநெல்வேலி, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டு, காவல் துறை அதிகாரி, பல்வீர்சிங் அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை, இந்த அரசின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். . . (குறுக்கீடுகள்) சரி, CCTV கேமராக்கள் சரியாக இயங்கவில்லை என்ற செய்தி வந்ததாக, அதையும் உறுதி செய்து சொல்லவில்லை; செய்தி வந்ததாக என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அம்பாசமுத்திரம் நிகழ்வு குறித்து சமூக வலைதளங்களில் புகார்கள் வந்தவுடனே அங்கு பணியாற்றிய உதவி காவல் கண்காணிப்பாளர் திரு. பல்வீர்சிங் 26–3–2023 அன்று காத்திருப்புப் பட்டியலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து PSO பிரிவு 151–ல் இந்தப் புகார் குறித்து நிர்வாகத் துறை நடுவர் (Executive Magistrate) மற்றும் சார் ஆட்சியர், சேரன்மாதேவி ஆகியோர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

பிற்பகல் 3–35

இதற்கிடையில் உதவி காவல் கண்காணிப்பாளர் 29–3–2023 அன்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நிகழ்வு தொடர்பாக ஓர் உயர் அதிகாரி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிடப் பரிந்துரைத்ததன் அடிப்படையில், திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப. அவர்கள் உயர்மட்ட விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் திரு. பல்வீர்சிங் மீது 17–4–2023 அன்று குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உயர்மட்ட விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட திருமதி அமுதா, I.A.S., அவர்கள் 4 நாட்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் முகாமிட்டு நடத்திய விசாரணையின் அடிப்படையில், CCTV Camera–ல் பதிவாகியிருக்கக்கூடிய ஆதாரங்களனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு, நேற்றையதினம் ஓர் இடைக்கால அறிக்கையை அரசிற்குச் சமர்ப்பித்திருக்கிறார். அவரது அறிக்கையின் அடிப்படையில்தான், நேற்றிரவு CBCID விசாரணைக்கு இந்த

வழக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நான் விளக்கிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடைபெற்றபோது, தமிழ்நாட்டில் சாலை உட்கட்டமைப்பு வசதி சிறப்பாக உள்ளதாகவும், இதனால் தமிழ்நாட்டில் விபத்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும், நாடாளுமன்றத்திலேயே மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு. நிதின் கட்கரி அவர்கள் பாராட்டியுள்ளார் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சாலை விபத்துகளைக் குறைக்க, விலைமதிக்க முடியாத மனித உயிர்களைக் காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களின் குறைகள் சிலவற்றை என்னிடம் கடிதத்தின்மூலம் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் சில வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமென்று அறிவிப்பு வெளியிட்டுள்ளீர்கள். அவற்றையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை, எண் 386-ன்படி, துறைரீதியான சிறு தண்டனைகள் அனைத்தும் இரத்து செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கான தீர்வைக் காண வேண்டும்.

தேர்தல் அறிக்கை, எண் 388-ன்படி, காவலர் மருத்துவப் படி, இடர்காலப் படி உள்ளிட்ட சலுகைகள் உயர்த்தி வழங்கப்படும் என தெரிவித்து, அதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. அதற்கும் தீர்வு காண வேண்டும்.

தேர்தல் அறிக்கை, எண் 387-ன்படி, காவலர் காலிப் பணியிடங்கள் ஆண்டுதோறும் நிரப்பப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால், 23 மாதங்கள் கடந்தும் இதுவரை

காவலர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. அதையும் சரிசெய்ய வேண்டும்.

தேர்தல் அறிக்கை, எண் 389–ன்படி, இரண்டாம் நிலைக் காவலர்களாக பணியில் சேர்பவர்களுக்கும், 7 ஆண்டுகள் முதல் நிலைக் காவலர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கும், 10 ஆண்டுகளில் தலைமைக் காவலராகவும், இருபது ஆண்டுகளில் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதையும் நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலான அரசால் 3 முறை மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். காலையிலேயே இதுகுறித்துப் பேசினோம், இந்த மனுக்களின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தாம்பரம், ஆவடி மாநகர காவல் எல்லைக்குட்பட்ட காவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.300/– உணவுப்படி, 2023 ஜனவரி முதல் நிறுத்தப்பட்டுள்ளதாக காவலர்கள் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று, தற்போது வழங்கப்பட்டுவரும் இரவு ரோந்துப்படி ரூ.300/– allowance-ம் தாம்பரம் மற்றும் ஆவடி மாநகர காவலர்களுக்கு வழங்கப்படவில்லை. இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்க வேண்டும். அப்படி நிறுத்தப்பட்டிருந்தால் அது தொடர்ந்து வழங்கப்பட வேண்டும். மேலும், இந்த 2 மாநகர காவல் ஆணையரகத்திற்கு அமைச்சுப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

காவலர் முதல் தலைமைக் காவலர் வரை வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும் என்று தெரிவித்தீர்கள். சில காவலர்களுக்குத்தான் அந்த விடுமுறை கிடைக்கின்றது, பல காவலர்களுக்குக் கிடைப்பதில்லை, அதையும் தாங்கள் செயல்படுத்த வேண்டும். தொடர்ச்சியாகப் பணிபுரிந்தால், ETR வழங்கப்படுவது வழக்கம். அம்மாவின் அரசில் ரூ.200/–லிருந்து ரூ.500/– ஆக இது உயர்த்தப்பட்டது. இதனால் இரண்டாம் நிலைக் காவலர் முதல் தலைமைக் காவலர் வரை பயனடைந்தனர். இதனை சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகிய பதவிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

P2 ஓட்டேரி காவல் நிலைய தலைமைக் காவலர், அரசு மருத்துவரின் கவனக் குறைவால், மகளின் எதிர்காலம் வீணாகிவிட்டதென்று வேதனையுடன் தலைமைச் செயலகத்தில் அமர்ந்து ஊடகத்தின் வாயிலாக தெரிவித்தார். அந்தச் செய்தி அனைத்து ஊடகங்களிலும் வந்தது. அந்தக் காவலரின் மனக் குறையைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண் குழந்தைக்குத் தவறான சிகிச்சை அளித்தவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு, அந்தக் காவலரின் பெண் குழந்தையை தனியார் மருத்துவமனையில் சேர்த்து உயர் சிகிச்சை அளித்து புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர் வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்பில் காவல் அமைச்சுப் பணியாளர்களுக்கு வீடு வழங்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–40

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் காவலர் ஒருவர் பெண் குழந்தையோடு வந்து போராட்டம் நடத்தியது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் குழந்தையைப் பொறுத்தவரையில், அந்தக் குழந்தைக்கு 3 வயதிலிருந்து இருக்கிற SLE என்று சொல்லப்படுகிற பிறவி நோய் காரணமாக treatment எடுத்தது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்தான். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலிருந்து தொடர்ச்சியாக treatment எடுத்துக்கொண்டு வருகிறார். அவருடைய கோரிக்கை, மருத்துவர்கள் தவறு செய்திருப்பார்கள் என்கிற வகையில், அதற்குத் தீர்வு காண வேண்டும் என்று letter கொடுத்திருந்தார். அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே மேதகு ஜனாதிபதிக்கெல்லாம் மனு அளித்திருக்கிறார். இதே subject–க்கு மேதகு ஜனாதிபதியிடம் மனு கொடுத்து, அரசு மருத்துவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களும், இந்தத் தகவல் தெரிந்த உடனேயே, social media–வில் இந்தச் செய்தியை பார்த்தவுடனேயே எங்களுக்கு அறிவுறுத்தினார். அந்தவகையில் அவரை நான் தொலைபேசியில் அழைத்து, ‘எப்போது தவறு

நடைபெற்றிருக்கிறது என்று சொல்கிறீர்கள்' என்று கேட்டேன். 'இந்தக் குழந்தைக்கு 3 வயதிலிருந்தே சிகிச்சையளிக்கிறோம். அப்போதிருந்தே தவறு நடைபெறுகிறது; நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் நிறைய புகார் மனு அளித்துவிட்டேன். எந்த வழியும் இல்லாததால், இந்த Government-லேயாவது இதற்குத் தீர்வு கிடைக்குமா என்று வந்திருக்கிறேன்' என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக இதுகுறித்து விசாரிப்பதற்கு 3 மருத்துவர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பெற்று, விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மிக விரைவில் விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், மருத்துவர்கள் தவறு செய்திருக்கிறார்களா அல்லது காவலருடைய கூற்று உண்மையா, பொய்யா என்பது நாட்டுக்கு அம்பலப்படுத்தப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்து வைக்கும் பிரதான எதிர்க்கட்சியாக நாங்கள் செயல்படுகிறோம். குற்றம், குறைகளை பூதக் கண்ணாடி போட்டு பார்த்து, அரசின்மீது பழி சுமத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு நாங்கள் செயல்படவில்லை. நாட்டில் நடக்கக்கூடிய குற்றச் சம்பவங்களை ஆட்சியாளர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால்தான் மக்கள் நிம்மதியாக வாழும் சூழல் ஏற்படும் என்பதால், அந்தத் தகவல்களை நாங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். சட்டம்-ஒழுங்கு பேணிக் காக்கப்பட வேண்டும், குற்றங்கள் குறைக்கப்பட வேண்டும், உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; அப்போதுதான் சாமானிய மக்கள் அச்சமின்றி வாழ முடியும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் **தமிழகம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அது அவைக் குறிப்பில் இடம்பெற வேண்டாம்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: என்ன, இது குற்றம் இல்லையே! (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் முதலமைச்சராக இருந்தவர். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *தமிழகம் ** (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுவது. . . (குறுக்கீடுகள்) இல்லை, உட்கார்ந்துகொண்டு யாரும் பேசவில்லை.*

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுந்து ஏதோ பேசினார்.)

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். நான் அவர்களிடம் சொல்கிறேன். நீங்கள் குறிப்பிட்டு ஒரு விஷயத்தைச் சொல்லி, நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், இந்த அரசின் கவனத்திற்குச் சொல்லுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள். எதைச் சொல்வதாக இருந்தாலும், authentic*-க்காக இந்த ஊரில், இந்தச் சம்பவம் நடைபெற்றது, காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்லி, அரசின் கவனத்திற்கு சொல்லுங்கள். பொத்தாம்பொதுவாகச் சொல்வது தேவையில்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை பொதுவாகச் சொல்லிவிட்டு, எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன குற்றங்கள் நடைபெற்றன என்ற நிகழ்வுகளை ஆதாரத்துடன் சொல்கிறேன், தேதியுடன் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஆதாரத்தை தேதியுடன் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு இப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *பிறகுகூட சொல்கிறேன், விடுங்கள். முன்னால் சொல்வதை பின்னாலும், பின்னால் சொல்வதை முன்னாலும் சொல்ல வேண்டுமென்கிறீர்கள்.* Right, *அப்படியே சொல்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பிரதான எதிர்க்கட்சி. குற்றங்கள், சம்பவங்கள் நடந்தது என்றால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எதிர்க்கட்சியினுடைய வேலை மக்களுடைய பிரச்சினையைச் சுட்டிக்காட்டுவது, அதை சரி செய்வது அரசாங்கத்தினுடைய கடமை. பிரச்சினையைச் சொல்வது எங்களுடைய கடமை, பிரச்சினையைத் தீர்த்து வைப்பது அரசினுடைய கடமை. பிரச்சினையை எதுவுமே சொல்லக் கூடாது என்றால் எப்படித்தான் எதிர்க்கட்சி செயல்பட முடியும்? எதைத்தான் பேச முடியும்? சொல்லுங்கள், பார்க்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுவாக, எதுவுமே பேசக் கூடாது என்று நான் சொன்னதாக தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நான் அப்படிச் சொல்லவில்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *வேறு என்ன பேசுவது? அதாவது, அரசின்மீது எந்தக் குற்றமும் சுமத்தக் கூடாது என்று சொல்வது— முடியாது. அப்படிப் பேசவே முடியாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அரசின்மீது குற்றம். . .*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நடைபெறுகின்ற சம்பவங்களை எடுத்துச் சொன்னால்தான் அரசு அதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க முடியும். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள்.*

பிற்பகல் 3–45

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதைத்தான் நான் இப்போது சொல்கிறேன். வேறு என்ன சொல்லிக்கொண்டிருக்கிறோம்? அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால்தானே அந்தக் குற்றத்தை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க முடியும். சொல்லவே இல்லையென்றால், அதை மறைத்தால், எங்களுடைய கடமையிலிருந்து தவறியதாகும். அதற்கு நாங்கள் ஆளாகிவிடுவோம். ஆகவே, எங்கே தவறு நடைபெற்றாலும், அதைச் சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சியினுடைய கடமை. அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது ஆளுங்கட்சியினுடைய கடமை.*

கொள்கை விளக்கக் குறிப்பின்படி, 2020, 2021, 2022 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் 1,597 கொலைகள் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று வருடமும் எப்படி ஒரே எண்ணிக்கையில் கொலைகள் நடைபெற்றிருக்கும்? 2020 ஆம் ஆண்டும் 1597, 2021 ஆம் ஆண்டும் 1597, 2022 ஆம் ஆண்டும் 1597 கொலைகள் நடைபெற்றதாக கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைக் கவனமாக ஆராய்ந்து, இதனைச் சரிசெய்ய வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவை அனைத்தையும் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலிருந்துதான் எடுத்து பேசிக்கொண்டிருக்கிறேன். குடிபோதை தகராறின் காரணமான கொலைகள் 147 ஆக அதிகரித்துள்ளது வேதனையளிக்கிறது. எங்களது ஆட்சிக் காலத்தில் அமைதிப் பூங்காவாக திகழ்ந்த தமிழகம் தற்போது **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: நீங்கள் ஆதாரத்தைக் கேட்கிறீர்கள். அதுதான், ஆதாரத்துடன் சொல்கிறேன். அதைத்தொடர்ந்து 12–2–2023 அன்று கோயம்புத்தூர் Race Course காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பாப்பநாயக்கன்பாளையம் பகுதியில் வசிக்கும் சக்தி என்ற சத்யபாண்டியன் என்பவரை இருசக்கர வாகனங்களில் வந்த நபர்கள் கத்தியால் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்துள்ளனர். சம்பவ இடத்தில் 2 புதிய அரிவாள்களும், ஒரு துப்பாக்கி, காலி குண்டும் இருந்ததாகச் செய்திகள் வெளிவந்தன.

அதேபோல, 13–2–2023 அன்று காலை, கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கு ஒன்றிற்காக வந்த இருவரை, 5 பேர் கொண்ட கும்பல் பட்டப்பகலில் வெட்டி சாய்த்து விட்டு, தப்பியோடியுள்ளது. இந்தத் தாக்குதலில் கோகுல் என்பவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். மனோஜ் என்பவர் படுகாயத்துடன் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன. அதேபோல, அதே கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

ஒரு வழக்கிற்காக வந்த பெண் ஒருவர் மீது திராவகம் வீசப்பட்டது. அடுத்தடுத்து நடந்த இந்த இரு சம்பவங்களால் நீதிமன்றத்தில் ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே பேரையூரில் ஆள் நடமாட்டம் மிகுந்த மார்க்கெட் பகுதி அருகிலேயே பட்டப் பகலில் மர்ம நபர்கள் பட்டாக் கத்தியுடன் வீட்டுக்குள் புகுந்து, வீட்டில் படுத்திருந்த அழகர் என்ற வாலிபரை சரமாரியாக தலையில் வெட்டியதால், அழகர் இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பட்டப் பகலில் மர்ம நபர்களால் வாலிபர் அழகர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

15–4–2023 அன்று பழனி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரியும் டாக்டர் உதயகுமார் என்பவரது வீட்டில் அதிகாலை 2 மணியளவில் முகமூடிக் கொள்ளையர்கள் மருத்துவரைத் தாக்கி, பீரோவை உடைத்து, 100 பவுன் நகை, 20 இலட்சம் ரூபாயை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 10–2–2023 அன்று சென்னை நகைக் கடையில் கொள்ளையடிக்கப்பட்டது. திருவண்ணாமலையில் ஒரே நாளில் 4 ATM இயந்திரங்களை உடைத்து 75 இலட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொடர் நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் அரசு கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரிசையாக சில சம்பவங்களையெல்லாம் இங்கே பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறார். ஆனால், பட்டியல் போட்டுக் காட்டிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், அதுதான் மிகப் பெரிய குற்றச்சாட்டு. ஆனால், இந்தச் சம்பவங்கள் நடந்தபிறகு, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. Sterlite துப்பாக்கிச் சூடு நடந்தபோது, 'எனக்கு அந்த செய்தியே தெரியாது, தொலைக்காட்சி பார்த்துதான் தெரிந்துகொண்டேன்'

(மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று நாங்கள் சொல்லவில்லை. கோயம்புத்தூரைப் பற்றிச் சொன்னார். கோயம்புத்தூரில் நீதிமன்ற வளாகத்தில் 13–2–2023 அன்று சில ரௌடிகள், கோகுல் என்பவரை ஆயுதங்களால் தாக்கிய சம்பவத்தைக் குறிப்பிட்டு, பட்டப் பகலில் நீதிமன்றத்தில் அரங்கேறிய சில சம்பவங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார். கோயம்புத்தூர் மாநகரம், சரவணம்பட்டி காவல் நிலைய கொலை வழக்கு ஒன்றில், தொடர்புடைய கீரநத்தம் பகுதியைச் சார்ந்த கோகுல், வயது 23, வீரப்பிள்ளை என்பவர் கடந்த 13–2–2023 அன்று ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டது தொடர்பாக, பந்தயச் சாலை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்கில் தொடர்புடைய 16 நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் 12 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீதிமன்ற வளாகம் அருகே பாதுகாப்பு குறைபாடு காரணமாக இச்சம்பவம் நடைபெறவில்லை. கடந்த 13–2–2023 அன்று நடைபெற்ற கோகுல் கொலை சம்பவம், முன்விரோதம் காரணமாக நடைபெற்ற சம்பவம்.

அதேபோல, அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் கல்லால் அடித்தே வழக்கறிஞர் ஸ்டாலின் என்பவர் கொல்லப்பட்டார். இன்னொரு வழக்கில், ரஜினிகாந்த் என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக சென்னை 5–வது பெருநகர Magistrate நீதிமன்ற விசாரணைக்காகக் காத்திருந்த நேரத்தில், சலீம்பாபு என்பவர் விரட்டி வெட்டப்பட்டு, நீதிமன்ற நடுவர் முன்பே கொல்லப்பட்டார்.

பிற்பகல் 3–50

இன்னும் சொல்லவேண்டுமென்றால், டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் நடத்திக் காட்டிய வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகளை எல்லாம் மக்கள் இன்னும் மறக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், தி.மு.க. ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் எங்கெங்கு சம்பவங்கள் நடக்கின்றதோ, அது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது, உடனடியாக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த

விவரங்களையெல்லாம் நாளையதினம் எனது பதிலுரையில் நான் விளக்கமாகச் சொல்ல இருக்கிறேன். மேலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மேலும் சொன்ன சில குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நாளையதினம் விளக்கமாக, நான் நிச்சயமாக பதில் சொல்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று. அது உண்மைதான். இல்லையென்று மறுக்கவில்லை. அப்போது ஆய்வுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. புகைப்படங்கள் எல்லா செய்தித் தாள்களிலும் வந்துள்ளன. இந்தச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஆய்வுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் எல்லா* I.A.S. officers*-களும் இருக்கிறார்கள். தலைமைச் செயலாளர் இருக்கிறார்கள். அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. வேலுமணி அவர்கள் அங்கேயிருக்கின்றார். 'உங்களுக்கு எந்த நேரத்தில் தகவல் கிடைத்தது' என்று என்னை நிருபர்கள் கேட்கின்றார்கள். அப்போதுதான் நான் சொன்னேன். நான் ஆய்வுக்கூட்டத்தில் இருந்தேன். எனக்கு தகவலை— எனது உதவியாளர் வந்து சொன்னார், தொலைக்காட்சியில் இதையெல்லாம் காண்பித்தார்கள் என்று சொன்னார். அதைச் சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறது? உங்களைப்போல் எதையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை. அதுமட்டுமல்ல, இந்த நிலை வருவதற்கு யார் காரணம்? இதற்கு மூலக் காரணம் யார்? அன்றைய தொழில் துறை அமைச்சராக இருந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தூத்துக்குடியில் அமைந்துள்ள* Sterlite *நிறுவனம், 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதன் விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்ளும் என்று அப்போது அவர் தெரிவிக்கின்றார்; அவர் சொன்னது, நாங்கள் சொல்லவில்லை. ஆகவே, இதற்குக் காரணம், உங்கள் ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட அறிவிப்பினை வெளியிட்டதுதான் அதன் விளைவாகத்தான், இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்ற விவரத்தை நான் இங்கே பதிய வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்து விடுகிறேன். பின்னர் நீங்கள் பதில் சொல்லுங்கள்.* (குறுக்கீடு)

*__மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களால் 100 நாட்கள் நடைபெற்ற போராட்டம், அரசினுடைய நிர்வாகக் கோளாறு என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் தூத்துக்குடி சம்பவத்தைப் பற்றி சொன்னதனால், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.* (குறுக்கீடுகள்) *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டீர்களா?* (குறுக்கீடு) *உட்காருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள், தனது அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அதாவது, அன்றையதினம் நுண்ணறிவு பிரிவின் IG திரு. சத்தியமூர்த்தி அவர்கள், தொடர்ந்து மூன்று தினங்களிலும் ஒவ்வொரு நிமிடமும் அங்கு என்ன நடந்தது என்ற தகவலை மாண்புமிகு முதலமைச்சராக அன்றைக்கிருந்தவருக்கு, 'ஒவ்வொரு நிமிடமும் தகவல்கள் தெரிவித்தேன்' என்று கூறியதாக அந்த அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.* (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் நடந்த நிகழ்வுகளைப் பற்றிதான் நான் குறிப்பிடுகிறேன். 'அன்றைக்கு என்ன நடந்தது?'*

என்று நிருபர்கள் கேட்டார்கள். அதற்குண்டான பதிலைத்தான் நான் சொன்னேன். அதற்கு முன்பு, அங்கே பாதுகாப்பான ஏற்பாடுகளை எங்களுடைய அரசு செய்திருந்தது. ஒவ்வொரு முறையும் போராட்டம் நடத்துவார்கள். அங்கிருந்த மாவட்ட அமைச்சருக்குத் தெரியும். இன்றைக்கு நேற்றல்ல, இருபது ஆண்டுகாலமாக Sterlite *ஆலையை மூட வேண்டுமென்று தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ அண்ணா தி.மு.க. ஆட்சியில் மட்டும்தான் அந்தப் போராட்டம் நடந்தது என்பது இல்லை. ஒவ்வொரு முறையும் போராட்டங்களை நடத்துவார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுத்துவிட்டு, திரும்பிப் போய் விடுவார்கள். அப்படி நடக்கும் என எண்ணியிருந்தாலும்கூட, அதற்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டது. சுமார் 2,000-க்கும் மேற்பட்ட காவலர்கள் அந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அதற்கு முந்தையநாளே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், 144 தடை உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். அந்தத் தடை உத்தரவு இருந்தும்கூட, இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற, அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், 'தடையை மீறி, ஊர்வலம் செல்வோம்' என்று அறிவித்திருக்கின்றார். பத்திரிகையில் வந்திருக்கிறது.*

அதேபோல, அன்றையதினம் ஊர்வலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அந்தச் சட்டமன்ற உறுப்பினரும் கலந்து கொண்டிருக்கின்றார். ஆக, இப்படியெல்லாம் நடந்த காரணத்தினால்தான் அங்கே ஒரு விரும்பத்தகாத சம்பவம் நடைபெற்றது என்பதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது ஒரு கட்சி சார்பாக நடைபெற்ற போராட்டம் அல்ல. அது ஒட்டுமொத்தமாக. . .*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *தி.மு.க.-வின் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 'அந்தப் போராட்டத்தில் நான் கலந்து கொள்வேன்' என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். 144 தடை உத்தரவு இருக்கின்றபோது எப்படி ஒரு சட்டமன்ற உறுப்பினர் இதை அறிவிக்கலாம்? அது எந்தவிதத்தில் சரியாக இருக்கும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 3–55

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பான செய்திகளை, உண்மையை வெளியே காண்பிக்காமல் சொல்கிறார். 100 நாட்கள் போராட்டம் என மக்கள் அறிவித்து, போராட்டம் நடைபெறுகிறது. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; மாவட்ட ஆட்சித் தலைவர் பேசவில்லை, துறை அமைச்சர் பேசவில்லை. உள்ளூர் அமைச்சர் பேசவில்லை. யாருமே மக்களுடைய போராட்டத்தைக் கருதவேயில்லை. 100 நாட்கள் போராட்டம் செய்துகொண்டிருக்கிறார்கள். இறுதி நாள் போராட்டம் என்றும் மக்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், அந்த மக்களோடு இருக்கும்போது அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு ஒன்றுமே இல்லை. அங்கு போகும்போதே* Police *எங்களை வழிமறித்தார்கள். நாங்கள் ஊர்வலம் தொடங்கிய இடத்தில் 144 தடை உத்தரவு கிடையாது. அதனால், நாங்கள் தொடங்கிய இடத்திலேயே நிறுத்திவிட்டோம். ஆனால், சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்ததற்கு நாங்கள்தான் காரணம் என்பதுபோல் சொல்கிறார்கள். அதற்கு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாக சீர்கேடுதான் காரணம். அன்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரிலேயே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மனுவைப் பெற்றுக்கொள்ள அவர்கள் ஊரில் இல்லாத நிலைதான் இருந்தது. இதற்கு முழுக்க, முழுக்க அ.இ.அ.தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேடுதான் காரணம் என்பதை அனைவரும் அறிவர். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நீங்கள் நீக்கியிருக்க வேண்டுமல்லவா! சீர்கேடு என்பது தவறான வார்த்தை என்று நாங்கள் சொன்னால் நீக்கிவிடுகிறீர்கள். நாங்கள் பேசியதையெல்லாம் நீக்கிவிடுகிறீர்கள். சீர்கேடு என்ற வார்த்தை அவர்கள் சொல்வது எப்படி சரியாக இருக்கும்? ஒரு சட்டமன்ற உறுப்பினர் 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கும்போது எப்படிப் போகலாம்? சட்டமன்ற உறுப்பினர், இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதன்*

விளைவாகத்தான் அப்பாவி உயிர்களை நாம் இழந்திருக்கின்றோம். இப்படிப்பட்ட சம்பவம் நடைபெறுவதற்கு இதுவே காரணம். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் சட்டத்தை மதிக்க வேண்டும். அங்கு பெரும் பிரச்சினை வரும் என்று முன்கூட்டியே கணித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கு 144 தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்கள். அன்று மாலையே தற்போது அமைச்சராக இருக்கின்ற இதே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை உத்தரவு பிறப்பித்திருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி அங்கு போகலாம், போகலாம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். அரசு தடை உத்தரவு பிறப்பித்திருந்த இடத்திற்கு அவர்கள் செல்லவில்லை. (குறுக்கீடு) சரி, அப்படியே இருக்கட்டும் Sir, நான் ஒன்று கேட்கிறேன், அதற்காக வண்டிகளின்மீது நின்று சுடுவதா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்கள். அவர் இந்த அவைக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அவர் இப்படி 'வண்டிக்கு மேலே இருந்துகொண்டு சுடுவதா' என்று சொல்வதெல்லாம் தவறு. இது விசாரணையில் இருக்கிறது. விசாரணையில் இருக்கும்போது எப்படி அவர்கள் இப்படி பதிவு செய்யலாம்? அப்படியென்றால் நாங்களும் பதிவு செய்வோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தனை துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடந்தன என்று நான் சொல்லட்டுமா? அதையும் பதிவு செய்வீர்களா? அதையும் பதிவு செய்ய வேண்டும். இதைப் பதிவு செய்தால், அதையும் பதிவு செய்ய வேண்டும். அதுதான் நியாயம். நீங்கள் நடுநிலையோடு நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஒருதலைபட்சமாக இருக்கக் கூடாது; அவர்கள் அன்றைய செய்தியைப் பற்றிச் சொன்னால், ஆதாரபூர்வமாக அன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்களை நாங்கள் ஆதாரத்தோடு கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காக்கை, குருவிகளைச் சுடுவதுபோல் சுட்டார்கள்;* van*–க்கு மேலே ஏறி நின்று சுட்டார்கள்;* position *எடுத்து சுட்டார்கள். அதாவது, ஒரு போருக்குச் சென்று சுடுவதுபோல சுட்டார்கள்; திடீரென்று சுடுவது போன்றெல்லாம் சுடவில்லை என்று அந்த அறிக்கையில் தெளிவாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாட்களாக அந்தப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஏன் அவர்களை அழைத்துப் பேசவில்லை?* (மேசையைத் தட்டும் ஒலி) *அமைச்சர்கள் ஏன் அதில் தலையிடவில்லை? ஏன் அவர்களை அழைத்துப் பேசவில்லை? அதற்குப் பிறகுதான், கடைசியாக, 100–வது நாளைத் தேர்ந்தெடுத்து மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்திப்பதற்காக அவர்கள் சென்றார்கள். அதுமட்டுமல்ல, 'தடை செய்யப்பட்ட இடத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் ஏன் போனார்கள், ஏன் போனார்கள்' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கேட்கிறார்கள். தடை செய்யப்பட்ட இடத்திற்கு அவர்கள் செல்லவில்லை. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டியல் போடவா என்று இங்கே கேட்கிறார். என்னிடமும் பெரிய பட்டியல் இருக்கிறது. பட்டியலை நானும் போடுவேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) *ஆகவே, இங்கே பேசுகின்ற பிரச்சினைக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். பேச்சைத் திசை திருப்ப வேண்டாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாள் போராட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்னென்ன நடவடிக்கை*

எடுத்திருக்கிறது என்பதற்கான பட்டியலே தருகிறேன். முழுமையாக அவ்வளவும் இருக்கிறது. இங்கே அதையெல்லாம் மறைத்துவிட்டுப் பேச முடியாது. 14 முறை போராட்டக்காரர்களை அழைத்து, பேசப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அதற்கான எல்லா ஆதாரங்களும் இருக்கின்றன. சார் ஆட்சியர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். Tahsildar அவர்கள் போராட்டம் நடந்த இடத்திற்கே சென்று பேசியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பலமுறை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: என்னை பதிலே சொல்லவிட மாட்டேன் என்கிறீர்களே!

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நான் இனிமேல் குறுக்கிட மாட்டேன். ஒரே ஒரு கேள்விதான் கேட்கப்போகிறேன். 100 நாட்கள் போராட்டம் நடத்தி, அன்றையதினம் இறுதிப் போராட்டம் என்று சொல்லி தூத்துக்குடியிலுள்ள மக்களெல்லோரும் திரண்டு வருகிறார்கள். அந்த நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரில் இருக்க வேண்டுமா, வேண்டாமா? அவ்வளவு பெரிய போராட்டத்தின் last day, 100-வது நாள் போராட்டம், வாழ்வா, சாவா என்று போராட்டக்காரர்கள் வருகிறார்கள். அன்றையதினம் Collector ஊரில் இருக்க வேண்டாமா? ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆர்ப்பரித்து வருகின்ற மக்களை receive பண்ணவில்லை என்றால், போராட்டம் வேறு மாதிரி ஆகிவிடும். 1965-ல் நாங்கள் இப்படித்தான் கோட்டைக்கு வந்தோம். அப்போது மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்கள் இங்கு இல்லை. அதனால் அப்போது போராட்டம் வெடித்தது. அதேபோன்று, அங்கு போராட்டம் வெடித்ததற்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒரு காரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 4-00

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 நாட்கள் போராட்டம் நடைபெற்றது, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சொன்ன

காரணத்தினால்தான் இதையெல்லாம் நான் சொன்னேன். பலமுறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அது 20 ஆண்டு காலமாக நடந்துவருகின்ற போராட்டம். அது ஒருநாள், இரண்டு நாள் நடைபெற்ற போராட்டம் அல்ல. தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அந்த நிறுவனம் விரிவாக்கம் செய்யப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டதனால்தான் இந்தப் பிரச்சினையே வந்தது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் Sterlite ஆலை மூடப்பட்டது. இன்றுவரை நீங்களும் அதை செய்துகொண்டுதான் இருக்கிறீர்கள். நாங்கள் Sterlite ஆலையை மூடிய காரணத்தினால்தான், நீதிமன்றத்தில் தொடர்ந்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தனை துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்தன என்ற முழு விவரமும் எனக்கு தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி கொடுத்தது யார்? முதலில் அதைச் சொல்லுங்கள். அனுமதி கொடுத்தது யார்? முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் பொறுப்பிலிருந்தபோது அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிறுவனத்தை விரிவாக்கம் செய்வதற்கு யார் நிலம் கொடுத்தது? தவறென்றால், நீங்கள் அதை அப்போதே நிறுத்தியிருக்க வேண்டும். இதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொழில் துறை அமைச்சராக இருந்தபோது அந்த நிறுவனத்தை விரிவாக்கம் செய்வதற்கு கையெழுத்து போட்டிருக்கிறார். விரிவாக்கம் செய்வதற்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் முழுவதுமாக சொல்ல வேண்டுமென்றால், என்னிடம் எல்லா விவரங்களும் இருக்கின்றன. நேரம், காலம் அதிகம் தேவைப்படும். சொல்ல வேண்டுமென்றால், நான் சொல்கிறேன். எந்தெந்த

நேரத்தில், என்னென்ன சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன, என்னென்ன உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என்ற எல்லா விவரங்களையும் புள்ளிவிவரத்தோடு நான் சொல்கின்றேன்; ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன்.

நான் முதலமைச்சராக இருந்தபோது, இவற்றைப் பதிவு செய்தபோது வெளிநடப்பு செய்துவிட்டார்கள். எல்லா விவரங்களும் ஏற்கெனவே அவைக் குறிப்பில் முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆக, யார் யாரால், எந்தெந்த ஆட்சியில், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, என்னென்ன அனுமதி கொடுக்கப்பட்டது என்ற விவரமெல்லாம் தெரியும். ஆனால், மீண்டும் 2018 ஆம் ஆண்டு, அந்த ஆலையைப் புதுப்பிக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையை நிராகரித்த அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதை நான் அவையில் பதிய வைக்கிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லக்கூடாது என்றிருந்தேன். இருந்தாலும், அதை இந்த நேரத்தில் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கின்ற மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அந்த ஆர்ப்பாட்டத்தில் நீங்களும் கலந்துகொண்டிருக்கிறீர்கள். நாங்கள் தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் அதைப் பார்த்தோம். ஏழையெளிய தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு வேண்டுமென்றுதான் போராட்டம் நடத்தினார்கள். ஆனால், அந்தப் போராட்டத்தை கலைக்க வேண்டுமென்பதற்காக காவல் துறை தடியடி பிரயோகம் செய்த காரணத்தால், அருகாமையில் ஓடுகின்ற தாமிரபரணியில் தங்கள் உயிரைப் பாதுகாக்க குதித்த 17 பேர் இறந்தபோது, ஆட்சியில் இருந்த அரசாங்கம், தி.மு.க. அரசாங்கம்தான்.

அதுபோல, விவசாய மின் கட்டணம் யூனிட்டுக்கு 1 பைசா குறைக்க வேண்டுமென்பதற்காக விவசாயப் பெருமக்கள் போராட்டம் நடத்தினார்கள், அப்போது பலபேரை சுட்டு வீழ்த்திய அரசாங்கமும், தி.மு.க. அரசாங்கம்தான். எங்களிடம் எல்லாமே இருக்கிறது. எல்லா தகவலையும் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) அவ்வப்போது. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதில் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரலாற்றை மாற்றிச் சொல்கிறார். ஒரு பைசா மின்சார கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று வேடசந்தூரில் போராடிய விவசாயிகளை சுட்டுக் கொன்றது அ.இ.அ.தி.மு.க. அரசு. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உண்மைக்குப் புறம்பான கருத்தைப் பதிவு செய்யக்கூடாது. எந்த தேதியில் நடந்தது என்று நான் சொல்கிறேன். 19–6–1970. தற்போது திருப்பூர் மாவட்டம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வகுப்புரிமைக்காக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அன்றைக்கு போராட்டம் செய்தவர்களை, வழியில் 22 பேரை சுட்டுக்கொன்றது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்தான். (குறுக்கீடுகள்) ஆமாம். (குறுக்கீடுகள்) அதேமாதிரி தருமபுரியில் கல்லூரி மாணவிகளை பஸ்ஸோடு எரித்துக் கொன்றதும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்தான். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் இருக்கையில் அமருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆட்சி ஏற்படுகின்றபோதும் விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அண்ணா தி.மு.க. ஆட்சியில் மட்டும் நடக்கிற மாதிரி பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) அதுமட்டுமல்ல. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் குளிக்கப்போய் 250 பேரை கொன்ற ஆட்சி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இருக்கையில் உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக்கூடாது.*

பிற்பகல் 4–05

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒவ்வோர் ஆட்சி நடைபெறுகிறபோதும் சில தவறுகள் நடைபெறுவது என்பது இயல்புதான். ஆனால், அவ்வாறு நடைபெறுகிறபோது உடனடியாக நடவடிக்கை எடுக்கிற ஆட்சி இந்த ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கிறேன், பொள்ளாச்சி வழக்கு என்னவாயிற்று? என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? (குறுக்கீடுகள்) நாங்கள் வந்துதான் தற்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கொடநாடு வழக்கு என்னவாயிற்று? அதிலும் நாங்கள்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) நாங்கள்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) நாங்கள்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து யாரும் எழுந்து நிற்க வேண்டாம். உட்கார்ந்துகொண்டே யாரும் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) நான் எல்லோருக்கும் சேர்த்தேதான் சொல்கிறேன். உட்கார்ந்துகொண்டே பேசுவது நல்ல பழக்கம் இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்*

பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தளவாய் சுந்தரம் அவர்களும், திரு. செல்லூர் ராஜு அவர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசக்கூடாது என்கிறீர்களா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவருக்கும் நான் சொல்கிறேன். தயவுசெய்து இருக்கையில் அமர்ந்துகொண்டே யாரும் பேச வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். ஆரோக்கியமாக அதைக் கேட்டுக்கொண்டிருங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969 ஆம் ஆண்டில், அன்றைய முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், 'நான் இதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. துப்பாக்கி பிரயோகத்தைப் பொறுத்தவரையில், 'Shoot to kill' என்ற கொள்கை கடைபிடிக்கப்படுகிறது. சுடுவதற்கு முன்பு, கண்ணீர் புகை, தடியடி பிரயோகம் முதலியவற்றைச் செய்யலாம். இதையெல்லாம் பயன்படுத்திய பிறகுதான் இதைக் கையாள வேண்டும்' என்று அன்றைய முதலமைச்சரே சொல்லியிருக்கிறார். இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொடநாடு சம்பவம் குறித்து சொன்னார்கள். அந்த வழக்கைப் பொறுத்தவரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோதே குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவிட்டோம். குற்றவாளிகளைக் கண்டுபிடித்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு; கைது செய்ததும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு; சிறையிலே அடைத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு; நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வழக்கு நடத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆனால், அவர்களுக்கு ஜாமீன்தாரர் யார்? ** அவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு புகைப்படம் எடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதாரத்தோடு காட்டுகிறேன். அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? என்ன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

விசாரணை மேற்கொண்டீர்கள்? ஜாமீன்தாரராக இருந்தவர் ** சேர்ந்தவர். அவருக்கும், இவருக்கும் என்ன தொடர்பு? கேரளாவில் இருக்கிறவர், இங்கே தமிழ்நாட்டில் இருப்பவருக்கு எப்படி ஜாமீன் கொடுக்க முடியும்? அதுவும் அவர்கள் செய்தது சாதாரண குற்றமல்ல; கொடுங்குற்றம் புரிந்தவர்கள். இந்தக் கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அத்தனைபேரும், ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி, போதைப் பொருள் கடத்தல் இப்படி கொடுங்குற்றம் புரிந்தவர்களுக்கு ** சேர்ந்த நபர்கள் எப்படி ஜாமீன்தாரராக இருக்கலாம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சி பெயர் குறிப்பிட்டது நீக்கப்படுகிறது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அதுமட்டுமல்ல, அவர்களுக்காக வாதாடியவர் ** சேர்ந்த வழக்கறிஞர். ** சேர்ந்த வழக்கறிஞர்தான் வாதாடினார். அந்த வழக்கறிஞர்தான் தற்போது நீலகிரி மாவட்ட Sessions Court-க்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இதில் ஏதோ ** இருக்கிறது. எனவே, இந்த வழக்கை CBI விசாரிக்க வேண்டுமென்று நாங்கள் நீதிமன்றத்திலே வழக்கு தொடரவிருக்கிறோம். அப்போதுதான் உண்மைகள் வெளிவரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தை நீக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சம்பவம் நடந்து, அதற்குப் பிறகு நான்காண்டு காலம் ஆட்சியில் இருந்தவர்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) நான்காண்டு காலம் முதலமைச்சராக இருந்த நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? என்ன result? யாருக்கு என்ன தண்டனை கிடைத்திருக்கிறது? எதுவும் கிடைக்கவில்லையே! (குறுக்கீடு) நீங்கள் காப்பாற்றும் முயற்சியில்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அமைதியாக இருந்து கொண்டிருக்கிறீர்கள். அதற்குப் பின்னர், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், விசாரணையை விரைவுபடுத்தி, இன்னும் முடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் காரணம், நீங்கள் அவ்வளவு மெத்தனமாக, அலட்சியமாக இருந்த காரணத்தினால், உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலையில் காலம் கடந்து கொண்டிருக்கிறது. ஆனால்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

நிச்சயமாக, உறுதியாக அதைக் கண்டுபிடித்து, உரியவர்களுக்கு உரிய தண்டனையை இந்த ஆட்சி வழங்கும். அதுதான் உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசினுடைய கடமை குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது வழக்கு பதிவு செய்து, நீதிமன்றத்தில் நிறுத்துவது. நீதிமன்றம்தான் தண்டனை வழங்கும். அரசாங்கம் தண்டனை வழங்க முடியாது. முதலமைச்சர் தண்டனை வழங்க முடியாது. தண்டனை கொடுக்கும் அதிகாரம் முதலமைச்சருக்குக் கிடையாது. அது கொரோனா பெருந்தொற்று காலகட்டம். நீதிமன்றங்களுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது. எனவே, சாட்சிகளை விசாரிக்க முடியவில்லை. அதனால்தான் காலதாமதம் ஏற்பட்டது. நீங்கள் உடனடியாக IG தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்தீர்கள். 90% விசாரணை முடிந்துவிட்டதாகச் சொல்லி, சுமார் 700 பக்க அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்கள். பிறகு ஏன் வழக்கினை CBCID-க்கு மாற்றினீர்கள்? 90 சதவிகித வழக்கு முடிந்துவிட்ட பிறகு எதற்காக CBCID-க்கு மாற்ற வேண்டும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கினை அரசாங்கம் முழுமையாக, நன்றாக விசாரித்து, குற்றவாளிகள் தப்பிக்க முடியாதபடி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, அங்கே கொண்டுபோய் நிறுத்துவோம், அவர்களுக்கு தண்டனை வாங்கித் தருவோம் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக குற்றவாளிகள் தப்ப முடியாதபடி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அவர்களுக்கு தண்டனை பெற்று வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 4–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கொன்றும் இங்கொன்றும் என்று ஆங்காங்கே மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிற கொலைகள், கொள்ளைகளைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடியிலே திரு. வி.பி.ஆர். ரமேஷ் என்பவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர்; அதைப்போல மதுராந்தகத்திலே திரு. சொக்கலிங்கம் என்பவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர்; உப்பிலியாபுரத்திலே திரு. ரவி சித்தன் என்பவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர்; ராணிப்பேட்டையில் திரு. மோகன் என்பவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர். இத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அடிக்கப்பட்டு,இன்னும் சொல்லப்போனால், ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அரிவாளால் வெட்டப்பட்டு, குற்றுயிரும் குலையுயிருமாக மருத்துவமனையில் பொதுமக்கள் கொண்டு போய் சேர்த்தார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லாமல் வெட்டப்பட்டார்களே,குத்தப்பட்டார்களே, அந்தக் குற்றவாளிகளையெல்லாம் அந்த ஆட்சியிலே கண்டுபிடித்து நீதிமன்றத்திலே கொண்டு சென்று இதுவரை தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டார்களா? (குறுக்கீடுகள்) நான் கேட்கிறேன். ஆக, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே. . . (குறுக்கீடுகள்) தேதியோடு இருக்கிறது; நேரம், காலம் கருதி நான் சுருக்கமாகச் சொல்கிறேன். நான்கு சட்டமன்ற உறுப்பினர்களின் பெயரையே சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் நடுரோட்டிலே வைத்து அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அடித்தார்கள். (குறுக்கீடுகள்) இதுவரைக்கும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனரா? (குறுக்கீடுகள்) ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லாத ஓர் ஆட்சிதான் அந்த ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்,

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அவையில் இருக்கின்ற அனைவருக்கும் சொல்கிறேன் (குறுக்கீடுகள்) திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், திரு. கே.பி. முனுசாமி அவர்கள் உள்ளிட்ட அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் நல்ல

பழக்கம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: நான் சொல்வது என்னவென்றால், அவர்கள் பொதுவான சட்டமன்ற உறுப்பினர்களும் கிடையாது; அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே, அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டப்பட்டார்கள்; (குறுக்கீடுகள்) குத்தப்பட்டார்கள்; கொலை செய்யப்பட்டார்கள். (குறுக்கீடுகள்) என்ன நீதி கிடைத்தது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பாருங்கள், நீங்கள் ஏன் எழுந்து, எழுந்து நின்று பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) அவர் கேள்வி கேட்கிறார்; அதற்குப் பதில் சொல்கிறார்கள். திரு. கே.பி. முனுசாமி அவர்கள், எழுந்து நிற்கிறார்கள், பாருங்கள். அதற்கெல்லாம் அனுமதி கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுங்கள், பதில் சொல்வார்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் நிறைய உதாரணங்களை எங்களாலும் கொடுக்க முடியும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் அதற்குத் தீர்ப்பு வழங்கிவிட்டது. (குறுக்கீடுகள்) தீர்ப்பு வழங்கப்பட்டதற்குப் பிறகு, அதை அவையில் பேசுவது முறையா? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல்தான், கொடநாடு வழக்கு நீதிமன்றத்திலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது,

நிலுவையில் இருக்கின்றது. அதை எப்படி விமர்சனம் செய்யலாம்? நீதிமன்றத்திலே விசாரணைகளெல்லாம் முடித்து, Cr.P.C. Section 313-ன்படி விசாரணை முடிந்து, அந்த வழக்கு முடிகிற தருவாயில் இருக்கும்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது; உங்களுடைய ஆட்சி வந்தது. ஆகவே, அதனுடைய காலங்கள் என்னவென்றால், அப்போது கொரோனா காலம். கொரோனா காலத்தில் அந்த நீதிமன்றங்களுக்கெல்லாம் விடுமுறை விட்டிருந்தார்கள். அதனால்தான், தொடர்ந்து விசாரிக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: நாங்கள் தீர்ப்புக்குள்ளே போகவில்லை; அந்த வழக்கின் விசாரணைக்குள்ளேகூட போகவில்லை. என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான், இன்னும் சில விளக்கங்களை, இந்த கொடநாடு விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், நான் விளக்கிட விரும்புகிறேன்.

இந்த வழக்கின் குற்றவாளி சயான் சிறையில் இருந்து விடுதலையான 29-7-2021 அன்று காலை சிறை அதிகாரிகளிடம் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தனது உயிருக்கு ஆபத்து இருந்தது என்பது குறித்துப் பேசியிருக்கிறார். தற்போது இந்த வழக்கில் சில உண்மை நிலவரத்தைத் தெரிவிக்க உள்ளதாகவும் கூறி அவர் அளித்த மனு உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, வழக்கின் மேல் புலன்விசாரணை நடத்த அனுமதி கோரி அரசுத் தரப்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து காவல் துறையினர் எதிரி சயானை விசாரணை செய்தனர். மேல் விசாரணைக்கு எதிராக அம்மா பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் அனுபவ் ரவி தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து இந்த வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தனிப்படை, ஏற்கெனவே விசாரணை செய்த சாட்சிகள் மற்றும் புதிய சாட்சிகளை விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காகவும், சாட்சியங்களை மறைத்த

காரணத்திற்காகவும் இறந்துபோன கனகராஜின் சகோதரர் தனபால் மற்றும் ரமேஷ் ஆகியோரை 25–10–2021 அன்று கைது செய்தனர்.

தொடர்ந்து தனிப் படையினர் 306 நபர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில், இந்த வழக்கு 19–10–2022 அன்று மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, அவர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் நடந்தது ஏப்ரல் 24, 2017; 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தச் சம்பவம் நடந்ததும் உடனடியாக ஆதாரங்களை சேகரித்து, தடயங்களைக் காப்பாற்றி, வாக்குமூலங்களையும் முறையாகப் பெற்று வைத்திருந்தால், விரைந்து வழக்கை முடித்திருக்க முடியும். ஆண்டுகள் பல ஓடிய காரணத்தால், சில விஷயங்களை முழுமையாக வெளிக்கொண்டு வர தாமதம் ஏற்படுகின்றது. ஆனாலும், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களுடைய வீட்டில் நடந்த விவகாரம் இது என்கிற காரணத்தால், அவர் சாதாரண நபர் அல்ல; முதலமைச்சராக இருந்தவர். ஆக, அவர் இருந்த அந்த பங்களாவிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பது வேதனைக்குரிய ஒன்று; எனவே, இந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில், மிகுந்த கவனத்தோடு விசாரணை நடத்தி, உண்மைக் குற்றவாளியை நிச்சயமாக விரைவில் கண்டுபிடிப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நடந்த சம்பவங்கள் பற்றி நிறைய பேசி முடித்துவிட்டீர்கள். கொஞ்சம் ஆரோக்கியமாகப் பேசுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அங்கு வசித்தது உண்மைதான். அந்த வீடு வேறு ஒருவருடையது; அவருடையதல்ல; அம்மா அவர்களுடையதல்ல அந்த வீடு. (குறுக்கீடு) வேறு ஒருவருடைய வீடு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: அங்கு அவர்கள் இருந்தார்களா, இல்லையா? Camp office அங்கு இருந்தது. Camp office-ஏ அங்கு இருந்தது. அதிகாரிகள் அங்கு சென்று கோப்புகளில் கையெழுத்து வாங்கியதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? அவர்கள் இருந்தார்களா, இல்லையா? அந்த பங்களா அவருக்குச் சொந்தமா, இல்லையா என்பது பிரச்சினை இல்லை. ஆனால், அது அவர்கள் இருந்த பங்களா; அவர்கள் ஓய்வு எடுத்த பங்களா ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியாகக் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எல்லா முதலமைச்சர்களும் அவர்களுக்குத் தேவையான இடத்தில் வசிப்பார்கள். அது அவர்களுடைய சொந்த விவகாரம். அவர் இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு, அது தனியாருடையது. அவருடைய சொந்த இடம் கிடையாது; தனியாருடையது. (குறுக்கீடு) அதை நீங்கள் கேட்டு விசாரித்துக் கொள்ளுங்கள். உங்களிடம் அரசாங்கம் இருக்கிறதல்லவா! நீங்கள் விசாரித்துக் கொள்ளுங்கள். அதுமட்டுல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீண்டும் மீண்டும் இதை வலியுறுத்திப் பேசுகிறார். நான் கேட்பது, ஜாமீன்தாரர் யார்? இதை விசாரித்தீர்களா? ஜாமீன் கொடுத்தவரை விசாரித்தீர்களா? அவருக்கும், இந்த குற்றம்புரிந்தவருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? அவர் கேரளாவைச் சேர்ந்தவர்; இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அவருக்கும், இவருக்கும் என்ன சம்பந்தம்? இதுவரையிலும் விசாரிக்கவேயில்லை. ஆக, இதிலிருந்து ஒரு ** வெளிப்படுகிறது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சில பெயர்களைச் சொன்னார்கள். அவர்கள், எல்லா ஊடகங்களிலும் தெளிவாகப் பேட்டி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொடுத்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்ற விவரத்தை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இது எல்லா ஊடகங்களிலும் வந்த செய்திதான். இதை மறைத்துப் பேச வேண்டிய அவசியமே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, போதுமா?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: Right. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. எழிலரசன், உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். அது நல்ல பழக்கமல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதேதோ ரூபத்தில் ** என்றால், ஒன்றுமே நடக்காது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும், நேர்மையான வழியிலே நாங்கள் அரசாங்கத்தை நடத்தினோம். ஆகவே, 'மடியிலே கனம் இல்லை, வழியிலே பயம் இல்லை' என்பதை ஆணித்தரமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) பாருங்கள், இதற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) என்னுடைய கருத்தைப் பதிய வைக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** என்ற வார்த்தையெல்லாம் வேண்டாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர்கள், தயவுசெய்து உட்காருங்கள். ஆளுங்கட்சியில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன்; கொஞ்சம் அமைதி காத்துக்கொள்ளுங்கள். பொதுவாகவே காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறும்போது, இதுபோன்ற ஒரு சூடு இருக்கும். அதனால்தான், கலைஞர் அவர்கள், காவல் துறை மானியக் கோரிக்கையில் இதுபோன்ற ஒரு fire இருக்கும். அதனால்தான், fire engine-ஐ கூட சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். (சிரிப்பு) அதுபோன்று fire engine-ஐ use பண்ணுகிற நிலைமை வராது. விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவரும் பாவம் என்ன செய்வார்; அவர்கள் ஆட்சியில் நடந்த அனைத்தையும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்லிக் கொண்டிருந்தார். இப்போதுதான் ஏதோ ஒன்றுக்கு வந்திருக்கிறார். அதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். பதிலை இரண்டு பேருமே சொல்லி maintain செய்து கொள்வார்கள். எந்த side ஆக இருந்தாலும், உட்கார்ந்து கொண்டு இடையிடையே பேசுவது என்பது தேவையற்ற ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நாகரிகமாக இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, நான் வாய்ப்பு தராமல் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன், என் அனுமதியில்லாமல் நீங்கள் எழுந்து நின்று பேசியது தவறு. யாராக இருந்தாலும், இவ்வாறு பேசக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், காவல் துறை பற்றி பேசி முடித்துவிடுங்கள்; தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு வாருங்கள் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறித்து பேசுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்கள், காவல் நிலையம் தாக்கப்படுவது குறித்த சிலவற்றை இங்கே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். காவல் பணிபுரிபவர்கள் தங்களுடைய வீட்டையும், குடும்பத்தையும் மறந்து, அர்ப்பணிப்பு உணர்வோடு, பல்வேறு இடையூறுகளுக்கிடையே பணியாற்றி வருகிறார்கள். பல்வேறு சம்பவங்களில் காவலர்கள் சமூக விரோதிகளால் தாக்கப்படுவது, பெண் காவலர்கள் அவமானப்படுத்தப்படுவது போன்ற செயல்கள் கண்டிக்கத்தக்கது. 31–12–2022 அன்று சென்னை விருகம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெண் எம்.பி.-க்கள் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் ** சேர்ந்த ஒருவர் காவலுக்கு நின்ற பெண் காவலரிடம் அத்துமீறி நடந்து கொண்டது ஏற்புடையது அல்ல. இந்தக் குற்றச் சம்பவம் குறித்து நான் அறிக்கை வெளியிட்ட பிறகுதான் கண் துடைப்புக்காக அவர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் வெளி வந்திருக்கிறார். இதுபோன்ற நபர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் குற்றச் செயல்கள் குறையும். பெண் காவலர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 4–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியாக சொன்னது நீக்கப்படுகிறது. அவைக்கு நீங்கள் முன்பாகவே கொண்டு வந்ததையெல்லாம் பேசியாக வேண்டுமா?

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஆமாம். இதனை நாங்கள் சொல்லித்தானே ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தி கிடைத்த அடுத்த வினாடியே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். இதுதான் உண்மை. அவர்மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. என்னவோ, அவர் அறிக்கை வெளியிட்டதற்குப் பிறகுதான் நாங்கள் நடவடிக்கை எடுத்ததாகச் சொல்கிறார்; அது உண்மையல்ல. உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், பெரியகுளத்தில் போற்றுதலுக்குரிய அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. அந்த விழாவிலே சிலைக்கு மாலை அணிவிப்பு நிகழ்ச்சியின்போது, இரு பிரிவைச் சார்ந்தவர்கள் மோதிக்கொண்டனர். அவர்கள் மோதிக் கொண்ட பிறகு, அந்த மோதலைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், காவல் துறையினரை அவர்கள் காவல் நிலையம் வரை விரட்டிச் சென்றிருக்கிறார்கள். காவல் நிலையத்தில் கற்களை வீசி, அங்கேயிருக்கின்ற வாகனங்களையெல்லாம் சேதப்படுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கேயிருக்கிற பெண் ஆய்வாளர்கள்கூட காயம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, இப்படி பிரச்சினை வருவதற்கு முன்பாகவே, முழுமையாக காவல் துறை பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்திருந்தால், இப்படிப்பட்ட பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். ஆகவே, இனியாவது உளவுத் துறையின் மூலமாகக் கண்டறிந்து, அந்தப் பகுதியில் சிலைக்கு மாலை அணிவிக்க வருகின்றவர்கள் எத்தனை பேர், எப்படி

வருவார்கள் என்பதையெல்லாம் திட்டமிட்டு செயல்படுத்தி இப்படிப்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது உண்மைதான்; நான் மறுக்கவில்லை. இரண்டு சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், அரசியலுக்குச் சம்பந்தமில்லாதவர்கள். அரசியல் கட்சியைச் சாராதவர்கள்தான் அந்த இரண்டு சமுதாயத்தைச் சார்ந்தவர்களும். ஆனால், அண்ணல் அம்பேத்கருடைய பிறந்த நாளையொட்டி அந்தச் சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டுமென்று அவர்கள் ஒரு பக்கத்திலிருந்து வர, இவர்கள் ஒரு பக்கத்திலிருந்து வர, நாங்கள்தான் முதலில் அணிவிப்போம், நாங்கள்தான் முதலில் அணிவிப்போம் என்று அந்த இரண்டு சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்குள் ஒரு சலசலப்பு ஏற்பட்டு, பிறகு தகராறு ஏற்பட்டு, பிரச்சினைகள் வந்திருக்கின்றன. அதற்குப் பிறகு காவல் துறை தலையிட்டு, தடியடிப் பிரயோகம் நடத்தி, கலைத்து, அமைதிப்படுத்தி அதற்குப் பிறகு நடந்து முடிந்திருக்கிறது. அதிலே சில பேருக்கு காயம் ஏற்பட்டது உண்மை. அதுகுறித்தும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** 6–2–2023 அன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: WhatsApp போன்றவற்றில் வந்ததையெல்லாம் நாம் உறுதிப்படுத்த முடியாது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *எந்த சமூக ஊடகம்? சமூக ஊடகங்களில் திரித்து போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பொத்தாம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? எந்த சமூக ஊடகத்தில் வந்தது? என்ன ஆதாரம் இருக்கிறது? நீங்கள் ஒரு எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சராக இருந்தவர். காவல் துறையைக் கையில் வைத்திருந்தவர். பொத்தாம் பொதுவாக சட்டமன்றத்தில் பேசுவதா? (குறுக்கீடுகள்) அதற்காக பொத்தாம் பொதுவாகப் பேசிவிட முடியாது. தி.மு.க. மீது அபாண்டமான ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறீர்களே! (குறுக்கீடுகள்) தி.மு.க. மீது அபாண்டமான ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறீர்களே! எதுவாக இருந்தாலும் ஆதாரத்தோடு சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *சமூக ஊடகங்களில் வந்திருக்கிறது என்று நீங்களே சொல்கிறீர்கள். (குறுக்கீடு) சமூக வலைதளங்களில் வந்திருக்கிறது என்று நீங்களே சொல்கிறீர்கள். சமூக வலைதளங்களில் எவையெல்லாம்* morph shot *போட்டு,* trick *எடுத்துச் செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா! அதேமாதிரி உங்களைப் பற்றியெல்லாம், அதேமாதிரி இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்களைப் பற்றியெல்லாம், எதிரில் இருக்கக்கூடிய எத்தனையோ முன்னாள் அமைச்சர்களைப் பற்றியெல்லாம் சமூக வலைதளங்களில் ஏதேதோ செய்திகள் வந்துள்ளன. அவற்றைப் பற்றியெல்லாம் பேச முடியுமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 8-11-2022-ல்* WhatsApp *செய்தியை சொல்கிறீர்கள். (குறுக்கீடு) ஊடகமோ, பத்திரிகையோ... (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். 8-11-2022-ல் நடந்த சம்பவம் என்றால், அதற்கு எந்த ஆதாரமும் இல்லை அல்லவா! எனவே, அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைச் சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சியினுடைய கடமை. அது சரியா, தவறா என்பதைக் கண்டுபிடியுங்கள். ** எதையுமே பேசக்கூடாது. ஆதாரத்தைச் சென்று தேடி எடுப்பதற்கு அரசாங்கம் எங்களிடமா இருக்கிறது?*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பத்திரிகை, ஊடகங்களில் வந்த செய்தி, பகிரங்கமாக மேடையில் பேசிய செய்தி. அதைத்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைச் சுட்டிக்காட்டுங்கள்; நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அது எதிர்க்கட்சியினுடைய கடமைதான். நீங்கள் எவ்வளவோ பிரச்சினைகளைச் சொன்னீர்கள். உடனுக்குடன் சிலவற்றிற்கு நாங்கள் பதில் சொல்லியிருக்கிறோம். ஆகையால், நீங்கள் ஆதாரத்தோடு சொல்லுங்கள். சொன்னீர்கள் என்றால், நாங்களும் பதில் சொல்கிறோம். அதற்காகத்தான் நான் ஆதாரம் என்னவென்று கேட்கிறேன். பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியை வைத்துச் சொன்னீர்களென்றால், அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அது அவைக் குறிப்பில் இடம் பெறுவது முறையாகாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனை நான் ஏற்கெனவே நீக்கிவிட்டேன். பத்திரிகைச் செய்தியை வைத்து எதையும் சொல்ல முடியாது. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 4–25

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிகமாக உணர்ச்சிவசப்படுகிறார். (குறுக்கீடுகள்) நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. உதயகுமார் அவர்கள்கூட பொது மேடையிலே நான் வெடிகுண்டாக மாறுவேன் என்று கூறினார். அதுகுறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோரினால், அவருடைய கூற்று ஏற்புடைய வாதமாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறது. இல்லையென்று நாங்கள் மறுக்கவில்லை. நீங்கள், சரியா, தவறா என்று கண்டுபிடிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்றுதான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதுதான் எதிர்க்கட்சியினுடைய வேலை. இப்படி தைரியமாக ஒரு ** குற்றச்சாட்டு சொல்கின்றபோது எப்படி காவல் துறை அதிகாரிகள் செயல்படுவார்கள்? அதைத்தான் நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நீங்கள் முதலமைச்சர். அதை விசாரியுங்கள். அது சரியா, தவறா என்று கண்டுபிடியுங்கள். தவறு இருந்தால் நடவடிக்கை எடுங்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? அரசாங்கத்தை குற்றம் சொல்லவில்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். அது முடிந்த விஷயம். பத்திரிகைச் செய்தியை வைத்து நாம் எதுவுமே செய்ய முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *புது வண்ணாரப்பேட்டை காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. சரவணன். . . (குறுக்கீடுகள்) அதேபோல. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) என்ன இது? நான் பேசியதெல்லாம் தவறு என்று சொல்லி, அதனை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)* object *செய்கிறார்கள். அப்படியென்றால் அவர் பேசுவதெல்லாம் சரியா? அவருக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயமா? என்ன நீதி இது? (குறுக்கீடுகள்) என்ன நீதி இது? சொல்லுங்கள் பார்ப்போம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கொஞ்சம்* fire *ஆக இருக்கிறது,* tension *ஆக இருக்கிறது. ஆனால், இப்போது திரு. செல்வபெருந்தகை அவர்கள், அவர் பேசுவதைக் குறுக்கிட்டுப் பேசினால்* allow *செய்ய முடியாது. ஆனால்,* Every Member has got the right to raise a point of order. *அந்த* point of order*-ஐ அவர் சொல்கிறார். ஆகையால்,* Sir should yield to the point of order. *அவரிடம் கேட்டு,* genuine *என்றால்* point of order*-ஐ* allow *செய்யுங்கள். இல்லையென்றால்* expunge *செய்யுங்கள்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.* (குறுக்கீடுகள்)

திரு. கு. செல்வபெருந்தகை: Point of order, please. *நான்* point of order *கேட்கிறேன். நான் பேசியது எல்லாமே புத்தகங்களில் இருக்கிறது. இங்கே பாருங்கள்.* (குறுக்கீடுகள்) *நான், அங்கு சொன்னார்கள், இங்கு சொன்னார்கள்,* social media*-வில் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. நான் புத்தகத்தை பார்த்துப் படிக்கிறேன். இதெல்லாம் அவர்கள் பேசியது.* (குறுக்கீடுகள்) *அதற்குப் பிறகு இந்த அவையில் என்ன நடந்தது, ஆதி திராவிடர் நலத் துறை மானியத்தைப் புறக்கணிக்கிறீர்களா என்று கேட்டேன். உடனே எழுந்து சத்தம் போடுகிறார்கள்.* (குறுக்கீடுகள்) *ஆதாரப்பூர்வமாக பேசுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள்.* (குறுக்கீடுகள்) *இது என்ன என்று கேட்கிறேன்.* (குறுக்கீடுகள்) This is blunder. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, பதிலுரையைத் தவிர, இது* point of order *ஆக வராது. ஆகையால்,* please *உட்காருங்கள்.* (குறுக்கீடுகள்) *நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் நாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். வேறு எங்கு கொண்டு செல்ல முடியும்? இது விவாதம் நடைபெறுகின்ற பேரவை. இங்கு விவாதத்திலே நாங்கள் எங்களுடைய கருத்துகளைச் சொல்கிறோம். இது சரியா, தவறா? சரியாக இருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள், தவறாக இருந்தால் விட்டுவிடுங்கள். இதில் என்ன இருக்கிறது? இருக்கின்ற பிரச்சினையைத்தான் நாங்கள் சொல்கிறோம். எல்லாப் பிரச்சினைகளையும் நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே நீங்களும் முதலமைச்சராக இருந்து, நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, இதே பிரச்சினையை நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். எங்களை அனுமதிக்கவில்லை. ஆதாரம் இருந்தால்தான் சபாநாயகர் எங்களை அனுமதித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், இப்போதும் நீங்கள் பேசுங்கள், நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம். என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்பதை நாங்கள்தான் சொல்கிறோமே! நீங்கள் எத்தனையோ பிரச்சினைகளைச் சொன்னபோது, அதனை ஏற்றுக்கொண்டு, ஒத்துக்கொண்டு, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம், எத்தனை பேரை கைது செய்திருக்கிறோம், வழக்கு போட்டிருக்கிறோம் என்பதையும், தி.மு.க.-வைச் சார்ந்த தோழர்களின்மீதுகூட நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றுதானே நாங்கள் உங்களிடம் சொல்லியிருக்கிறோம். ஆகையால், இப்போதும் நீங்கள் சொல்வதை ஆதாரத்தோடு சொல்லுங்கள்; உரிய நடவடிக்கை எடுக்க நாங்கள் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரும் ஒரு முதல்வராக இருந்தவர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், நீங்கள் என்ன குற்றச்சாட்டு வேண்டுமென்றாலும் சொல்லுங்கள். நான் அது குறித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். நான் இப்போது defend செய்ய வரவில்லை. நீங்கள் என்ன சொன்னாலும் whether it is true or not, I will find out and then inform the House என்று சொல்கிறார். ஆகையால், நீங்கள் சொன்ன எந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லவில்லையென்று சொல்லுங்கள்.

இரண்டாவது, இன்னொன்று நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர். முக்கியமாக, முன்னாள் முதல்வராக இருந்தவர். அதைவிட இன்றைக்கு அவர் ஒரு மாதிரியாக இங்குவந்து உட்கார்ந்திருக்கிறார். (குறுக்கீடுகள்) ஆகையினால், நேற்றேவா? சரி, நேற்றே. (குறுக்கீடுகள்) ஆகையினால், இந்தமாதிரி சின்ன, சின்ன விஷயங்களை விட்டுவிட்டு, பெரிதாக இரண்டு விஷயங்களைப் பற்றி பேசி முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 4–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். நான் ஆரம்பத்திலே தெளிவாகச் சொன்னேன். நாங்கள் பூதக் கண்ணாடியை போட்டுக்கொண்டு பெரிதாக்க விரும்பவில்லை. நாட்டில் நிலவுகின்ற பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறோம். அப்படியிருந்தால்தான் இந்த அரசு ஆரோக்கியமாக இருக்கும். ஆகவே, விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றபோது அப்படியே மங்கலாகும். அதைத் தூண்டிவிட்டால் பிரகாசமாக எரியும். அதைப்போலத்தான் எங்களுடைய கருத்தும் இருக்கிறது, வேறு ஒன்றும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உங்களுடைய கருத்து அல்ல. பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு நீங்கள் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6–2–2023 அன்று சென்னை, ஆலந்தூரில் காவலர் விஜயன் சமூகவிரோதிகளால் தாக்கப்பட்டு, 9–2–2023 அன்று உயிரிழந்த சம்பவம் காவலர்கள் மத்தியிலே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

புதுவண்ணாரப்பேட்டை காவல் துறை உதவி ஆய்வாளர் சரவணன் 11–8–2022 அன்று மாலை வாகனச் சோதனையில் ஈடுபட்டபோது, காசிமேடு லோகநாதன் மற்றும் அவருடைய நண்பர்கள் இரண்டு பேர் காவல் உதவி ஆய்வாளரைத் தாக்கிவிட்டுச் சென்றனர். அவர்களைத் தடுக்கச் சென்ற சக காவலர்களை கத்தியைக் காட்டி மிரட்டி தப்பித்துவிட்டனர். காசிமேடு லோகநாதன் கைது செய்யப்பட்டார். அவருடைய நண்பர்கள் இருவரையும் போலீசார் தேடி வருகின்றனர். இதுபோன்ற சம்பவங்களெல்லாம் நிறைய இருக்கின்றன. இருந்தாலும், நேரம் கருதி, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கட்டளைக்கு இணங்க, ஒருசிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பாலியல் தொல்லை வழக்குகள் எண்ணிக்கை 58 ஆக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுகளில் மிகவும் குறைந்திருந்தன. தற்போது, நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒருசிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

30–5–2022 அன்று சென்னை, புளியந்தோப்பு பகுதியைச் சார்ந்த திலீப்குமார் என்பவர் 10 ஆம் வகுப்பு மாணவி பரீட்சை எழுதி முடித்துவிட்டு வெளியே சென்று கொண்டிருந்தபோது, அந்த மாணவியை பொதுமக்கள் மத்தியில் தைரியமாகக் கடத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியின் தலைமையாசிரியர் வெங்கடேசன், மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததால், அவரை போக்சோ சட்டத்தின்கீழ் கைது செய்திருக்கிறார்கள். இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், பள்ளியில் படிக்கின்ற அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள் இப்படி

பாலியல் வன்கொடுமைகளை ஏற்படுத்துகிறார்கள். இதுபோன்று விவரங்கள் நிறைய இருக்கின்றன. நேரத்தின் அருமை கருதி, அவற்றையெல்லாம் நான் தவிர்த்துவிடுகிறேன். பள்ளிகளில் படிக்கின்ற பெண் குழந்தைகளுக்கு, அதுவும் சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை நடைபெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுப்பதற்கு அரசு முழு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*அதேபோல, ** அவற்றில் ஒருசிலவற்றை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.*

*** இதெல்லாம். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் இவற்றையெல்லாம் அவையில் காட்டுவதற்கு முன்பே என்னிடத்தில் கொண்டுவந்து காண்பித்து, அனுமதி பெற்றிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *முதலில், உங்களிடம் கொடுக்கிறேன். உங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். இதற்கு நடவடிக்கை எடுங்கள். இதுபோன்ற ** (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அவையில் ஒரு பதிவைக் காட்ட வேண்டுமென்றால், முதலில் என்னிடத்தில் கொண்டுவந்து காண்பித்திருக்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எங்கு நடந்தது? யார்? என்ன address? அதை யார் உங்களுக்குக் கொடுத்தது? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அதற்கான ஆதாரத்தை முதலில் அவர் உங்களிடம் காண்பித்தாரா? சபாநாயகர் அவர்களிடம் அதற்கான அனுமதியைப் பெற்றிருக்கிறாரா? அவர் என்ன ஏதோ விளையாட்டுத்தனமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அவற்றையெல்லாம் அவைக் குறிப்பில்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பதிவு செய்துகொண்டிருந்தால் அது எப்படி முறையாகும்? நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன் ஆதாரத்தோடு பேச வேண்டும். அப்படியில்லையென்றால், அவற்றையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடு) இல்லை, address இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்வதை நீங்கள் உள்வாங்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் பேசிவிடுகிறேன். ஒரு நிமிடம் எனக்கு time கொடுங்கள். (குறுக்கீடு)

ஒரு பொருள் குறித்து நீங்கள் அவையில் பேசுவதற்கு முன்பே இப்படியிருக்கிறது என்று என்னிடத்தில் காட்டி, அனுமதி பெற்றிருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இது எங்கு நடந்தது, எப்போது நடந்தது, என்ன விவரம் என்று கேட்கிறார்கள். ** என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இந்தந்த ஊரில் இந்தச் சம்பவம் இப்படி நடந்திருக்கிறது. இது தொடராமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். அது O.K. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அவற்றை நீங்கள் உள்ளே வையுங்கள். ஏனென்றால், முதலில் அவற்றை நீங்கள் என்னிடத்தில் காண்பிக்கவில்லை. எனவே, தயவுசெய்து என்னிடத்தில் காட்டாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, சம்பவத்தைப் பற்றிச் சொல்லுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அவைக் குறிப்பில் இடம்பெறுவதே முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம். அவர் ** வைத்திருக்கிறார். அதில் விஷயம் இருக்கிற மாதிரி எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, ஆதாரத்தோடு சொல்லட்டும். இந்தச் சம்பவங்கள் எங்கு நடந்தன? எப்போது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நடந்தது? எந்த தேதியில் நடந்தது? யார் கொலை செய்யப்பட்டார்? பெயர் என்ன? ஊர் என்ன என்று ஆதாரத்தோடு சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 4–35

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆதாரத்தைச் சட்டமன்றத்தில் காண்பிக்க வேண்டுமானால், முதலில், சபாநாயகரிடத்திலே காண்பிக்க வேண்டும். அப்படி காண்பித்த பிறகு, எந்த அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமோ அவருக்கு அதைத் தர வேண்டும். அப்போதுதான் அவகாசம் எடுத்து அதற்குப் பதில் சொல்ல முடியும். அதைவிட்டுவிட்டு, ** என்றுதான் எனக்கு ஆச்சரியம். ஏனென்றால், அவர் முதல்வராக இருந்தவர், மூத்தவர், எல்லாமுமாக இருந்தவர், இன்றைக்குப் பெரியவர். ஆகையால், ** நீங்கள் அதை நீக்கிவிடுங்கள் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** தயவுசெய்து அதையெல்லாம் நீக்கிவிடுகிறேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரே மாதிரியாக நடைபெறுகிறது. அதனால்தான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு இப்படிப்பட்ட தகவல் கொடுத்தால்தானே கண்டுபிடிக்க முடியும். இதில் என்ன தவறு இருக்கிறது. ஆகவே, நடைபெற்ற சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இப்போது பிரச்சினையே அதுதானே! நீங்கள் சொல்வதில் தவறில்லை. **

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக நான் இதைக் காண்பிக்கவில்லை. இப்படிப்பட்ட சம்பவம். . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் படம் காண்பித்த அந்தப் பிரச்சினை முடிந்து போய்விட்டது. இப்போது வேறு விஷயத்திற்கு வாருங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எதையும் பேசவே விடமாட்டேன் என்றால் எப்படித்தான் பேசுவது? நாட்டில் இப்படி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் இல்லையா!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப அதையே சொல்கின்றார். திரும்பத் திரும்ப நானும் அதையே சொல்லிக்கொண்டிருக்கின்றேன். இவ்வளவு பேசியிருக்கின்றார். அவ்வளவுக்கும் நாங்கள் பதில் சொல்லியிருக்கின்றோம். எனவே, இதற்கும் நான் பதில் சொல்லத் தயார். ஆனால், இப்படி காண்பிப்பது முறையில்லை. இது உண்மையாகக்கூட இருக்கலாம். நான் சொல்கின்றேன், இது உண்மையாகக்கூட இருக்கலாம். இருந்தாலும் உங்களிடத்தில் அனுமதி பெற்று உங்களிடத்தில் கேட்டுத்தான் இதை அவையில் பதிவு செய்ய வேண்டும். அதுதான் முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அனுமதியில்லாமல், காண்பித்து பேசியது அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். புதிய சப்ஜெக்டுக்குள் வாருங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்கிற விவரத்தை தேதியோடு சொல்கிறேன். குறித்துக்கொள்ளுங்கள். பதிலுரையில் சொல்லுங்கள். இதற்கெல்லாம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி பொத்தாம் பொதுவாக, ** என்றெல்லாம் பேச வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நான் சொல்கிறேன். பிறகு நான் எப்படித்தான் சொல்வது? தேதியோடு சொல்கின்றேன். 5–7–2022 அன்று முதுகுளத்தூரில் 67 வயதான காந்தி என்ற மூதாட்டியைக் கழுத்தறுத்து கொலை செய்து, 18 சவரன் நகைகளைக் கொள்ளையடித்திருக்கின்றார்கள். 18–7–2022 அன்று அருப்புக்கோட்டையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Correct. *இதையும் கேளுங்கள். சம்பவம் நடைபெற்றிருக்கிறது. வழக்குப் பதிவு செய்து குற்றவாளிமீது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, எடுக்கவில்லையா. . .*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதுதான் எங்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். இவற்றின்மீது வழக்கு பதிவு செய்திருக்கிறார்களா இல்லையா, அப்படி வழக்குப் பதிவு செய்யவில்லையென்றால் பதிவு செய்து, அதற்குண்டான நடவடிக்கைகளை எடுங்கள் என்றுதான் சொல்கின்றேன். இதை எதையுமே பேசக்கூடாது என்றால், எப்படித்தான் சொல்வது? தேதி வாரியாக நடைபெற்ற சம்பவங்களைச் சொல்கின்றேன். நீங்கள் இவற்றைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுங்கள். இதற்கென்று தனி அமைப்பை ஏற்படுத்துங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அவர்கள் ஆட்சியிலும் சரி, எங்கள் ஆட்சியிலும் சரி, காலையில் பத்திரிகைகளைத் திறந்தால், இந்த இடத்தில் கொலை, இந்த இடத்தில் வன்முறை, இந்த இடத்தில் பாலியல் தகராறு என்று இரண்டு பக்கமும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், சும்மா இருக்கின்றோமே என்று இதையெல்லாம் தொகுத்துவிட்டு, இப்போது 'இதன்மீது எல்லாம்* action *எடுத்தீர்களா, எடுத்தீர்களா' என்று கேட்கிறீர்கள். இவை எல்லாவற்றின்மீதும் அந்தந்த ஊர் போலீஸ் ஸ்டேஷன்மூலம்* action *எடுக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றின்மீதும் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். ஆகையால், நீங்கள் அவற்றைப்பற்றி கவலைப்பட வேண்டாம். நீங்கள் சொன்ன இடங்களில் எல்லாம் அந்தந்த போலீஸ் ஸ்டேஷனில்* action *எடுக்கப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களைக் காக்கின்றவிதமாக இதற்கென்று தனி ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதுவும் கிராமப்புறங்களில் தனியாக வசிக்கின்ற அந்த முதியோர்களைக் கண்டறிந்து இப்படிப்பட்ட சம்பவம் நடைபெறுகிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாதவண்ணம் இந்த அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லாம்* correct *இப்படி பொத்தாம் பொதுவாக, நானே இப்போது, . .*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *என்ன நீங்கள், இத்தனையும் தேதி வாரியாக சொல்கிறேன். இப்படி பொத்தாம் பொதுவாக என்றால் எப்படி? தெளிவுபடுத்தினாலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் ஒன்றைமட்டும் சொல்கின்றேன். அதைக் கேட்டுக்கொள்ளுங்கள். பேரவைத் தலைவர் என்ற முறையில், விருப்பு, வெறுப்பு இல்லாமல் சொல்கிறேன். இப்படி நடந்த சம்பவம், கண்டுபிடிக்கப்படாத சம்பவங்கள், கண்டுபிடித்த சம்பவங்களை சொல்வதென்றால், ஒவ்வொருவரும் 100 பட்டியல்கள் இடலாம். அப்படி ஒவ்வொரு ஆட்சியிலும் நடந்திருக்கின்றன. நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கெல்லாம் விரும்பவில்லை. இதேபோன்று, அம்பாசமுத்திரத்தில் ** அது யார் ஆட்சி என்று பார்த்தீர்களென்றால், அதில் பெரிய விவகாரம் வரும். அது இப்போது தேவையில்லை. நீங்கள் முதலமைச்சராக இருந்தவர். தமிழ்நாடு அளவில் நல்ல ஆலோசனை சொல்லுங்கள்.*

பிற்பகல் 4–40

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தொடர்ந்து ** விவரத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். இதை எப்படித்தான் சொல்ல வேண்டுமென்பதை நீங்களே சொல்லுங்கள். அதேமாதிரி நாங்கள் சொல்கின்றோம். காவல் துறை மானியக் கோரிக்கையில் என்னதான் பேசுவது? அப்படி நடைபெற்ற சம்பவங்களை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இனி முதியோர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்கென்று தனி ஓர் அமைப்பை ஏற்படுத்துங்கள். அதைத்தான் சொல்கிறேன். அவர்கள் இறந்தபிறகு கண்டுபிடித்து பயன் கிடையாது. போன உயிர் போனதுதான். விலை மதிக்கமுடியாத உயிர் போய்விட்டால் மீட்டெடுக்கமுடியாது. ஆகவே, அரசினுடைய கடமை, முதியோர்களைக் காக்க வேண்டும். அதற்கு தனி அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, கஞ்சா விற்பனை முழுமையாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதற்காக Operation Ganja Hunt *2.0, அதற்குப் பிறகு* Operation Ganja Hunt *3.0 என்று எல்லாம் கொடுக்கப்பட்டது. ஆனாலும், இன்னும் கஞ்சா விற்பனையைத் தடுக்க முடியவில்லை. ஆகவே, வேகமாக, துரிதமாக இதில் கவனம் செலுத்தி, இளைஞர்கள், மாணவர்கள், முதியவர்கள் எல்லோருமே கஞ்சாவைப் பயன்படுத்துகின்ற நிலை வந்துவிட்டது. ஆகவே, இது எதிர்காலத்தில் மிக மோசமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த விற்பனையைத் தடுப்பதற்கும், இதை எங்கேயிருந்து கொண்டு வருகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து, உரிய நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் போதை இல்லாத ஒரு மாநிலமாக உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஞ்சா, குட்காவைப்பற்றி பேச ஆரம்பித்தால் எந்த நிலைமைக்குப் போகும் என்பதை இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லோரும் அறிவார்கள். போதைப் பொருட்களின் பிடியில் இந்த மாநிலத்தை விட்டுச்சென்றது உங்கள் ஆட்சியில்தான். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு (மேசையைத் தட்டும் ஒலி) போதைப் பொருள் நடமாட்டத்தை ஒழிக்க பல தீவிர நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 2020-ல்* COTPA *சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகள் 40 ஆயிரத்து 246. ஆனால், திமுக ஆட்சியில் இதுவரை பதிவான வழக்குகள் 63 ஆயிரத்து 656. அ.இ.அ.தி.மு.க.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 20

ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் 37 ஆயிரத்து 846. தி.மு.க. ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 65 ஆயிரத்து 480 பேர். 2020–ல் பறிமுதல் செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 1 இலட்சத்து 22 ஆயிரம் கிலோ. ஆனால் தி.மு.க. ஆட்சியில் பறிமுதல் செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 295 கிலோ. 2016, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலிருந்து எடுத்துக் கொண்டால் 2020–ல் NDPS சட்டத்தின்கீழ் போடப்பட்ட வழக்குகள் 5 ஆயிரத்து 403 மட்டும். ஆனால், தி.மு.க. ஆட்சியில், 2022–ல் மட்டும் 10 ஆயிரத்து 391 வழக்குகள். அதாவது double ஆக வழக்குகள் போடப்பட்டு போதைப் பொருட்களை ஒழிப்பதில் தீவிரத்தை நாங்கள் காட்டியிருக்கிறோம். கடந்த 6 வருடங்களில் அதிக எண்ணிக்கையில் போடப்பட்ட வழக்கு 2022–ல்தான். அதுவும் கழக ஆட்சியில்தான். அதேபோல் இச்சட்டத்தின்கீழ் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 2020–ல் 15 ஆயிரத்து 313 கிலோ கஞ்சாவும், 1 கிலோ 896 கிராம் Heroin–னும், 527 வாகனங்களும் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால், தி.மு.க. ஆட்சியில் 2022–ல் மட்டும் 27 ஆயிரத்து 140 கிலோ கஞ்சா, 22 கிலோ 58 கிராம் Heroin, 1,242 இரு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி போதைப் பொருள்கள் விற்போரின், விநியோகிப்போரின் 5 ஆயிரத்து 723 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆய்வின்போதும், கள ஆய்வின்போதும் இந்த நடவடிக்கைகளை நான் துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறேன்.

காவல் துறையினர் இவ்வளவு நேர்மையாக நடவடிக்கை எடுத்து வருகின்ற நேரத்தில் ஒரு சில “கருப்பு ஆடுகள்” காவல் துறையில் இருப்பதை, நமது காவல் துறை அதிகாரிகள் களையெடுத்து வருகிறார்கள். போதைப் பொருட்கள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட இரவு–பகல் பாராமல் காவல் துறையினர் பணியாற்றி வருவது இந்த ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட வெட்கக்கேடு என்னவென்று கேட்டால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சுகாதாரத் துறை அமைச்சர்களாக இருந்தவர்கள், DGP, Commissioner மற்றும் போலீஸ் அதிகாரிகளாக இருந்தவர்கள் மீதெல்லாம் CBI வழக்கு தொடுக்கக்கூடிய அளவிற்கு குட்கா நடமாட்டம் தலைவிரித்தாடியது; அதை மறந்துவிட்டுப் பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

சமீபத்தில்கூட முன்னாள் DGP, முன்னாள் Police Commissioner ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது; நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்தான் போதைப் பொருட்களின் மாநிலமாக தமிழ்நாட்டை விட்டுச் சென்றீர்கள். நிதி நெருக்கடியைச் சீரமைத்ததுபோல், இந்த நிர்வாகச் சீரழிவைச் சரி செய்வது எங்கள் கடமையாக வந்திருக்கிறது. போதைப் பொருட்களின் நடமாட்டத்தையும் அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுத்திருப்பது இந்த அரசுதான். "போதைப் பொருட்களை நிச்சயமாக அடியோடு ஒழிப்போம். இளைஞர்களின் எதிர்காலத்தைக் காப்போம்". இது திராவிட மாடல் அரசு என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்கள் பொதுமக்களிடம் உண்மைக்கு மாறான வாக்குறுதிகளை அளித்து, கவர்ச்சிகரமான வட்டி, பிற சலுகைகள் வழங்குவதாக விளம்பரம் செய்து, கோடிக் கணக்கில் பணத்தை மோசடி செய்யும் நிலைமை தற்போது தமிழகத்தில் அதிகமாக நிலவி வருகிறது. பணத்தை முதலீடு செய்த பொதுமக்கள் அவதியுறும் நிலையை நாள்தோறும் நாம் ஊடகங்களில் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.*

பிற்பகல் 4–45

பொருளாதாரக் குற்றப் பிரிவுமூலம் இதுபோன்ற நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுத்தாலும் deposit செய்தவர்களுக்கு உரிய பணம் கிடைப்பதில்லை. இதுபோன்ற நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும்போதே, அவற்றின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும். அவர்கள் அளவுக்கு அதிகமாக வட்டி வழங்குவதாகவும், சலுகைகள் வழங்குவதாகவும் அறிவித்தால், பொருளாதார குற்றப் பிரிவும், பதிவுத் துறையும், பிற தொடர்புடைய துறைகளும் அந்நிறுவனங்களை ஆய்வு செய்து, தவறு செய்வதற்கு முன்பாகவே பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நிதி நிறுவனங்களைப்பற்றிப் பேசுகிறபோது, முன்கூட்டியே எச்சரிக்கையோடு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்று சொல்கிறார். இந்த நிதி நிறுவனங்கள் யாருடைய ஆட்சியில் தோன்றின? Aarudhra Gold Trading Private Limited என்ற நிதி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, பொது மக்களுடைய வைப்பீடுகளுக்கு, நிதிக்கு 25 முதல் 35 விழுக்காடு மாத வட்டி என கவர்ச்சிகரமான அறிவிப்பை அறிவித்துவிட்டு, செப்டம்பர் 2020 முதல் சுமார் 1,00,000 முதலீட்டாளர்களிடம் சுமார் ரூ.2,438 கோடி முதலீடு மற்றும் வட்டித் தொகையைத் திருப்பித் தராமல் ஏமாற்றியுள்ளதாகப் புகார்கள் வந்துள்ளன. அந்தப் புகார்கள்மீதுதான் கழக ஆட்சியில் பொருளாதார குற்றப் பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்து, உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையில், 22 பேர் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டு, இயக்குநர்கள், ஏஜெண்ட்டுகள் உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்ற Managing Director, ராஜசேகர், உஷா ராஜசேகர் ஆகியோரைக் கைது செய்து Red Corner Notice-ஐயும் அனுப்பி வைத்திருக்கிறோம். இப்படி பல நடவடிக்கைகளை நாங்கள் எடுத்திருக்கிறோம். தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இதற்கென ஒரு தனிச் சட்டத்தையே கொண்டுவந்து நிறைவேற்றினார். ஆனால், அந்தச் சட்டத்தை நீங்கள் ஆட்சியிலிருந்தபோது, முறையாகக் கடைபிடிக்காத காரணத்தினால்தான் இந்த அக்கிரமங்கள், அநியாயங்களெல்லாம் நடந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது தி.மு.க. ஆட்சியில் அதற்குரிய நடவடிக்கைகளை முறையாக எடுத்துக்கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுக்காலம் ஆகின்றது. நிதி நிறுவனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதல்ல. அந்த நிதி நிறுவனத்தில் எப்போது கோளாறு ஏற்பட்டது என்பதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும். அதுதான் அரசாங்கத்தினுடைய வேலை. (குறுக்கீடுகள்) ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினை வருகின்றபொழுது, காவல் துறையும், பொருளாதாரக் குற்றப் பிரிவும் கண்காணித்து நடவடிக்கை எடுத்திருந்தால், ஏழையெளிய மக்கள், சிறுகச் சிறுக சேமித்த பணத்தை deposit செய்து இழந்திருக்கமாட்டார்கள். அதனைத்தான் நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த ஆட்சி இரண்டு ஆண்டுக்காலமாக இருக்கிறது. அதனைக் கண்டுபிடித்து செயல்படுத்த வேண்டும். ஆகவே, இதனை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே செயல்படுத்தியிருந்தால், இப்படிப்பட்ட நிலைமை வந்திருக்காது. இன்றைக்கு உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. 2,86,465 depositors பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் ரூ.12,410 கோடி பணத்தை இழந்துள்ளதாகவும், இவ்வழக்கில் 143 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், இதனைத் தவிர்த்திருக்கலாம். அதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இருந்தாலும், ஏமாற்றியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இவர்களிடமிருந்து அந்தப் பணத்தையெல்லாம் பெற்று deposit செய்தவர்களுக்கு உரிய முறையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இன்னும் எவ்வளவு நேரம் சபையை நடத்துவீர்கள் என்று எங்களுக்குத் தெரிந்துவிட்டால், நாங்கள் ஒரு முடிவோடு இருக்கலாம். ஏனென்றால், இப்பொழுது மணி என்னவென்று பாருங்கள். காலையில் வந்து உட்கார்ந்தவர்கள் நாங்கள். என்னதான் இருந்தாலும் இப்படியா! உங்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். நீங்கள் பரவாயில்லை; வெளியே போய்விட்டு வந்துவிடுகிறீர்கள். நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நிதி நிறுவனத்தில் முக்கியமான குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். அவர்களுக்கும், குற்றவாளிகளைப் பிடித்தே ஆகவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இருக்காதா என்று சொல்கிறார்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அதுகுறித்து நானும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆதாயக் கொலைகள் 2020 ஆம் ஆண்டில் 64 ஆக இருந்தது; 2021 ஆம் ஆண்டில் 89; 2022 ஆம் ஆண்டில் 93 ஆக அதிகரித்திருக்கிறது.

அதேபோல, கூட்டுக் கொள்ளை, 2021 ஆம் ஆண்டில் 111 ஆக இருந்தது. ஆனால், இப்போது 141 ஆக அதிகரித்திருக்கிறது. இவற்றையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இதனைத் தெரிவிக்கிறேன்.

வழிப்பறி, எங்களுடைய ஆட்சியில், 2020 ஆம் ஆண்டில் 2,023 ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டில் 2,558; 2022 ஆம் ஆண்டில் 2,723 ஆக அதிகரித்திருக்கிறது.

கன்னக்களவு. 2020 ஆம் ஆண்டில் 4,275; 2021 ஆம் ஆண்டில் 5,157; 2022 ஆம் ஆண்டில் 5,902 ஆக அதிகரித்திருக்கிறது.

திருட்டு, 2020 ஆம் ஆண்டு, எங்களுடைய ஆட்சியில் 12,492 ஆக இருந்தது. இது திருட்டுகளின் விவரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளவையா?

திரு. எடப்பாடி K. பழனிசாமி: உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்துதான் இந்த விவரங்களை எடுத்திருக்கிறோம். இந்த ஒப்பீட்டை நான் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளவற்றைப் படியுங்கள். 5-00 மணிக்கு அவையை முடித்துவிடலாம்.

2023 ஏப்ரல் 20]

பிற்பகல் 4–50

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-00 மணிக்கு முடிக்க முடியாது. எப்படி 5-00 மணிக்கு முடிக்க முடியும்? எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பே நேரம் கழித்துதானே கொடுத்தீர்கள்! (சிரிப்பு) 2021 ஆம் ஆண்டில் 14,274, 2022 ஆம் ஆண்டில் 17,808.

கொலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று, 2020 ஆம் ஆண்டில் 1,597, 2021 ஆம் ஆண்டில் 1,597, 2022 ஆம் ஆண்டிலும் 1,597. மூன்று ஆண்டுகளிலும் ஒரே எண்ணிக்கையில் கொலை நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்து சரியான புள்ளிவிவரத்தைக் கொடுங்கள்.

அதேபோன்று, கொலை என கருத முடியாத மரணம் விளைவிக்கும் குற்றம், 2021 ஆம் ஆண்டில் 71 ஆக இருந்தது 2022 ஆம் ஆண்டில் 86 ஆக அதிகரித்துள்ளது.

அடிதடி வழக்கு. 2020 ஆம் ஆண்டில் 20,867 ஆக இருந்தது, 2021 ஆம் ஆண்டில் 22,170, 2022 ஆம் ஆண்டில் 25,821.

அதேபோன்று கற்பழிப்பு எண்ணிக்கை, 2020 ஆம் ஆண்டில் 404 ஆக இருந்தது, 2021 ஆம் ஆண்டில் 442 ஆக இருந்தது, 2022 ஆம் ஆண்டில் 432. சென்ற வருடத்தில் 10 எண்ணிக்கையில் குறைந்துள்ளது.

வரதட்சணை மரணங்கள். 2021 ஆம் ஆண்டில் 27, 2022 ஆம் ஆண்டில் 29.

மானபங்கம். 2021 ஆம் ஆண்டில் 1,077, 2022 ஆம் ஆண்டில் 1,414.

பாலியல் வன்கொடுமை. 2020 ஆம் ஆண்டில் 31 மட்டுமே இருந்தது. 2021 ஆம் ஆண்டில் 32, 2022 ஆம் ஆண்டில் 58 ஆக உயர்ந்துள்ளது. உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகக் குறிப்புதான்.

கணவன் மற்றும் உறவினர்களால் பாதிப்பு. 2021 ஆம் ஆண்டில் 875 ஆக இருந்தது, 2022 ஆம் ஆண்டில் 1,043 ஆக உயர்ந்துள்ளது.

ஆட்கடத்தல். 2020 ஆம் ஆண்டில் 132 ஆக இருந்தது, 2021 ஆம் ஆண்டில் 183 ஆக உயர்ந்தது, 2022 ஆம் ஆண்டில் 201 ஆக உயர்ந்துள்ளது.

நம்பிக்கை மோசடி வழக்குகள். 2021 ஆம் ஆண்டில் 126, 2022 ஆம் ஆண்டில் 216 ஆக உயர்ந்துள்ளன.

தீ வைப்பு சம்பவங்கள். 2021 ஆம் ஆண்டில் 461, 2022 ஆம் ஆண்டில் 504 ஆக உயர்ந்துள்ளன.

மோசடி வழக்குகள். 2020 ஆம் ஆண்டில் 2,717, 2021 ஆம் ஆண்டில் 3,361, 2022 ஆம் ஆண்டில் 4,320 ஆக உயர்ந்துள்ளன.

மரண விபத்துகள். 2020 ஆம் ஆண்டில் 13,868, 2021 ஆம் ஆண்டில் 14,747, 2022 ஆம் ஆண்டில் 16,997 ஆக உயர்ந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் நாங்கள் வெளியிட்டதுதான். அதை ஏன் நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் இரண்டு விஷயங்கள்தான் செய்திருக்கிறீர்கள். ஆரம்பத்தில் உங்கள் ஆட்சிக் காலத்தில் செய்தவற்றையெல்லாம் புத்தகத்திலிருந்து எடுத்துப் பேசிவிட்டீர்கள். இப்பொழுது எங்கள் Policy Note புத்தகத்தில் நாங்கள் குறிப்பிட்டிருப்பதை அதே points-ஐ மறுபடியும் சொல்கிறீர்கள். அதில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே! அதற்கு மேல் ஏதாவது இருந்தால் சொல்லலாம். வேறு இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு comparison-க்காக சொல்லியிருக்கிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். புள்ளிவிவரங்களையெல்லாம் பட்டியலிட்டார். நாங்களும் அந்தவகையில்தான் பட்டியலிட்டுக் காட்டுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில புள்ளிவிவரங்களைக் குறிப்பிடுகிறார். 2020 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 9 மாதங்கள் ஏதோ ஒரு நெருக்கடியில் இருந்தது. அதனால் அனைத்து எண்ணிக்கைகளும் குறைவாக இருந்தன. இதே மடிக்கணினியில் 2019 ஆம் ஆண்டின் தகவலும், 2018 ஆம் ஆண்டின் தகவலும் இருக்கின்றன. அந்தந்த ஆண்டு கூட்டத்தொடர்களின் மானியக் கோரிக்கைமீதான விளக்கங்களில் அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, உதாரணத்திற்கு* Burglary, *4,392 என இருந்தது, கொரோனா நெருக்கடியினால் குறைந்தது. அதேபோன்று,* Robbery *2,444 பிறகு 2,022 ஆக குறைந்தது. 2019 ஆம் ஆண்டிலிருந்து குறைந்து பிறகு அதிகரித்தது.* Lockdown *இருந்ததால் குறைந்திருந்தது.* Correct *ஆன* dates *பார்த்தால்தான்* actual *ஆக அதிகரித்துள்ளதா அல்லது* time adjust *செய்வதற்கு* correct *ஆக இருக்குமா என்று பார்க்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலிருந்துதான் நான் ஒப்பீடு செய்கிறேன். அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றுதான் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள், 2020 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 8,91,696 வழக்குகள் என்று சொன்னார்கள், அவற்றில் பெரும்பாலும்,* COVID-*19 விதிமீறல் வழக்குகள் மட்டும் 7,39,578 ஆகும். அதில்தான் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. ஆனால், உண்மையான மீதி குற்றங்களுக்கான வழக்குகள், 1,52,118 தான் உள்ளன என்பதையும் இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, 2020 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் வழக்குகளின் எண்ணிக்கை 8,91,696 என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவற்றில்,* COVID-*19 விதிமீறல் வழக்குகள் மட்டும் 7,39,578 வழக்குகள் பதிவாகியுள்ளன. அதனால்தான் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது.*

அதேபோன்று கட்சித் தலைவர்களின் பிறந்த நாள் விழா கூட்டம் அனைத்துக் கட்சிகளிலும் கொண்டாடப்படுகின்றன. அதேபோன்று அ.இ.அ.தி.மு.க. சார்பில் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிறந்த நாள் விழா கூட்டம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் விழா கூட்டம் ஆகியவற்றை நடத்துகின்றபோது, அவற்றிற்கு முறையாக காவல் துறையிடம் அனுமதி கேட்கிறோம். ஆனால், அனுமதி மறுக்கப்படுகிறது. நீதிமன்றத்திற்குச் சென்று அனுமதி பெற்றுதான் கூட்டம் நடத்துகிறோம். அப்படியே நீதிமன்றம் அனுமதி கொடுத்தாலும், சில மாவட்டங்களில், உதாரணமாக, கரூர் மாவட்டத்தில் நீதிமன்றத்தில் அனுமதி கொடுத்து, கூட்டம் நடத்தப்பெற்றது. அந்தக் கூட்டத்தில் எங்களுடைய மூத்த கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு பேசினார்கள். அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கும்போது, பொதுக் கூட்டத்திற்கு, ஆர்ப்பாட்டத்திற்கு யார், யாரெல்லாம் அனுமதி கேட்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் நாங்கள் அனுமதி கொடுத்தோம். ஆனால், இந்த ஆட்சி வந்த பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொதுக் கூட்டமோ அல்லது ஆர்ப்பாட்டமோ நடத்தினால், வழக்கு போடுகிறார்கள். நீதிமன்றம் சென்று வாதாடி அனுமதி பெற்றுத்தான் நாங்கள் கூட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எதிர்காலத்தில் அப்படிப்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவகாரங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று எல்லாமும் நடைபெறுகிறது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: அண்ணா தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போது அதிகமான போராட்டங்கள் நடைபெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில், ஆர்ப்பாட்டம், போராட்டம், பொதுக்கூட்டத்திற்கு அனுமதி என்று

கேட்கின்றபொழுது அதே இடங்களில் பல்வேறு அரசியல் கட்சிகள் முன்பே விண்ணப்பித்திருந்தால், காவல் துறை அதற்கு மாற்று இடத்தை ஒதுக்குகிறார்கள். அந்த மாற்று இடத்தில் பொதுக்கூட்டமோ, ஆர்ப்பாட்டமோ நடத்தாமல், நீதிமன்றத்திற்குச் சென்று உத்தரவு பெற்று, பிறகு மற்றொரு நாளில் அந்தக் கூட்டங்களை நடத்துகிறார்கள். எனவே, கரூர் மாவட்டத்தில் முறையாகக் கேட்கப்படுகின்ற அந்த இடங்களுக்கு காவல் துறை முறையாக அனுமதி வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகரத்தில், அண்ணா தி.மு.க. சார்பாகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று, அனுமதி பெற்றுத்தான் கூட்டம் நடத்தினார்கள். அப்படி கூட்டம் நடத்துகின்றபொழுது, அந்த மேடையிலே பேசிய எங்களுடைய மூத்த கட்சி நிர்வாகிகள்மீது வழக்கு தொடுத்தீர்கள். நீதிமன்றம் அளித்த அனுமதியின்பேரில்தான் கூட்டமே நடைபெற்றது. பின்னர் ஏன் வழக்கு தொடுத்தீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத்தில் பேசியதற்காக வழக்கு பதிவு செய்யப்படவில்லை. அந்தக் கூட்டத்திலே அவர்கள் முறையாக, அந்த இடங்களிலே அனுமதி பெற்று கூட்டம் நடத்தாத காரணத்தினாலும், அதேபோல அனுமதியே இல்லாமல் அந்த இடங்களுக்குச் சென்று--அழைப்பிதழில் ஒன்று இருக்கிறது, அங்கே போய் பேசக்கூடிய இடங்கள் ஒன்றாக இருக்கின்றன. அனுமதியில் இருக்கக்கூடிய இடங்களில் கூட்டம் நடத்தாமல், வேறு இடங்களில் கூட்டம் நடத்தப்படுவதால் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.*

ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். 2019 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சியரே என்மீது கொலை குற்ற வழக்கு பதிவு செய்து—என்மீது வழக்கு பதிவு செய்த ஆட்சிதான், சென்ற ஆட்சி. Collector *என்மீது வழக்கு பதிவு செய்தார். சம்பவ இடத்திற்கே*

போகவில்லை. அந்த case-ல், நான் A1 ஆக பதிவு செய்யப்பட்டேன். அதுவும் கொலை முயற்சி வழக்கு. யார்மீது என்றால், மாவட்ட ஆட்சியரை கொலை செய்வதற்கு நான் முயற்சி செய்தேன் என்ற வழக்கு என்மீது பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையெல்லாம் இப்போது இல்லை. யார், எங்கே அனுமதி கேட்கிறார்களோ, எங்கே போராட்டம் நடத்துகிறார்களோ, எங்கே பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்கிறார்களோ அந்த இடங்களுக்கெல்லாம் முறையாக காவல் துறை அனுமதி வழங்குகிறது. வேறு அரசியல் கட்சிகள் அந்த இடத்தை ஏற்கெனவே கேட்டிருந்தால், உதாரணமாக வீர வணக்க நாள் கூட்டம் என்றால், அனைத்து கட்சிகளுமே நடத்துகிறோம். அனைத்து கட்சிகளும் நடத்தும்போது அந்த இடத்திற்கு வேறு யாராவது முன்பே விண்ணப்பித்திருந்தால், மாற்று இடத்திற்கு காவல் துறை அனுமதி வழங்குகிறது. அதை ஏற்றுக்கொண்டு அங்கே நடத்துவதற்குப் பதிலாக ஏற்கெனவே எங்கு திட்டமிடப்பட்டதோ அங்கு விடாப்பிடியாக நடத்துவோம் என்று சொல்கின்றபோது, காவல் துறை வழக்கு பதிவு செய்யாமல் வேடிக்கை பார்க்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில், நெடுஞ்சாலையில் வைத்திருந்த centre median-ஐ உடைத்து எடுத்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கேயெல்லாம் ஒரு நடவடிக்கையும் கிடையாது. ஆளுங்கட்சிக்கு ஒரு நடவடிக்கை, எதிர்க்கட்சிக்கு ஒரு நடவடிக்கை.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்-பெருநகர சென்னையில் பல்லடுக்கு மாடிக் கட்டடங்கள் பெருகி வருகின்றன. கட்டடங்களில் தீயணைப்பு சாதனங்கள் இருந்தாலும், வான்நோக்கி உயரும் தீயணைப்பு ஊர்திகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். மேலும், கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் அதிகமான தொழிற்சாலைகள் வருகின்றன. அதனால் வான்நோக்கி கட்டடங்கள் அதிகமாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதனால், வான்நோக்கி உயரும் தீயணைப்பு ஊர்திகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தீ விபத்தைத் தடுப்பதற்கு கூடுதல் தீயணைப்பு நிலையங்களை அதிகரிக்கவும், விபத்து

நடக்கும் இடங்களைக் கண்டறிந்து அங்கு கூடுதலான தீயணைப்பு வாகனங்களை வழங்கிடவும் வேண்டும்.

பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகள் தொடர்ந்து நடைபெறுவதால், இதனைத் தவிர்ப்பதற்கு தீயணைப்பு துறைமூலம் அதிநவீன வாகனங்களை வாங்கி, உடனுக்குடன் தீயை அணைத்து, பட்டாசு தொழிற்சாலைகளில் இருக்கின்ற மக்களைக் காப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தீயணைப்புப் பணியாளர்களைக் கூடுதலாக்க வேண்டும். தீயணைப்புப் பணியாளர்களுக்கு காவல் துறைக்கு இணையாக பணப்பயன், படிகள் வழங்கப்பட வேண்டும். பெருகிவரும் நகரங்களில் தீயணைப்புத் துறைக்கு சொந்தக் கட்டடம் இல்லாத இடங்களில் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 5-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தொடர்ந்து தங்களிடத்திலே கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி முன் வரிசையில் இருக்கின்றவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் சட்டமன்றத்தில் பேசுவதைநேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று உங்களுக்குக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றோம். நேற்றைய தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். 18–4–2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, நேரடி ஒளிபரப்பு செய்யும்படி தனியார் தொலைக்காட்சிகளை நிர்பந்திக்க முடியாது என்று கூறினார். நாங்கள் தனியார் தொலைக்காட்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்யும்படி நிர்பந்தப்படுத்தச் சொல்லவில்லை. தற்போது நேரடி ஒளிபரப்புக்கு Tamilnadu Assembly என்ற YouTube தளத்தில் link செய்யப்படுகிறது. அந்த link–ஐ யார் வேண்டுமானாலும், எந்த ஊடக நண்பர்கள் வேண்டுமானாலும், link செய்தால் செய்தி வெளிவரும். அதைத் தடை செய்யாமல் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இதற்கு நிதிச் செலவோ அல்லது விதிமீறலோ ஏற்படாது. இதற்காக, வேறெந்த தொழில்நுட்பமும் தேவையில்லை. அதுமட்டுமல்ல, இந்த அவையினுடைய நடவடிக்கைகளை பதிவு செய்வதற்கு நீங்கள் ஓர் ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் கொடுத்துள்ளீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளது. இந்த அவையின் நடவடிக்கைகளை 10 camera-கள் பதிவு செய்கின்றன. அந்த 10 camera-களில் பதிவு செய்கின்ற அந்த பதிவை செய்தித் துறையும் அதேபோல, சட்டப் பேரவை அலுவலகமும் இணைந்து, சட்டப் பேரவை நிகழ்வுகளை edit செய்து, ஊடகங்களுக்கு வழங்குகின்றன. ஆனால், இதற்கு எந்தவித நிதிச் செலவும் கிடையாது. நீங்கள் அந்த link-ஐ தடை செய்யாமல் இருந்தாலே, அந்தந்த ஊடக நண்பர்கள் அந்த link-ஐ connect செய்து, செய்திகளை வெளியிடுவார்கள். இனியாவது எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று, செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு வேண்டிக் கேட்டு, எனது உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது சில பத்திரிகை ஊடகங்கள் சில உறுப்பினர்களைக் காட்டுகின்றன, சில உறுப்பினர்களைக் காட்டவில்லை. அந்த அடிப்படையில்தான் அந்தப் பதில் இருந்ததே தவிர, நேரடி ஒளிபரப்புக்கான பதிலாக நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லவில்லை. Zero Hour மட்டும் ஒளிபரப்ப முடியாது என்பதை ஏற்கெனவே பலமுறை உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அது நம்முடைய ஆய்வில் இருக்கிறது. எல்லோரும் பேசி, முடிவு செய்து, நம்முடைய முதல்வருடைய எண்ணமே முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்பதுதான் என்பதை இந்த அவையிலே பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளை (21-4-2023) பதிலுரை வழங்குவார்கள்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (21-4-2023) வெள்ளிக்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை

2023 ஏப்ரல் 20] [திரு. துரைமுருகன்]

(21-4-2023) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 21-4-2023, (வெள்ளிக்கிழமை) அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-4-2023), வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

114. அறநிறுவனங்களின் சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் 28-2-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 88-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

115. 2021-2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் அறுபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

[2023 ஏப்ரல் 20

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

322. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

323. மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

324. மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

325. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் 'Tamil Nadu–Where Stories Never End' *என்கிற சிறுநூல். (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

326. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (கலை மற்றும் பண்பாடு, அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல்) (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

327. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா) (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

328. இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

2023 ஏப்ரல் 20]

329. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நிதித் துறை, மனித வள மேலாண்மைத் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2023–2024.* (தமிழ்)

330. பொது (மறுவாழ்வு)த் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2023–2024.* (தமிழ்)

2023 ஏப்ரல் 20]

இணைப்பு-I

(*110 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

I. முன்னுரை

பொது அமைதியைப் பராமரிப்பது, சட்டங்களை அமல்படுத்துவது, அவசரக் காலங்களில் உதவுவது, குற்றங்களைக் கண்டுபிடிப்பது மற்றும் சொத்துகளைப் பாதுகாப்பது ஆகியவை காவல் துறையின் இன்றியமையாத பணிகளாகும். இயற்கைப் பேரழிவுகள் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் பேரிடர்களின்போதும், நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளின்போதும் காவல் துறையினரே மக்களுக்கு அனைத்துவிதமான உதவிகளையும் வழங்குவதற்கு முன்னின்று களப் பணியாற்றி வருகின்றனர்.

தமிழகக் காவல் துறையானது, நாட்டிலேயே சிறப்பாக நிர்வகிக்கப்படும் மாநில காவல் துறைகளில் ஒன்றாக விளங்குகிறது என்ற நற்பெயரை பெற்றுள்ளது. மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்கவும், மத நல்லிணக்கத்தைப் பேணவும் தேவையான அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் எந்தவொரு பெரிய அசம்பாவித சம்பவமும் ஏற்படவில்லை.

இராணுவம், துணை இராணுவம் மற்றும் மாநில, யூனியன் பிரதேசங்களின் காவல் துறைகளில் சிறப்பாகச் செயல்படும் அணிக்கு வழங்கப்படும் உயரிய கவுரவமான 'குடியரசுத் தலைவரின் வண்ணக்கொடியை' மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்கள் 31.7.2022 அன்று தமிழ்நாடு காவல் துறைக்கு வழங்கினார்.

II. நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு காவல் துறை மாநில அரசின் உள் துறையின்கீழ் இயங்கி வருகிறது. காவல் துறை இயக்குநர்/காவல் படைத் தலைவர்

[2023 ஏப்ரல் 20

தமிழக காவல் துறையை வழிநடத்திச் செல்வதுடன், மாநிலத்தில் காவல் துறையின் அனைத்து செயல்பாடுகளையும் வழிநடத்தி மேற்பார்வையிடுகிறார்.

1.1.2023-ன்படி தமிழக காவல் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

வ. எண்	பதவிகளின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை
1.	காவல் துறை தலைமை இயக்குநர்	10
2.	கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர்	23
3.	காவல் துறை தலைவர்	41
4.	காவல் துறை துணைத் தலைவர்	32
5.	காவல் கண்காணிப்பாளர்	171
6.	ஆயுதப்படை துணை ஆணையர்	9
7.	தளவாய் (த.சி.கா)	10
8.	கூடுதல் காவல் கண்காணிப்பாளர்	197
9.	காவல் துணை கண்காணிப்பாளர்/உதவி ஆணையர்	971
10.	துணை தளவாய் (த.சி.கா)	16
11.	உதவி தளவாய் (த.சி.கா.)	52
12.	காவல் ஆய்வாளர்	3,067
13.	சார்பு ஆய்வாளர்	10,676
14.	இதர காவலர்கள்	1,17,176
மொத்தம்		**1,32,451**

மாநில காவல் துறை 4 மண்டலங்கள் மற்றும் 9 காவல் ஆணையரகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் விவரம் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 20]

மண்டலம்	சரகம்	மாவட்டம்
வடக்கு	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு
	வேலூர்	வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை
	விழுப்புரம்	விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர்
மத்திய	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை
	தஞ்சாவூர்	தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர்
மேற்கு	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி
	சேலம்	சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி
தெற்கு	மதுரை	மதுரை மற்றும் விருதுநகர்
	திண்டுக்கல்	திண்டுக்கல் மற்றும் தேனி
	இராமநாதபுரம்	இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை
	திருநெல்வேலி	திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி
ஆணையரகங்கள்		சென்னை மாநகரம்
		தாம்பரம்
		ஆவடி
		திருச்சிராப்பள்ளி
		கோயம்புத்தூர்
		சேலம்

மண்டலம்	சரகம்	மாவட்டம்
		மதுரை
		திருநெல்வேலி
		திருப்பூர்
இரயில்வே		R.P. சென்னை
		R.P. திருச்சிராப்பள்ளி

1.1.2022 நிலவரப்படி, காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் வெளியிட்ட தரவுகளில், நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான காவல் நிலையங்கள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இவற்றின் விவரம் பின்வருமாறு:-

வ. எண்	காவல் நிலையங்கள்	காவல் நிலையங்களின் எண்ணிக்கை
1.	*சட்டம் (ம) ஒழுங்கு காவல் நிலையம்*	*1305*
2.	*இரயில்வே காவல் நிலையம்*	*47*
3.	*அனைத்து மகளிர் காவல் நிலையம்* (AWPS)	*222*
4.	போக்குவரத்து காவல் நிலையம் (போக்குவரத்து புலனாய்வு பிரிவு உட்பட)	*280*
மொத்தம்		**1854**

III. காவல் துறையில் பெண் காவலர்கள்

1.1.2023 அன்று உள்ளபடி, காவல் துறையில் ஒப்பளிக்கப்பட்ட பெண் அதிகாரிகள்/காவலர்களின் எண்ணிக்கை 35,329 ஆகும். மாநில காவல் துறையின் ஒருங்கிணைந்த அங்கமாக உள்ள பெண் காவல் பணியாளர்கள் குற்றங்களைத் தடுத்தல் மற்றும் குற்றங்கள் மீதான விசாரணை மேற்கொள்ளுதல், போக்குவரத்தை சீர் செய்தல் மற்றும் சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

2023 ஏப்ரல் 20]

மாநிலத்தில் தற்போது 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தாலுகா காவல் நிலையத்திலும் குறைந்தது ஒரு பெண் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 3 பெண் தலைமை காவலர்கள் பணியில் உள்ளனர். தமிழ்நாடு காவல் துறையில் 2023 ஆம் ஆண்டு மகளிர் காவலர்களின் பொன்விழா ஆண்டை குறிக்கிறது.

IV. சட்டம் மற்றும் ஒழுங்கு

மாநில அரசின் தலையாய பணிகளுள் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிப்பது முதன்மையானதாகும். தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை அமைதியாக பேணப்பட்டு வருகிறது. பெரிய அளவிலான சாதி மற்றும் வகுப்புவாத மோதல்கள் எதுவும் நிகழவில்லை. சட்டம்-ஒழுங்கு பராமரிப்பில் மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகள், சமூக விரோதிகள் மற்றும் போக்கிரிகளுக்கெதிரான பல்முனை நடவடிக்கைகள் மற்றும் மாநில நுண்ணறிவுப் பிரிவு அளித்த தகவல்களின் அடிப்படையில் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஆண்டு முழுவதும் மாநிலம் அமைதிப் பூங்காவாக திகழ்ந்துள்ளது.

காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட உரிய தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாக மதம் சார்ந்த பண்டிகைகள், பொதுவாக சாதி மோதல்களுக்கு வழிவகுக்கக்கூடிய சாதித் தலைவர்களின் நினைவு நாள் மற்றும் சாதிய நிகழ்வுகள் போன்றவை அமைதியான முறையில் நடந்தேறின.

மாநிலத்தின் சில இடங்களில் வழிபாட்டு உரிமை கோரியும், கோயில் திருவிழாக்களில் பங்கேற்க அனுமதி கோரியும் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் போராட்டங்கள் நடத்தியபோது வன்முறைக்கு இடம் தராத வகையிலும் பெரிய அளவிலான அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையிலும் அப்போராட்டங்கள் திறமையாகக் கையாளப்பட்டன. பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி அரசியல் கட்சிகள் போராட்டங்கள் நடத்தியபோது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கோயம்புத்தூர் கார் (எரிவாயு உருளை) குண்டு வெடிப்பு சம்பவத்தில், காவல் துறையினர் துரிதமாக மேற்கொண்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக மாநிலத்தில் அமைதியான சூழல் நிலவியது.

2022 ஆம் ஆண்டு, பல்வேறு அமைப்புகள் தொடர்பான நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் கள அதிகாரிகளுக்கு 20,500 விழிப்பூட்டுத் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

முறையான முன்னெச்சரிக்கை மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாக, பாபர் மசூதி இடிப்பு தினமான டிசம்பர் 6 ஆம் தேதி அமைதியான முறையில் அனுசரிக்கப்பட்டது.

பிப்ரவரி 2023-ல் ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அமைதியாக நடந்தேறியது.

வெளிநாடுவாழ் இந்தியர் பிரிவு

2021-2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் (மானியக் கோரிக்கை எண் 22) 13.9.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் துயர் துடைக்க, ஜூலை 2022 முதல் சென்னையில் உள்ள காவல் துறை தலைமையகத்தில் வெளிநாடுவாழ் தமிழர் பிரிவு செயல்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் அளிக்கும் புகார்களை இப்பிரிவு கையாண்டு வருகிறது.

வெளிநாடுவாழ் இந்தியர் பிரிவானது, நுழைவிசைவு (VISA) பெற்றுத்தருவதாகக் கூறி ஏமாற்றுதல், வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் செயல்படும் அங்கீகரிக்கப்படாத வேலைவாய்ப்பு முகமைகள், மாணவர்கள் பிரச்சினை, பிற நாடுகளுக்கு பெண்களைக் கடத்துதல், திருமணப் பிணக்குகள், இறந்தவர் உடலை தாயகம் கொண்டுவருதல், பாலியல் குற்றங்கள், பிற நாடுகளுக்குத் திருப்பி அனுப்புதல், வெளிநாடுகளில் வேலை செய்யும் இடங்களில் உடல் மற்றும் மனதளவிலான துன்புறுத்தல்கள் போன்றவை தொடர்பான புகார்களை விசாரித்து வருகிறது.

2023 ஏப்ரல் 20]

வெளிநாடுவாழ் தமிழர்களின் குறைகளுக்குத் தீர்வு காண தமிழ்நாடு அரசின் வெளிநாடுவாழ் தமிழர் பிரிவானது, புலம்பெயர்ந்தோர் பாதுகாவலர் பிரிவு உள்ளிட்ட மற்றும் பிற துறையினருடன் இணைந்து செயல்படுகிறது. அங்கீகரிக்கப்படாத முகமைகள்மூலம் கம்போடியா, தாய்லாந்து மற்றும் மியான்மர் நாடுகளுக்கு வேலைக்காகச் சென்று ஏமாற்றப்பட்டு சிக்கித் தவித்த 73 தமிழர்களை வெளிநாடுவாழ் தமிழர் பிரிவு, வெளிநாடுவாழ் இந்தியர் பிரிவுடன் இணைந்து தாய்நாட்டிற்கு அழைத்துவந்துள்ளது.

சமூக ஊடகப் பிரிவு

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் துறையில் சமூக ஊடகப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு, காவல் துறை தலைமையகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், ஒரு காவல் ஆய்வாளர், மூன்று காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 14 இதர காவல் ஆளிநர்கள் பணியாற்றி வருகின்றனர். பல்வேறு சமூக ஊடக தளங்களில் தமிழ்நாடு காவல் துறையின் அதிகாரப்பூர்வ கணக்குகளை இயக்கி நிர்வகிக்கும் பணியை சமூக ஊடகப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

முக்கியமான மற்றும் பதற்றமான செய்திகளை வெளியிடும் காட்சி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் குறித்த தகவல்களை முன்கூட்டியே அறிந்து, அதுகுறித்த விழிப்பூட்டல் தகவல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன்கூட்டியே அனுப்பப்பட்டு வருகிறது. பல்வேறு சமூக ஊடகங்களைக் கண்காணித்து, அவற்றில் பகிரப்படும் ஆட்சேபகரமான கருத்துகள் குறித்த விரிவான அறிக்கைகள் தினந்தோறும் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. சமூக ஊடகங்களில் பரப்பப்படும் சில உண்மைக்குப் புறம்பான தகவல்கள் குறித்த மறுப்பு அறிவிப்புகளும் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன. சமூக ஊடகங்களில் பகிரப்படும் முக்கியக் கருத்துகள் குறித்த தகவல்களைச் சேகரிக்கவும், அவற்றின்மீது ஆய்வு மேற்கொள்ளவும் வெளிப்படையான நுண்ணறிவுத் தகவல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மகளிர் பாதுகாப்பு, இணையவழி குற்றங்கள், வெளிநாடுவாழ் இந்தியர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், போக்குவரத்து விழிப்புணர்வு மற்றும் சாலைப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வு சுவரொட்டிகள் மற்றும்

காணொளிகளை உருவாக்கும் பணியை பொதுமக்களின் நலனுக்காக சமூக ஊடகப் பிரிவு செய்து வருகிறது. தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது காவல் ஆளிநர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

சாட்சியம் அளிப்பவர்கள் பாதுகாப்பு திட்டம்—2018

சாட்சிகளைப் பாதுகாக்கும் திட்டத்தைச் செயல்படுத்த, 2018 ஆம் ஆண்டுக்கான நிலைக் குழு ஒவ்வொரு மாவட்ட மற்றும் நகர அளவில் தீவிரமான குற்றங்களின் குற்றவியல் விசாரணைகளில் சாட்சியம் அளிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் குழுக்கள் தொடங்கப்பட்டு, சாட்சியம் அளிப்பவர்கள் பாதுகாப்பு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்கள் மாவட்ட முதன்மை நீதிபதியின் தலைமையில் மாநகர காவல் ஆணையர்/மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட தலைமை வழக்கறிஞர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சாட்சியம் அளிப்பவருக்கு நிலவும் அச்சுறுத்தல் குறித்து இக்குழு பரிசீலனை செய்து, வழக்கு விசாரணையின்போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொடுப்பதுடன் அனைத்து வகைகளிலும் சாட்சி அளிப்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது.

பாதிக்கப்பட்ட நபர்களுக்கான இழப்பீட்டுத் திட்டம்

2022 ஆம் ஆண்டு பல்வேறு வழக்குகளில் பாதிக்கப்பட்ட 343 நபர்களுக்கு 6.58 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்க இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

காவல் புகார் அமைப்பு

மாநில உள் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் காவல் புகார் விசாரணை அதிகார அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இக்குழுவில், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் காவல் துறை கூடுதல் இயக்குநர் (சி.பி.சி.ஐ.டி.) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவானது, காவல் நிலைய மரணங்கள், காவல் நிலையத்தில் பாலியல் மற்றும் கொடுங்காயம் உள்ளிட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேலான

2023 ஏப்ரல் 20]

படிநிலைகளில் உள்ளவர்கள் மீதான தீவிர குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதேபோன்று, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட காவல் துறையினருக்கு எதிரான விசாரணை குழுவானது சார்நிலை காவல் அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளும்.

V. சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்கள்

(i) பெருநகர சென்னை காவல்

காவல் துறை இயக்குநர் தலைமையில் பெருநகர சென்னை காவல் இயங்கி வருகிறது. 5 கூடுதல் காவல் ஆணையாளர்கள், 7 காவல் இணை ஆணையாளர்கள் மற்றும் 31 காவல் துணை ஆணையாளர்கள் ஆகியோர் அவருக்கு உதவி செய்து வருகின்றனர். 102 உள்ளூர் காவல் நிலையங்கள், 37 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 56 போக்குவரத்து காவல் நிலையங்கள் மற்றும் 24 தனிப் பிரிவுகளுடன் 23,791 காவல் ஆளிநர்கள் பெருநகர சென்னை காவல் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். பெருநகர சென்னை காவல் துறையில் 7 காவல் நிலையங்கள் மதிப்புமிக்க ISO *சான்றிதழ்கள் பெற்றுள்ளன. நேர்மையான அர்ப்பணிப்பு மற்றும் சீரிய காவல் பணி ஆகியவற்றின் காரணமாக சென்னை நகரம் இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான நகரமாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.*

மகிழ்ச்சி

பெருநகர சென்னை காவல் துறையில் பணியாற்றும் காவல் ஆளிநர்களின் நலனுக்காக “மகிழ்ச்சி” என்னும் திட்டம் ரூ.25 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், காவல் துறையில் தொடர்ச்சியாக பணிக்கு வராதவர்கள், உடல்நலம் குன்றியவர்கள், மது பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மற்றும் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் உடையவர்கள் என மொத்தம் 459 பேர் மகிழ்ச்சி குழுவினரால் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மன நல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 20

பறவை

சிறு குற்றங்களில் முதன்முறையாக ஈடுபடும் சிறார்கள் எதிர்காலத்தில் மீண்டும் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்வது மற்றும் அச்சிறார்கள் மனமாற்றமடைந்து, சமுதாயத்துடன் இணைந்து செயல்படுவதை உறுதி செய்வது என்ற இரட்டைக் கொள்கைகளை முன்னிறுத்தி, “சிறார்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் ஆளுமை மற்றும் அணுகுமுறை சீர்திருத்த உதவித் திட்டம்” (பறவை) என்ற திட்டம் ரூ.1.08 கோடி நிதியில், 1.4.2022 அன்று துவக்கப்பட்டது.

இத்திட்டம் ஆறு படிநிலை செயல்முறைகளை பின்பற்றுகிறது. அவை முறையே, முன் நுழைவு ஆவணப்படுத்துதல் நுழைவு ஆலோசனை, உளவியல் தலையீடு மற்றும் திறன் மதிப்பீட்டு சோதனை, திறன் மதிப்பீட்டு வகுப்புகள் மற்றும் வேலைவாய்ப்புக்கான திறன் மதிப்பீடு. முதன்முறை சிறு சிறு குற்றவாளிகள் அதிக செறிவு உள்ள பகுதிகளுக்கு அருகில் உள்ள மையம் அவர்களின் அறிவாற்றல் மற்றும் சட்ட ஆதரவை சமாளிக்க தலையீடு மற்றும் பிற செயல்பாடுகளை வழங்கும். இதுவரை, மொத்தம் 323 நபர்கள் பயனடைந்து மீண்டும் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர், அவர்களில் 281 முதன்முறை சிறு சிறு குற்றவாளிகள் சைதாப்பேட்டை துணைச் சிறையிலும், 73 குழந்தைகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் மற்றும் சிலர் கெல்லிஸில் உள்ள கண்காணிப்பு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காவல் கரங்கள்

சென்னை மாநகர காவல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட “காவல் கரங்கள்” என்ற திட்டத்தின் நோக்கமானது, ஆதரவற்ற, வீடற்று தவிக்கும், கைவிடப்பட்ட மூத்த குடிமக்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், வீடற்ற குடிமக்கள் ஆகியோரைக் கண்டறிந்து, அரசு சாரா நிறுவனத்தினர், காப்பக அறக்கட்டளைகள், அவசர ஊர்தி சேவை அளிப்பவர்கள் ஆகியோரின் உதவியுடன் அவர்களுக்கு உறைவிடம், பாதுகாப்பு, ஆலோசனை மற்றும் மருத்துவ உதவிகள் ஆகியவற்றை வழங்கி, அவர்களின் மறுவாழ்விற்கு அனைத்து நடவடிக்கைகளும்

2023 ஏப்ரல் 20]

எடுப்பதாகும். இதுவரை சென்னை நகர வீதிகளிலிருந்து வீடற்ற ஆதரவற்ற குடிமக்கள் 4,171 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில், 3,174 நபர்கள் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டு, 525 நபர்கள் அவர்களது குடும்பத்தினருடன் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். 382 நபர்கள் மனநல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 90 நபர்கள் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கேட்பாரற்ற 1,919 நபர்களின் உடல்கள் தன்னார்வலர்களின் உதவியுடன் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு, புதைக்கப்பட்டன.

காவல் வரம்புக்குள் வராத பணிகளையும் மேற்கொள்வதைப் பாராட்டி, தமிழக அரசின் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15.8.2022 அன்று, "காவல் கரங்கள்" திட்டத்திற்கு வழங்கி கவுரவப்படுத்தினார்.

போக்குவரத்து

வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளுக்கு சமீபத்திய பொது விழிப்புணர்வு தகவல்களைத் தெரியப்படுத்த சென்னை மாநகரிலுள்ள 47 முக்கிய சந்திப்புகளில் "மாறக்கூடிய செய்தித் திரைகள்" (VMS) நிறுவப்பட்டுள்ளன. மேலும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 146 சந்திப்புகளில் "நகரும் விழிப்புணர்வு செய்தி பலகை"—உடன்கூடிய போக்குவரத்துக் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்ணா நகரிலுள்ள 5 முக்கிய சந்திப்புகளில் அமைக்கப்பட்டுள்ள "போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்புப் பகுதி" (TROZ) என்ற சாதனம், சென்னை போக்குவரத்து காவல் துறையில் வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும் ஒரு திட்டமாகும். இதன்மூலம், போக்குவரத்து விதிகளை மீறியதற்காக நாள்தோறும் சுமார் 7,000 அபராத இரசீதுகள் தானாகவே பதிவு செய்யப்படுகின்றன. மேலும், ஸ்பென்சர் சந்திப்பு, ஈகா சந்திப்பு மற்றும் தங்கசாலை சந்திப்பு ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 214 தானியங்கி பதிவெண் பலகை படிப்பான் (ANPR) கேமராக்களை நிறுவ ரூ.10.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இணையவழி குற்றப்பிரிவு

மத்திய குற்றப்பிரிவின் அங்கமான இணையவழி குற்றப்பிரிவு, 2022 ஆம் ஆண்டு, பல்வேறு இணையவழி மோசடிகளில் ஈடுபட்ட பிற மாநிலங்களைச் சேர்ந்த 30 குற்றவாளிகளை கைது செய்துள்ளது. இவர்களில் இணையவழி குற்றச் செயல்களின் நகரமாக கருதப்படும் ஜார்க்கண்ட் மாநிலம், ஜம்தாராவைச் சேர்ந்த 3 குற்றவாளிகளும் அடங்குவர்.

பொது மக்களிடையே இணையதள மோசடிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த "முத்துவும் 30 திருடர்களும்" என்ற விழிப்புணர்வு கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தகுந்த குற்றங்கள் கண்டறிதல்

மத்திய குற்றப்பிரிவின் அங்கமான வங்கி மோசடி புலனாய்வு பிரிவு "ஊரக மற்றும் வேளாண் விவசாயிகள் கூட்டுறவு வங்கி" என்ற பெயரில் போலியாக செயல்பட்டு வந்த வங்கியின் நடவடிக்கைகளை கண்டறிந்து முடக்கியுள்ளது.

7.5.2022 அன்று, 13.00 மணியளவில், மூத்த தம்பதியர் காணவில்லை என்ற புகாரின் மீதான விசாரணையில், வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்களும், இனோவா கார் ஒன்றும் காணவில்லையென்று கண்டறியப்பட்டது. காவல் துறையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக, நேபாளத்தைச் சேர்ந்த இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 1,000 சவரன் தங்க நகைகளும், 50 கிலோ வெள்ளி பொருட்களும், இனோவா கார் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டன. முக்கியமான இந்த இரட்டை கொலை வழக்கு, பதிவான 6 மணி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னை அரும்பாக்கத்திலுள்ள FED *வங்கியில் பட்டப்பகலில் கொள்ளை நடந்ததாக 13.8.2022 அன்று அளிக்கப்பட்ட புகாரின் பேரில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, வங்கியிலிருந்து களவு போன தங்க நகைகள் (31.7 கிலோ) மூன்று நாட்களுக்குள் மீட்கப்பட்டன.*

போதை மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகள்

போதை மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்கீழ் 2022 ஆம் ஆண்டில், 890 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு,

2023 ஏப்ரல் 20]

1,537 எதிரிகள் கைது செய்யப்பட்டு, 109 வாகனங்கள் மற்றும் ரூ.4.01 கோடி மதிப்பிலான 1,655.8 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டன.

60,413 புவிசார் உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் நிறுவப்பட்டதன் பலனாக, குற்றங்கள் விரைந்து கண்டுபிடிக்கப்பட்டதுடன், குற்ற நிகழ்வுகளும் பெருமளவு குறைக்கப்பட்டன.

(ii) ஆவடி காவல் ஆணையரகம்

காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில், 1 காவல் இணை ஆணையாளர், 5 காவல் துணை ஆணையாளர்கள் மற்றும் 15 காவல் உதவி ஆணையாளர்கள் ஆகியோருடன் ஆவடி காவல் ஆணையரகம் 1.1.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது. ஆவடி காவல் ஆணையரகத்தில் 25 காவல் நிலையங்கள், 8 போக்குவரத்து காவல் நிலையங்கள், 2 போக்குவரத்து புலனாய்வு பிரிவுகள் மற்றும் 5 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணையரகத்திற்குட்பட்ட 25 காவல் நிலையங்களில் உள்ள அனைத்து கண்காணிப்பு கேமராக்களின் நிகழ்வுகளையும் நேரலையில் கண்காணிக்கும் வகையில் "கட்டுப்பாட்டு மற்றும் உத்தரவு மையம்" ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

"போதைப் பொருளில்லா தமிழகம்" என்ற தலைப்பில் ஆவடி காவல் ஆணையரகம் முதன்முதலாக நடத்திய "இரவு நேர நெடுந்தூர ஓட்டம், ஆவடி-2022" என்ற நிகழ்வில், நாடு முழுவதிலும் இருந்து சுமார் 5,000 உணர்வுமிக்க ஓட்டப்பந்தய வீரர்கள் பங்கேற்றனர்.

போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையின்கீழ் 378 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 614 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, ரூ.66 இலட்சம் மதிப்புள்ள 673.607 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 31 குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். போதைப் பொருள் விற்பனையில் தொடர்ந்து ஈடுபடும் குற்றவாளிகள் 108 பேருக்கு புதிய சரித்திரப் பதிவேடு துவக்கப்பட்டுள்ளது. 90 குற்றவாளிகளுக்கு

எதிராக பாதுகாப்பு செயல்முறைகள் துவக்கப்பட்டு, குற்றவாளிகளின் 26 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. 60 இரு சக்கர வாகனங்கள், 9 மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 3 நான்கு சக்கர வாகனங்கள் உட்பட 72 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதானி துறைமுகம், காமராஜர் துறைமுகம் மற்றும் சென்னை துறைமுகம் ஆகிய மூன்று துறைமுகங்களுக்குச் செல்லும் வாகனங்கள் விரைந்து செல்லும் வகையில் இந்த வழிகளில் போக்குவரத்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

விபத்துகளைக் குறைக்க, விபத்து நேரிடும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, தேவையான ஒளிர்விப்பான்கள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகள் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய முயற்சிகளின் காரணமாக, 2021 ஆம் ஆண்டு பதிவான 1,591 விபத்து வழக்குகளோடு ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டு 1,524 விபத்து வழக்குகள் பதிவாகின.

(iii) தாம்பரம் காவல் ஆணையரகம்

காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு கூடுதல் காவல் ஆணையாளர், 1 காவல் இணை ஆணையாளர், 6 காவல் துணை ஆணையாளர்கள், 6 கூடுதல் துணை ஆணையாளர்கள் மற்றும் 24 காவல் உதவி ஆணையாளர்கள் ஆகியோருடன் தாம்பரம் காவல் ஆணையரகம் 1.1.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு, 20 காவல் நிலையங்கள், 16 போக்குவரத்து காவல் நிலையங்கள், 2 போக்குவரத்து புலனாய்வு பிரிவுகள் மற்றும் 3 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன் செயல்பட்டு வருகிறது. ஆணையரகம் உருவாக்கப்பட்ட குறுகிய காலத்திற்குள்:-

- 230 கொடுங்குற்றவாளிகள் மற்றும் போக்கிரிகள், தமிழ்நாடு சட்டம் 14/1982-ன்கீழ் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

- 325 போக்கிரிகள் மற்றும் குற்றச் செயல் புரிபவர்கள் பாதுகாப்பு செயல்முறைகளின்கீழ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 20]

- *12 சிறார்-சிறுமியர் குழுக்கள் மூலமாக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 1,212 சிறுவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.*

- *போக்கிரி நடவடிக்கைகளுக்கு எதிராக 77 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.*

- *போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 295 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 430 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 640.77 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.*

- *2022 ஆம் ஆண்டிற்கான* NDPS *சட்டத்தின்கீழ் 54 இரு சக்கர வாகனங்கள், 5 மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 15 நான்கு சக்கர வாகனங்கள் என ஆகமொத்தம் 74 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.*

VI. நுண்ணறிவுப் பிரிவு

காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில், காவல் துறை தலைவர் மற்றும் காவல் துறை துணைத் தலைவர் ஆகியோருடன் மாநில நுண்ணறிவுப் பிரிவு இயங்குகிறது. பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களை சேகரித்தல், ஒன்றிணைத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில் தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகியவை இயங்கி வருகின்றன.

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, 2 காவல் கண்காணிப்பாளர்கள், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 25 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 90 காவல் ஆய்வாளர்கள், 212 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 644 காவலர்கள் ஆகிய ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுடன் செயல்பட்டு வருகிறது.

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் பணியானது மறைமுக மற்றும் நேரடி அரசியல் நடவடிக்கைகள் மற்றும் சட்டம்-ஒழுங்கை சீர்குலைக்கக்கூடிய, மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய, பல்வேறு மதத்தினர், சாதியினர் மற்றும் வகுப்பினரிடையே பகைமையைத் தூண்டக்கூடிய வகையிலான தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் சூழ்ச்சியான செயல்கள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா துறைகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்கள்மூலம் பகிரப்படும் பதிவுகளைக் கண்காணித்தல், பல்வேறு அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், அத்தியாவசிய சேவைகளின் செயல்பாடுகள் மற்றும் அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் உள்ளிட்ட பிற விஷயங்கள் குறித்த மக்களின் பொதுவான உணர்வுகளை பிரதிபலித்தல் ஆகியவை ஆகும். மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை பராமரிக்கும் பணியில் அனைத்து மட்டங்களிலும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள, இந்தப் பிரிவு சேகரித்த தகவல்களை ஒன்றிணைத்து பகிர்ந்தளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை பல்வேறு அமைப்புகளின் திட்டங்கள் குறித்த பயனுள்ள நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும், தேவையான பாதுகாப்பு வழங்கவும், சுமார் 20,500 விழிப்பூட்டல் தகவல்களை கள அதிகாரிகளுக்கு வழங்கியதுடன், மாநிலத்தில் நிகழ்ந்த அனைத்து முக்கிய முன்னேற்றங்கள் குறித்து உடனுக்குடன் அவ்வப்போது அரசுக்கு தெரிவிக்கும்பொருட்டு சுமார் 11,000 அறிக்கைகளையும் அனுப்பியுள்ளது.

சொத்து வரி உயர்வு, மின்கட்டண உயர்வு, பால் விலை உயர்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நெல் மற்றும் கரும்பு ஆகியவற்றின் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக் கோரியும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விரிவாக்கத்திற்கும், பரந்தூர் விமான நிலையத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிப்காட் வளாகம் அமைப்பதற்கும் கையகப்படுத்திய நிலங்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கக் கோரியும், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக

2023 ஏப்ரல் 20]

நடவடிக்கை எடுக்கக் கோரியும், மழையால் பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரியும் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய சங்கங்கள் நடத்திய போராட்டங்கள் திறமையாகக் கையாளப்பட்டன.

சில கடலோர மாவட்டங்களில், விசைப் படகில் அதிக திறன்கொண்ட இயந்திரத்தை பயன்படுத்துவது, மீன் பிடிக்க தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலையை பயன்படுத்துவது மற்றும் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவது உள்ளிட்டவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் நடத்திய போராட்டங்கள் திறமையாகக் கையாளப்பட்டன.

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, 2 காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 27 காவல் ஆய்வாளர்கள், 214 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 184 பிற காவல் ஆளிநர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது தமிழகத்திற்கு வருகை தரும் அயல்நாட்டு அதிபர்கள், இதர பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதிமுக்கிய/முக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு, தவிர தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், அயல்நாட்டவரின் நடவடிக்கைகள், முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகள், பாதுகாப்புத் திட்டங்கள், குடிபெயர்வோர் விசா மற்றும் வெளிநாட்டவர் பதிவு மற்றும் கண்காணிப்பு (IVFRT) தொகுதிகள், கடவுச்சீட்டு மற்றும் உள் நுழைவு இசைவு தொடர்பான மற்றும் ஆளில்லா விமானங்கள்/ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை நிர்வகித்தல் தொடர்பான பணியினையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் இரண்டுமுறையும், மாண்புமிகு பாரதப் பிரதமர் நான்கு முறையும் மற்றும் மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் எட்டு முறையும் தமிழகத்திற்கு வருகை புரிந்தபோது பாதுகாப்பு வழங்கப்பட்டது. இது தவிர, புகழ்பெற்ற வெளிநாட்டினர் 46 பேர்

வருகை புரிந்தபோதும், பல்வேறு வகைகளின்கீழ், 255 நபர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, தமிழ்நாட்டில் தங்கியுள்ள 218 மிக முக்கிய நபர்களுக்கு அச்சுறுத்தலின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

44-வது சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள் 28.7.2022 முதல் 10.8.2022 வரை செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்றது. அந்நிகழ்ச்சியின்போது, நாசவேலை தடுப்பு சோதனை நடத்தப்பட்டு, நுழைவாயிலில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அந்தமான் நிகோபார் தீவுகளில் நடந்த ஜி-20 மாநாட்டிற்காக, நாசவேலை தடுப்பு சோதனைக்கென பைகளை ஸ்கேன் செய்யும் ஓர் ஊடுகதிர் கருவியும், மோப்ப நாயுடன் (வெடிபொருட்கள்) கூடிய வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்புப் பிரிவும் அத்தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு

முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவானது, 1 காவல் கண்காணிப்பாளர், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 18 காவல் ஆய்வாளர்கள், 38 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 99 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகம் அல்லது சென்னை மாநகரம், தமிழ்நாட்டிலுள்ள இதர மாவட்டங்கள் அல்லது வெளிமாநிலங்களுக்குச் செல்லும்போது அவருக்கு தேவையான தகுந்த பாதுகாப்பை வழங்கி வருகிறது.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது 1 காவல் கண்காணிப்பாளர், 12 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 21 காவல் ஆய்வாளர்கள், 29 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 314 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது அமைப்பு ரீதியாக செயல்படும் குற்ற குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் நடமாட்டங்கள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டி, அக்குழுக்களைக்

2023 ஏப்ரல் 20]

கட்டுப்படுத்த உருவாக்கப்பட்டது. இப்பிரிவு, ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் கடத்தல், ஆட்கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல், பண மோசடி, ஹவாலா பணப் பரிமாற்றம், கள்ளநோட்டுப் புழக்கம், போக்கிரிகளின் நடவடிக்கைகள், இணையவழி குற்றங்கள், கடன் அட்டை மோசடிகள் மற்றும் சிறை நடவடிக்கைகள் ஆகியவை குறித்த நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டி வருகிறது.

இவை தவிர, போதைப் பொருள் கடத்தல், போலி கடவுச்சீட்டு உள்ளிட்டவை குறித்த நுண்ணறிவுத் தகவல்களை வருவாய் நுண்ணறிவு இயக்குநரகம், போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு, மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு மற்றும் சுங்கத் துறை அதிகாரிகளுக்கு தெரிவித்து, அச்செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்த தரவுகளைத் தயாரித்தல் மற்றும் தரவுகளை மேம்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கிறது.

- *திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு தலைமையகம் மற்றும் சரக அலகுகளின் அன்றாடப் பணிகளை கணினிமயமாக்குதல், எந்தவொரு தலைப்பின்கீழும் அறிக்கைகளைத் தேவைப்படும் விதத்தில் உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்.*
- *திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு தொடர்புடைய அனைத்து கோப்புகளையும் அதன் துவக்கம் முதல் இதுநாள் வரையிலானவற்றை ஆவணப்படுத்துதல் மற்றும் எளிதாக எந்தவொரு குறிப்பையும் கையாளுதல் மற்றும் முறையாக பெறுதல்.*
- *அலகுகளின் எழுத்தர்களுக்கு விவரப் பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களைப் புதுப்பித்து வைத்திருத்தலின் அவசியம் குறித்து அவ்வப்போது பயிற்சி வழங்குதல்.*

2022 ஆம் ஆண்டு உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் இதர வகைகள் தொடர்பாக மாநிலம் முழுவதும் பிரிவு அதிகாரிகளுக்கு 2,142 விழிப்பூட்டுத் தகவல்கள் அனுப்பப்பட்டன. அதன்பேரில், 346 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 426 குற்றவாளிகள் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகள் 107/110-ன்கீழ் பிணைப்படுத்தப்பட்டு, 67 எதிரிகள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 144 பிணையில் வெளிவர இயலா பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டு, 52 புதிய

அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, 94 போக்கிரிகளின்மீது சரித்திரப் பதிவேடுகள் துவக்கப்பட்டன. திட்டமிட்ட குற்றத் தடுப்புப் நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த தகவலின்பேரில், மாவட்ட அதிகாரிகள் குறித்த நேரத்தில் நடவடிக்கை மேற்கொண்டு அபாயகரமான போக்கிரிகளை கைது செய்து, அவர்களின் குற்ற நடவடிக்கைகளை தடுத்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு, 268 விழிப்பூட்டுத் தகவல்கள் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப்பிரிவினர், எஸ்.பி.எம்.எல். துப்பாக்கி-2, எஸ்.பி.பி.எல். துப்பாக்கி-1, பிக் வெடிகுண்டு-1, நாட்டு பிளாஸ்டிக் ஏர் துப்பாக்கி-1, வெடிமருந்து-200 கிராம், எலக்ட்ரிக் டெட்டனேட்டர்-501, வெள்ளை ப்யூஸ்-8,000, பட்டாசுகள்-800 கிராம், ஸ்லர்ரி-4,210 ஆகியவற்றை சமூக விரோதிகளிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த விழிப்பூட்டுத் தகவல்கள் அடிப்படையில், எஸ்.பி.எம். எல். துப்பாக்கி-5, நாட்டு கைத்துப்பாக்கி-1, ஏர் கைத்துப்பாக்கி-1 மற்றும் பயன்படுத்தப்படாத துப்பாக்கி குண்டுகள்-50, மான் இறைச்சி-10 கிலோ, நாட்டு பட்டாசுகள்-45, பட்டாசுகள்-73, எலக்டரிக் டெட்டனேட்டர்-2, சல்பர்-650 கிராம், வெடிமருந்து-10 கிலோ மற்றும் ஜெலட்டின் குச்சிகள்-2, பிக் வெடிகுண்டுகள்-5 ஆகியவை உள்ளூர் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன.

2022 ஆம் ஆண்டு சுமார் 1,406 விழிப்பூட்டுத் தகவல்கள் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர், ரூ. 1.18 கோடி மதிப்புள்ள 7,854,595 கிலோ புகையிலை பொருட்கள் ரூ. 35.60 இலட்சம் மதிப்புள்ள 355.95 கிலோ கஞ்சா ஆகியவற்றை பல்வேறு நகரங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து கைப்பற்றினர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த விழிப்பூட்டுத் தகவல்கள் அடிப்படையில், ரூ.2.65 கோடி மதிப்புள்ள 2,654.355 கிலோ கஞ்சா, ரூ.54 இலட்சம் மதிப்புள்ள 3598.90 புகையிலைப் பொருட்கள் ஆகியவை உள்ளூர் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டன.

2022 ஆம் ஆண்டு போலி இந்திய ரூபாய் நோட்டு, பண மோசடி, போலி கடவுச்சீட்டு, ஹவாலா பரிவர்த்தனைகள்

2023 ஏப்ரல் 20]

மற்றும் மோசடி தொடர்பாக 953 விழிப்பூட்டுத் தகவல்கள் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், தடைசெய்யப்பட்ட லாட்டரிச் சீட்டு விற்றதற்காக 78 குற்றவாளிகளும், சூதாட்டத்தில் ஈடுபட்ட 126 பேரும், மோசடி குற்றங்களில் ஈடுபட்ட 11 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டனர். 8,32,180 கிலோ கடத்தப்பட்ட பொது விநியோகத் திட்ட அரிசி, 1,225 கிலோ கடல் அட்டை, 4 ஆம்பர்கிரீஸ், 3,796 கிலோ மஞ்சள் மற்றும் 2 மான் கொம்பு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, 1 காவல் கண்காணிப்பாளர், 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 13 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 34 காவல் ஆய்வாளர்கள், 293 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 586 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி புலன் விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மாநகரம் மற்றும் மாவட்ட அலகுகள் (மொத்தம் 31) காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'க்யூ' பிரிவு வழக்குகளில் சம்பந்தப்பட்டு தேடப்பட்டுவரும் தலைமறைவு குற்றவாளிகள், குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்டு) அங்கத்தினர்களைக் கைது செய்யவும், தலைமறைவாக இருப்பவர்களின் இருப்பிடம் குறித்து தகவல்களைத் திரட்டவும் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவோயிஸ்டுகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைத் திரட்டவும், வளர்ந்துவரும் இடதுசாரி தீவிரவாத குழுக்களின் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தவும், புதிய தகவலர்களை உருவாக்குவதற்கு நுண்ணறிவுப் பிரிவு முடுக்கி விடப்பட்டுள்ளது. துணை உளவு அமைப்புகளுடன் நுண்ணறிவுத் தகவல்கள் பகிர்வு தொடர்ந்து முழு வீச்சில் நடந்து வருகிறது. மாவோயிஸ்டுகளின் நடமாட்டம் குறித்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் பிற மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

[2023 ஏப்ரல் 20

2022 ஆம் ஆண்டு தூத்துக்குடி, நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர், 20.295 கிலோ வெள்ளி கொலுசுகள், 9.985 கிலோ கிரிஸ்டல் மெத்தாம்பெடமைன், 908.600 கிலோ கஞ்சா, 5,030 கிலோ பீடி இலைகள், 3,630 கிலோ கடல் அட்டைகள், 550 கிலோ ஏலக்காய், 3,375 கிலோ மஞ்சள், 690 கிலோ சுறா இறக்கைகள், 8,44,430 பிரகபெலைன் மாத்திரைகள் 150 மி.கி. மற்றும் 230 ஸ்லர்ரி ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

சிறப்புப் பிரிவு

சிறப்புப் பிரிவானது, 1 காவல் கண்காணிப்பாளர், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 11 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 31 காவல் ஆய்வாளர்கள், 102 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 191 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற கோவை தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தினை தொடர்ந்து, அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாத அமைப்புகள் தொடர்பான நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டி, அவ்வமைப்புகளின் நேரடி மற்றும் மறைமுக நடவடிக்கைகளைக் கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறப்புப் பிரிவு துவக்கப்பட்டது. சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 8 இடங்களில் சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் தற்போது இயங்கி வருகின்றன.

சிறப்புப் பிரிவு அளித்த இரகசிய தகவல்களின் அடிப்படையில், 4 ஐ.எஸ்.ஐ.எஸ். அனுதாபிகள் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டதன்மூலம் அவர்களின் கொடூரச் செயல்பாடுகள் தடுக்கப்பட்டன.

22.9.2022 அன்று மாநிலத்தில் உள்ள பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் நான்கு அலுவலகங்கள் மற்றும் அவ்வமைப்பின் நிர்வாகிகளின் வீடுகளில் தேசிய புலனாய்வு முகமை சோதனை நடத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா மற்றும் சோஷியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள்/ அடிப்படைவாதிகள், அரசுப் பேருந்துகள்மீது கற்கள் வீசுதல்,

2023 ஏப்ரல் 20]

பெட்ரோல் குண்டுகள் வீசுதல், இந்து மத அமைப்புகளின் நிர்வாகிகள் வீடுகள்/வாகனங்களுக்கு தீ வைத்தல் போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கண்டறிவதிலும், பெட்ரோல் குண்டுகள் வீச்சு சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கைது செய்வதிலும் சட்டம்-ஒழுங்கு பிரிவிற்கு இப்பிரிவு முக்கியத் தகவல்களை வழங்கியது.

தீவிரவாத சித்தாந்தம் மற்றும் பயங்கரவாத அமைப்பின்பால் கனிவான போக்கு கொண்ட பல இளைஞர்களை அடையாளம் காண சிறப்புப் பிரிவு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அவர்களை சமூகத்தின் மைய நீரோட்டத்தில் இணைக்கும் வகையில், மத அறிஞர்கள், மனநல மருத்துவர்கள் உள்ளிட்டோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் உதவியுடன் 2022-2023 ஆம் ஆண்டு தீவிரவாத சித்தாந்தமுடைய 9 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 70 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டு வாழ்க்கையின் மைய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

நுண்ணறிவுப் பிரிவின் சுமுகமான மற்றும் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்காக தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு 11 காவல் துணை கண்காணிப்பாளர்கள் பணியிடங்களை உருவாக்க அரசு 21.10.2022 அன்று அனுமதியளித்துள்ளது.

தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரத்தில் சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு அலகுகளை உருவாக்க அரசு அறிவிப்பு வெளியிட்டு, 1.9.2022 அன்று முதல் அப்பிரிவுகள் செயல்படத் துவங்கியுள்ளன.

VII. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, 1 காவல் துறை கூடுதல் இயக்குநர், 2 காவல் துறை தலைவர்கள், 1 காவல் துறை துணைத் தலைவர், 5 காவல் கண்காணிப்பாளர்கள், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 25 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் சிறப்பு புலனாய்வு பிரிவு உட்பட 848 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், 37 அலகுகள், 7 திட்டமிட்ட குற்றச்செயல்கள் தடுப்புப் பிரிவுகள், 4 கள்ள நோட்டுக்களைக்

கண்டறியும் பிரிவுகள், 5 சிறப்பு புலனாய்வுப் பிரிவுகள், இணையதள குற்றத் தடுப்புப் பிரிவு, ஆட்கடத்தல் தடுப்பு மற்றும் பிற சிறப்பு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பன்னாட்டு காவல் முகமையின் (Interpol) தமிழ்நாடு மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. அடிப்படைவாத வழக்குகள் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு எதிரான வழக்குகளை சிறப்பு புலனாய்வுப் பிரிவு (SID) கையாண்டு வருகிறது.

2022 ஆம் ஆண்டில், 41 வழக்குகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 18 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்துள்ளன. 171 வழக்குகள் மாற்றப்பட்டுள்ளன.

VIII. இணையதள குற்றப்பிரிவு

காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையின்கீழ் இணையதள குற்றப்பிரிவு செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தில் இணையதள குற்ற உட்பிரிவுக்கு 3 காவல் கண்காணிப்பாளர்களும், இணையதள குற்றப்பிரிவு அரங்கத்திற்கு ஒரு காவல் கண்காணிப்பாளரும் ஆகமொத்தம் 221 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மாநில இணையதள குற்றப்பிரிவிற்கு ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 10 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 11 ஆய்வாளர்கள், 40 உதவி ஆய்வாளர்கள், 5 உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்), 128 இதர ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகிய பணியிடங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டம்/ஆணையரகம் மற்றும் சிறப்புப் பிரிவுகளிலும் தலா ஒரு பிரிவு என்ற அடிப்படையில் மாநிலத்தில் மொத்தம் 46 இணையதள குற்றக் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 26.7.2022 அன்று, மயிலாடுதுறை இணையதள குற்றக் காவல் நிலையம் உருவாக்கப்பட்டது.

வலைதள கட்டமைப்பை அமைக்கவும், இணையதள குற்றப்பிரிவு காவல் நிலையங்கள், இணையதள குற்ற பிராந்திய ஆய்வகங்கள் மற்றும் சென்னையில் மாநில இணையதள குற்ற வழிகாட்டி மையம் அமைக்கவும் தேவையான வன்பொருள் மற்றும் மென்பொருள் உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கு, அரசு ரூ.28.97 கோடி ஒப்பளித்துள்ளது.

2023 ஏப்ரல் 20]

இணையதள நிதி மோசடி வழக்குகள் தொடர்பாக "1930" என்ற உதவி எண்ணின்மூலம் பெறப்படும் அழைப்புகளை கையாள இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தில் 24X7 மணி நேரமும் செயல்படும் தனி கட்டுப்பாட்டு அறை தொடங்கப்பட்டுள்ளது. தேசிய இணையதள குற்ற அறிக்கையிடல் வலைப்பின்னலை அணுக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இணையதள குற்றப்பிரிவு சார்பில் கடந்த டிசம்பர் 2022-ல் "தமிழ்நாடு காவல் துறை ஹாக்கத்தான் போட்டி 2022 (Hackathon *2022)" நடத்தப்பட்டது. அதில் தர்க்க ரீதியான மற்றும் குறியீட்டு திறன்களைப் பயன்படுத்தி காவல் துறையின் சிக்கல்களைத் தீர்க்க மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.*

85 இணையதளங்கள், 46 யூடியூப் காணொளிகள், 59 பேஸ்புக் பக்கங்கள்/சுய விவரங்கள், 6 இன்ஸ்டாகிராம் பக்கங்கள், 15 டுவிட்டர் பக்கங்கள் மற்றும் 211 கூகுள் பிளே ஸ்டோர் பயன்பாடுகள் போலியானதாக/மோசடியானதாகக் கண்டறியப்பட்டு அவை இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தால் முடக்கப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் இணையதள மோசடிகள் குறித்து இணையதள குற்றப்பிரிவானது பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் நடத்தியுள்ளது.

1.1.2022 முதல் 31.3.2023 வரையிலான காலகட்டத்தில், NCRB *ஆல் பதிவு செய்யப்பட்ட புகார்களின் எண்ணிக்கை 80,148 ஆகும். மேற்கண்ட புகார்களின்மூலம் இழக்கப்பட்ட தொகையான ரூ.372.37 கோடியில், ரூ.158.03 கோடி முடக்கப்பட்டது மற்றும் ரூ.30.91 கோடி பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்டது.*

IX. பொருளாதாரக் குற்றப் பிரிவு (EOW)

பொருளாதாரக் குற்றப் பிரிவானது காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. காவல் துறை தலைவர் ஒருவரும், 4 காவல் கண்காணிப்பாளர்களும், 24 துணை காவல் கண்காணிப்பாளர்களும், 57 ஆய்வாளர்களும், 106 உதவி ஆய்வாளர்களும் மற்றும் 462 இதர ஆளிநர்களும் காவல் துறை கூடுதல் இயக்குநருக்கு உதவிபுரிந்து வருகின்றனர்.

இந்தப் பிரிவு வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள், பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்க நிதி முறைகேடுகள் மற்றும் பிற மோசடிகள் தொடர்புடைய வழக்குகளைக் கையாள்கிறது.

1.1.2022 முதல் 75 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதில் 51 வழக்குகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2,86,465 டெபாசிட்தாரர்கள் ரூ.12,410.74 கோடியை இழந்துள்ளனர். இந்த வழக்குகளில் 143 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலகட்டத்தில், 98 வழக்குகள் சிறப்பு நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டன, அவற்றில் 60 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன மற்றும் அதிகபட்ச தண்டனையாக 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. 1,681 டெபாசிட்தாரர்கள்/பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.26.08 கோடி திருப்பி அளிக்கப்பட்டன. ரூ.486.99 கோடி சொத்துகள் அடையாளம் காணப்பட்டன, அவை அரசாங்கத்தால் இணைக்கப்பட்டு, பின்னர் ஏலம் விடப்பட்டு, டெபாசிட் செய்தவர்களுக்கு/பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

X. அமலாக்கப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் கடத்தலை ஒழிப்பதற்கு திறம்பட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, போதைப் பொருட்கள் தடுப்பு நுண்ணறிவு குற்றப் புலனாய்வுத் துறையுடன் ஒருங்கிணைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வறிவிப்பின்படி, அமலாக்கப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. இப்பிரிவிற்கு தேவையான ஆளிநர்கள் மற்றும் உபகரணங்களை ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அமலாக்கப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், போதைப் பொருட்கள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், அறிவுசார் சொத்துரிமை சட்டம் மற்றும் விபச்சார தடுப்பு சட்டம் ஆகியவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்புள்ளது.

2023 ஏப்ரல் 20]

அனைத்து மாவட்டங்களிலும் அமலாக்கப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அமைக்கப்படும். தற்போது மாவட்டங்களில் செயல்பட்டுவரும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் பணியாற்றக்கூடியவர்களின் பணிகள் மறுவரன்முறைபடுத்தப்பட்டு, போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தை அமலாக்கும் பொறுப்பு மாவட்ட அமலாக்கப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எடுத்துச்செல்லுதல், கையிருப்பில் வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றை முற்றிலுமாகத் தடுப்பது என்ற இலக்குடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருவதுடன், கள்ளச்சாராயம் கடத்தலைத் தடுப்பது, ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் கடத்தப்படுவதை தடுப்பது ஆகிய பணிகளிலும் மதுவிலக்கு அமலாக்கத் துறை ஈடுபட்டு வருகிறது. காவல் துறை தலைவர் ஒருவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள், 7 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 30 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 95 ஆய்வாளர்கள், 174 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1,580 இதர ஆளிநர்கள் ஆகியோரைக் கொண்டு நமது மாநிலத்தில் மொத்தம் 101 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

சிறப்புத் தனிப் படைகள் அமைக்கப்பட்டு, நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையிலும், தீவிர மதுவிலக்கு குற்றவாளிகளின் தொலைபேசி தொடர்புகளை ஆய்வு செய்தும் சட்டவிரோதமாக எரிசாராயம், கள்ளச்சாராயம் கடத்தப்படுவதையும், அண்டை மாநிலங்களிலிருந்து குற்றவாளிகளால் மதுபானங்கள் கடத்தப்படுவதையும் தடுப்பதற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் மொத்தம் 45 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு நிரந்தர காவல் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் கள்ளச்சாராய மரணங்கள் ஏதும் நிகழவில்லை. 2022 ஆம் ஆண்டு 105 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 37,217 லிட்டர் எரிசாராயமும், 4,682 கள்ளச்சாராய பாட்டில்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், பிற பிரிவுகளில் 1,40,649 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11,828 பெண்கள் உட்பட 1,39,697 பேர் கைது செய்யப்பட்டனர்.

2022 ஆம் ஆண்டில் 8 லாரிகள், 7 வேன்கள், 231 கார்கள், 65 ஆட்டோக்கள் மற்றும் 2,646 இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட 2,957 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 4493 வாகனங்கள் ஏலம் விடப்பட்டு ரூ.9.7 கோடி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டன.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் வாயிலாக மின்கலனுடன்கூடிய சூரிய சக்தியில் இயங்கும் ஜெனரேட்டர்களை 20 சோதனைச் சாவடிகளில் அமைக்க அரசு ரூ.7.11 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டில் மொத்தம் 3,275 தொலைபேசி அழைப்புகள் உதவி எண் '10581' மூலம் பெறப்பட்டு, அந்த புகார்கள் அனைத்தின்மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மாநிலத்தில் எந்த பகுதியிலும் கஞ்சா பயிரிட்டு வளர்க்கப்படுவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு பூஜ்ஜியம் என்ற அளவில் உள்ளது. 2022 ஆம் ஆண்டில் 10,665 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 19 வெளிநாட்டினர் உட்பட 14,934 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 28,383 கிலோ கஞ்சா, 63,848 எண்ணிக்கையிலான தடை செய்யப்பட்ட மாத்திரைகள் மற்றும் 98 கிலோ இதர போதைப் பொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கடந்த 6.12.2021 முதல் 5.1.2022 வரையில், "கஞ்சா மற்றும் குட்கா ஆபரேசன் 1" என்ற பெயரில் நடத்தப்பட்ட வேட்டையில், போதைப் பொருட்கள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 1,272 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,221 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 2,299 கிலோ கஞ்சா மற்றும் 23 கிலோ ஹெராயின் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த 28.3.2022 முதல் 27.4.2022 வரை "கஞ்சா மற்றும் குட்கா ஆபரேசன் 2.0" என்ற பெயரில் நடத்தப்பட்ட வேட்டையில், போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 2,023 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,423 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 3,562.5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டன.

முதல்முறையாக, போதைப் பொருள் கொடுங்குற்றவாளிகள்மீது பதிவு செய்யப்பட்ட 72 வழக்குகளில், நிதி சார்ந்த புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்கள் சேர்த்து வைத்துள்ள மொத்தம் 17.87 கோடி ரூபாய் மதிப்பிலான 151 அசையும் மற்றும்

2023 ஏப்ரல் 20]

அசையா சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள்/நண்பர்கள் பெயரில் ரூ.2 கோடி இருப்பு வைக்கப்பட்டுள்ள 4,994 வங்கிக் கணக்குகள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 102-ன்கீழ் முடக்கப்பட்டன.

11.8.2022 அன்று அமலாக்கப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் மாநிலம் முழுவதும் போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி எடுப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் மாநில அளவில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் கல்லூரி மற்றும் பள்ளிகளில் படிக்கும் 74 இலட்சம் மாணவர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் பங்கேற்று, போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வானது உலக சாதனைகளை பதிவு செய்யும் அமைப்பால் ஒரு உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டது.

போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள அரசு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப் பொருட்களுக்கு எதிரான மன்றங்கள் அமைக்கப்பட்டு, "எனக்கு வேண்டாம்" என்ற வில்லைகள் 50 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

XI. சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. காவல் துறை தலைவர் ஒருவர், காவல் கண்காணிப்பாளர் ஒருவர், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 9 ஆய்வாளர்கள், 27 உதவி ஆய்வாளர்கள், 100 இதர ஆளிநர்கள் ஆகியோர் இப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர்.

சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது தொன்மை வாய்ந்த சிலைகள் திருட்டு, 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த சிலைகள் திருட்டு, மாநிலம் முழுவதும் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலும்

தொடர்புடைய சிலைகள் திருட்டு வழக்குகள், ரூபாய் ஐந்து லட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டு வழக்குகள் மற்றும் மாநில அரசின் ஆணையின் பேரிலான சிலைகள் திருட்டு வழக்குகளை புலன் விசாரணை செய்து வருகிறது.

வெளிநாடுகளில் உள்ள நம்முடைய சிலைகளை சட்டப்பூர்வ நடைமுறைகள்மூலம் மீட்டு கொண்டு வந்தும், நமது கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்தும், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் திருடப்பட்ட சிலைகளைக் கண்டுபிடிப்பதில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மகத்தான சாதனை படைத்துள்ளது. நுண்ணறிவுத் தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளிநாடுகளில் உள்ள அதிகாரிகளுடனான தொடர்பு பலப்படுத்தப்பட்டதன் விளைவாக சிலை கடத்தல் வழக்குகள் நன்கு கண்டறியப்பட்டு முக்கிய சிலைகள் மீட்கப்பட்டன.

சிலை கடத்தல் வழக்குகளில் மீட்கப்பட்ட அனைத்து சிலைகள் மற்றும் தொல்பொருட்களை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவில் முப்பரிமாண தொழில்நுட்பப் புகைப்படம் எடுத்து டிஜிட்டல்மயமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்து சமய அறநிலையத் துறையால் நிர்வகிக்கப்படும் கோயில்களில் உள்ள அனைத்து சிலைகள் மற்றும் கலைப்பொருட்களை முப்பரிமாண தொழில்நுட்பப் புகைப்படம் எடுத்து, அவற்றை டிஜிட்டல்மயமாக்கி இந்து சமய அறநிலையத் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ததன் விளைவாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் திருடப்பட்ட சிலைகளை அடையாளம் காணவும், மீட்கப்பட்ட சிலைகளுடன் திருடப்பட்ட சிலைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் 63 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதோடு மட்டுமின்றி, வேறு இடத்தில் பதிவு செய்யப்பட்ட 48 வழக்குகள் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவிற்கு பின்னர் மாற்றம் செய்யப்பட்டன. இவ்வழக்குகளில், 45 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 249 சிலைகள் (வெளிநாடுகளிலிருந்து மீட்டுக் கொண்டு வரப்பட்ட 10 சிலைகள் உட்பட) தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

2023 ஏப்ரல் 20]

XII. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை

கூடுதல் காவல் துறை இயக்குனர் தலைமையின்கீழ் இயங்கி வரும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில், 4 காவல் கண்காணிப்பாளர்கள், 12 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 24 ஆய்வாளர்கள், 57 உதவி ஆய்வாளர்கள், 322 தலைமைக் காவலர்கள்/ காவலர்கள் மற்றும் இதர அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையானது, (அ) அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 மற்றும் (ஆ) கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோக பராமரிப்புச் சட்டம், 1980 ஆகிய இரு சட்டங்களை அமலாக்கம் செய்து வருகிறது. இப்பிரிவின் அமலாக்க நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு:

வ எண்	விவரம்	2022 ஜனவரி-டிசம்பர்		
1.	*அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955-ன்கீழ் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள்*	*9325*		
2.	**மொத்த பறிமுதல்**	**வழக்குகள்**	**அளவு**	**மொத்த மதிப்பு (ரூ.)**
	அ) பொது விநியோக திட்டத்திற்கான அரிசி (குவிண்டால்)	*7515*	*67511*	*38,143,715*
	ஆ) பொது விநியோக திட்டத்திற்கான மண்ணெண்ணெய் (லிட்டர்கள்)	*572*	*15217*	*2,28,255*

<table>
<tr><th>வ எண்</th><th>விவரம்</th><th colspan="5">2022 ஜனவரி-டிசம்பர்</th></tr>
<tr><td></td><td>இ) சமையல் எரிவாயு உருளை (எண்ணிக்கை)</td><td>1114</td><td colspan="2">1492</td><td colspan="2">13,42,800</td></tr>
<tr><td></td><td>ஈ) இதர பொருட்கள் (மதிப்பு)</td><td>124</td><td colspan="2"></td><td colspan="2">2,63,59,722</td></tr>
<tr><td></td><td>உ) நெல் (கிலோ & மதிப்பு)</td><td>0</td><td colspan="2">0</td><td colspan="2">0</td></tr>
<tr><td>3.</td><td>சொத்துகளின் மொத்த மதிப்பு ரூபாயில்</td><td colspan="5">6,60,74,492</td></tr>
<tr><td>4.</td><td>மொத்த கைது நடவடிக்கைகள்</td><td colspan="5">9242</td></tr>
<tr><td rowspan="2">5.</td><td rowspan="2">பறிமுதல் செய்யப்பட்ட மொத்த வாகனங்கள்</td><td>இரு சக்கரம்</td><td>மூன்று சக்கரம்</td><td>நான்கு சக்கரம்</td><td>இதர</td><td>மொத்தம்</td></tr>
<tr><td>610</td><td>124</td><td>1305</td><td>1</td><td>2040</td></tr>
<tr><td>6.</td><td>கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோக பராமரிப்புச் சட்டம், 1980-ன் கீழான தடுப்பு நடவடிக்கைகள்</td><td colspan="5">80</td></tr>
<tr><td colspan="7">டீசல் வழக்குகளின் சுருக்கம்</td></tr>
<tr><td>7.</td><td>வழக்குகளின் எண்ணிக்கை (உயிரி டீசல்)</td><td colspan="5">27</td></tr>
<tr><td>8.</td><td>உயிரி டீசல் (லிட்டர்கள்)</td><td colspan="5">2,53,034</td></tr>
<tr><td>9.</td><td>பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை</td><td colspan="5">22</td></tr>
</table>

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 20]

7.5.2021 முதல் 31.3.2023 வரையிலான காலகட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட 3,894 வாகனங்கள் கழிவு செய்யப்பட்டு, அவை ஏலம் விடப்பட்டு, அதன்மூலம் பெறப்பட்ட ரூ.14.98 கோடி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான காணொளி மோசடி கண்டுபிடிப்பு அமைப்பை 2 கிடங்குகளில் ஏற்படுத்தி முன்னோட்ட ஆய்வு மேற்கொள்ள ரூ.18,36,000/-ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணா நகர் மற்றும் மின்ட் பகுதிகளில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகள் இந்த முன்னோட்ட ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, மென்பொருள் மேம்பாட்டாளரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

XIII. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவானது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்கிறது. கூடுதல் காவல் துறை இயக்குனரின்கீழ் இயங்கிவரும் இப்பிரிவின் செயல்பாடுகளை, தலைமையகத்தில் 2 காவல் கண்காணிப்பாளர்களும், சென்னை பெருநகரக் காவலில் ஒரு துணை ஆணையாளரும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளரும் (செங்கல்பட்டு, திருப்பூர், நீலகிரி, நாமக்கல், திருவாரூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் கரூர் நீங்கலாக) மற்றும் ஒவ்வொரு மாநகரத்திலும் ஒரு கூடுதல் துணை ஆணையாளரும் (சென்னை பெருநகர்-தெற்கு மண்டலம் நீங்கலாக) கண்காணித்து வருகின்றனர்.

இப்பிரிவின்கீழ் 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், 32 ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகளும், 7 புலன் விசாரணைப் பிரிவுகளும், 43 குழந்தைகள் கடத்தல் தடுப்புப் பிரிவுகளும் மற்றும் 39 சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவுகளும், 194 காவல் நிலையங்களில் சிறார் நட்பு அறைகளும், 1,542 குழந்தைகள் நல காவல் அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் புலன் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்காக, நிலையான வழிகாட்டு நெறிமுறையுடன் (SOP) சிறப்புப் பயிற்சி ஒன்று நீதித் துறை அதிகாரிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட்டது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 28 விழிப்புணர்வு காணொளிகள் இப்பிரிவு அதிகாரிகளால் உருவாக்கப்பட்டு, அவை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன. மக்கள் கூடும் பொது இடங்கள், திரையரங்குகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிகளில் அவை ஒளிபரப்பப்பட்டன.

காணாமல் போன மற்றும் தவறாகப் பயன்படுத்தப்படும் குழந்தைகளுக்கான தேசிய மையத்திலிருந்து இதுவரை 13,930 இணையதள தகவல் அறிக்கைகள் பெறப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், 11,778 மகளிர் உதவி எண் அழைப்புகள் (1091), 39,758 குழந்தைகள் உதவி எண் அழைப்புகள் (1098), 96,318 பாலியல் துன்புறுத்தல் அழைப்புகள் (181), 7,508 மூத்த குடிமக்கள் உதவி எண் அழைப்புகள் (14,567) ஆகியவை பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

XIV. ஆயுதப் படை

ஆவடியில் உள்ள படைக்கல மையம் மற்றும் சிறு ஆயுதக் கிடங்கு உட்பட மாநிலத்தில் 15 தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணிகள் உள்ளன. தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் 8 ஆம் அணியானது புதுதில்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் சிறப்புப் பணி மேற்கொண்டு வருகிறது. தேர்தல் பணிகள் உட்பட முக்கிய சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு பணிகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், பிற மாநிலங்களிலும் தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 8.8.2022 அன்று திருச்சியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் முதலாம் அணிக்கான புதிய நிர்வாகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். 21.10.2022 அன்று காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்களது

2023 ஏப்ரல் 20]

குடும்பத்தினரின் பயன்பாட்டிற்காக 400 மீட்டர் ஓடுதளம் கொண்ட விளையாட்டு மைதானம் திறந்துவைக்கப்பட்டது.

மெரினா கடற்கரையில் உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் மணிமுத்தாறு 12 ஆம் அணியானது, கடல் அலையில் சிக்கி மூழ்கவிருந்த பலரின் உயிரை காப்பாற்றியுள்ளது.

2022 ஆம் ஆண்டில் திகார் சிறைச்சாலையில் மேற்கொண்ட திறமையான சோதனை நடவடிக்கையின்போது, 414 கைபேசிகள், 25 கிலோ புகையிலை/போதை மருந்துகள், 909 கைபேசி சாதனங்கள் மற்றும் 2,935 இதர பொருட்கள் என மொத்தம் ரூ.1,55,928/- மதிப்புள்ள பொருட்கள் குற்றவாளிகள்/சிறைவாசிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

XV. அரசு இருப்புப் பாதை காவல் படை

அரசு இருப்புப் பாதை காவல் படையானது கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில், இரண்டு இருப்புப் பாதை மாவட்டங்கள் உள்ளன. சென்னை மற்றும் திருச்சியில் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் இருப்புப் பாதை மாவட்டங்கள் காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலைநாட்டவும், குற்றங்களைத் தடுக்கவும் உள்ளூர் காவல் துறையினருடன் இணைந்து திறமையாகச் செயலாற்றி வருகிறது. இரயில் பயணிகளின் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. விரைவு இரயில்களில் இரயில்வே காவல் துறையினர் ரோந்துப் பணியை மேற்கொள்கிறார்கள். 2022 ஆம் ஆண்டு குற்றங்களைத் தடுத்தல், இரயில் பயணிகளுக்கு உதவி செய்தல் மற்றும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஆகியன குறித்து 22,213 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டு, அவற்றின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரயில் நிலைய வளாகங்களில் நாச வேலை தடுப்பு சோதனைகள் செய்ய அதிநவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஐந்து மோப்ப நாய்கள் உபயோகப்படுத்தப்பட்டன. இரயிலில் பயணம் செய்யும் அதிமுக்கிய நபர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

[2023 ஏப்ரல் 20

கடந்த 28.3.2022 முதல் 27.4.2022 வரை "ஆபரேசன் கஞ்சா 2.0" நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையில், போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 63 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 568.55 கிலோ கன்னாபீஸ் என்ற போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதொடர்பாக 30 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 12.12.2022 முதல் 31.12.2022 வரை நடத்தப்பட்ட "ஆபரேசன் கஞ்சா 3.0" நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையில், போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 168.95 கிலோ கன்னாபீஸ் என்ற போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டு, இதுதொடர்பாக 14 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

சென்னை இருப்புப் பாதை காவல் மாவட்டங்களில் இரயில் நிலைய வளாகங்களில் தனியாக தவித்த 150 பெண் குழந்தைகள் உட்பட 1,267 சிறார்கள் மீட்கப்பட்டனர். இவர்களில் 75 சிறார்கள் அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். 1,192 சிறார்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின்மூலம் மாவட்ட குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

XVI. சிறப்பு இலக்குப் படை (STF)

சிறப்பு இலக்குப் படையானது காவல் துறை தலைவர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில் 2 காவல் கண்காணிப்பாளர்கள், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 4 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 9 காவல் ஆய்வாளர்கள், 27 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 198 இதர காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படையானது ஆயுதம் தாங்கிய உயரடுக்கு வனப் பாதுகாப்புப் படையாக செயல்பட்டு வருகிறது. வனச் சரணாலயங்களில் சுற்றுச்சூழலைக் காக்கவும், மலைவாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கவும் இப்படை செயல்பட்டு வருகிறது.

இப்படை, நிர்வாகம், செயலாக்கம், நுண்ணறிவு மற்றும் பயிற்சி ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டதாகும். இப்படை

2023 ஏப்ரல் 20]

மாநிலத்தில் 20 மாவட்டங்களில், 10 செயல் முகாம்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படை, சுமார் 21,767 சதுர கி.மீ. கொண்ட மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளைப் பாதுகாத்து வருகிறது.

தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படை மற்றும் கேரள மாநில சிறப்புச் செயலாக்கக் குழுமம் ஆகியவை இணைந்து மூன்று மாநிலங்கள் சந்திக்கும் முச்சந்திப்பில் "Operation OWL-I" *என்ற மூன்று நாள் கூட்டு தேடுதல் வேட்டையை 16.12.2022 முதல் 18.12.2022 வரை வெற்றிகரமாக மேற்கொண்டது.*

20 மாவட்டங்களில், மொத்தம் 528 தேடுதல் பாதைகள், 696 முக்கிய இடங்கள், மலை/விளிம்பு கிராமங்களில் வசித்துவரும் 146 குடும்பத்தினர் மற்றும் 2,538 கிராமங்கள்/குக்கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பு இலக்குப் படையால் 20 மாவட்டங்களில் மூன்று நாள் தேடுதல் வேட்டைகள் என்ற நடவடிக்கை மொத்தம் 428 தடவைகள் நடத்தப்பட்டுள்ளன.

அண்டை மாநிலங்களில் இடதுசாரி தீவிரவாதிகள் நடமாட்டமுள்ள இடங்கள் மற்றும் தேடுதல் பாதைகள் கூகுள் மேப்பில் சேர்க்கப்பட்டு கணினிமயமாக்கப்பட்டுள்ளன. பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலை கிராம மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கத்துடன், சிறப்பு இலக்குப் படை 42 நல்வாழ்வு முகாம்களை நடத்தி, 1720 குடும்பங்கள் பயன்படும் வகையில் ரூ.19.70 இலட்சம் மதிப்பில் அடிப்படைத் தேவையான பொருட்களை வழங்கியுள்ளது.

சிறப்பு இலக்குப் படையால் 111 பழங்குடி கிராமங்களிலிருந்து அடிப்படை வசதிகள் கோரும் 237 கோரிக்கை மனுக்கள் மற்றும் 118 குறைதீர் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றை தீர்த்து வைக்க சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள "முதல்வரின் முகவரி துறை" தனி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், வனத் துறையுடன் இணைந்து நெகிழிக்கு எதிராக 33 விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டுள்ளன.

XVII. செயலாக்கப் பிரிவு

தமிழ்நாடு அதிதீவிரப் படை மற்றும் தமிழ்நாடு அதிதீவிரப் படை பயிற்சிப் பள்ளி ஆகியவை செயலாக்கப் பிரிவின்கீழ்

[2023 ஏப்ரல் 20

இயங்கி வருகின்றன. காவல் துறை கூடுதல் இயக்குநரின் தலைமையில் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அதிதீவிரப் படை

இப்படை காவல் கண்காணிப்பாளரின்கீழ் இயங்கி வருகிறது. இதில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் ஆய்வாளர்கள், 23 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 257 இதர காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அதிதீவிரப் படையானது முதன்மையாக பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அதிதீவிரப் படையை மேம்படுத்தவும், தாக்குதல் திறனை அதிகரிக்கவும், நவீன ஆயுதங்கள், வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு சாதனங்கள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்களைக் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு ரூ.57.55 கோடி நிதி ஒதுக்க ஒப்பளிப்பு அளித்துள்ளது.

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளி

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளியானது காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 1 காவல் துணை கண்காணிப்பாளர், 11 காவல் ஆய்வாளர்கள், 22 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 90 இதர ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளி, தனது பயிற்சி மையத்தின் மூலமாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அதிதீவிரப் படை பயிற்சி, துப்பாக்கி சுடும் பயிற்சி, ஆயுதம் மற்றும் சூழ்ச்சிகளைக் கையாளும் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் சாதனம் தொடர்பான பயிற்சி ஆகிய சிறப்புப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2022 ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் பிற துறைகளிலிருந்து (ஊர்க்காவல்-152, சிறைத் துறை-49) 201 நபர்கள் மற்றும் பிற மாநில காவலர்கள் 170 நபர்கள் என மொத்தம் 5,665 காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 20]

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளியில், 923 பயிற்சி உதவி ஆய்வாளர்கள் மற்றும் 78 நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு ஆயுதங்களைக் கையாளுதல் மற்றும் துப்பாக்கி சுடுதல் பயிற்சியும், 9,669 புதிதாக நியமிக்கப்பட்ட காவலர்களுக்கு அதிதீவிரப் படை, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை

தமிழ்நாடு சிறப்புப் படை 13 ஆம் நிறுமத்தை மாற்றியமைத்து தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை உருவாக்கப்பட்டது. இந்தப் படையானது மாநிலத்தில் இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதரால் ஏற்படுத்தப்படும் பேரிடர்களின்போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை கையாளுவதற்காக செயலாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

பேரிடர் மேலாண்மைப் பணிகளில் காவலர்களுக்கு பயிற்சியளிக்கவும், உபகரணங்களை வாங்கவும் ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையில் 610 காவலர்களுக்கு அடிப்படை பேரிடர் மேலாண்மை பாடங்களில் பயிற்சியளிக்கப்பட்டு, அவர்களுள் 330 காவலர்கள் சிறப்பு பேரிடர் மேலாண்மை பயிற்சியை முடித்துள்ளனர்.

மேலும், சிறப்பு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.10.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்டு பயிற்சி நாட்காட்டியின்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒத்திவாக்கம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டு, சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வல்லநாடு ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகளில் முதன்மையாக செயலில் இறங்கும் காவலர்கள் மற்றும் ஊர்க்காவல் படை வீரர்களின் சிறப்புத் திறன்களை

மேம்படுத்த, முதற்கட்ட மருத்துவ உதவிகள் வழங்குதல், கட்டட இடிபாடுகளுள் சிக்கியவர்களைத் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் வெள்ள மீட்புப் பணிகள் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டு மாண்டஸ் புயலின்போது, 400 காவலர்களை உள்ளடக்கிய தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவின் 17 குழுக்கள், 7.12.2022 முதல் 16.12.2022 வரை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டன.

விரைந்து செயல்படும் குழு (QRT)

விரைந்து செயல்படும் குழுவானது தனித்தும், மத்திய ஆயுதப் படையுடன் இணைந்தும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் அணுமின் நிலையங்கள், பெட்ரோலிய எரிவாயு கிடங்குகள், முக்கிய கோயில்கள், ஐந்து நட்சத்திர விடுதிகள் போன்ற தாக்குதல் நடத்தப்படக்கூடிய முக்கிய இடங்களில் வேவுபார்த்தல் மற்றும் ஒத்திகை பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

23-வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டிகள்-2022

அகில இந்திய காவலர் பணித்திறன் போட்டிகளின் ஒரு பகுதியாக, 23-வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டிகள்-2022, தமிழ்நாடு காவல் துறையால் ஒத்திவாக்கத்தில் உள்ள தமிழ்நாடு அதிதீவிரப் பயிற்சிப் பள்ளி/துப்பாக்கி பயிற்சி வளாகத்தில் 9.1.2023 முதல் 13.1.2023 வரை நடைபெற்றது. சுமார் 800 காவல் அதிகாரிகள்/காவலர்கள் கொண்ட 32 அணிகள் (22 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 8 மத்திய ஆயுதப்படைப் பிரிவுகள்/மத்திய காவல் அமைப்புகள்) இந்தப் போட்டிகளில் பங்கேற்றன.

இப்போட்டிகளில் தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடும் அணி கைப்பற்றிய கோப்பைகளின் விவரம் பின்வருமாறு:-

i. மாநிலங்களுக்கிடையேயான போட்டிகளில் ஒட்டுமொத்தமாக சிறப்பாக செயல்பட்டதற்கான வெற்றிக் கோப்பை (முதல் இடம்)

2023 ஏப்ரல் 20]

ii. கைத்துப்பாக்கி/ரிவால்வர் சுடுவதில் இரண்டாம் இடத்திற்கான கோப்பை (2-வது சிறந்த அணி)

iii. கார்பைன்/ஸ்டென்கன் சுடுவதில் இரண்டாம் இடத்திற்கான கோப்பை (2-வது சிறந்த அணி)

iv. ஒட்டுமொத்தமாக இரண்டாம் இடத்திற்கான கோப்பை (2-வது இடம்) ஆகியவற்றை வென்றுள்ளது.

13.1.2023 அன்று சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டரங்கில் நடந்த நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

தமிழ்நாடு காவல் விளையாட்டு வீரர்களின் சாதனைகள்

வ எண்	போட்டி/நிகழ்ச்சி	பதக்கங்கள்		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	ஹரியானாவில் உள்ள பாணுவில் நடைபெற்ற 40வது அகில இந்திய குதிரையேற்றப் போட்டி - 2021 - 22	03	02	01
2.	நெதர்லாந்து நாட்டில் ரோத்தர்தாம் நகரில் நடைபெற்ற 2022 உலக காவல் மற்றும் தீயணைப்பு போட்டிகள்	13	09	03
3.	செங்கல்பட்டு ஒத்திவாக்கத்தில் உள்ள துப்பாக்கி சுடும் களத்தில் நடைபெற்ற 23-வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டிகள்–2022	01	02	02

வ எண்	போட்டி/நிகழ்ச்சி	பதக்கங்கள்		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
4.	மகாராஷ்டிரா மாநிலம் பூனாவில் நடைபெற்ற 71-வது அகில இந்திய காவல் மல்யுத்த போட்டிகள்–2022 (மல்யுத்தம், பளுதூக்குதல், குத்துச்சண்டை, கட்டழகு உடல் போட்டி, கபடி மற்றும் தோள் மல்யுத்தம்)	03	08	09
5.	ஹைதராபாத்தில் உள்ள கட்சிபெளலி அரங்கில் நடைபெற்ற 5-வது தேசிய மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டிகள்	09	06	—

XVIII. கடலோரப் பாதுகாப்புக் குழுமம்

இப்பிரிவு ஒரு கூடுதல் காவல் இயக்குநர் தலைமையில், அவருக்கு உதவியாக சென்னையில் ஒரு காவல் துணைத் தலைவர் மற்றும் நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளரோடு செயல்பட்டு வருகிறது. இக்குழுமத்தில், 1 தளவாய், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 4 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 11 காவல் ஆய்வாளர்கள், 54 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 634 இதர காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் தொடங்கி கன்னியாகுமரி மாவட்டம் வரையில் தமிழக கடலோரப் பகுதிகளில் 42 கடல்சார் காவல் நிலையங்களும், 98 சோதனைச் சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன. இச்சோதனைச் சாவடிகளில் ஆயுதம் தாங்கிய தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் பணியாற்றி வருகின்றனர்.

2023 ஏப்ரல் 20]

துரித இடைமறிப்புப் படகுகள்

கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இந்திய அரசாங்கத்தால் தலா 12 எண்ணிக்கையில், 12 டன் மற்றும் 5 டன் துரித இடைமறிப்புப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்படகுகளில் இலகுரக இயந்திர துப்பாக்கிகளை (LMG) *இயக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ரோந்து படைகளுக்கு* INSAS *ரக துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, துரித இடைமறிப்புப் படகுகளின் வருடாந்திர பராமரிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்காகவும் (CAMC)*, வழக்கமான பராமரிப்பிற்காகவும், தமிழ்நாடு அரசு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. விரிவான வருடாந்திர பராமரிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்* (CAMC) *மேற்கொள்ள நிறுவனங்களை இறுதி செய்வதற்கான நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

9.7.2022 ஆம் தேதி முதல் 15.7.2022 தேதி வரை சென்னை துறைமுகத்திலிருந்து இராமேஸ்வரம் வரையிலும், இராமேஸ்வரத்திலிருந்து சென்னை துறைமுகம் வரையிலும் (500 கடல் மைல்கள்) 24 பயிற்றுவிக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்புக் குழும ஆளிநர்கள் கொண்ட ஒரு கடற்பயணத்தை கடலோரப் பாதுகாப்புக் குழுமம் ஏற்பாடு செய்தது. இக்கடற்பயணத்திற்காக பிரெஞ்சுத் தயாரிப்புகளான மூன்று J*80 ரக படகுகள் பயன்படுத்தப்பட்டன. படைத் துறை சாராத காவல் படையால் மேற்கொள்ளப்பட்ட உலகின் நீளமான கடற்பயணங்களில் இப்பயணமும் ஒன்று என்று உலக மற்றும் ஆசிய சாதனைப் புத்தகங்களில் இப்பயணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

கடலோரப் பாதுகாப்பு, கடலோரத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் பாதுகாப்பு மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகள் ஆகியவை குறித்த ‘ஒரு நாள் கருத்தரங்கு’ ஒன்றை கடலோரப் பாதுகாப்புக் குழுமம் 26.9.2022 அன்று நடத்தியது.

மெரினா கடற்கரை உயிர் பாதுகாப்பு மையம் உருவாக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க மெரினா கடற்கரையில் கூடும்

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், மக்கள் கடலில் மூழ்கும் நிகழ்வுகளைத் தடுப்பதற்காகவும் மெரினா கடற்கரை உயிர் பாதுகாப்பு மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மையத்திற்கு இயந்திரங்கள், வாகனங்கள் வாங்குவதற்காகவும், மனித ஆற்றலுக்காகவும் அரசு ரூபாய் 2.6 கோடி ஒதுக்கியுள்ளது. மெரினா உயிர் பாதுகாப்பு மையம் 1.10.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. மெரினா கடற்கரை உயிர் பாதுகாப்பு மையம் துவங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 82 பேர் கடலில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

பல்வேறு தருணங்களில் கடலோரப் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளையும், சிறு பிரச்சினைகளையும் கண்டறியும்பொருட்டு கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு, 28.6.2022 மற்றும் 29.6.2022 ஆகிய நாட்களில் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையால் ஒருங்கிணைந்த கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி 'சாகர் கவட்ச்-01/2022' என்ற பாதுகாப்பு நடவடிக்கையும், 15.11.2022 மற்றும் 16.11.2022 ஆகிய நாட்களில் இந்திய கடற்படையால் கடலோரப் பாதுகாப்பு படை "சீ-விஜில்" (Sea Vigil 02/2022) என்ற பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன.

மீனவர்கள் மற்றும் படகுகள் மீட்புப் பணி

கடலோரப் பாதுகாப்பு மற்றும் மீனவர்களின் துயர் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக '1093' என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டு இந்த எண்ணிற்கு மொத்தம் 46 அழைப்புகள் வந்துள்ளன. கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (MRCC) உடனும் மற்றும் உள்ளூர் மீன்வளத் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து கடலோரப் பாதுகாப்புக் குழும ஆளிநர்கள் 27 மீனவர்களையும், 7 படகுகளையும் ஆபத்திலிருந்து காப்பாற்றியுள்ளனர்.

சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்களை அமல்படுத்துதல்

1.1.2022 முதல் 31.12.2022 ஆகிய காலகட்டங்களில், 802.08 கிலோ கஞ்சா, 14,690 கிலோ ரேஷன் அரிசி, 3,625 லிட்டர் ரேஷன் மண்ணெண்ணெய், 2,726 கிலோ கடல் அட்டைகள், 260 கிலோ

2023 ஏப்ரல் 20]

ஏலக்காய், 3,770 கிலோ பீடி இலைகள் மற்றும் 1,596 கிலோ மஞ்சள் கிழங்குகள் ஆகியன கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. கடலோரக் காவல் படையினர் அவ்வப்போது மேற்கொள்ளும் இத்தகைய பறிமுதல்களால் கடத்தல் செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன.

1.1.2022 முதல் 31.12.2022 வரையுள்ள காலகட்டத்தில், கடலோர மற்றும் கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்யும்பொருட்டு, இந்திய கடவுச்சீட்டு சட்டம் 1967, வெளிநாட்டவர்கள் சட்டம் 1946, ஆயுதச் சட்டம் 1959, வெடிமருந்து பொருட்கள் தடைச் சட்டம் 1908 மற்றும் இந்திய கடலோர மண்டலங்கள் (மீன்பிடி இயந்திரங்கள் முறைப்படுத்துதல்) சட்டங்கள் 1981 ஆகிய சட்டங்களின்கீழ் 174 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடலோரக் காவல் படையினரின் பணிகளில் குறிப்பாக கடலோரப் பாதுகாப்புக் குழுமப் பணிகளில் உதவி செய்வதற்காக 300 ஊர்க்காவல் படை ஆளிநர்களை கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவக் கிராமங்களிலிருந்து தேர்வு செய்ய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 186 பேர் தேர்வு செய்யப்பட்டு, 45 நாட்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அதில் 150 ஊர்க்காவல் படையினர் கடலோரக் காவல் குழுமத்தில் பணியமர்த்தப்பட்டுவிட்டனர்; மீதமுள்ள 36 ஊர்க்காவல் படையினர் இன்னும் கடலோரக் காவல் குழுமத்தில் பணியில் சேர வேண்டி உள்ளது.

கடலூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மையங்களில் 120 மீனவர்களின் வாரிசுகள் அவர்கள் தங்களின் அறிவு மற்றும் உடல் ஆற்றலை இந்திய கடற்படை/இந்திய கடல் பாதுகாப்புப் படை மற்றும் இதர பாதுகாப்புப் படைகளில் சேரும் வகையில் திறன் மேம்பாடு அடைவதற்காக அவர்களுக்கு (இலவச தங்குமிடம், பயிற்சி உபகரணங்கள், உதவித் தொகையுடன்கூடிய) 3 மாத பயிற்சி 14.3.2022 முதல் 14.6.2022 வரை வழங்கப்பட்டது. இரண்டாவது குழுவுக்கு இப்பயிற்சி விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.

XIX. ஊர்க்காவல் படை மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு

தன்னார்வ அமைப்பான தமிழ்நாடு ஊர்க்காவல் படை அமைப்பானது காவல் துறையினருக்கு உதவி செய்யவும், மாநிலத்தின் பாதுகாப்பைப் பராமரிக்கவும், வெள்ளம், தீ அல்லது

பெருநோய் தொற்று காலங்களில் பொதுமக்களுக்கு சிகிச்சை மற்றும் முதலுதவி வழங்குவதிலும் போக்குவரத்தைச் சீர்படுத்துவதிலும் உதவுகிறது. இந்த அமைப்பு 2,085 பெண்கள் உள்ளிட்ட 15,922 ஊர்க்காவல் படையினரால் செயல்பட்டு வருகிறது.

இந்த ஊர்க்காவல் படை அமைப்பினருக்கு இயற்கை பேரிடர்கள் ஏற்படும்போது பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் மற்றும் தங்களை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்த தற்காப்பு ஒத்திகை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது, மொத்தம் 12,321 ஊர்க்காவல் படையினர் காவல் துறையினருடன் இணைந்து பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு, உள்ளாட்சித் தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு செய்த உதவி அனைவராலும் பாராட்டப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை காலகட்டத்தில் கடலோர மாவட்டங்களில் உள்ள ஊர்க்காவல் படையினர் அந்தந்த மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினருடன் இணைந்து மீட்புப் பணிகளில் துரிதமாக ஈடுபட்டனர்.

2022 ஆம் ஆண்டில் பல்வேறு மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் புதிதாக கிட்டத்தட்ட 600 ஊர்க்காவல் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், முக்கிய மற்றும் மிக முக்கிய நபர்கள் பாதுகாப்புப் பணி, கோயில் திருவிழாக்கள் பாதுகாப்பு பணி, தீபாவளி, பொங்கல் மற்றும் இதர பண்டிகை தினங்களிலும் உள்ளூர் காவல் துறையினருடன் இணைந்து ஊர்க்காவல் படையினர் தன்னலமின்றி செயல்பட்டு, மிகச் சிறப்பாகப் பாதுகாப்புப் பணிகளைச் செய்து வருகிறார்கள். பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியின்போது மெச்சத்தக்க வகையில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

300 மீனவ இளைஞர்களை ஊர்க்காவல் படையில் இணைத்து 10 கடலோர மாவட்டங்களில் கடலோரப் பாதுகாப்புக் குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

2023 ஏப்ரல் 20]

2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.56.27 கோடியை ஊர்க்காவல் படையினருக்கு ஊதியமாக வழங்க அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

XX. சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு

சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவானது, ஒரு காவல் துறைத் தலைவர் தலைமையில், ஒரு உதவி காவல் துறைத் தலைவர், 38 துணை கண்காணிப்பாளர்கள், 6 காவல் ஆய்வாளர்கள், 66 காவல் உதவி ஆய்வாளர்கள், 147 காவல் ஆளிநர்கள், 37 சிறப்பு பணியாளர்கள் மற்றும் 28 அமைச்சுப் பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளை தடுக்க இப்பிரிவு உருவாக்கப்பட்டது. தற்போது மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் 44 சமூக நீதி மற்றும் மனித உரிமை அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற சமூகத்தினரிடையே உள்ள இடைவெளியை நீக்குவதற்காக சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் தத்தமது எல்லைக்குள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை "சமூக நீதி" கூட்டம் நடத்தி வருகின்றனர்.

காவல் துணை கண்காணிப்பாளர்கள்/காவல் உதவி ஆணையாளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி, அவற்றின் செயல்முறைகளை, புகைப்படங்களுடன் அனுப்பி வருகின்றனர். 2022 ஆம் ஆண்டு 988 சமூக நல்லிணக்க மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

நிதி நிவாரணம்

வன்கொடுமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி நிவாரணம் அளிப்பதற்கான கருத்துருக்களை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு விரைந்து முன்னெடுத்து வழங்கி வருகிறது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிதி நிவாரணம்:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வ. எண்	ஆண்டு	வழக்குகள் எண்ணிக்கை	பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை	தொகை (ரூ. கோடியில்)
1	2021	2,750	4,056	38.62
2	2022	1,852	2,883	32.97

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, “சமத்துவம் காண்போம்” என்ற பெயரில் சென்னையில் உள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் காவல் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு அரசு ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

XXI. போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புப் பிரிவு

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புப் பிரிவானது, ஒரு காவல் துறை தலைவர் தலைமையில், 1 காவல் துணை கண்காணிப்பாளர், 1 காவல் ஆய்வாளர், 2 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 2 காவல் ஆளிநர்களை தலைமையகத்தில் கொண்டு இயங்கி வருகிறது.

விபத்துகளின்போது சம்பவ இடத்திற்கு விரைந்து செல்லவும், பாதிக்கப்பட்ட மற்றும் விலைமதிக்க முடியாத மனித உயிர்களைக் காப்பாற்றிடவும் பொன்னான உயிர் காக்கும் மேலாண்மை திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் 31,512 வழக்குகளை கையாண்டு சிறப்பான பணியைச் செய்துள்ளது.

உடல் மற்றும் வாகனங்களில் பொருத்தக்கூடிய புகைப்படக் கருவிகள், மூச்சு பகுப்பாய்வு கருவி, வேக ஒளிமி துப்பாக்கிகள் மற்றும் உயர்வேக அதிர்வெண் கருவிகள் போன்றவற்றின் கொள்முதல் செயல்முறையில் உள்ளது.

உலக வங்கியின் கடன் நிதியுதவியுடன்கூடிய தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் திட்டம் 2-ன்கீழ் கிழக்கு கடற்கரைச் சாலை, அக்கரையிலிருந்து மாமல்லபுரம் வரையில் தானியங்கி

2023 ஏப்ரல் 20]

வேகக் கட்டுப்பாட்டுடன் இணைந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மேலாண்மை திட்டம்-II ஏற்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புப் பிரிவு மேற்குறிப்பிட்ட திட்டத்திற்குத் தேவையான தரவுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

சாலை விபத்து தரவு 2009 ஆம் ஆண்டு முதல் RADMS *பயன்பாட்டில் பதிவு செய்யப்படுகிறது. 15.2.2021 அன்று, புதுடெல்லியிலுள்ள இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம்,* iRAD *பயன்பாட்டை அறிமுகப்படுத்தியது. இது* CCTNS *மற்றும் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைகள் மற்றும் சுகாதாரத் துறைகள் தொடர்புடைய போக்குவரத்து இணையதளங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.*

சாலை விபத்து தரவு மேலாண்மைத் திட்டத்தில் (RADMS) *இருந்து ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவு தளத்திற்கு* (iRAD) *மாற்றுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

iRAD *பயன்பாடு* RADMS *பயன்பாட்டைவிட கணக்கிடக்கூடிய நன்மைகளைக் கொண்டுள்ளது. ஏனெனில், இது ஒரு* PAN India *திட்டம் மட்டுமல்லாது, நாடு முழுவதும் சாலை விபத்து தரவுகளின் ஒரே ஆதாரமாக விளங்குகிறது.*

iRAD *மென்பொருள் தகவல் பகிர்வு மற்றும் விரைவான நடவடிக்கைக்காக காவல் துறை, போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சுகாதாரத் துறை போன்ற பங்குதாரர் துறைகளை ஒருங்கிணைக்கிறது. சாலை விபத்துகள் பற்றிய தேவையான தரவுகள், குற்றம் நடந்த இடத்தின் பூகோள அமைப்பு மற்றும் புகைப்படம்/வீடியோ/குரல் பதிவு உள்ளிட்டவை* iRAD *மென்பொருள்மூலம் பதிவேற்றம் செய்யப்படலாம்.*

iRAD *மென்பொருளில் 'பரிவாகன்' தரவுமூலம் வாகன பதிவு விவரங்களை இணையதளத்தில் பெறலாம். அறிக்கைகளை வரைகலை வரைபடத்தில் பார்வையிடலாம்.*

XXII. மாநில குற்ற ஆவண காப்பகம்

காவல் அமைப்பின் செயல்திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவண முறையை மேம்படுத்தவும் மாநில குற்ற ஆவண காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவண காப்பகமானது, ஒரு கூடுதல்

[2023 ஏப்ரல் 20

காவல் துறை இயக்குநர் தலைமையில், 2 கண்காணிப்பாளர்கள், 15 கூடுதல் கண்காணிப்பாளர்கள், 44 துணை கண்காணிப்பாளர்கள், 66 ஆய்வாளர்கள், 215 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 75 இதர பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

மாநில குற்ற ஆவண காப்பகத்தில் காவல் கணினி பிரிவு, விரல் ரேகை பதிவுக் கூடம், குற்ற செயல்முறை கண்டறியும் பிரிவு மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இக்காப்பகம் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறையினை (CCTNS) பெற்று, முகமையாக செயல்பட்டு வருகிறது.

காவல் கணினி பிரிவு

காவல் துறை கணினிப் பிரிவு (PCW) 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இப்பிரிவு, காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது. கணினிமயமாக்கலின் நோக்கம் அனைத்து குற்றம் மற்றும் குற்றவியல் தரவுகளையும் பதிவு செய்வது, விசாரணையில் உதவுவது மற்றும் குற்ற பகுப்பாய்வுக்கான புள்ளிவிவரங்களைத் தொகுத்து சேகரிப்பது ஆகும். காவல் துறை கணினிப் பிரிவு பின்வரும் செயல்பாடுகளைச் செய்கிறது:

- CCTNS & ICJS-ஐ நடைமுறைப்படுத்தும் இணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருவது;
- CPBS-ஐ பயன்படுத்தி உருவப்படங்களை உருவாக்குதல்;
- CPBS-ல் மாவட்ட பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்;
- இந்தியாவில் குற்றத்திற்கான தரவுகளை தொகுத்தல்;
- க்ரைம் ரிவியூ தமிழ்நாடு வெளியிடல்;
- மாதாந்திர SCRB Digest-ஐ வெளியிடல்.

ஸ்மார்ட் காவலர் (e-Beat) செயலி தமிழ்நாடு அரசால் 15.10.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 20]

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் 100 சதவிகித இணையதள சேவை அளிக்கும்வகையில், VPN BB மற்றும் 3G GSM—க்கு பதிலாக BSNL நிறுவனத்தின் MBLS இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

முக அடையாளம் கண்டறியும் தொழில்நுட்பம் (FRS)

முக அடையாளம் கண்டறியும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 4.10.2021 முதல் 722 காவல் சரிபார்ப்பு விண்ணப்பங்கள், 336 கடவுச்சீட்டு சரிபார்ப்பு விண்ணப்பங்கள், 132 சந்தேக நபர்கள் மற்றும் 3,891 குற்றவாளிகள்மீது குற்ற வழக்குகள் உள்ள விவரம் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான இணையதள சேவைகள்

இச்சேவை துவக்கப்பட்டதிலிருந்து 31.12.2022 வரை இணையதள சேவைமூலம் 11,04,409 இணையதள புகார்கள் பதிவாகியுள்ளன. 11,98,336 காணாமல்போன ஆவண அறிக்கைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. 4,33,713 சாலை விபத்து வழக்கு தொடர்பான ஆவணங்கள் பாதிக்கப்பட்டவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 11,98,805 இணையவழி காவல் சரிபார்ப்பு விண்ணப்பங்கள் குடிமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 6,49,056 சாட்சிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணைகள் குறுஞ்செய்திமூலம் அனுப்பப்பட்டுள்ளன.

காவல் துறைக்கான குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் அமைப்பின் (CCTNS) பயன்பாடு

இச்சேவை துவக்கப்பட்டதிலிருந்து 31.12.2022 வரை, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் அமைப்பின் (CCTNS) தரவுகளைப் பயன்படுத்தி, 1,125 காணாமல் போனவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அடையாளம் தெரியாத பிரேதங்களின் விவரத்துடன் ஒப்புநோக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 70 காணாமல் போன நபர்கள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 1,365 காணாமல் போன வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 16,235 பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள், 4,164 முன் நடத்தைகள் மற்றும் 27,183 காவல் சரிபார்ப்பு விண்ணப்பதாரர்கள்மீது குற்ற வழக்குகள் உள்ள விவரம் CCTNS மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 20

CCTNS 2.0

அடுத்த ஐந்து நிதியாண்டுகளில் (2022-2023 முதல் 2027-2028 வரை) குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் அமைப்பு-2.0 திட்டத்தை நிறுவிட தமிழ்நாடு அரசு ரூ.124.38 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. எல்காட் நிறுவனம் மூலமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தேர்வில், இப்புதிய திட்ட ஒருங்கிணைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

1-2-2021 அன்று, ELCOT *நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கோரியதுடன், 27.10.2022 அன்று, பணி உத்தரவு வழங்கப்பட்டது. இத்திட்டமானது, பணி முடிக்கப்பட்டு ஜூலை 2023 முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

CCTNS 2.0-ன் நன்மைகள்

ஆன்லைன் புகார்கள் CSR *மற்றும்* FIR *முகமைகளுடன் இணைக்கப்படும், அதாவது, காவல் நிலையங்கள் ஆன்லைன் புகாரை* CSR *அல்லது* FIR *ஆக அதே முகமையில் நேரிடையாகப் பதிவு செய்வதும், அவ்வாறு மாற்றம் செய்யும் அதேவேளையில்,* CSR *அல்லது* FIR*-ன் அடுத்தடுத்த மைல்கற்கள் புகார்தாரருடன் தேவையான நேரத்தில் பகிரப்படும்.*

குடிமக்களுக்கான முகமையில் உள்ள குற்றப்பத்திரிகை/ இறுதி அறிக்கை வரை குடிமக்கள் பார்க்க முடியும். அதாவது, நீதிமன்றத்தால் ஒதுக்கப்பட்ட சிசி எண்/எஸ்சி எண் போன்றவற்றையும் பார்க்க முடியும்.

நீதிமன்ற எண், E-Court *இணையதளத்துடன் இணைக்கப்படும். இதனால் குடிமக்கள்* E-Court *இணையதளத்தில் வழக்கின் அடுத்த நிலையைப் பார்க்க முடியும்.*

வெளியீடுகள்

மாநில குற்ற ஆவணக் காப்பகம் ஆண்டுதோறும் "தமிழ்நாடு குற்ற ஆய்வு" என்ற வெளியீட்டை வெளியிடுகிறது. 2021 ஆம் ஆண்டுக்கான "தமிழ்நாடு குற்ற ஆய்வு" வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. மாநிலத்தைப் பொறுத்தவரை மாதாந்திர குற்ற விவரங்கள் அடங்கிய "SCRB Digest" *வெளியிடப்படுகிறது. இது ஜனவரி, 2023 வரை வெளியிடப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 20]

விரல் ரேகை பதிவுக் கூடம்

மாநிலத்தில் 47 தனி விரல் ரேகை பதிவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. மேலும், சிறப்புப் பிரிவுகளான வணிகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆகிவற்றில் இரண்டு கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

விரல் ரேகை பதிவுக் கூடத்தில் விரல் ரேகைப் பதிவுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதில் 2,04,839 தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் செயல்படுத்தப்படும் தேசிய தானியங்கி விரல் ரேகை அடையாளம் கண்டறியும் அமைப்பு (NAFIS) *2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட விரல் ரேகை பதிவுக் கூடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக செயல்பட்டு, 51 வழக்குகளில் தொடர்புடைய பிற மாநில குற்றவாளிகள் உட்பட 321 வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.*

2022 ஆம் ஆண்டு, தனி விரல் ரேகை பதிவுக் கூட அலுவலர்கள், 5,536 குற்ற நிகழ்விடங்களுக்குச் சென்று மாதிரிகளைச் சேகரித்தனர். சம்பவ இடங்களில் பதிவான மாதிரி விரல் ரேகைகள்மூலம் 698 வழக்குகளின் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

XXIII. தொழில்நுட்பப் பணிகள்

காவல் வானொலிப் பிரிவானது, இராணுவ உயர்வேக வானொலி சாதனத்துடன் 1948 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர், 1996 ஆம் ஆண்டு அதன் பெயர் காவல் தொழில்நுட்பப் பிரிவு என மாற்றம் செய்யப்பட்டது. தற்போது அது தொழில்நுட்பப் பணிகள் என அழைக்கப்படுகிறது.

தற்போது, 8,892 மிக உயரலை தொடர்பு சாதனங்கள்/ மொபைல் சாதனங்கள், 13,198 மிக உயரலை தொடர்பு கையடக்க கருவிகள், 265 VHF Repeater *கருவிகள், 151* VHF DMR Static/ *மொபைல் சாதனங்கள், 1419* VHF DMR *கையடக்க கருவிகள் மற்றும் 42* VHF DMR Repeater *கருவிகள் உள்ளன.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 20

டிஜிட்டல் மிக உயரலை தொடர்பு சாதனங்களைச் செயல்படுத்துதல்

தமிழ்நாடு காவல் துறையில் முதன்முதலாக டிஜிட்டல் மொபைல் வானொலி முறைமையானது, 23-3-2022 அன்று, பெரம்பலூர் மாவட்டத்தில் நிறுவப்பட்டது. DMR *தகவல் தொடர்பு என்பது ஸ்பெக்ட்ரம் செயல்திறனுடன்கூடிய பாதுகாப்பான டிஜிட்டல் தகவல் தொடர்பு மற்றும் ஜிபிஎஸ் திறனுடன் பல்முனை இணையவழி இணைப்பாகும்.* DMR *முறையின்கீழ் 69 கையடக்க கருவிகள், 12 நிலையான கருவிகள் மற்றும் 49 மொபைல் கருவிகள் மற்றும் துணைக் கருவிகளுடன் ரூ.37.57 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது. இதனால் மாவட்டம் முழுவதும் தகவல் தொடர்பு என்பது டிஜிட்டல் தகவல் தொடர்புக்கு மாற்றப்பட்டது. மேலும், தகவல் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக, பச்சைமலை ரிப்பீட்டர் நிலையத்தில் சர்ஜ் மற்றும் லைட்னிங் பாதுகாப்பு* (SLP) *அமைப்புடன் புதிய 30 மீட்டர் கோபுரம் நிறுவப்பட்டது. மேலும், ஜனவரி 2023-ல் மொத்தம் ரூ.35.99 இலட்சம் மதிப்பில் தற்போதுள்ள 80 மீட்டர் கோபுரத்திற்கு* SLP *அமைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

16 மாவட்டங்கள், 2 நகரங்கள் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு DMR *அமைப்பை செயல்படுத்துவதற்காக ரூ.98.7 கோடியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இதுவரை, 1,114* DMR VHF *கையடக்க கருவிகள் மற்றும் 61 நிலையான/மொபைல் கருவிகள், 100* DMR UHF *கையடக்க கருவிகள் ரூ.3.63 கோடியில் வாங்கப்பட்டுள்ளன. எல்காட்மூலம் கொள்முதல் நடைபெற்று வருகிறது, மேலும் 2023-2024 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவடையும்.*

புதிய அதிஉயரலை திருப்பி நிலையங்கள் நிறுவுதல்

திருச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மிக உயரலை தொலைத் தொடர்பு சாதனங்களின் தொலைத் தொடர்பை மேம்படுத்துவதற்காக பச்சைமலை மற்றும் பொறையாரில் புதிய அதிஉயரலை திருப்பி நிலையங்கள் நிறுவப்பட்டன. மேலும், தொலைத்தொடர்பை மேம்படுத்துவதற்காக அறந்தாங்கியில் தற்போதுள்ள மறுஅஞ்சல் நிலையத்தை அரங்கனல் அதிஉயரலை திருப்பி நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

2023 ஏப்ரல் 20]

காவல் உதவி-பெண்கள் பாதுகாப்பு செயலி ஆகியவற்றை ஒன்றிணைத்தல்

தற்போதுள்ள "காவலன் செயலி" முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு, அது "காவல் உதவி-பெண்கள் பாதுகாப்பு" செயலியாக மாற்றம் செய்யப்பட்டு, கைப்பேசி புகார் முறை, காவல் நிலைய இருப்பிடம் கண்டுபிடிப்பு, இருப்பிடம் பகிர்தல், வணிகர்களுக்கான உதவி, சமூக ஊடகத் தொடர்பு போன்றவை உள்ளடக்கிய 60-க்கும் மேற்பட்ட சேவைகளை வழங்கும் வசதி கொண்டதாக உள்ளது. இச்செயலியானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.4.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இச்செயலி IOS *இயங்குதளத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்செயலியில் 2.47 இலட்சம் பதிவிறக்கங்கள் செய்யப்பட்டு, 4.7 என நட்சத்திர மதிப்பீடு பெற்றுள்ளது.*

கணினிசார் நிதி மோசடி தொடர்பான அழைப்புகள் கணினிசார் குற்றப் பிரிவு தலைமையகத்திற்கு மாற்றும் வகையில் இணைப்பு

மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திற்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கணினிசார் நிதி மோசடி தொடர்பான அழைப்புகளைக் கையாள்வதற்கு ஏதுவாக, கணினி உதவி வடிவமைப்பு தொடர்பான மாறுதல்கள் செய்யப்பட்டு, மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறையில் ஒருமுறை தொடக்கூடிய பொத்தான் அறிமுகப்படுத்தப்பட்டு, '155260' என்ற எண்ணை இணைத்து அதன்மூலம் அழைப்புகள் கணினிசார் குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இத்தகைய அழைப்புகள் கணினிசார் பிரிவில் கையாளப்பட்டு, அழைப்புகள் பெற்ற 24 மணி நேரத்தில் புகார் பதிவு செய்யப்பட்டால், பின்னர் நிதி தொடர்பான புகார்கள் களைவதற்கு உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும். இதுவரை, 100/112 என்கிற உதவி எண்கள்மூலம் 1002 இணையவழி பொருளாதார குற்றம் தொடர்பான புகார் அழைப்புகள் மாநிலக் காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறை/அவசரகால உதவி மையத்திற்கு வரப்பெற்றுள்ளன.

காவல் களப் பணிக்காக 129 நடமாடும் சிசிடிவி கேமரா வாங்குதல்

அரசானது ரூ.3.87 கோடி செலவில் 129 நடமாடும் சிசிடிவி கேமரா வாங்குவதற்காக நிதி ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டம் 2023-2024-ல் நிறைவேற்றப்படும்.

மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறை அமைத்தல்

மாநிலம் முழுவதும் இருந்து எண் 100-க்கு அழைக்கும் அழைப்புகளைப் பெறுவதற்காக மாநில அளவிலான நவீன கட்டுப்பாட்டு அறை ஒன்றை அமைக்க அரசு ரூ.11.43 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

அவசரகால உதவி மையத் திட்டத்தின் ஒரு பகுதியாக, புதுதில்லியிலுள்ள மத்திய உள் துறை அமைச்சகம் ஆலோசனைப்படி, 112 என்ற எண்ணுக்கு அழைத்தால் அது எழும்பூரிலுள்ள மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறைக்கு வரும். அவசரகால அழைப்புகளுக்கு இதர துறைகளும் இம்மையத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, சுமார் 1.65 கோடி அழைப்புகள் பெறப்பட்டு, அவற்றில் 28.47 இலட்சம் துயர் நீக்க அழைப்புகள், 1.35 இலட்சம் காவல் மற்றும் தீயணைப்பு தொடர்பான புகார்கள் மற்றும் 7.89 இலட்சம் பொது விசாரணை அழைப்புகளாகும். மேலும், இம்மையமானது, "காவலன் உயிர்காக்கும் கைப்பேசி" தொடர்பாக 3.12 இலட்சம் அழைப்புகளை "காவலன் SOS" ட்ரிகர்கள் அடிப்படையில் பெற்று, அவற்றில் கிட்டத்தட்ட 49,000 உண்மையான புகார் அழைப்புகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஐ.பி எக்ஸ்சேஞ்ச் என்ற தொலைத்தொடர்பு ரூ.2.04 கோடியில் வாங்கப்பட்டு, இணைக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் 101 எண் அவசர அழைப்புகளும் மாநில அவசர உதவி மையத்தின்மூலம் கையாளப்படும்.

எம்-கடவுச்சீட்டு காவல் செயலியை அமல்படுத்துவதற்காக பழைய சாதனங்களை மாற்றிவிட்டு மாவட்டங்களில்/ நகரங்களிலுள்ள காவல் நிலையங்களில் ரூ.4.18 கோடி மதிப்பில் 6

2023 ஏப்ரல் 20]

அங்குல கையடக்கக் கணினி 1,675 எண்ணிக்கை வாங்குவதற்காக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டமானது, எல்காட் மூலமாக 2023-2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

மாநிலம் முழுவதும் வாகனங்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் மற்றும் களக் காவல் பணிக்கான "முதல்-உதவியாளர்" சாதனம் பயன்படுத்தும்பொருட்டு மொபைல் டேட்டா டெர்மினல் கருவியானது, நெடுஞ்சாலை ரோந்து வாகனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய மொபைல் டேட்டா டெர்மினல் கருவியை மாற்றி புதிதாக 1,200 மொபைல் டேட்டா டெர்மினல் கருவியை வாங்கும்பொருட்டு அரசானது ரூ.2.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டமானது எல்காட் மூலமாக 2023-2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

9 ஆளில்லா விமானங்களுடன்கூடிய ஒரு ஆளில்லா விமான அலகை, ரூ.3.6 கோடி மதிப்பில் பெருநகர சென்னை காவல் துறையில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆளில்லா விமானங்கள் கண்காணிப்பு, கூட்டத்தை கட்டுப்படுத்துல், போக்குவரத்து மேலாண்மை, பேரிடர் காலங்களில் துரித தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை போன்ற பல்வேறு காவல் துறை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

மேலும், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை மாநகரங்களில், மூன்று ஆளில்லா விமான அலகுகளை உருவாக்க அரசு ரூ.1.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டமானது 2023-2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

XXIV. காவல் பயிற்சி

காவல் பயிற்சிக் கல்லூரி

காவல் பயிற்சிக் கல்லூரியானது காவல் துறை இயக்குநரின் தலைமையில், 1 காவல் துறை தலைவர், 1 காவல் துறை துணை தலைவர், 1 முதல்வர்/காவல் கண்காணிப்பாளர், 6 சார்பு ஆய்வாளர்கள் மற்றும் 49 இதர பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

புதிதாக நியமிக்கப்பட்ட காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்குதல், காவலர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை உள்ளவர்களுக்கு புத்துணர்வு பயிற்சி மற்றும் சார்நிலை

[2023 ஏப்ரல் 20

பணியாளர்களுக்கு பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சி என அனைத்து பயிற்சி சார்ந்த நடவடிக்கைகளையும் காவல் பயிற்சிக் கல்லூரி கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 8 நிரந்தர காவல் பயிற்சிப்பள்ளிகள் மற்றும் 35 தற்காலிக காவல் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி வழங்கப்பட வேண்டிய 94 காவலர்கள் உட்பட புதிதாக நியமிக்கப்பட்ட 10,484 இரண்டாம் நிலை காவலர்களுக்கு 7 மாத அடிப்படை நிறுவன பயிற்சியைத் தொடர்ந்து, ஒரு மாத நடைமுறைப் பயிற்சி வழங்கப்பட்டன.

தருமபுரி, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மாணவர் காவல் படை திட்டத்தை நீட்டிக்க அரசு அறிவிப்பு வெளியிட்டு இதற்கென ரூ.2 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், இயக்குநர்/ கூடுதல் காவல் துறை இயக்குநர், 1-காவல் துறை தலைவர், 2-காவல் கண்காணிப்பாளர்கள், 4-கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 7-துணை காவல் கண்காணிப்பாளர்கள், 146 காவல் ஆளிநர்கள் மற்றும் 134 இதர பணியாளர்களை கொண்டு இயங்கி வருகிறது.

1-3-2022 முதல் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 422 உதவி ஆய்வாளர்கள் அடிப்படை நிறுவனப் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 20 காவல் துணை கண்காணிப்பாளர்களும் தங்களது ஒரு வருட அடிப்படை நிறுவனப் பயிற்சிக்காக 1.3.2022 அன்று தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் அறிக்கை செய்துள்ளனர். 9.2.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார்.

உதவி ஆய்வாளர் பயிற்சியினை முடித்த 932 காவல் உதவி ஆய்வாளர்கள் 29.8.2022 அன்று பயிற்சி நிறைவு அணிவகுப்பு நடத்தினர்.

சுங்கம்/சரக்கு மற்றும் சேவைத் துறையினருக்கான பயிற்சி வகுப்புகள், காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (BPR&D) *மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான தேசிய நிறுவனம்*

2023 ஏப்ரல் 20]

(NISD) உதவியுடன் அளிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் உள்ளிட்ட மொத்தம் 52 திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகள் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடத்தப்பட்டன.

31-8-2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.10.28 கோடி செலவில், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் ஒருங்கிணைந்த இணையவழி குற்றத் தடுப்பு வளாகம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்மூலம் இக்கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

XXV. மோப்ப நாய்ப் படை மற்றும் குதிரைப் படை

மோப்ப நாய்ப் படை

பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் உதவியுடன் குற்ற வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், ஆதாரங்களைச் சேகரிக்கவும் மோப்ப நாய்ப் படை உதவி செய்து வருகிறது. மோப்ப நாய்களுக்கு வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்கள், மாநகர காவல் ஆணையரகங்கள் மற்றும் சிறப்புப் பிரிவுகளான சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை மற்றும் அதிதீவிரப் படை ஆகியவற்றிலும் மோப்ப நாய்ப் படை பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் மோப்ப நாய்ப் படை பிரிவில், மொத்தமுள்ள 163 நாய்களில், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க 68 மோப்ப நாய்களும், வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டறிய 89 மோப்ப நாய்களும், தாக்குதலுக்கு 2 நாய்களும் மற்ற பணிகளுக்கு 4 நாய்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

குதிரைப் படை

காவல் துறையின் குதிரைப் படையானது கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர தின விழாக்களின்போதும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது. குதிரைப் படையில் மொத்தம் 29 குதிரைகள் உள்ளன. காவல் துறை குதிரைப் படையானது சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் நடைபெறும் பண்டிகைகள்/ஊர்வலங்கள், பெரிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின்போது கூட்டங்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

XXVI. கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள்

கட்டடங்கள்

1-1-2023 உள்ளபடி, அரசுக் கட்டடங்களில் 1,201 தாலுகா காவல் நிலையங்களும், 201 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், வாடகைக் கட்டடங்களில் 104 தாலுகா காவல் நிலையங்களும் 21 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

28-2-2023 உள்ளபடி, 588 அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகள், 1,541 காவல் ஆய்வாளர்கள், 3,932 சார்பு ஆய்வாளர்கள், 59861 தலைமை காவலர்கள்/காவலர்கள் ஆகியோருக்கு காவலர் குடியிருப்புகள் உள்ளன. மேலும், புதிதாக 2,149 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டு ரூ.371.72 கோடி செலவில் மொத்தம் 2,157 காவலர் குடியிருப்புகளும், ரூ.19.60 கோடி செலவில் 18 காவல் நிலைய கட்டடங்களும், ரூ.47.53 கோடி செலவில் 27 காவல் துறை கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் ரூ.70.95 கோடி செலவில் மொத்தம் 184 அலகுகளுக்கு, அதாவது குடியிருப்புகள்/காவல் நிலையக் கட்டடங்கள்/இதர காவல் துறைக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

மேலும், ரூ.142.72 கோடி செலவில் 881 குடியிருப்புகளும், ரூ.26.98 கோடி செலவில் 22 காவல் நிலைய கட்டடங்களும், ரூ.135.77 கோடி செலவில் 13 காவல் துறைக்கான கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

மோட்டார் வாகனம்

28.2.2023 உள்ளபடி, தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்களின் விவரம் பின்வருமாறு:—

2023 ஏப்ரல் 20]

வாகனத்தின் வகை	**வாகனம்**	**வாகன எண்ணிக்கை**
கனரக வாகனங்கள்	*பேருந்து/லாரி*	*860*
மிதரக வாகனங்கள்	*சிற்றுந்து/வேன்*	*1880*
இலகுரக வாகனங்கள்	*கார்/ஜீப்*	*6362*
இருசக்கர வாகனங்கள்	*மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், ஏடிவி மோட்டார் சைக்கிள் மிதிவண்டி*	*10877*
சிறப்பு வகை வாகனங்கள்	*வஜ்ரா, வருண், க்ரேன், கைதிகள் வழிக்காவல், ஆம்புலன்ஸ், ரெக்கர், தண்ணீர் லாரி, நடமாடும் நீதிமன்றம், நடமாடும் கழிவறை வேன் போன்றவை*	*603*
	மொத்தம்	**20,582**

471 நான்கு சக்கர வாகனங்களும், 841 இருசக்கர வாகனங்களும், 19 வேன்களும், 6 பேருந்துகளும், 5 லாரிகளும், 5 நான்கு சக்கர விபத்து மீட்பு வாகனமும், 5 இருசக்கர வாகனங்கள் விபத்து மீட்பு வாகனங்களும் மற்றும் ஒருங்கிணைந்த உத்தரவு மையத்திற்கு ஒரு வாகனமும் (மொத்தம் 1,353 வாகனங்கள்) ரூ.66.37 கோடி செலவில் வாங்கப்பட்டு பல்வேறு காவல் பிரிவுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

தூத்துக்குடி, ஈரோடு மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களுக்கு ரூ.1.99 கோடி செலவில் 20 நான்கு சக்கர ரோந்து வாகனங்கள் வாங்குவதற்கு தமிழக அரசு அனுமதி அளித்தது. அவ்வாகனங்கள் வாங்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 20

XXVII. தமிழ்நாடு தடய அறிவியல் துறை

தமிழ்நாடு தடய அறிவியல் துறையானது, மாநில காவல் துறை, சுங்கத் துறை, மத்திய புலனாய்வுத் துறை, தேசிய புலனாய்வு முகமை போன்ற சட்ட அமலாக்க முகமைகளுக்கு அறிவியல் ரீதியிலான சேவைகளை வழங்கி, அதன்மூலம் நீதி பரிபாலன முறையை நிலைநாட்ட முக்கியப் பங்காற்றி வருகிறது. அறிவியல் மூலமாக நீதியை நிலைநாட்டும் வகையில் நீதித் துறைக்கும் இத்துறை பெருமளவு உதவி வருகிறது.

தடய அறிவியல் துறையின் பிரதான ஆய்வகம் சென்னையில் உள்ளது. இதன் 15 சிறப்புப் பிரிவுகள், 10 வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் 38 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் (காவல் மாவட்டம்/ஆணையரகங்களில் தலா ஒன்று) ஆகியவை உள் துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் (அரியலூர், தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை காவல் மாவட்டங்கள், தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்கள்) தலா ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் வீதம், 9 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தடய அறிவியல் துறையில், அறிவியலாளர், தொழில்நுட்ப, அமைச்சுப் பணியாளர்கள் உட்பட 613 பேர் பணியாற்றி வருகின்றனர்.

சென்னை பிரதான ஆய்வகத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்ட (போக்சோ) வழக்குகளில் தொடர்புடைய உயிரி மாதிரிகளை ஆய்வு செய்யும் விதமாக, நிர்பயா திட்ட நிதியின்கீழ் நிறுவப்பட்ட பிரத்யேக மரபணு பிரிவானது, பகுப்பாய்வின் செயல்திறனை மேம்படுத்தும் வகையிலும், போக்சோ சட்டத்தின் கீழான வழக்குகளின் புலன் விசாரணைக்கு சரியான நேரத்தில் உதவும் வகையிலும் முழுமையாகச் செயல்பட்டு வருகிறது.

குற்ற நிகழ்விடத்தில் முதற்கட்ட பரிசோதனையை மேற்கொள்வதற்கான வசதிகளுடன்கூடிய நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும்,

2023 ஏப்ரல் 20]

இதுபோன்ற 14 வாகனங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1-7-2022 அன்று கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டன. நிலுவையற்ற நிலையை அடைவதற்காக சிறப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

இத்துறையால் தொடங்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்மூலம், 2021 ஆம் ஆண்டு, (2,84,642 மாதிரிகள் உள்ளடக்கிய) 69,349 வழக்குகளுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில், 91,510 வழக்குகள் வரை (3,81,459 மாதிரிகள் உள்ளடக்கிய) பகுப்பாய்வு முடிவுகளை எட்ட முடிந்தது.

பிரதான ஆய்வகத்திற்கு சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தினால் (NABL) *தரநிலை* ISO/IEC *17025:2017-ன்படி 13.5.2022 அன்று முதல் அங்கீகாரம் வழங்கப்பட்டது.*

சென்னை பிரதான ஆய்வகத்தில் கணினி வழி தடய ஆய்வகப் பிரிவுக்கென ரூ.3.71 கோடி அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு உயிரி மாதிரிகளின் மரபணு வகைப்படுத்தலுக்கான மரபியல் ஆராய்ச்சிக்கு நவீன கருவிகள் வாங்க அரசினால் ரூ.1.2 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தடய அறிவியல் துறை சென்னை பிரதான ஆய்வகத்திற்கு திரவ நிறச்சாரல் பிரிகை நிறைநிலைமானி கருவி [Liquid Chromatograph–Mass Spectrometer (LC-MS/MS)] *வாங்க அரசினால் ரூ.2.5 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.*

XXVIII. காவல் துறை நவீனமயமாக்கல்

மத்திய மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதத்திலான பங்களிப்புடன் காவல் துறை நவீனமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பல்வேறு உபகரணங்கள்/சாதனங்கள் வாங்குவதற்காக ரூ.24.28 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கண்காணிப்பு கேமராக்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கல் ஆகியவற்றுக்காக 14.6.2022 அன்று ரூ.2.50 கோடியும், சென்னை நகரில் கூட்ட நெரிசல் மிக்க இடங்கள் மற்றும் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்காக டிரோன் போலீஸ் பிரிவினை துவக்குவதற்காக ரூ.3.6 கோடியும் தமிழ்நாடு அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் பல்வேறு உபகரணங்கள் வாங்குவதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.95.42 கோடிக்கான செயல் திட்டம் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

XXIX. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

காவல் துறை இயக்குநர் தலைமையில், 1 கூடுதல் காவல் துறை இயக்குநர், 1 காவல் துறை தலைவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள், 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 4 காவல் ஆய்வாளர்கள், 1 காவல் உதவி ஆய்வாளர், 2 காவலர்கள், 1 சட்ட ஆலோசகர், 1 உதவி சட்ட ஆலோசகர் மற்றும் 33 அமைச்சுப் பணியாளர்களுடன் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் இயங்கி வருகிறது.

காவல் துறை, சிறை மற்றும் சீர்திருத்த சேவைகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலைப் பணியாளர்களை நியமிப்பதற்காக 29-11-1991 அன்று தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது.

அரசின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 2022 ஆம் ஆண்டு காவல் உதவி ஆய்வாளர் தேர்வு மற்றும் பிற சீருடைப் பணியாளர் தேர்வுக்கு முதல் முறையாக தமிழ் மொழி தகுதித் தேர்வை நடத்தியது.

2022 ஆம் ஆண்டு, 444 காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா மற்றும் ஆயுதப்படை) தேர்வு செய்ய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 8.3.2022 அன்று அறிவிப்பாணை வெளியிட்டது. மொத்தம் 2,22,213 விண்ணப்பதாரர்கள் மேற்படி தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தனர். 438 தேர்வர்களுக்கான இறுதி தேர்ச்சிப் பட்டியல் 18-11-2022 அன்று வெளியிடப்பட்டது.

அதேபோன்று, 3,552 இரண்டாம் நிலை காவலர்கள், 161 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், 120 தீயணைப்பு

2023 ஏப்ரல் 20]

வீரர்கள் ஆகியோரை நியமிப்பதற்கான பொதுத் தேர்வு குறித்த அறிவிப்பாணை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் 30.6.2022 அன்று வெளியிடப்பட்டது. இத்தேர்வின் இறுதி முடிவுகள் 29.3.2023 அன்று வெளியிடப்பட்டது.

XXX. காவலர் நலன்

தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம்

காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களின் நிலையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசு அளிக்கும் கொடை, பணியாளர்கள் தாமாக முன்வந்து அளிக்கும் சந்தா மற்றும் இந்நிதியின் உறுப்பினர்கள் அளிக்கும் நன்கொடை ஆகியவற்றிலிருந்து இக்கொடை திட்டம் செயல்படுகிறது. காவல் ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக கண்காணிப்பாளர்கள் வரையிலான பணியாளர்கள் இந்நிதியின்மூலம் பயன்பெறுவார்கள். காவல் துறை கருணைக் கொடை திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரண நிதி:—

வ. எண்	**திட்டங்கள்**	**தொகை (ரூ.)**
1.	சந்தாதாரர் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் நிவாரணம்	*50,000/-*
2.	சந்தாதாரரின் குடும்பத்தினர் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் நிவாரணம்	*10,000/-*
3.	சந்தாதாரரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை (பள்ளி கல்வி/ கல்லூரி கல்வி – இளநிலை பட்டப்படிப்பு)	*12,000 முதல் 20,000 வரை*
4.	பணியாளரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை	*12,000 முதல் 20,000 வரை*
5.	சிறப்பு மருத்துவ நிவாரணம்	*25,000/-*
6.	மரணம் விளைவிக்கும் நோய்களுக்கு நிதி உதவி	*5,00,000/-*

[2023 ஏப்ரல் 20

சிறப்பு மருத்துவ நிவாரணம்

உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களால் பாதிக்கப்பட்ட சந்தாதாரர்களின் சிகிச்சைக்காக அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை சிறப்பு மருத்துவ நிவாரணம் வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடை திட்ட மத்தியக் குழு ஆண்டுதோறும் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

சீருடைப் பணியில் காவல் ஆய்வாளர் பதவி வரையில் உள்ள பணியாளர்களும், அமைச்சுப் பணியில் கண்காணிப்பாளர் பதவி வரையில் உள்ள பணியாளர்களும் விடுக்கும் மருத்துவ உதவிக் கோரிக்கைகள் தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்ட சிறப்பு மருத்துவ நிவாரணக் குழுமூலம் ஒப்பளிக்கப்படுகிறது. 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.6.3 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வருடாந்திர அரசு பரிசுக் கொடையின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

ஆண்டுதோறும் ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும்/ மாநகரிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் முறையே முதல் 10 இடங்களைப் பிடிக்கும் காவல் துறை பணியாளர்கள்/அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம் துவக்கப்பட்டது.

வகுப்பு	முதலிடம்	இரண்டாமிடம்	மூன்றாமிடம்	4 முதல் 10 வரை
10	ரூ.6,500/-	ரூ.4,500/-	ரூ.2,500/-	ரூ.2,000/-
12	ரூ.7,500/-	ரூ.5,500/-	ரூ.3,500/-	ரூ.2,500/-

2021-2022 ஆம் கல்வி ஆண்டில், 342 காவல் பணியாளர்கள்/ அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு ரூ.12.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 20]

தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித் தொகை மற்றும் பரிசு

காவல் துறை பணியாளர்கள்/அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு உயர் கல்வியை ஊக்குவிக்கவும், தொடரவும் சிறப்பு கல்வி உதவித் தொகை ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.25,000/- அல்லது கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படும் சரியான கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை நான்கு வருட காலத்திற்கு அல்லது அப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. விடுதிக் கட்டணத்தையும் சேர்த்து அரசு இக்கொடையை ரூ.1 கோடியிலிருந்து ரூ1.2 கோடியாக உயர்த்தியுள்ளது.

கருணைத் தொகை வழங்குதல்

காவல் பணியாளர்கள் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால் அல்லது ஊனமடைந்தால் அல்லது காயமடைந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள்/இழப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில் அக்காவல் பணியாளர்கள் அல்லது அவர்களது சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு ரூ.20,000/- முதல் ரூ.15 இலட்சம் வரை கருணைத் தொகை வழங்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் 166 காவல் பணியாளர்களுக்கு மொத்தம் ரூ.40.60 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவலர் காப்பீட்டுத் திட்டம்

காவல் பணியாளர்கள் பணியின்போது விபத்து ஏற்பட்டு உயிரிழக்க நேர்ந்தால், கீழ்க்கண்டவாறு காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. அனைத்து நிலைகளில் உள்ள காவல் பணியாளர்கள்/அலுவலர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்:

நிலை	உயிரிழப்பு	நிரந்தர மற்றும் பகுதி ஊனம்
காவலர் முதல் ஆய்வாளர் வரை	ரூ.4 இலட்சம்	
காவல் துணை கண்காணிப்பாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை	ரூ.8 இலட்சம்	
காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறை தலைவர் வரை	ரூ.10 இலட்சம்	ஊனத்தின் சதவீதத்தின்படி
கூடுதல் காவல் துறை இயக்குநர்	ரூ.15 இலட்சம்	
காவல் துறை இயக்குநர்	ரூ.20 இலட்சம்	

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அரசு ரூ.60 இலட்சம் ஒதுக்கி வருகிறது. இவ்வாண்டு 11 பயனாளிகளுக்கு ரூ.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

உணவு மானியத் திட்டம்

காவல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, எண்ணெய் போன்றவை இத்திட்டத்தின்மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்மூலம் 63,205 காவல் பணியாளர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.8.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முழு உடல் மருத்துவப் பரிசோதனை

30 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை அரசு மருத்துவமனைகளில் இலவச முழு உடல் மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 20]

தற்போது முழு உடல் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவப் பரிசோதனை திட்டம் ஆகியவற்றின்கீழ் 2022 ஆம் ஆண்டில் 74,023 காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு காவல் அங்காடிகள்

தமிழ்நாடு அரசு இதுவரை 56 காவல் அங்காடி அலகுகளைத் துவக்கியுள்ளது. இவை மாநிலம் முழுவதும் உள்ள ஏழு தலைமை அங்காடிகளின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. பணியிலுள்ள மற்றும் ஓய்வுபெற்ற காவல் துறை பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், வனத் துறையினர் மற்றும் சிறைத் துறை பணியாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர்.

தற்போது 1,80,550 குடும்பங்கள் (காவல் துறை-1,58,044, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை-8,786, சிறைத் துறை–5,878 மற்றும் வனத் துறை– 7,842) பயனடைந்து வருகின்றன.

புதிதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி, தென்காசி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் ஆறு காவல் அங்காடி அலகுகள் 15.9.2022 அன்று துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

பணியின்போது உயிரிழக்கும் காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் மற்றும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக உயிரிழந்த 124 காவல் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.30.37 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்

பணியிலிருந்தபோது இறந்த காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட ஏதுவாக, 1,132 இரண்டாம் நிலை காவலர்

[2023 ஏப்ரல் 20

பணியிடங்களை சரண் செய்து, 1,132 தரவு உள்ளீடு உதவியாளர்கள்/ வரவேற்பாளர் பணியிடங்களை உருவாக்க தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 1,025 பேர் தரவுப் உள்ளீடு உதவியாளர்கள்/ வரவேற்பாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 107 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

காவலர்-மக்கள் தொடர்பு—"அன்பான அணுகுமுறை"

காவலர்-மக்கள் தொடர்பை மேம்படுத்த 1.2 இலட்சம் காவல் பணியாளர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி உதவியுடன் பயிற்சி அளிக்க அரசு அறிவித்துள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கு ரூ.2.70 கோடி நிதி ஒப்பளிப்பு 30.11.2021 அன்று வழங்கப்பட்டு, 9.2.2023 முதல் சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சிறப்புப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

காவல் ஆளிநர்களின் வாரிசுகளுக்கான வேலைவாய்ப்பு முகாம்

காவல் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் அவர்களது வாழ்க்கை இணையர்களுக்கு, தனியார் துறையில் வேலைவாய்ப்புப் பெற உதவி செய்யும்பொருட்டு, காவல் துறை தலைமையகத்தில் வேலைவாய்ப்புப் பிரிவு என்ற புதிய பிரிவு ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் ஐந்து இடங்களில் நடத்தப்பட்டு, அதில் 4,009 பேர் கலந்து கொண்டனர். இதில், 274 நிறுவனங்கள் பங்கேற்று, 672 பேர் பல்வேறு பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

காவல் ஆணையம்

காவலர் பொதுமக்களுக்கு இடையேயான உறவை மேம்படுத்தவும் காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் ஓய்வுபெற்ற நீதியரசர் மாண்பமை திரு. சி.டி.செல்வம் அவர்களது தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐந்தாவது

2023 ஏப்ரல் 20]

காவல் ஆணையம் (Fifth Police Commission) ஒன்று அமைக்கப்பட்டு, அந்த ஆணையம் தனது இடைக்கால பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. இப்பரிந்துரைகளை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

XXXI. முடிவுரை

காவல் துறையானது மக்கள் பார்வையில் எளிதில் தெரியக்கூடிய அரசுத் துறைகளில் மிக முக்கியமானதாகும். ஆபத்து, நெருக்கடி மற்றும் அவசர காலங்களில் மக்களுக்கு உடனடியாக முதலில் உதவிக்கு வருவது காவல் துறைதான்.

காவல் துறை தனது கடமைகளைத் திறமையாகவும், சிறப்பாகவும் செய்வதை உறுதிசெய்ய காவல் துறையினரின் திறனை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. காவல் துறையினரின் தொழில்நுட்பத் திறனையும் அவர்களின் திறமையையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் உயர்தர காவல் சேவைகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. இக்கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடையும்பொருட்டு மாநிலத்தின் நலனுக்காகவும் நன்மைக்காகவும் காவல் துறைக்கு அனைத்து வகைகளிலும் துணை நிற்கவும், உதவிபுரியவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(110 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

I. முன்னுரை

தமிழ்நாட்டில் வேகமான தொழில்மயமாக்கலில் வேதிப் பொருட்கள்/அபாயகரமான பொருட்களின் விரிவான பயன்பாடு மற்றும் நகர்ப்புறங்களில் அதிகரித்து வரும் உயர்மாடிக் கட்டுமானங்கள் போன்றவை தீ விபத்துகளால் ஏற்படும் அபாயங்களை அதிகரித்துள்ளது. தீ பாதுகாப்பு என்பது கட்டடத்திற்கு சரியான தீயணைப்பு வாகன நுழைவு வழி, வெளியேறும் வழிகளுடன்கூடிய கட்டட வடிவமைப்பு, தீ கண்டறிதல் மற்றும் இடர் எச்சரிக்கை ஒலி எழுப்புதல், இடர்காலங்களில் பாதுகாப்பாக வெளியேற்றுதல் மற்றும் தீயை அணைத்தல் போன்ற பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. எனவே, கட்டடங்கள் முறையாகப் பாதுகாக்கப்படும் வகையில் மேற்கூறியவை கவனமாக திட்டமிடப்படுதல் வேண்டும். அதிகரித்து வரும் தீ பாதுகாப்பு விழிப்புணர்வுடன் கடுமையான ஒழுங்குமுறை தரநிலைகள் மற்றும் அரசின் முயற்சிகள் ஆகியவை மக்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், தீயினால் ஏற்படும் குறிப்பிடத்தக்க இழப்பைத் தடுப்பதற்கும் அவசியமாகின்றன. வழக்கமான தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளுடன் கூடுதலாக இத்துறையின் பங்கு பல ஆண்டுகளாக வியத்தகு முறையில் மாறி, தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் கிட்டத்தட்ட எந்த ஒரு/அனைத்து வகையான அவசர நிலைகளிலும் செயல்பட அழைக்கப்படுகின்றன. அதாவது அபாயகரமான பொருளினால் ஏற்படும் நிகழ்வுகள், உயர்மட்ட மீட்பு நடவடிக்கைகள் மற்றும் குறுகலான இடைவெளியில் ஏற்படும் மீட்பு நிகழ்வுகள், அகழி மற்றும் நிலைகுலைவு செயல்பாடுகள், நீருக்கடியில் மீட்பு போன்ற பல்வேறு அவசர நிலைகளில் செயல்பட வேண்டியுள்ளது.

2023 ஏப்ரல் 20]

2. குறிக்கோள்கள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை "காக்கும் பணி எங்கள் பணி" என்ற குறிக்கோளுடன் மக்களுக்காக செயலாற்றும் ஒரு சேவைத் துறையாகும். இத்துறை மீட்பு நடவடிக்கைகள் தவிர தீயணைப்புப் பணிகளில் முக்கியமாக கவனம் செலுத்துகிறது. மக்களிடையே பிரச்சாரம் மற்றும் விளம்பரங்கள் மூலமாகவும், பள்ளிகள், பொதுமக்கள் கூடும் வணிக வளாகங்கள் மற்றும் பலமாடிக் கட்டடங்களில் குடியிருக்கும் மக்களிடையேயும் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியும், தீத்தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றி வருகிறது. இதன் முக்கிய நோக்கமானது சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், வாணிப மையங்கள், பெரிய அங்காடிகள், பன்னடுக்கு வளாகங்கள் மற்றும் திரையரங்குகள் ஆகிய இடங்களில் கூடும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாகும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது, அவசரகால சேவைகளை ஆற்றுவதில் பரந்து விரிந்த பங்களிப்புடன் ஒரு பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் இயற்கைப் பேரிடர் மற்றும் அவசர காலங்களில் விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு கடினமான மற்றும் நுழைய முடியாத குறுகலான இடங்களிலிருந்து மனிதர்களையும், விலங்குகளையும் மீட்கின்றனர். சேதமடைந்த உடல்களை வாகனங்களிலிருந்து வெளியில் எடுத்தல், இறந்தமனித உடல்கள், விலங்குகளின் உடல்களை நீர் நிலைகளிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் மோப்பநாய் குழுக்களை அனுப்பி தொலைந்த மனித உயிர்களை கண்டறிந்து மீட்டல் ஆகியவை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மற்ற அவசரகால சேவைகளாகும்.

காவல், வருவாய், மருத்துவம் போன்ற பிற துறைகளுடன் இணைந்து தீவிரவாதிகளின் தாக்குதல், சாதி, சமய மோதல்கள், தேர்தல்கள், விழாக்கள், பண்டிகைகள் போன்ற தருணங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றில் மிகுந்த விழிப்புடன் செயல்பட்டு வருகிறது. முக்கிய பிரமுகர்கள் வருகை, முக்கிய கூட்டங்கள் மற்றும் விழாக்களுக்காக பெரிய அளவில் பந்தல்கள் அமைக்கப்படும் இடங்களில் இத்துறை பாதுகாப்புப் பணியினையும் மேற்கொள்கிறது. தனியாரால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும், வரையறுக்கப்பட்ட

[2023 ஏப்ரல் 20

கட்டண அடிப்படையில் பாதுகாப்புப் பணியினை இத்துறை மேற்கொள்கிறது. மேலும், உரிமங்கள் கோரும் சம்பந்தப்பட்ட இடங்களை ஆய்வு செய்து, அவை வரையறுக்கப்பட்டுள்ள பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளை கடைபிடித்துள்ளனவா என்பதை உறுதி செய்து, அதன் அடிப்படையில் தடையின்மைச் சான்று/இணக்கச் சான்று/தீ உரிமங்களை வழங்கி பல்வேறு உரிமம் வழங்கும் குழுமங்களுக்கு தீத்தடுப்பு நோக்கில் ஆலோசகராக செயல்படுகிறது.

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீவிபத்து பாதுகாப்பு செயலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, தீ விபத்துகளைத் தடுக்கும் நோக்கத்திற்காக தற்போதுள்ள 1985 ஆம் ஆண்டு தீயணைப்பு சேவைகள் சட்டத்தை முழுமையாக மாற்றியமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. வரலாறு

1908-ஆம் ஆண்டு, “மெட்ராஸ் தீயணைப்புப்படை" (Madras Fire Brigade) என்ற பெயரில் சிறிய குழுவாக சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் தீயணைப்புப்படை உருவாக்கப்பட்டது. 1967 ஆம் ஆண்டில், காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, “தீயணைப்புத் துறை” என்ற தனித் துறையாக உருவாக்கப்பட்டது. இத்துறையிடம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் ஆகிய இரட்டைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. இத்துறை ஆற்றிவரும் பணிகளின் தன்மைக்கேற்ப புதிய அடையாளம் கொடுக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டில் அரசால், இத்துறை "தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2001 ஆம் ஆண்டில் பெண்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் நியமனம் செய்யப்பட்டதன்மூலம் நாட்டிலேயே முதன்முதலில் பெண் அதிகாரிகளை பணி நியமனம் செய்த மாநிலமாக விளங்குகிறது. இத்துறையை நவீனமயமாக்க பல்வேறு திட்டங்களையும், பணியாளர்களை ஊக்குவிக்க பல்வேறு நலத் திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது நாட்டில் உள்ள மிகவும் திறமை வாய்ந்த மிகப்பெரிய தீயணைப்புப் படைகளில் ஒன்று என்ற உறுதியான நற்பெயரை நிலைநாட்டியுள்ளது. தற்போது இத்துறை 361 தீயணைப்பு மற்றும்

2023 ஏப்ரல் 20]

மீட்புப்பணிகள் நிலையங்களுடன் ஒகேனக்கல், கோத்தகிரி மற்றும் சென்னை மெரினா ஆகிய 3 பிரத்யேக மீட்புப்பணிகள் நிலையங்களையும் கொண்டுள்ளது.

4. நிருவாக அமைப்பு

தமிழ்நாடு அரசின், உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. இயக்குநராக இந்தியக் காவல் பணியினைச் சேர்ந்த காவல் துறை தலைமை இயக்குநர் தரத்தில் ஒரு அதிகாரி துறைத் தலைவராக உள்ளார். இத்துறை ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு இணை இயக்குநர் அல்லது ஒரு துணை இயக்குநரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. ஒரு இணை இயக்குநர் தாம்பரத்தில் உள்ள மாநிலப் பயிற்சி மையத்தின் பொறுப்பாளராக உள்ளார். இது தவிர இயக்குநரகத்தில், இயக்குநருக்கு உதவியாக கூடுதல் இயக்குநர் (செயல்பாடுகள் மற்றும் பயிற்சி), கூடுதல் இயக்குநர் (நிருவாகம்), துணை இயக்குநர் (தலைமையகம்), துணை இயக்குநர் (நிருவாகம்), அரசு சார்பு செயலாளர் தரத்தில் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், இரண்டு நிருவாக நேர்முக உதவியாளர்கள் (நிருவாகம் மற்றும் கணக்கு) ஆகியோர் உள்ளனர். மேலும் இம்மண்டலங்கள் 37 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்ட அலுவலரின்கீழ் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிருவாக அமைப்பில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அடிப்படை அலகாகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் தலைமையில், மாவட்ட அலுவலரின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தாம்பரத்தில் இயங்கி வரும் மாநில பயிற்சி மையம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் உள்ள தீயணைப்போர், நிலைய அலுவலர் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு தீயணைப்பு குறித்த அடிப்படை பயிற்சியும் மற்றும் பொதுமக்களுக்கு ஆரம்ப தீத்தடுப்பு பயிற்சியும் அளித்து வருகிறது. தீயணைப்பு ஊர்திகளின் பழுதுகளை செப்பனிடுவதற்கும், பராமரிப்பதற்கும் சென்னையில் மாநிலப்பட்டறை ஒன்று இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப்பணி செயல்பாடுகள்) அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிருவாக அமைப்பு குறித்த விளக்கப்படம் அட்டவணை I மற்றும் II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 20*

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கென தனியாக மோப்பநாய் படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மோப்பநாய் படைப் பிரிவுமூலம் கட்டட இடிபாடுகளில் புதையுண்டவர்களையும் மற்றும் உயிருக்காக போராடிக் கொண்டிருப்பவர்களையும் கண்டறிய இயலும். மேலும் ஓய்வுபெற்ற பழைய நாய்களுக்கு பதிலாக பொருத்தமான இனத்தைச் சார்ந்த ஆறு புதிய நாய்களை வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மோப்ப நாய்கள் வாங்கப்பட்டு, நாய்க்குட்டிகள் மற்றும் அவற்றைக் கையாள்பவர்களுக்கு மோப்ப நாய்களுக்கான தேசிய பயிற்சி மையம், எல்லை பாதுகாப்புப் படை (NTCD, BSF), *தேக்கான்பூர், குவாலியர், மத்தியபிரதேசம்மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி பெற்ற நாய்கள் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளன.*

5. அடிப்படைப் பிரிவு

இத்துறையின் அடிப்படைப் பிரிவு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களாகும். பதில் செயல்பாடு நேரத்தினைக் (Response Time) *குறைக்கும் வகையில் அறிவியல் பூர்வமான உலகளாவிய நிலைப்படுத்துதல் அமைப்பு* (Global Positioning System) *வரைபடங்களின் உதவியுடன் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களின் அமைவிடங்கள் தேர்வு செய்யப்படும்.*

அதிக தொழில்நுட்ப அடிப்படையிலான தீ பாதுகாப்பு செயலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, தீ விபத்துக்களைத் தடுக்க அரசு வலியுறுத்துகிறது. ஒரு புதிய ஊர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைப்பதற்கு கீழ்க்கண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கொண்ட அமைப்பு அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:-

நிலைய அலுவலர்	-	*1*
முன்னணி தீயணைப்போர்	-	*2*
இயந்திர கம்மியர் ஓட்டுநர்	-	*1*
தீயணைப்போர் ஓட்டுநர்	-	*2*
தீயணைப்போர்	-	*11*
மொத்தம்	=	*17*

2023 ஏப்ரல் 20]

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை விவரம் அட்டவணை III-ல் அளிக்கப்பட்டுள்ளது.

6. வள ஆதாரங்கள் இருப்பு

அ) மனித வளம்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது 8069 செயல் அலுவலர்கள்/ களப்பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டதாகும். இத்துறையில் மாவட்ட அலுவலர், மாநில பட்டறையின் உதவிப் பொறியாளர் (தானியங்கி), நிலைய அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகியோர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவிகளுக்கான நபர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் நேரடி நியமனம்மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஆ) ஊர்திகள்

இத்துறை 329 நீர்தாங்கி ஊர்திகள், 32 தண்ணீர் லாரிகள், 29 சிறுநுரை தகர்வு ஊர்திகள், 19 நவீனரக நீர்தாங்கி ஊர்திகள், 3 வான்நோக்கி உயரும் 54 மீட்டர் நீளம் ஏணி கொண்ட ஊர்திகள், 2 வான்நோக்கி உயரும் 104 மீட்டர் நீளம் ஏணிகொண்ட ஊர்திகள், 21 அவசரகால மீட்பு ஊர்திகள், 115 சிறியரக நீர்தாங்கி ஊர்திகள் (350 லிட்டர்), 5 சிறிய ரக நீர்தாங்கி ஊர்திகள் (600 லிட்டர்), 22 நோயாளர் ஊர்திகள், 18 சீருந்துகள், 38 ஈப்புகள், 3 வேன்கள், 4 இழுவை ஊர்திகள், 3 பேருந்துகள்/ சிற்றுந்துகள், 23 விசை மிதிவண்டிகள், 350 சிசி திறன் கொண்ட 60 புல்லட்டுகள், 6 பவுசர்கள், 5 கல்விசார் ஊர்திகள், நிலைய அலுவலர்களுக்கான 100 விசை மிதிவண்டிகள், உதவி மாவட்ட அலுவலர் பயன்பாட்டிற்கென 25 ஈப்புகள், 1 பாரந்தூக்கி, 11 சிறப்பு விசை மிதிவண்டிகள், 9 படைவீரர்களை ஏற்றிச் செல்லும் ஊர்திகள், 3 கமாண்டோ வாகனங்கள் ஆகியவற்றைக் கொண்டு இயங்கி வருகிறது.

[2023 ஏப்ரல் 20

இ) உபகரணங்கள்

மீட்புப்பணிகளை திறம்பட மேற்கொள்ள இத்துறைக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பெருவெள்ளம், நிலச்சரிவுகள், கட்டட இடிபாடுகள், தொழிற்சாலை விபத்துகள், சாலை மற்றும் இருப்புப்பாதை விபத்துகள் போன்ற நெருக்கடி நிலைகளில் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக பின்வரும் நவீன மற்றும் சிறப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன:-

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
1.	உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் மேலங்கிகளுடன் கூடிய மிதவைப் படகுகள்	125
2.	நீட்டிச் சுருக்கும் இரப்பர் படகு (ம) இரப்பர் விசைப் படகுகள்	73
3.	அனல் வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி	19
4.	பல்வகை நச்சு வாயுக்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள்	13
5.	செறிவூட்டக் கூடிய அதிகத் திறன் கொண்ட கையடக்கத் தேடும் விளக்கு	1095
6.	செறிவூட்டக்கூடிய அதிகத் திறன் கொண்ட கையடக்க விளக்கு	377
7.	நீட்டிச் சுருங்கும் ஆற்றல் கொண்ட அவசர கால விளக்குகள்	98
8.	மின்னாக்கியுடன் கூடிய மின் ரம்பங்கள்	80
9.	எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் ரம்பங்கள்	300
10.	சிமெண்ட் கலவை கட்டமைப்புகளை உடைக்கும் கருவிகள்	61
11.	புகை வெளியேற்றும் கருவிகள்	66

2023 ஏப்ரல் 20]

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
12.	எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய துளையிடும் மின் கருவிகள்	51
13.	உயிர் காப்பான் மிதவை	4790
14.	உயிர் காக்கும் சட்டை	3419
15.	பொது அறிவிப்பு அமைப்பு	1536
16.	நீட்டிப்பு மற்றும் சுருங்கும் ஏணிகள்	54
17.	மூச்சுக்கருவி	626
18.	தலைக்கவசம்	4617
19.	பணியாளர் தற்காப்பு உடைகள்	3778
20.	தீ பாதிக்காத கையுறைகள்	120
21.	அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகள்	34
22.	தண்ணீர் அகற்றும் மோட்டார்	9
23.	நீர் மூழ்கிப் பம்புகள்	6
24.	கோம்பி கருவிகள்	30
25.	மணிலா கயிறு 50 அடி	460
26.	மணிலா கயிறு 100 அடி	608
27.	மணிலா கயிறு 130 அடி	1222
28.	நீரியல் அழுத்தத்தால் இயங்கும் கோம்பி கருவிகள்	53
29.	மின்கலனில் இயங்கும் கோம்பி கருவிகள்	6
30.	ஹைட்ராலிக் கட்டர்	38
31.	ஹைட்ராலிக் ஸ்பெடரர்	30
32.	நீட்டிப்பு ஏணி	396
33.	கயிறு ஏணி	65

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
34.	ஏணி	285
35.	பாம்பு பிடிப்பான்	383
36.	ஆழ்குழாய் கிணறு மீட்பு உபகரணங்கள்	9
37.	நோயாளர் படுக்கை	336
38.	ஏர் லிப்டிங் பேக்	48
39.	ரோப் லான்ச்சர்	5
40.	இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்கள் உள்ள இடத்தினை அடையாளம் காட்டும் கருவிகள்	10
41.	ரோப்ரைடர்	5
42.	மிதவைப் பம்புகள்	56
43.	சிறிய ரக பம்புகள்	56
44.	காற்று பிடிக்கும் கருவி	1
45.	ஆக்ஸ்லேட்டிங் மானிட்டர்ஸ்	4
46.	வீடியோ புகைப்படக் கருவி	2
47.	தீ பாதிக்காத உடைகள்	169
48.	ரசாயன பாதுகாப்பு உடைகள்	84
49.	கடலடி சுவாசக் கருவியுடன் கூடிய மூழ்கு தனியுடை	30
50.	மின்னாக்கி	18
51.	கண்ணாடி இழைகளிலான விசைப் படகுகள்	8
52.	உயிரோடு உள்ளவரை கண்டறியும் கருவி	4
53.	முன்னும் பின்னும் இயங்கக் கூடிய ரம்பங்கள்	50
54.	எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் வட்ட ரம்பங்கள்	70

2023 ஏப்ரல் 20]

வ. எண்	கருவிகளின் பெயர்	எண்ணிக்கை
55.	*மின்மோட்டாருடன் இணைந்த மின் ரம்பங்கள்*	*116*
56.	*மின் கையுறைகள்*	*100*
57.	*ரப்பர் கையுறைகள்*	*60*
58.	*கூடாரம்*	*1*

7. தகவல் தொடர்பு வசதிகள்

அ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லாத் தொலை தொடர்புக் கருவிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்வதே இத்துறையின் அத்தியாவசிய பணியாகும். ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திலும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. '101' மற்றும் '102' என்ற இலவச தொலைபேசி இணைப்புகளைக் கொண்ட நவீனமயமாக்கப்பட்ட தீக்கட்டுப்பாட்டு அறை சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. '101' என்ற இலவச தொலைபேசி இணைப்பு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், ஒரு சில பெரிய நகரங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சேவை செய்திடும் வகையில் தீயணைப்பு அலுவலர்களிடையே தகவல் தொடர்பை வலுப்படுத்தும் வகையில், நிலைய அலுவலர் மற்றும் அப்பதவிக்கு மேல் உள்ள அலுவலர்களுக்கிடையே செல்லிட தொலைபேசிகளில் தொடர்பு கொள்ள ஏதுவாக குழு ஒருங்கிணைப்பு முறை (Common User Group) *டிசம்பர் 2009 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது மாநில அளவில் அலுவலர்களுக்கிடையே கட்டணமில்லா அழைப்புகளுடன் கூடிய இணைய அமைப்பாக* (Network) *செயல்பட்டு வருகிறது. அந்தந்த பகுதியினை சேர்ந்த நிலைய அலுவலர்களுக்குரிய செல்லிட தொலைபேசி எண், நிலையான எண்ணாக உள்ளதால் இதனை பொதுமக்கள் நினைவில் கொள்ள ஏதுவாக உள்ளது.*

இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள், குழு ஒருங்கிணைப்பு முறையின்

(சி.யூ.ஜி) அடிப்படையில் செல்லிட தொலைபேசி எண்ணின்மூலம் இணைக்கப்பட்டுள்ளனர். சென்னை நகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களும் தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்காக கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள்மூலம் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கான நவீனப்படுத்தப்பட்ட மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறையை அமைப்பதற்காக நாடு முழுவதும் ஒரே அவசர நிலை எண் "112"-ல் காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினை ஒருங்கிணைத்து அவசரகால பதில் செயல்பாடு ஆதார அமைப்பு (ERSS – Emergency Response Support System) திட்டத்தை செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

அவசரகால பதில் செயல்பாடு ஆதார அமைப்பு (ERSS) திட்டத்தை செயல்படுத்த அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களுக்கு மேசை கணினிகளுக்கு அகன்ற அலைவரிசையுடன் கூடிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 371 அதிக உறுதியான வரைப்பட்டிகை அமைப்பு (Rugged Tablet) கொண்ட கணினி உபகரணங்கள் வாகனத்தில் பொருத்தப்பட்டு வாகனத்தின் இயக்கம் கண்காணிக்கப்படுகிறது. தற்போது, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அனைத்து அவசர அழைப்புகளுக்கும் மாநில அவசர பதிலீட்டு மையத்தில் (SERC – State Emergency Response Centre) இருந்து தகவல்கள் பெறப்பட்டு அனுப்பப்படுகின்றன. மேலும், அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களும் இம்மையத்துடன் (SERC) முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆ) பதில் செயல்பாடு நேரம்

பதில் செயல்பாடு நேரமானது (Response Time) விபத்து அழைப்பு பெறப்பட்ட நேரத்திலிருந்து விபத்து நடந்த இடத்தை சென்றடைய முதல் தீயணைப்பு ஊர்தி எடுத்துக் கொள்ளும் நேரமாகும். பதில் செயல்பாடு நேரமானது துறை மேற்கொள்ளும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளின் செயல்திறனை வெளிப்படுத்தும் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாகும். போக்குவரத்து நெரிசல் அதிகம் இருக்கின்ற போதிலும்,

2023 ஏப்ரல் 20]

பதில் செயல்பாடு நேரத்தினை வெகுவாக குறைக்க இத்துறை தொடர்ந்து முயற்சித்து வருகிறது. தொலைபேசி மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள் மட்டுமல்லாது, தீ விபத்து மற்றும் மீட்புப்பணி நிகழ்வு இடங்களுக்கு தீயணைப்பு ஊர்திகள் செல்லும் பதில் செயல்பாடு நேரத்தினை குறைந்தபட்சமாக குறைப்பதற்காகவும் மற்றும் அதனை கண்காணிப்பதற்காகவும் தீயணைப்பு ஊர்திகளில், ஊர்திகள் நடமாட்டத்தினையும் மற்றும் ஊர்தி இருக்கும் பகுதியினையும் காட்டும்கருவி (Vehicle Tracking with Geo-Positioning System) *அமைக்கப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் பதில் செயல்பாடு நேரத்தினை குறைக்கும் வகையில், புதிய தீயணைப்பு நிலையங்களின் அமைவிடங்கள் அறிவியல் பூர்வமான வரைபடங்களின் உதவியுடன் தேர்வு செய்யப்படும்.*

இ) துறை இணையதளம்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கென http://www.tnfrs.tn.gov.in *என்ற இணையதள வசதி பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைக் கொண்டுள்ளது மற்றும் அதனைப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு ஒரு நண்பனாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வலைதளம் தேசிய தகவல் தொடர்பு மையத்தினால்* (National Informatics Centre) *பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலைதளம், இத்துறையைப் பற்றிய செய்திகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த தகவல்களை அளிப்பதுடன் தீப்பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு கற்பிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதுடன், தேசிய கட்டட விதிகள் தொகுப்பு மற்றும் இதர சட்ட விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள கட்டாய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் உரிம நிபந்தனைகள் குறித்த அனைத்து தகவல்களையும் அளிக்கின்றது.*

8. பயிற்சி வசதிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது பொதுமக்களுக்குச் சேவை புரிந்திடும் வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளில் ஏற்பட்டுள்ள நவீனகால வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் இத்துறையில் ஆரம்பநிலைப் பணியிடங்களில் உள்ள பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதிலும், அனைத்து நிலைகளில் உள்ள பணியாளர்களுக்கும் புத்துணர்வு

[2023 ஏப்ரல் 20

பயிற்சிகள் வழங்குவதிலும் கவனம் செலுத்துகிறது. இப்பயிற்சி வகுப்புகள் தாம்பரத்தில் உள்ள நன்கு பராமரிக்கப்படும் மாநிலப் பயிற்சி மையத்தில் நடத்தப்படுகின்றன.

அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கு தரமான பயிற்சி வழங்க தேவையான நவீனகால வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஊர்திகள் மற்றும் உபகரணங்களுடன் சென்னை தாம்பரம் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. குளிர்சாதன வசதி கொண்ட வகுப்பறைகள், ஒளி/ஒலிப்படக் கருவி, கணினிகள், வலைதள இணைப்பு, நூலகம் மற்றும் உணவகத்துடன் இணைந்த தங்கும் அறைகள் ஆகியவை பயிற்சியின் தரத்தை மேம்படுத்த உதவியாக உள்ளன. நாகபுரி தேசிய தீயணைப்பு பயிற்சி கல்லூரியில் அளிக்கப்படும் பாடத்திட்டங்களின் அடிப்படையில் பயிற்சிகளை நடத்துவதற்காக, நாட்டிலுள்ள மண்டல பயிற்சி மையங்களுள் ஒன்றாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மாநில பயிற்சி மையத்தை இந்திய அரசின் உள் துறை அமைச்சகம் அங்கீகரித்துள்ளது. இந்த மாநில பயிற்சி மையம், பிற மாநிலத்தைச் சார்ந்த தீயணைப்பாளர்கள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் உரிய பயிற்சி அளித்து வருகிறது. அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும், தனிப்பட்ட நபர்களுக்கு ஒரு வார காலத்திற்கு, நபர் ஒருவருக்கு ரூ.1,000/ – என்ற கட்டணத்தின் அடிப்படையில், ஆரம்ப தீத்தடுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்துறை சமுதாயத்தில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி பெற்ற நபர்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்குத் தேர்வு செய்யப்படும் தீயணைப்போர்களுக்கு மாநில பயிற்சி மையத்திலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் தற்காலிக பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

9. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் 24 மணிநேரமும் செயல்படுகிறது மற்றும் இந்நிலையங்களே இத்துறையின் உயிர்நாடியாகும். எனவே, இந்நிலையங்கள்

2023 ஏப்ரல் 20]

தேவையான வசதிகளுடன்கூடிய கட்டடத்தில் அமைக்கப்பட்டால்தான் விலை உயர்ந்த ஊர்திகள் மற்றும் கருவிகளை நல்ல நிலையில் பராமரிப்பதுடன், பணியாளர்களுக்குத் தேவையான இடவசதியும் செய்து கொடுக்க இயலும். ஒரு தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையத்திற்கான கட்டடம் கட்டத் தோராயமாக 45 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில், மொத்தமுள்ள 364 நிலையங்களில் 273 நிலையங்கள் அவற்றிற்குச் சொந்தமான கட்டடங்கள் அல்லது வாடகையில்லா அரசுக் கட்டடங்களிலும் மற்றும் 91 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

19 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தினர்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10. தீத்தடுப்பு

இத்துறையின் பணிகள் பல்வேறுபட்டதாக இருந்தபோதிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் "வருமுன் காப்பதே நன்று" என்ற கொள்கையின் அடிப்படையில் தீத்தடுப்பையே முதன்மைப் பணியாக மேற்கொண்டுள்ளது. தீத்தடுப்பு என்பது தீ விபத்தால் ஏற்படும் நெருக்கடிகளையும் மற்றும் அழிவுகளையும் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கையான நடவடிக்கை ஆகும். நகர்ப்புர மற்றும் ஊரகப்பகுதி மக்களுக்கு தீத்தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் மிக முக்கியமான பணியினை தீத்தடுப்புக் குழுக்கள் மேற்கொள்கின்றன. தீத்தடுப்பு பணியினை முனைப்புடன் செயல்படுத்த 13 மாவட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்களை இத்துறை அமைத்துள்ளது. மேலும் தீத்தடுப்புக் குழுக்கள் இல்லாத இடங்களில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களே தீத்தடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தீத்தடுப்பு ஒத்திகைகள், பொருட்காட்சி, மேடைநாடகங்கள், குறும்படம்மூலம் பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், குடிசைப்பகுதிகள் மற்றும் பலமாடிக் கட்டடப் பகுதிகளில் தீப்பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தீ விபத்து நேரிடும் அவசரகாலங்களில் தீப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பாக வெளியேறும் நடைமுறைகள்

குறித்து மாணவர்களுக்கு கற்பிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பள்ளியில் வெளியேறும் நடைமுறைகள் குறித்த அவசரகால வெளியேற்றப் பயிற்சிகள் (Evacuation Drills) நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் சனவரி திங்கள் 21 ஆம் நாள் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் தேசிய அளவிலான தீ மற்றும் அவசரகால வெளியேறுதல் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி வளாகங்களில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது நிலைய அலுவலரால் கட்டாய ஆய்வுமூலம் உறுதி செய்யப்படுகிறது. பள்ளிகளில் தீப்பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதை ஆய்வு மற்றும் தணிக்கை செய்த பின்னரே சம்பந்தப்பட்ட தீயணைப்பு நிலைய எல்லைக்குட்பட்ட நிலைய அலுவலரால் தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது.

பொதுமக்களிடையே தீவிபத்துக்களின் எண்ணிக்கையை குறைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தீபாவளி பண்டிகையின்போது மாநிலம் முழுவதும் தொலைக்காட்சிகள் மற்றும் திரையரங்குகளில் பிரபல நடிகர்களைக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களில் தீப்பாதுகாப்பு பற்றிய பிரசுரங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

11. தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள்

அவசர காலங்களில் தீயணைப்பு பணியாளர்களுக்கு உதவி புரிய பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுய உதவி குழுக்களிலிருந்து தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு ஆரம்பநிலை தீத்தடுப்பு திறன் மற்றும் மீட்பு வழிகள் குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது. இத்துறை தற்போது 4956 தன்னார்வ தொண்டர்களைப் பெற்றுள்ளது.

12. உயர் மாடிக் கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைகளில் தீத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

உயர்மாடிக் கட்டட ஆய்வுக் குழுவினரால் உயர்மாடிக் கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், வணிக வளாகங்கள், பொதுக் கட்டடங்கள், மருத்துவமனைகள் மற்றும் பல அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பி

வைக்கப்படுகிறது. இத்துடன் அரசு கட்டடங்களில் இத்துறை தீ பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்கிறது.

உயர்மாடிக் கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு உரிமம் வழங்குவதற்கு முன்பு கீழ்க்காணும் முக்கிய தீத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என ஆய்வு செய்யப்படுகிறது:-

i. *அவசரகால வெளியேறும் வழிகள் போதுமான அளவில் அமைத்தல்.*

ii. *மணல் மற்றும் தண்ணீரால் நிரப்பப்பட்ட தீ வாளிகள் போதுமான அளவு வைத்தல்.*

iii. *தீயணைப்பு பணியினை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளத் தண்ணீர் சேமிப்பு தொட்டி அமைத்தல்.*

iv. *திரையரங்குகளின் உள்ளே போதுமான தீயணைப்பான்களும் மற்றும் படச்சுருள் இயக்குபவர் அறையில் முதல் உதவிப் பெட்டியும் கட்டாயமாக இருத்தல்.*

v. *பல திரையரங்குகள் ஒருங்கிணைந்த அடுக்குமாடிக் கட்டடத்தில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவிகள் கட்டாயமாக அமைத்தல்.*

vi. *கட்டடங்களில் பொருத்தப்பட்டுள்ள அனைத்துத் தீயணைப்புக் கருவிகளைக் கையாளுவதிலும் மற்றும் பராமரிப்பதிலும் பணியாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கு பயிற்சி அளித்தல்.*

vii. *பொய் மேற்கூரைகள் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அலங்கார வடிவமைப்புகள் தீயால் பாதிக்கப்படாத பொருட்களால் அமைத்தல்.*

viii. *போதுமான தீயணைப்பான்கள் மற்றும் நீர்விடு குழாய் அமைப்புகள் பொருத்துதல்.*

ix. *உள்ளூரில் உள்ள தீயணைப்பு அலுவலரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப அவரால் கூறப்படும் இடங்களில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவிகள் பொருத்துதல்.*

x. தூக்குப் படுக்கை நோயாளிகளை எடுத்துச்செல்ல ஏதுவாக அறைகளுக்கு செல்லும் நடைபாதைகள் மற்றும் வெளியேறும் வழிகளைப் போதுமான அளவு அகலமுடையதாக அமைத்தல்.

xi. புகை உட்புகாத கதவுகள் அல்லது பிரிவுகள் அமைத்தல்.

xii. போதுமான அவசர வழிகள் மற்றும் சரிவுகள் அமைத்தல்.

xiii. ஒளிரும் சைகைகள் மற்றும் தீயணைக்க பின்பற்ற வேண்டிய அறிவிப்பு அமைப்புகள் அமைத்தல்.

xiv. செவிலியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து தீயணைப்புக் கருவிகளைக் கையாள்வதிலும் மற்றும் பராமரிப்பதிலும் கட்டாயமாகப் பயிற்சி அளித்தல்.

13. கோடைக்காலம் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது ரோந்துப் பணியில் ஈடுபடுதல்

விபத்துகளை காலவிரயமின்றி உடனடியாக எதிர்கொள்ளும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் ஜூலை முடிய உள்ள மாதங்களில் ஊர்திகளை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தும் முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டுகளில் தீ விபத்து மற்றும் மீட்பு நிகழ்வுகள் நேரிட்ட புள்ளிவிவரங்களின்படி அபாயகரமான பகுதிகளை கண்டறிந்து அவ்விடங்களில் ரோந்துப்பணி மற்றும் நிலைநிறுத்தப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

14. தீயணைப்புப் பணி நாள்

ஆண்டுதோறும், ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் நாடு முழுவதும் தீயணைப்பு பணி நாளாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியின்போது வீரமரணம் அடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை பணியாளர்கள் நினைவு கூரப்படுகின்றனர். ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் தொடங்கி ஒருவார காலத்திற்கு பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் போன்ற அனைத்துத் தரப்பு மக்களிடையே தீப்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும்

2023 ஏப்ரல் 20]

வானொலி வாயிலாக பிரச்சாரங்கள் செய்யப்படுவதன்மூலம் தீயணைப்புப் பணி நாள் கொண்டாடப்படுகிறது. தீப்பாதுகாப்பு குறித்த பல்வேறு போட்டிகள் மாநிலம் முழுவதும் மாணவ மற்றும் மாணவியர்களிடையே நடத்தப்படுகின்றன.

15. ஊக்கப்படுத்துதல் மற்றும் ஊக்கத் தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றி வருவதால், அவர்களை ஊக்குவிக்கும் விதமாக கீழே குறிப்பிட்டுள்ள பதக்கங்கள் மற்றும் விருதுகள் அரசால் வழங்கப்படுகின்றன.

I. விருதுகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் தங்களது பணியின்போது கடமை உணர்வுடனும், அஞ்சாநெஞ்சுடனும் ஆற்றும் பணியினை அங்கீகரிக்கப்படும் வகையில் மாநில அரசால் பின்வரும் விருதுகள் ஏற்படுத்தப்பட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:

(அ) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப்பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப்பணி பதக்கம் மெச்சத்தக்க வகையில் பணிபுரிபவர்களுக்கு (அண்ணா பதக்கம்) ஒவ்வோர் ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று வழங்கப்படுகிறது. பாராட்டத்தக்க பணிகளுக்காக இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ஒட்டுமொத்த பரிசுத்தொகையாக ரூ.4,000/ – முதல் ரூ.10,000/ – வரை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

(ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் (அண்ணா பதக்கம்)

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் (அண்ணா பதக்கம்) பெறுபவர்கள் ஒட்டுமொத்த வெகுமதித் தொகையாக ரூ.5.00 இலட்சம் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

[*2023 ஏப்ரல் 20*

இ) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கமானது, ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று வழங்கப்படுகிறது. தண்டனைகள் ஏதுமின்றி 10 ஆண்டு காலத்திற்கும் மேலாக அப்பழுக்கற்று பணிபுரியும் நிலைய அலுவலர் பதவிக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறும் அனைவரும் மாதாந்திரப் பணப்பயனாக ரூ.400/ – பெறுவர்.

(ஈ) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பணிப் பதக்கம்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் மிகச்சிறந்த முறையில் பணியாற்றிய பணியாளர்களின் திறமைகளைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் தீ தொண்டு நாளான ஏப்ரல் 14 ஆம் தேதியன்று ஆறு பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்நபர்களுக்கு 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் ஒட்டுமொத்த பரிசுத்தொகை ரூ.2,000/ – முதல் ரூ.3,000/ – வரை வழங்கப்படுகிறது.

(உ) பிற பதக்கங்கள்

மேற்கூறியவை தவிர மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் கீழ்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:-

(i) *சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் சிறந்த மெச்சத்தக்க பணிக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப்பணி பதக்கம்.*

(ii) *சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப்பணி பதக்கம்.*

II. நலத் திட்டங்கள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் 15 மற்றும் 25 ஆண்டுகள் பணிபுரிந்த பணியாளர்கள் தானாகவே அடுத்த கட்டத்திற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

(i) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் சேமநல நிதி

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்

2023 ஏப்ரல் 20]

துறை சேமநல நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில், தற்போது 6906 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களின் நலனை மேம்படுத்த பின்வரும் காரணங்களுக்காக நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது:

(அ) *தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பின் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்கிக் கொள்வதற்காக;*

(ஆ) *தகுதிவாய்ந்த அரசு மருத்துவ அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் எந்தவொரு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாத கடுமையான நோய்களைக் கொண்ட தீயணைப்புப் பணியாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக;*

(இ) *உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர்கல்விச் செலவுக்காக;*

(ஈ) *காலஞ்சென்ற பணியாளரின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்காக;*

(உ) *உறுப்பினர்களோ, அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச்சடங்கு செலவுக்காக.*

அரசு வழங்கும் ஆண்டு மானியம் ரூ.20 இலட்சத்தினை பணியாளர் பங்களிப்புடன் இணைத்துள்ளது.

(ii) குழு காப்பீட்டுத் திட்டம்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்கள், அப்பணியில் இருக்கும்போதோ, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணியில் ஏற்படும் விபத்தினாலோ இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு உதவுவதற்கு என அனைத்து பதவிகளிலும் உள்ள தீயணைப்புப் பணியாளர்களை உள்ளடக்கிய "குழு காப்பீட்டுத் திட்டம்" ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மாவட்ட அலுவலர், துணை இயக்குநர், இணை இயக்குநர் ஆகியோர்களுக்கு ரூ.4.00 இலட்சம் மற்றும் தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் வரை ரூ.2.00 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 20

(iii) உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் பணிபுரியும் உதவி மாவட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு, உணவுப்பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

(iv) பணியாளர்களுக்கான உணவுப்படி

உதவி மாவட்ட அலுவலர் வரையிலான தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்கள் மற்றும் நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) ஆகியோர்களுக்கு, தீ விபத்து, மீட்புப்பணி அழைப்பு மற்றும் அவசர காலங்களில் பணியாளர்கள் படைதிரட்டும் (Mobilization) பணியில் ஈடுபடும்போது உணவுப்படியாக சென்னையில் ரூ.300/ – ஆகவும், பிறபகுதிகளில் ரூ.250/ – ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

(v) மானிய விலையில் பொருட்கள் வாங்க சிறப்பு அங்காடிகள்

காவல் துறையில் பணிபுரியும் ஓய்வுபெற்ற மற்றும் உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு சிறப்பு அங்காடிகள்மூலம் உணவுப்பொருட்கள் வழங்கும் திட்டத்தினை போன்று தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் மானிய விலையில் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

(vi) காவல் மருத்துவமனைகளில், தீயணைப்புப் பணியாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், சிகிச்சை வசதிகள் விரிவாக்கம்

தமிழ்நாடு காவல் மருத்துவமனைகளில் காவலர்களுக்கு கிடைக்கும் சிகிச்சை வசதிகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(vii) குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பணியாளர்களுக்கு அவசரகாலங்களில் உடனடியாகவும் எளிதாகவும் பணியாளர்களைத் திரட்டவும், செயல்திறனைக்

2023 ஏப்ரல் 20]

கூட்டவும், அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே வாடகையில்லா குடியிருப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுவதிலும் பயன்பாட்டில் உள்ள 1557 குடியிருப்புகள் தவிர மேலும் 239 குடியிருப்புகள் பல்வேறு இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இக்கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலக்கோட்டையூர் கிராமத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 113 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

16. விளையாட்டுப் போட்டிகள்

தீயணைப்பு வீரர்களின் உடற்தகுதியினை தக்க வைத்துக்கொள்ளும்வகையில் தடகளப் போட்டிகள், பூப்பந்து, கைப்பந்து, கால்பந்து மற்றும் நீச்சல் உள்ளிட்ட விளையாட்டுகள், மண்டலம் மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. மேலும், தீயணைப்புப் பணி மற்றும் மீட்புப் பணி திறனைப் பணியாளர்களிடத்தில் மேம்படுத்தும் வகையில், நீர்விடு குழாய் போட்டி, ஏணிப்பயிற்சி, கயிறு ஏறுதல், பம்பு இயக்குதல், தீயணைப்பு வாகனங்களை இயக்குதல் போன்ற விரைவான தீயணைப்பு மற்றும் மீட்பு நுட்பங்களைக் கொண்ட போட்டிகள் பணியாளர்களிடையே நடத்தப்படுகின்றன. விளையாட்டுப் போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து மண்டல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு மானியத் தொகை வழங்கப்படுகிறது.

17. முன் முயற்சிகள்

பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை காக்கும் வகையில் தீயணைப்போர்கள் ஆற்றிவரும் சேவையின் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தையும், துறையில் உள்ள பணியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதையும் பணியாளர்களின் நலனையும் கருத்தில்கொண்டு பின்வரும் முக்கிய தொடக்க முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது:-

- *தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,200 தீயணைப்போருக்கான நியமனம் மற்றும் பயிற்சி அளிக்க 8 தற்காலிக பயிற்சி மையங்கள் அமைத்து பயிற்சி வழங்க ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.*

- ❖ காவல் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்படியினை உயர்த்தி வழங்கப்பட்டதைப்போன்று நிலைய அலுவலர் மற்றும் அதற்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு இடர்படியினை உயர்த்தி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

- ❖ நிலைய அலுவலர் பதவிக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மிகைப்பணி ஊதியம் ரூ.200/-லிருந்து ரூ.500/ – ஆக உயர்த்தி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

- ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.1.04 கோடி உடன் கூடுதலாக ரூ.1.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களின் பயிற்சி வசதிகளை நவீனப்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில், மாநில பயிற்சி கழகம் நிறுவ கொள்கை அளவில் (in principle) முதற்கட்டமாக ரூ.19.30 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ கிருஷ்ணகிரி மாவட்டம்-ஓசூர், செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம்-இராணிப்பேட்டை ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ரூ.2.51 கோடி செலவில் தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ❖ சிவகாசியில் ஒரு நிலைய அலுவலர் மற்றும் 32 தீயணைப்போர்களுக்கும், சென்னை பெரும்பாக்கத்தில் 40 தீயணைப்போர்களுக்கும் ரூ.15.20 கோடி செலவினத்தில், குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மீட்புப்பணிகளுக்கான மோப்ப நாய் படைக்கு நாய்க்குட்டிகள் வாங்கவும், எல்லை பாதுகாப்புப் படை (BSF) பயிற்சி மையத்தில் குட்டிகளை கையாள்வதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 20]

- *தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென சென்னை புறநகர் மாவட்டம் செங்குன்றத்தில் 53 குடியிருப்புகள் (3 அலுவலர்கள் மற்றும் 50 பணியாளர்கள்), தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 10 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 8 பணியாளர்கள்), திருச்சி மாவட்டம் துறையூரில் 18 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 16 பணியாளர்கள்), இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டையில் 19 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 17 பணியாளர்கள்) என 100 குடியிருப்புகள் ரூ.2,331.70 இலட்சம் செலவினத்தில் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.*
- *ரூ.10.51 கோடி செலவினத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு கீழ்க்கண்ட சிறப்பு உபகரணங்கள் மற்றும் மீட்புப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து* (SDRF) *வாங்க ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.*

அ. மூச்சுக்கருவிகள் – 100

ஆ. காற்று பிடிக்கும் கருவிகள் – 4

இ. புகை வெளியேற்றும் கருவிகள் – 4

ஈ. மின்கலனில் இயங்கும் கோம்பி கருவிகள் – 5

உ. இறந்த மனித உடலை எடுத்துச்செல்லும் பைகள் – 500

ஊ. தீயணைப்பு வீரர்களை ஏற்றிச்செல்லும் வாகனம் (4 சக்கர வாகனம்) – 2

எ. வாட்டர் பௌசர் – 4

ஏ. சிறிய அவசர கால மீட்பு ஊர்தி – 2

ஐ. குறைந்த எடை கொண்ட ஹைட்ராலிக் கருவிகள் – 10

ஒ. நீர் நிறைந்த பகுதிகளில் மீட்புப்பணி மற்றும் கட்டட இடிபாடுகளில் மீட்புப்பணி மேற்கொள்ள சிறப்பு பயிற்சி, சிறப்பு பணிக்குழு (Special Task Force) *பயிற்சி மற்றும் பாம்பு பிடித்தல் உட்பட விலங்குகள் மீட்புப்பணிகள் பயிற்சிக்கான உபகரணங்கள் – ரூ. 50.00 இலட்சம்.*

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் கீழ்க்கண்ட 6 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ரூ.10.71 கோடி செலவினத்தில் துவங்குதல்.

1. அன்னியூர் – விழுப்புரம் மாவட்டம்
2. திருப்பரங்குன்றம் – மதுரை மாவட்டம்
3. ஏழாயிரம் பண்ணை – விருதுநகர் மாவட்டம்
4. கொளத்தூர் – வடசென்னை மாவட்டம்
5. காலவாக்கம் – செங்கல்பட்டு மாவட்டம்
6. கண்ணமங்கலம் – திருவண்ணாமலை மாவட்டம்.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் கீழ்க்கண்ட 6 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ரூ.9.76 கோடி செலவினத்தில் துவங்குதல்.

1. ஆட்டையாம்பட்டி – சேலம் மாவட்டம்
2. ஊத்துக்குளி – திருப்பூர் மாவட்டம்
3. இளையான்குடி–சிவகங்கை மாவட்டம்
4. வையம்பட்டி – திருச்சி மாவட்டம்
5. குமராட்சி – கடலூர் மாவட்டம்
6. நைனார்பாளையம் – கள்ளக்குறிச்சி மாவட்டம்.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களில் உள்ள 39 நிலைய அலுவலர் பதவிகள் உதவி மாவட்ட அலுவலர் நிலைக்கு தரம் உயர்த்துதல்.

❖ கோயம்புத்தூரினை தலைமையிடமாகக் கொண்ட மேற்கு மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் ஒன்று உருவாக்க ரூ.3.00 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.6.25 இலட்சம் தொடராச் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 20]

18. நிறைவுரை

தீ பாதுகாப்பு தணிக்கை என்பது ஒரு நிறுவனம் அல்லது குடியிருப்பின் தீ பாதுகாப்பு தரங்களை மதிப்பிடுவதற்கான ஒரு பயனுள்ள காரணியாகும். ஒரு விரிவான தீ பாதுகாப்பு தணிக்கையால் ஒரு குடியிருப்பில் அன்றாட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உள்ளார்ந்த தீ ஆபத்துக்களை நிவர்த்தி செய்யவும், தீ அபாயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் சாத்தியமாகிறது. தீ சேவைகள் சட்டத்தை (Fire Services Act) *சீரமைப்பதன்மூலம் அனைத்து உயர்மட்ட, நிறுவன மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் கட்டடங்களும் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கான கட்டாய விதிகளை உருவாக்குவதன்மூலம் தற்போது நகர்ப்புரங்களில் ஏற்படும் தீ விபத்துக்களை குறைக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தீயினால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களை வலுப்படுத்துவதன்மூலம் சமூகத்தில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், தீயணைப்பு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதன்மூலம் தீயணைப்பு வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.**